ஏற்றுவார்மூவரிறை மறையோனுகி- யெழுதவுள மகிழுதிருவாசகத்தைச்— சாற்றுவார் பட்டினத்தார் முதலாயுள்ளோர்-சந்ததம் நால்வகை நரர்தேவாதிசார்ந்து— போற்றுவார் கண்ணப்பர் பெருமையென்றுற்- பொய்யுடைய ஞேவறிவதெனு மென்னன்பிற்—ரேற்றுவாராயவர்தா டொழுதுட்கொண்டு- தோற்றியவா றலதுணாக்க வல்லதன்றே... ௩௩- ௪௮

இவை முற்றிற்று.

௰௧-வது கடவூரிற்கலையன்ற னடியாற்குமடியேன்.

வல்லனெனக் கண்டத்திற் கயறுபூட்ட- வனிதையற்காய் வளைந்தசிவ னிமிர்பனந்தா—ளல்லலறத் தொழுதுமறைக் கலையனூர்தா- மவதரித்த கடவூர்சென் றந்தகன்பாற்—செல்லலறப் புகுசிறுவற் கருள்புரிந்த- செல்வர்பணி முட்டமனைத் தாலிமாறி—நல்லநறுங் குங்கிலியப் புகையிட்டேற்றி நலம்பெற்றூர் மறுமைபொன்னம் பலம்பெற்றூரே ௧- ௪௧

௰௨- வது மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ்சாறன்.

பெற்றபெருஞ் செல்வமெலாம் பெரியோற்கென்று- பேணியகஞ் சாறூவே ளாண்குலத்து—வுற்றதவ மானக்கஞ் சாறருண்மை- யுலகறியப் பரமனுயர் தவத்தராகித்—தத்தைமொழித் தனிப்புதல்வி வதுவைநாள்வந்- தவளளகம் பஞ்சவடிக் காகுமென்னச்—சித்தமகிழ்ந் தரிந்தளித்த வுடன்கரந்த-சிவன்விடைமீ தெழுந்தருளச் சிறந்தாரொன்றே... ௧- ௫௰

௰௩- வது எஞ்சாதவாட்டாய னடியாற்குமடியேன்.

சிறந்ததிருத் தண்டலைநீ ணெறியாற்கென்றுஞ்- செய்பணிக்கன் றுடல்வருந்தி வருசெந்நெல்லாற்—கறந்தபா லமுதொடுமா வடுகொண்டேகிற்- கவாயிடறிக் கமரினிடை சிந்தவுள்ளந்—துறந்தவர்செய் தொழிலரிவாட் கொடுதன்னுவி- துறந்திடுகை பிடித்திறைவானருளப்பெற்றூர்த்—தறஞ்செய்கண மங்கலவே ளாண்குலத்துத்- தாயனரி வாட்டாய னுயினாரோ ௧- ௫௧

௰௪- வது அலைமலிந்த புனன்மங்கை யானயற்கடியேன்.

ஆயர்குல மங்கலத்தா னுயொன்று- மார்வமுட னஞ்செழுத்தை யுணர்ந்தாமேய்ப்பார்—நேயமெலா மரனுருவாய்க் காண்பார்கொன்றை-நெடியமரத் தடையமலர் நிறையக்கண்டு—தூயமனத்துடர்பி றுளைக்கருவிகொண்டு- தொடர்ந்தழைக்கும் வழிவருமென் னிலமும்போற்—மாயனயன் வாழ்த்தவிறை விடையிற்ருேற்றி- மாயவுரு மாற்றியரு கேற்றென்றூர்ந்தான்... ... ... ௧- ௫௨

அரூரனுரூரிலம்மானுக்காளே

இவை இரண்டாவது சருக்கமுகிவு தோத்திரம்.

ஊர்மதில்செற் றவனாயிர வூரோதின்றி- யூரவிட்டவூரிரு பாதம்போற்றி—நாளாயொரு கால்வழிபட் டடியடைந்த- நாரையூர் நம்பியினற் பதங்கள்போற்றி—பார்முழுதும் பரவமறை பகர்ந்ததெல்லாம்- பன்னுதமிழாற் பகர்ந்த பத்தராகி—சீர்பெருகு திருத்தொண்டர் தவத்தின்சீலச்- சிறப்பருள்சேக் கிழாரடிகள் போற்றிபோற்றி... ... ...௧- ௫௩

௩-வது மும்மையாலுலகாண்டசருக்கம்

௰௫-வது மும்மையாலுலகாண்ட மூர்த்திக்குமடியேன்.

போற்றுமடி யாற்கிடர்செய் பொய்யமண்கோப்- பொடிபடக்கூ டலின்வணிகர் மூர்த்திநாளுஞ்—சாத்துபணி முட்டவுரு தான்பாறகல்லிற்- சந்தனமாய்த் தேய்த்திழந்த முழங்கையூறு—மாற்றியுலகாளவரு ளிறையோன்மும்மை- மகுடாதி யாய்ப்பணித்தெவ்வுலகுமென்று—மேற்றுமுயர் பரபதஞ்சார் திருப்பரென்று- லெம்பிரான் பெருமையையா ரேற்றவல்லார். ௧-௫௪

௰௬- வது முருகனுக்கும்.

வல்லமண்பொய் வாரிகடந் தோருமந்த- வாரிகெட வாதுதடர்ந் தோருங்கூடச்—செல்லுவா ருடன்புகலூர் செல்காலன்பிற்- செல்மறையோர் முருகரெதிர் சென்றுதாழ்ந்தங்—கில்லமுது முதலுதவி யின்புத்தென்று- மினைமலராலரன்பணிகொண் டேற்றிநிற்பார்—சொல்லுவதஞ் செழுத்தலதொன் றறியாரந்தஞ்- சொல்லினல்லூர்ப் பெருமணச்சோ தியினுட்சேர்ந்தார்... ... ... ௧-௫௫

௰௭- வது உருத்திரபசுபதிக்கு மடியேன்.

சேர்ந்தமைந்த கருத்தொடுருத் திரமேசொல்லிச்- செழும்புனல்சேர் திரவுபகற் செவிப்பதல்லாற்—சார்ந்தமறைக் குலநியதி வழுவாதென்றுஞ்- சாமமுதனால்வேத சாத்திரங்க—டேர்ந்தவ்வழிச் செல்வதுகண் டேகனுதன்- றெய்வீக மகிழ்ந்தருளப் பெறுந்தேவாதி—யார்ந்ததிருத் தலையூரந் தணற்குநாம- மன்றுருத்திரபசுபதியென் றறைந்தவாறே ... ௧-௫௬

௰௮- வது செம்மையே திருநாளைப்போவாற்குமடியேன்.

அறைவர்புறத் தொண்டரந்த ராதனூரி- லவதரித்தா லயமுழவுக் கிசைதோலாதி—நறைதருகோ ரோசனையீந் திறைஞ்சிற்புன்கூர்- நம்பரைநேர் தொழுதெதிர்நல் வாவிதொட்டுக்—குறைநிரப்பிப் பலதானங் கும்பிட்டெண்ணில்- குவலையக்கூத் தாட்டுவிப்பான் கூத்தைக்காணத்—தறையிகழும் பிறவிதடை யாமென்றெண்ணித்- தயங்குவர்நா ளைப்போவா ராயில்சார்ந்தார் ௧-௫௭

சார்ந்தகுலப் பிறவிதடை யாமோவுண்மைச்- சார்புதவ முடிந்தருளைச் சார்ந்துளத்திற்—றேர்ந்தபடி தெரிசிக்குங் காதல்முன்னுய்த்- தென்றில்லைப் பதிவலங்கொண் டிரங்குவாற்கே—ளூர்ந்தவர்சென் றுரைத்தவகை யுத்தமாங்கத்- துடன்முனியா யந்தணரு முலகும்போற்ற—வார்ந்தணையும் பொழுதமர ரலர்கள்தூவ- வம்பலத்து ளரனடிக்கீ ழடைந்தாரொன்றே... ... ... ௨-௫௮

௰௯- வது திருக்குறிப்புத்தொண்டர்த மடியாற்குமடியேன்.

என்றுமுமை வழிபடுமே கம்பர்கச்சி- யேகாலி திருக்குறிப்புத் தொண்டரொன்பா—ரண்டர்பிரான் றொண்டரணி தூசின்மாசு- வகற்றியளித் தடிபணிய வவர்பானில—கண்டனவை கரந்துமுதிர் தொண்டராகிக்- கந்தையொன்றீ தந்தியின்முன் கசக்கித்தந்தா—னன்றலது திதெனவு மிசைந்துவாங்கு- நற்றவர்கைக் கொடுக்கையில்மெய் நடுக்கநின்றார்... ...௧-௫௯

நின்றவனா விடைகொண்டங் குவரிசேர்த்த- நீரினனைத் தமைத்தனரிங் கேகம்பத்துட்—சென்றவர்தம் மருளாலே முகில்களேழுஞ்- சேர்ந்துமழை பொழிந்துவிடா திரவிசெல்லப்—பண்டைவினைத் துடக்கொழித்த பரன்றுடக்காற்- பாறையிற்றன் றலைசிதறப் பரிந்தவுண்மை—கண்டுவந்து கைபிடித்தவ் வுலகளித்துக்- காட்சிகொடுத் தருளினன்கா மாட்சிநாதன்... ... ... ௨-௬௰

௨௰- வது மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்கவெகுண் டெழுந்த தாதையை மழுவினுலெறிந்த அம்மையா னடித்தண்டிப்பெருமானுக்கடியேன்.

நாதனடி சேர்வதுநன் றெனப்பல்லூழி- நல்வழிச்சென் றெண்ணில்பவ நடந்தெதிர்த்த—தீதுநல வாரிகடந் தாணவத்தின்- திரள்மாயை தன்மமதிட் டகர்த்துஞான—வீதிசழித் தருள்பெறுகாற் சேய்ஞலூரில்- விப்பிரனுயவதரித்த சருமனூர்தா—மாதரித்தாக் குலத்தருமை யறிந்துராமேய்ப்- பாதரித்தா ரருந்தவமா தரிக்கவல்லார்... ... ... ௧- ௬௧

வல்லவர்செய் மாதவத்தின் பெருமையேற்றும்- வானவர்கோ னயனயன்றன் றந்தையாதி-பல்லவற்றை நீங்கியரு ளோங்கிவேண்டும்- பதமடைவ ரென்றுபகர்ந் திடுவதல்லா—லெல்லவற்றுக் குடனுகி யின்றுமாகு- மேகனுல கைந்தொழிற்கா யெழுமைந்தைந்திற்—சொல்லுமைந்தி லொன்ருயின் றேற்றுவாற்குந்- தோற்றியருள் புரிவவொன்ருற் சொல்வதென்னே... ... ... ௨- ௬௨

சொல்வதென்னே யாக்குலங்கள் சொரிபாலேந்திச்- சோதிமண லாலயத்துள் ளரனுக்காட்டச்—செல்வதுகண் டவர்தந்தை செயிர்த்துக்காலாற்- சேதிக்கும் பால்சிந்தா முன்கால்சிந்தக்—கொல்வதலா லபிடேக முதனிரப்புங்- கொள்கைவழு வாதியற்றுங் குறிப்புமேன்மேல்—வெல்வதுகண் டேகனதி வேகத்தோடும்- வேதியன்சேய் பாலெழுந்தோ தியதுணைப்பாம்... ... ... ௩- ௬௩

உரைக்குமறை யாகமபு ராணமாதி- யுத்தமர்பின் னோதியநூ லனைத்துஞ்சொல்லும்—வரைக்குயர்ந்த மாதவஞ்செய் வரையைஞான- வாருதியை யெடுத்தணைத்து மடிமேல்வைத்துப்—பரைக்கரிய பரன்கருணை கூர்ந்துநோக்கிப்- பகருவா னமையடையும் பரிவினுலே—தரைக்கண்மிகு பாசமுடைத்-தந்தைவீயத் தடிந்தமையா லுமுனக்குத் தந்தையென்றும்௪-௬௪

தந்திமுகத் தோனிளைய குமரன்முன்னுய்த்- தண்டீசப் பிள்ளையுனைப் பின்னுய்ஞான—முந்திநம்மைத் தொழுதுமையைத் தொழுவாரொல்லா- மூவரையுந்தொழுதருளைப் பெறுவாரொன்றுந்—தந்தனநா முண்டுடுப்ப தணிவதெல்லாந்- தாங்குவா யெனப்பணையுந் தாயாமென்ன—நந்திமுத லெந்தையென நயந்துபோற்ற- நான்முகன்மா லிந்திரன்றே வாதியேற்ற... ... ...௫- ௬௫

ஏற்றியதே வெங்குமலர் மாரிதூத்த- வென்றிசையுந் தென்றிசையைத் தொழுதுவாழ்த்தத்—தோற்றியமா மறையுமறை யோருமாடத் தொல்லுலகத் தெண்ணிலடி யாரும்பாட—வாற்றியின்கி ழறையரனுப் பாடிநீட-வகிலநதி யாவுமண்ணி நதியைநாடப்—போற்றியமாதவமறையோர் சேய்ஞலூரோ- பொன்னுலகென் றெவ்வுலகும் புகழ்ந்துபோற்ற... ...௬- ௬௬

போற்றுமடி யாற்கருளும் பெருமைஞான- போகமடை வோர்புகழ்ந்து புவனபோக—நீற்றுயர்ந்த பதமடையு நிலைபொருந்தி- நிட்களா னந்தபர னிணையடிக்கே—சாத்துதமிழ் மாலைபுனைந் தேற்றியேற்றுஞ்- சன்மார்க்கர் பாலணைந்து சகளநீங்கித்—தோற்றமனைத் துஞ்சிவமா யலதாய்த்தோன்றுந்- தொண்டருளத் துளதாகத் தொடர்ந்துவாழ்க ... ௭- ௬௭

தொடர்ந்தபவத் துடக்கறநன் மகவாற்றாலத்- துடக்கொழிந்த யெச்சதத்தன் றுணைவியாதி—கடந்தனரிக் குவலயத்தைக் கடந்தங்கெய்தக்- கருணைபுரி கடவுள்பதி காணியாகி—நடந்தனரிங் கானைமுகன் குகன்மகிழ்ந்து- நாடிமருங் கணையநட ராசன்கையாற்—படர்ந்தசடை மீதணிமாலையைத் தண்டிக்குப்- பரிந்தளித்தா னுமையமுதஞ் சொரிந்தளித்தாள்... ... ... ௮- ௬௮

சொரிமலர்மா ரியினிடைநற் கனகமாரி- சொரியவருள் சொரிந்தமுதஞ் சொரியப்பெற்ற—பெரிதுடைய ரெழுந்துவலங் கொண்டிறைஞ்சிப்- பெயராத நிலைபுணரப் பெரியோனி

ன்ற—கரிமுகனுங் குகனுமெடுத் தணைத்துநின்று- கடவுளருள் வழியிருவர் முன்புசெல்லப் —பிரிவிலெந்தை தண்டிசர் பின்புசெல்லப்- பிரானுமைவா னிடைவிடைமீ தேறிச்சென் றார் ௯- ௬௯

சென்றபொழு தண்டர்கண நாதராதி- செய்பணிகொண் டெம்மருங்குஞ் செல்லவிங்கு— நின்றமறை யோர்கள்முத லனையோரு- நீள்விசும்பி லெழுந்தருளு மைய்வர்பாதத்—தொன் றிமனஞ் செலநிலத்திற் றொழுதுவாழ்த்த- வொருதனிவாக் காப்பாடி யொருநாளேற்றி—ந ன்றுபுரிந் தொழுகிநதி முழுகுவாற்கு- நம்முலகென் றருளியெழுந் தருளினனே... ௰- ௭௰

இவ்வ முற்றிற்று.

ஆரூரனாரூரி லம்மானுக்காளே

இவை ௩- வது சருக்கமுகிவு தோத்திரம்.

அருட்டுறைவே தியனெனவந் தடிமைசாதித்- தாண்டருளப் பெற்றபிரா னடிகள்போ ற்றி—யிருட்டறைசேர் திருமுறையங் கிருந்ததிம்பற்- கிசையவரு ணம்பியிணை யடிகள்போற் றி—பொருட்டுறை பொன்னம்பலமென் றுணர்ந்துமற்றைப்- போகமொழித் தருளடைவோர் புகழ்ந்திங்காழு—மருட்டுறையைக் கடந்துயமா தவர்களின்சீர்- மகிழ்ந்தருள்சேக் கிழாரடிக ள் போற்றிபோற்றி ௧- ௭௧

௪- வது திருநின்ற சருக்கம்.

௨௧- வது திருநின்றசெம்மையேசெம்மையாய்க் கொண்ட திருநாவுக்கரையன்ற னடியாற்கு மடியேன்.

போற்றியமா தவமுனிவர் புகழவெள்ளிப்- பொருப்படிசேர்ந் துயர்தவஞ்செய் துறைவா கிசர்—சாத்தியநன் மொழிவழிச்செல் லரக்கன்றீய- சாதிதொழிற் கொடுமைபுரிந் தகழ்வா னேனு—மாற்றியிதம்புரிந்திறையம் முனியைநோக்கி- மானிலஞ்சார்ந் தறமுரையென் றருள ப்பெற்றுத்—தோற்றியநா வுக்கரசின் றொண்டுசேர்நூற்- றொழுதுரைப்போற் கேதுபயஞ்சொ ல்லுவாயே ௧- ௭௨

சொல்லுவதோ சொல்வேந்தர் பெருமைநாயேன்- சொற்றமிழ்மா லையினிடையே தொ குத்துச்சொல்லச்—செல்லுவதோர் கடலருந்துஞ் சுணங்கன்போலுஞ்- சேணளக்கு மசகம் போலெனினுமாழக்—கல்லுவதோர்ந் தரியேன மாகிக்காணுக் - கடவுள்பத மடையடியர் கழ ல்சார்வாற்கூழ்—வெல்லுவதோ பெரிதுரைப்ப தரிதோவேதம்- வேறுளதோ கூறியவா விள ம்புவேனே ௨- ௭௩

விளம்புவரிப் புவியின்முனைப் பாடிநாட்டு- வேந்தன்முறை யோங்கவரு பெண்ணைநீரா ல்—வளம்பெருகு பதிகள்பல வாமவற்றுள்- வளர்திருவா மூர்ப்பதிவே ளாண்குலத்தோற்— குளம்புகழ ஞர்மனைமா தினியாருண்மைக்- குற்றகன்னி திலதவதி யுதித்தபின்வா—னிளம்பி றைபா ரிருணீக்கு மாறகத்து- ளிருணீக்க மருணீக்கி யார்பிறந்தார்... ... ... ௩- ௭௪

பிறவியெனும் பெருங்கடலைக் கடப்பவற்குப்- பின்னொருநா லோதுவதேன் பிணிதவிர்த் திங்—குறவினொடு மனையறஞ்செய் துலகுசூழ- வுயர்குடியாய்ப் பதியாய்மே லுயர்வாற்குந் தா—னறவியல்பு நான்கினுக்கு மதிகாரத்தே- வைவருக்கு மேலாமற் றுவிதவுண்மைத்—தி றவியெனுந் திருநாவுக் கரசுனைக்குந்- திருமுறையின் பொருண்முறைதேர்ந் துரைப்பதா மால் ௪- ௭௫

மால்தருமிப் புவியின்மரு ணீக்கியார்தா- மாதினியார் பாலமுதுண் டுளங்களிப்பக்—கா லவினை நியதிவழி கழிக்குந்தாதை- கடவுள்பதி யடையவுடன் செல்கருத்தே—சாலமிகு மா

தினியார் தாமும்போகச்- சந்ததிகளி ருவரில்முன் பிறந்தார்தம்மைக்—கோலமணம் பேசியபி
ன் புடைமேற்சென்ற- கொற்றவர்சே னாபதியுங் கொள்ளையென்றார்... ... ... ரு- எசு

கொள்ளையென்ற பெருவார்த்தை யுறுதிகேட்ட- கொம்பனையா ருடனெழியுங் கொள்
கைதாங்கப்—பிள்ளையென்ற தம்பியெனை விட்டுப்போங்காற்- பிறிதாரைச் சதமுடையே னெ
ன்றுஞாலக்—கள்ளையுண்ட மனத்தினராய்க் கலங்கிநின்று- கதறிமடி மேல்விழப்பின் கலங்
குவாழாக்—கிள்ளையென்ற மணிப்பறவை போல்வாடன்பின்- கிளைதாங்க வுயிர்தாங்கிக் கிளை
ருநாளில்... ... ... சு- எஎ

கிளருநாட் பலகலையுந் திருந்தவோதிக்- கிரியையனுட் டானமறங் கேட்டுஞ்செய்தும்—
வளருமரு ணிக்கியார் கருத்துக்கூழின்- வழிபுரக்குங் கடவுளருட் கூடாதாகித்—தளருவாற்
கவ்வழியோர் பரிவுதோன்றத்- தாங்கியவா றேதென்னி லருகர்சார்புற்—றுளறுவா ராயுறுதி
கொண்டுவிண்டங்- குணர்விலமண் பாடலிபுத் திரத்திற்சென்றார்... ... ... எ- எஅ

சென்றருக ருரைக்குநூல் பலவுந்தேர்ந்து- செய்தொழிலுந் தெய்வமுமச் செயலென்றோ
ர்ந்து—தன்றவமே தருமெவையு மென்பார்போலத்- தருக்கமணு சானிலொரு தருமசேன—
னொன்றிவற்குப் பேர்விளங்க விருந்தாரிங்கு- யெம்பியற்கா யுயிர்தாங்கி யிருந்தமாது—சென்
றதிகை வீரட்டர் பாதம்போற்றிச்- செய்பணிமுன் செய்தகுறை நிரம்பச்செய்தாள் அ- எகூ

செய்ததவக் குறைநிரப்பிச் செல்காலன்பிற்- செய்பணிமெய் யாதிகளிற் சாத்திநெ
ஞ்சி—லெய்துகுறை யொன்றுளதை நிரப்புவாயென்- றேற்றுமுறை யுஞ்செவியிற் சாத்துவா
ள்பான்—மைதிகழு மல்லினிடைக் கனவிலீசன்- மகிழ்ந்துரைத்த வாறுமருணிக்கியாற்கு—
மெய்திகழத் தோற்றவவர் மெயிற்றேற்றுது- மெலிசூலை நோய்வயிற்றி னலியச்செய்
தான்... ... ... கூ- அய

நலிவதற்குப் பிறந்துழலு வார்கள்செய்கை- நாடுமரு ணீக்கியாற் வயிற்றிற்சூலை—மெ
லிவதற்குத் தடங்கிமெய்யிற் றேற்றுதாக- மேவுவதைக் கேட்டருக ரத்திராத்தி—சொலியவ
ர்கட் கானவெலாஞ் செயினுந்தீராச்- சோகமடைந் திவர்வருந்தத் தேகமேகம்—பொலிவ
தெனச் சூழமணர் கைவிட்டோடிப்- போயினர்பின் சூலைதுணை யாயினரோ ... ...ய- அக

ஆயபொழு தண்ணல் திருக் கயிலையாதி- யணைந்துமுனி யாய்த்தவமுன் னடைதலாலே—
தீயதொழி னீக்கிடு நல்வினையாமேழுந்- திருவதிகை வீரட்ட ருருளுங்கூடப்—பாயுடையு
நடையுமொழித் தருகர்மேவு- பாழியும்பொய் யாழியும்விட் டகன்றுபாரிற்—றாயுமுடன் பிற
ந்தவளு மாகுவாள்பாற்- றன்வருமுன் றூதுவிடுத் தவரும்வந்தார்... ... ... யக- அஉ

வந்ததிகை வீரட்டர் பாதம்போற்றி- வருதிலத வதியடியிற் றாழ்ந்துசால—நொந்தும
னந் தளருமரு ணீக்கியாரை- நோக்கியெடுத் தணைத்துநல வாக்களித்து—வெந்துயரந் தீர்க்
குமர னஞ்செழுத்தால்- வெண்ணீறு மணிவித்துக் கொண்டுசென்றங்—கந்திமதி நதியணிவா
னாலயத்துள்- ஊபிமுகத்துக் கணித்தாகப் பணியச்செய்தாள்... ... ... யஉ- அங

செய்ததவப் பயனுடைய பெரியோரீசன்- சேவடியிற் பலமுறையு மிறைஞ்சிநிற்பாற்—
கெய்துமுணர் வதனாலே கூற்றுவென்றங்- கெடுத்ததிருப் பதிகச்செந் தமிழ்ச்சொன்மாலை—
மெய்திகழப்பாடியபின் றேற்றுதாக- மெலிசூலை தீர்ந் தருள்வெள் ளத்தின்மூழ்கிப்—பொ
ய்திகழ்புன் றலையமண்சார் பொழித்தொழிந்து- போம்பிணியைத் தொழுதிறையைப் போற்
றிநின்றார்... ... ... யங- அச

நின்றருளை நினைந்துநினைந் துருகிநீங்கா- நிலையுணர்ந்து பலமுறையாற் றொழுமெய்ய
ன்பும்—பண்டுமுனி யாயரிய தவம்புரிந்து- படியில்வரும் பண்புமிறைநோக்க வானி—லின்று
முதற் றிருநாவுக் கரசென் றுன்னை- யிகபரத்து மியம்புவதா மெனவோர்வாக்கங்—கண்டர்
களு மறியவெழுந் ததுவேநாம-மாகி யதிகைப்பதியி லமருநாளில்... ... ...யச- அரு

அமருலகற் கசூரர்பகை யாதிசார்ந்திங்- கரனடியார்ற் கமண்முதற்றீங் கணுகாதோரின்—றம
ருலக மலதிறையின் றுளேயென்று- தானறநின் றுணர்வதினு லடியர்மீது—சமருலக வினை
யையிறை சுமக்குந்திற்குஞ்- சுரர்சுவற்க காமிகளூழ் சுமந்தோர்கால்வெஞ்—சமருலக மடை
ந்துழல்வ ராதலாலே- சார்வதடி யார்சரணஞ் சரணமென்றே ௰௫- ௮௬

என்றுமடி யாரொடுதே வாதியேற்று- மெம்பெருமான் றிருவதிகை வீரட்டானத்—தன்
றடைந்த வடியவருக் கருளுங்காட்சி- யறிந்தமர ரடியர்புடை சூழ்ந்துசால—நன்றெனநா
வுக்கரசை நயந்துபோற்ற- நாதனருளென்றுதவ வேடமுங்கைத்—தொண்டுசெய வுழவாரப்
படையு நாவிற்- றேுத்திரமு மேர்த்திறைதா டொழவெழுந்தார்... ... ...௰௬- ௮௭

தொழுதவுடன் றமிழ்வேதம் பாடப்பெற்றுத்- தொல்லைவினைப் பிணிபோய்ச்சொல் வே
ந்தனென்ன—முழுதுலகுந் தொழநாம ரூபவேட- முதிர்ஞான முடையவரா யுடையான்பாத
ந்—தொழுந்தகைய வார்வமுடன் றுதிப்பவாய்கைத்- தொண்டுசெய்யு முழவாரப் படையுந்
தாங்கி—வழுவில்திருத் தொண்டர் வரப்பெறுவதாமால்- வளர்மூதூ ரலங்கரிப்ப தரிதோ
வையம்... ... ...௰௭- ௮௮

வையகத்துட் டிருவதிகை வீரட்டானம்- வானகமா னிடர்தேவ ரென்பார்முன்பின்—
பொய்யகற்றிப் போகமுடைத் தாதலான்மேற்- பொற்புவிசற் புருடரொன் றெப்புவியும்போ
ற்று—மெய்யகத்து மாந்தர் மடவார் மிடைந்து- மேவுமடி யாரமர ருடன்கலந்து—பைய
கத்துப் பணியணிவான் றெண்டர்பாதம்- பணிந்தருளுேக் கடைந்தவர்சீர் பரவிச்செல்
வார்... ... ... .௰௮- ௮௯

பரவுமடி யாரமர ராதிபோற்றப்- பல்லியநா தம்பலவுங் கிளர்ந்துசாத்தக்—குரவுமணி
த்திருவீதி போற்றிமஞ்சு- குலவுதிருக் கோபுரத்தைக் கும்பிட்டேற்றி—யரவைமதி யோடணி
வானாலயத்துள்-ளணைந்துவலங் கொண்டணுகி யண்ணல்முன்பு—விரவியவன் பொடுபணிந்து
பணியுஞ்செய்து- விளங்குவனென் னப்பர்மறை விளம்பவல்லார்... ... ...௰௯- ௯௰

விளங்கியநா வுக்கரசற் கருளுமெய்மை- 'விண்ணுமண்ணு மறிந்தவகை விளம்பக்கேட்ட
ந்—குளங்கருகு மமணருரை யுறுதிகொள்ளு- முணர்விலிபல் லவனகரத் தரசனேவத்—தள
ங்களுட னமைச்சரும்வந் ததிகைமேவித்- தம்பிரான் றெண்டரையங் கழைப்பத்தாய்பா—
விளங்குழவி செல்வனபோ லீசர்பாற்சென்- றிவனூர்வந் தெமையழைப்ப தென்கோலெ
ன்று ௨௰- ௯௧

என்கோல மாற்றுபெருஞ் சூலையாகி- யெப்பிணியுந் தீரவரு காலமாகித்—தன்கோல
மாற்றியுணர் வார்தமக்குத்- தந்தைதா யாய்க்குருவு மாகித்தக்க—நன்கோலங் கொண்டரு
ள்வா யுன்னையல்லா- னுமாற்குங் குடியல்லோ மென்றெடுத்துப்—பொன்கோல மேனியனை
ப் பொய்யர்பொய்யைப்- போற்றுதிருத் தாண்டகமும் பாடிப்போற்றி ௨௧- ௯௨

பாடுமடி யாரைவினை பற்றுவண்ணம்- பாதகாத் தாண்டுமுடற் கடுத்ததீய—கேடுமணு
காதகற்றுங் கேடிலானே- கேடுடையார் பாலணுகே னணுகினுலு—நாடுவதுன் சரணலதொ
ன் றறிவதில்லை- நாதனே யெனப்பணிவாற் குணர்த்துமாறு—வீடுபெறு வீணரிடம் வாரோ
மென்று- விளம்பினர்கேட் டஞ்சிவினை யாளர்போனூர் ௨௨- ௯௩

போயருகர் சூழ்வேந்தற் குரைக்கும்போதும்- போதகனை நோக்கவம ணிகழ்ந்துசம்பு—
நேயரெனத் திரிவதலா னிருபர்பின்னுன்- னேர்வாரா னேலினீற் றறையிற்சேர்த்துத்—தீய
வினை செய்வதென விசைந்தவ்வாறு- தீங்கிழைத்தேழ் பகல்கழியத் தெரியினென்றங்—காய
முட னரசனும்வந் தறியுங்காலை- யலர்மேவு மயனெனவீற் றிருப்பக்கண்டான்... ௨௩- ௯௪

கண்டபொழு ததிசயித்த வாசனுண்மை- கலங்கவுரைத் தமணர்விடங் கலந்தபாலை—
யுண்டுவிடாய் தீருமென வூட்டுமால- முண்டமுதாய்க் கொண்டிருக்கு முண்மைகண்டும்—ப

ண்டுமுயல் நஞ்சமையப் பரிவீதென்ற- பாதகனைப் போதகனென் றழைத்தென்னென்று—னி ன்றூனது களித்தெதிரே விடுவதென்ன விசைந்தவுடன் திருநாவுக் கரசுரைப்பார் ௨௪- ௬௫

பாரின்மத கரியுரித்த பரமன்றொண்டர்- பயப்படோ மென்றுதிரு வதிகைநோக்கிச்—சீ ரிலகுஞ் சுண்ணவெண்சந் தனச்சாந்தென்று- சிறப்பித்துத் திருப்பதிகம் பாடிநிற்பக்—காரி னம்போல் வருகரிமுன் னிறைஞ்சக்கண்டு- கடிந்தகரிப் பாகனைக்கொண் டமணர்மேற்சென் —றூர்குலைய மிதித்தழறப் பிழைத்தோரோடி- யுரைப்பதுகேட் டினிச்செயலென் னெனவு ரைப்பார் ௨௫- ௬௬

உரையுடையக் குழறியொரு வகைதுணிந்தே- யுவரியிடைக் கற்றுணைசேர்த் தொழிப்ப தென்னப்—புரையுடைய மனத்தரச னிசையப்பாவி- புடைசூழ்ந்தவ் வகைபுகுவித் தகன ருனன்பர்—திரையுடைய கடல்மடுவிற் புகிலுறைத்துத்- திருநாமச் சொற்றுணையென் றெடு த்தபாட்டிற்—கரையுடையக் கடல்கடக்கக் கல்மிதந்த- காட்சியரி தோவெளிதோ கருதிவாழ் வாம் ௨௬- ௬௭

கருதியமுன் னீர்க்கிறைவந் தவர்தாள்சூடிக்- கற்சிவிகை தாங்கிவரக் கண்டுகோடி—சு ருதிமுடி வாம்பதிக முழுதும்பாடிச்- சுழிமுனையை நாடியொரு வழியிலோடிப்—பருதிமதி யொன்றுகும் பான்மைகூடிப்- பரமனுவுக் கணுவான நிலைகண்டாடி—வருதிறங்கேட் டிருநி லத்துள் ளோருந்தேடி- வந்தணைபா தரிப்புலியூர்ப் பதியினீடி... ... ... ௨௭- ௬௮

நீடியபொற் பதிவிளக்கும் பெருமையும்பார்- நிலவுமடி யார்துதிக்கு மருமையுங்கார்— கூடியவா னிலமுழவி னுரிமையுங்கால்- குலவுமதி யுலவுமலர் பலவுந்தேவ—ராடியும்பன் மாரி பொழி யழகும்வையத்- தனைவர்பணிக் கருள்வதுமிக் கதையிலத்தர்—பாடியமுன் னூல்விரி க்கும் பரிவுநாயேன்- பகுப்பதன்றின் னூல்முறைக்குத் தொகுப்பதன்றே... ... ௨௮- ௬௯

அண்டரொடு தொண்டருமன் னகர்வாழ்வாரு- மறிந்தலைவாய்க் கரையணைந்து நோக்க முன்னங்—கண்டுதுட ரிருநிலத்துள் ளோரும்பாற்கக்- கல்மிதப்பில் வந்துகரை யேறுவார் தா—வின்றுதொழப் பெற்றோமென் றிறைஞ்சுமியாவற்- கினியவகை செய்தருளி யவர்களோ டு—மென்றெனையாட் கொண்டவர்பாற் சென்றுபோற்றி- யேற்றுவனென் றேவிரைந்தப் ப தியைச்சார்ந்தார் ௨௯- ௭௰

பதிதொழு துட்செலவடி யாரதிபோற்றப்- பல்லியநாதம் பலவுஞ்சாத் தவானோர்—நிதி யொடு பன்மணிபணிபூ மாரிஆர்த்து- நிரப்பவதை விலக்குநிலத் தோர்பன்னீர்சேர்—புதியந றுங் குங்குமத்தின் குழம்பானீவிப்- புனிதமலர் பரப்பிநல துகில்விரிக்கு—மதிவளர் வீதிகள் பலவுமணைந்துபோற்றி- மறைமுதல்வர் கோபுரத்தை யிறைஞ்சிநின்று... ... ...௩௰- ௭௧

நின்றமரர் முன்செலச்செல் பவர்செல்வாற்கு- நிலைதருபூங் கோயில்வலங் கொண்டு தாழ்ந்து—சென்றணுக் கன்றிருவாயிற் பணிந்துள்ளெய்திச்- செஞ்சடைமேல் வெண்பிறை சேர் கறைக்கண்டன்பா—லொன்றுமுணர் வோடனைய வகையும்போற்றி—யொழியாது விழியருவி பொழியச்செங்கை—தன்றலைமேற் கூய்த்தமண்செய்- யிடர்தவிர்த்துத் தாய்தந் தையாகியுமென் றெடுத்துப்பாடி... ... ...௩௧- ௭௨

எடுத்ததிருப் பதிகநிறைத் திறைஞ்சியேற்றி- யெம்பெருமான் றிருவடியைப் பிரியார் நெஞ்சி—லடுத்தவகை திருவதிகை யணையுமாற்று- லடிதொழுது மீண்டரிதோ லாடையாக— வுடுத்தவர்வாழ் திருமாணி குழியுமும்ப- ருலவொழியாத் தினைநகருந் தொழுதுபாடித்—தொ டுத்தமலர் கொடுதிலத வதியார்போற்றத்- தோற்றியருள் புரிந்தவர்தா டொழவிரை ந்தே... ... ... ௩௨- ௭௩

விரைந்ததிகைப் பதிமேவ விண்ணுமண்ணும்- விரைந்தெதிர் கொண்டடிபணிந்து சூழ ச்சென்று—கரைந்துருகி வீரட்டர் பாதம்போற்றிக்- கடல்மடுவி லெடுத்தாண்ட கருணைநோ க்கி—வரைந்தெவரு மென்றுமுணர்ந் தேத்திவாழ- வள்ளலருண் மறைதமிழால் வழுத்

தவல்லா—ரிணைந்துதிருத் தாண்டகமீ ரைந்தும்பாடி- யிறைஞ்சியருள் பெற்றகன்றங் கினி திருந்தார்... ... ... ௩௩- ௱௪

இருந்துபணி செய்துபல பதிகம்பாடி- யிறைஞ்சுபுகழ் கேட்டிகழை யொழித்தருநா னம்—பொருந்திய பல்லவனகரத் தரசன்வந்து- பொன்னடிக்கீழ் விழுந்துபிழை பொறுக்கு மாறு—வருந்தியமண் பாழிதகர்த் ததிகையீசன்- வைகுமிடந் தடமடம்பொற் குடஞ்சேர் தூபி—திருந்தவகுத் தரன்பூசை யடியார்பூசை- திருவிழா முதனிரப்பித் தினம்பணிந்தா ன்... ... ...௩௪- ௱௫

தினம்பணியு மரசன்முனந் துணிந்துசெய்த- தீங்கனைத்து மொழித்தருள்வீ ரட்டர்பா தந்—தினம்பணியுந் திருநாவுக் கரசர்மற்றத்- திருப்பதிக டொழவெழு மாதரவாலன்றைத்— தினம்பணியும் பொழுதுறைத்துள் ளுருகிநின்று- திருவருள்பெற் றங்ககன்று செல்வார் நாளைத்—தினம்பணியுந் திருவெண்ணெ நல்லூர்நோக்கித்- திருவதிகைப் பதிவணங்கிச் செல் லாநின்றார்... ... ... ௩௫- ௱௬

செல்வர்திருவெண்ணெ நல்லூர் திருவாமாத்தூர்- சென்றுதிருக் கோவலூர் முதலங்குள் ள—பல்பதிக ளுந்தொழுது பாடிப்போந்து- பவமகல்பெண் ணாகடத்துப் பரமர்பாற்சென்— றல்லலறப் பணிந்தவர்சீர் பரவியவ்வூ- ரந்தணர்க ளகத்தெய்தி யடியாற்கென்றும்—நல்வர்திரு த் தூங்கானைமாடம்போற்றி—நலம்பெறுமெய் நவைதீரப் பாடலுற்றார்... ... ௩௬- ௱௭

பாடலிபுத் திரத்தமண்பொய் யாழிமேவிப்- படிந்தவுடற் கன்னவைதீர்த் தருளவேண்டி —யாடல்புரி பொன்னார்ந்த திருவடிக்கென்- றுதியாம் பதிகமெடுத் துரைத்தாலன்ப—ருட லொழிப் பானிரவி னுழலுமீச- னுணர்த்தாரோ வுண்மையுடைத் தொண்டர்தோளி—னிடிலை ச்சூலமு மிவிடையும் விளங்கப்பூத- நிரப்பியபி னப்பதிக நிரப்பினாரே ௩௭- ௱௮

நிரப்பியபி னங்கமர்ந்து பணியுஞ்செய்து- நிலைச்சினை யிட்டருளிறையைப் பணிந்துமீன் று—புரப்பதியும் புரமுமறச் சிரித்துநோக்கும்- புனிதர்திரு வரத்துறையு முதுகுன்றுஞ்சென் —றிரப்பவர்கட் கிருநிதியு மருள்வான்பாத- மிறைஞ்சியருந் தமிழ்பாடி யினியங்கார்ந்திந்—தி ரப்பதிபா ரேற்றுபதி பலவும்போற்றித்- திருநடஞ்செ யொருபதியைத் தொழநினைந் தார்... ... ... ௩௮- ௱௯

தொழுந்தகைய முனிபுதல்வன் றுடர்ந்துதேடித்- தோற்றுமொரு குறிகண்டு தொழுது ஞானக்—கொழுந்தனைய னாகியபி னளவில்காலங்- கொடிமுதலைய் வகைமலரா திகளால்வேத —முழுதுமுணர்ந் தறிந்தவகை யருச்சிற்றேற்று- முறைதவறு தறுகருமமுக்காற்செய்கை— பழுதுவரா தருந்தவஞ்செய் தரன்முன்றோன்றப்- பகர்ந்துபுலிக் கால்பெறுவோன் பதங்கள் போற்றி... ... ...௩௯- ௱௰

பதஞ்சலிமா னுரைகேட்டுப் பணிவரைப்பாற்- பகரரிய தவஞ்செய்யப் பரமேதோன்றி —யிதஞ்சலியா துரைத்தவகை யினியரூப- மிசைந்ததல மெய்தியுணர்ந் துலகமேவி—நிதஞ் சலியா துண்மைநெறி நிரப்பிச்செல்ல- நித்தனருள் பெற்றபுலிக் காலனெந்தை—பதஞ்சலி யா தடைந்திருவ ராகித்தில்லைப்- பரமகுரு வைப்பணிவோன் பதங்கள்போற்றி ௪௰- ௱௰௧

போற்றியமா தவர்மகிழப் புவனமுய்யப்- பொதுநடஞ்செய் யிறையடிசே ரரசன்வெள் ளை—மாற்றியகம் பொன்னிறமாக் கியபினந்த- மன்னனுணர்ந் தன்னகரா லயஞ்செய்தாங் கே—யேற்றியமூ வாயிரவ ரேற்றத்தேரி- லேத்திவரும் போததிலு மொருவராகத்—தோற் றியருள் புரிந்திடப்பெற் றவற்கும்பண்டைத்- தொண்டருக்குந் தொண்டுசெய்வோ னடி கள்போற்றி ௪௧- ௱௰௨

போற்றியமா தவவரச ரிருவருக்கும்- பொன்வண்ணத் தரசனுக்கு மருளியப்பா—லேற் றியமால் வேதன்முத லனுவீருக- வெண்ணிறந்தோற் கருள்புரிந்திங் கெவைக்குமேலாய்த்

—தோற்றியதே வாதிகட்கும் தேவனாகித்- தொல்லுலகத் தைந்தொழிற்குந் தானுயாவு—மாற்றியபே ரொளியாகித் தில்லைமன்றின்- மாநடஞ்செய் வோனடிகள் போற்றி போற்றி ௪௨- ௱௰௩

போற்றுவது சொல்வேந்தர் பாதஞ்சொல்லப்- பொருந்துவது மவர்சரிதை யாதலான்முன்—சாத்தியவா ரூருபதியைத் தொழநினைந்தோர்- சார்வதன்மு னப்பதியை நோக்கியன்பிற்—றேற்றுமுணர் வாலெழுந்த வார்வத்தோடுந்- தொழுதுமன முன்செலப்பின் விரைந்துசெல்வா—ராற்றில்வளர் சோலைபயில் கிள்ளையாதி- யரகரவென் றுடிமறை பாடக்கண்டார்... ... ... ௪௩- ௱௰௪

கண்டவுட னதிசயித்துக் கைகள்கூப்பிக்- கடிமலர்ப்பூஞ் சோலைவளர் கிள்ளையாதி—விண்டினங்கள் பாடுவதை வணங்கத்தொண்டர்- வருவதுகண் டரகரவென் றவைகள்போற்ற—நின்றருளை நினைந்தொருகாற் றெழுதுநித்த- னீடுதிருப் பதிமருங்குற் பவங்களியாவும்—பண்டுதவ முயலடியார் தேவரென்றே- பகர்மறையின் பொருளுணர்ந்து பாடிச்சென்றார்... ... ... ௪௪- ௱௰௫

சென்றுதிருக் கோபுரத்தைக் கண்டிறைஞ்சிச்- செல்வர்திரு வெல்லைபணிந் தருளைநோக்கி—நின்றுகுட திசைவழியப் பதியிற்செல்ல- நிலவுமடி யார்கள்முத லெவருந்தத்த—நன்றிதரு முணர்வளவாங் கெதிர்ந்துகண்டு- நலம்பெருகி யுருகிமகிழ்ந் துறவாடிக்கைக்—கொண்டுசெல்வாற் கவ்வாறே பரிந்துநாடுங்- கொள்கைவழு வாதவரோ டணையுங்காலை௪௫- ௱௰௬

காலமொரு கடிகையெனக் கடிகைகோடி- காலமெனக் காணுமா னடியாற்கென்றும்—ஞாலமொரு தூளியள வேனுமுண்டோ- நான்மறைய லாதவர்க ணவில்வதுண்டோ—வாலமமு தாய்க்கரிவந் தடியில்வீழ்ந்து- மலைகடலிற் கல்மிதந்து மறைவதுண்டோ—கோலமலி தில்லையணி மணிக்குமேலாய்க்- கொள்கைதரு மழகுமொலி முழவுமுண்டோ ௪௬- ௱௰௭

முழவொலியு நகரணியு முயன்றுதேவர்- முறைமுறையே வருமொளியும் வந்துமுன்னே—தொழவணையும் பொழுதுபடு மடியும்பின்னுந்- தொடர்ந்தவர்செய் பணியையுமேன் சொல்வதீசன்—கழல்பணியத் திருநாவுக் கரசருள்ளங்- கசிந்துருகிப் பலவீதி தொழுதுமாலு—நுழைவரிதாங் கோபுரத்தை யிறைஞ்சிக்கண்ணார்- நுதலுடையான் கனகசபை முன்பணிந்தார்... ... ... ௪௭- ௱௰௮

முன்புவரைப் பாலருளு முதல்வனோக்கி- முனிவநீயென் றுவந்தா யெனவெழுந்து—பொன்புரையு மேனியனே புவனமுய்யப்- பொற்பொதுவி னடம்புரியும் புனிதவெந்தா—யன்புடைய வற்றுவுன் னுடல்காண்க- வடியனேன் வந்தனெனத் திருவிருத்த—மென்புருகப் பலமுறையுந் தொழுதுபாடி- யேற்றினார் பத்தனுய்ப்பாட வென்றே ௪௮- ௱௰௯

பாடினார் திருப்பதிக மிரண்டுமுற்றப்- பாடியரு ளானந்த வெள்ளமூழ்கி—யாடினாரடியபா தத்தைநோக்கி- யாடல்மகிழ்ந் தரனவற்கப் பாதஞ்சூட்டச்—சூடினார் சூடியதி சூக்குமத்தின்- சூட்சிநிலை யாலுணர்ந்து சுவானுபூதி—கூடினார் கூடியபின் கூற்றொன்றுயிக்- குரம்பையொழித் தங்கணைந்து கூறினாரே ௪௯- ௱௨௰

கூறுதமிழ் மறைமுழுது முரைத்தபின்னிக்- குரம்பையொடு நாமழைத்துட் கொள்வதென்றே—மாறிநட மாடுபர மருளப்பெற்ற- மாதவர்தாங் குரம்பையிடை மகிழ்ந்துபின்னுந்—தேறும்வகை திருநடனங் கும்பிட்டேற்றித்- தேவனே திருவுளப்பாங் கறியாநாயேனாறுதவிர்த் தாளுடலு முயிருநீயவ்- வுயிற்குயிரு நீயுனது கருணையென்றே ... ௫௰- ௱௨௧

என்றினமும் பலவகையா லிறைஞ்சியேற்றி- யேகனருள் பெற்றகன்றங் கருகுசூழு—முன்றில்வலங் கொண்டுமுறை தாழ்ந்துமூவர்- முடிபடியிற் றிகழுதிரு வணுக்கன்வாயிற்—சென்றுபணிந் தாலயத்துட் செல்வன்மேவுஞ்- செங்கனக மேருசிக ரிகளும்போற்றிப்—பண்டுமுதற் றேவர்பகுத் துறையும்வீதி- பலவணங்கி யமர்ந்திரண்டு பணிசெய்காலை௫௧- ௱௨௨

பணியணிவான் வேட்களத்துச் சென்றுபாடிப்- பணிந்துருகிக் கழிப்பாலை யிறைஞ்சிநி ன்று—தணிவில்பெருங் காதலுடன் வானவற்குந்- தானவனே யென்றுதமிழ் பாடிவைகி—ய ணிபெருகு மம்பலமீண் டணையுமாற்று- லங்ககல்வார் நினைப்பவர்த மென்றெடுத்து—மணிவ ளர்கண் டனைப்பதிகம் பாடிவந்து-மன்றினடங் கண்டிறைதா டொழுதுவாழ்ந்தார் ௫௨-௱௨௩

தொழுமன்றயந் தணர்களுளத் தோங்குவானைத்- தொழுநிலையாற் கரியானை யென்றெடு த்து—வழுவில்திருத் தாண்டகமும் வணங்குந்தோறும்- வளர்பதிகங் களும்பாடி வைகுநாளி ற்—கழுமலத்திற் பிள்ளையா ரவதரித்துக்- கடவுளரு ளாலுமைபால் ஞானம்பெற்றே—யெ ழுதுதமிழ் மறைபாடிப் போற்றிச்செல்வ-தெம்மருங்குமடியார்களுரைப்பக்கேட்டு ௫௩-௱௨௪

கேட்டவுட னதிசயித்த கேழ்விமேலோர்- கேளாதே வேதமுளைப் பவளைக்காண—நா ட்டமுடன் றிருநடனங் கும்பிட்டேற்றி- நாதனருள் பெற்றுமறை யோர்கள்தத்தங்—கூட் டமுட னடிதொழுது குலவுவீதி- குரம்பையினுற் புரண்டுவலங் கொண்டுபோற்றி—யாட்டுபி ற விப்பிணியென் றகற்றுவாயென்- றவ்வெல்லை பணிந்தருளை நினைந்தகன்றார் ... ௫௪-௱௨௫

நினைப்பவர்தம் மனத்துயர நீக்குவானை- நிலவுதிரு நாரையூர் நிமலன்றன்னைத்—தினைப் பொழுதிற் சென்றடைவ தெனவிரைந்து- திகழ்சடையான் முன்பெய்தித் தொழுதுபாடி— யுனைப்பிரிந்தென் செய்வனென்றோர்ந் துளத்திருத்தி-யுடனருள்பெற் றாழிபல கடக்கத்தோ ணி—தனைப்பிரியா திருப்பவர்தங் காழிமேவத்- தளர்நடையிட் டுமைசுதன்வந் தணையக்கண டார் ௫௫-௱௨௬

அணைந்ததுகண் டடியார்கள் கூட்டத்துள்ளொன்-னத்தர்புகுந் தவரடியிற் பணிவாற்குத்த —துணைவரொதிர் பணிந்துவிரைந் தெடுத்துநோக்கித்-துலங்கியகூ லமும்விடையு மணியப்பெ ற்றீ—ரிணையுமக்கிங் கெவராவா ரப்பரேயென்- றினமுமுள புகழ்விரிக்கி லடியேனென்றோர் —கணையுமிலா தெயிலெரித்தான் கழல்வணங்கக் - கருதுமிரு வருங்கலந்து கடிதிற்சென் றார் ... ... , ...௫௬-௱௨௭

சென்றபல காலமுஞ்செல் காலமும்போற்- செறித்தெதிர்கா லமும்புகலி விளங்கத் தோணி—யென்றுமகிழ்ந் துறைபரனை யிறைஞ்சிமேன்மே- லேற்றியநா வுக்கரசை நோக்கு ஞானக்—கன்றுமது கடவுளைநேர் பாடுமென்னக்- களித்திரங்கிப் பாற்கொண்டு மூடியென னும்—பண்டருமின் னிசைப்பதிகம் பாடிப்பாடப்- பகர்வர்மடத் தமர்ந்திரண்டு பணிசெய் காலை... ... ... ௫௭- ௱௨௮

பணியணிவான் பதிபலவுந் தொழநினைந்து- பகர்ந்துதிருக் கோலக்காப் பணிந்துபாடித் —தணிவில்பெருங் காதலுடன் றொடருஞ்சண்பைத்- தமிழ்விரக ரையும்விடைகொண் டகன் றுபாசப்—பிணியகற்றுங் கருப்பறிய லூர்புன்கூரும்- பிறைதவழுந் திருநீரோர் திருக்குறுக்கை —யணிநின்றி யூருநனி பள்ளியாதி- யங்குள்ள பதியுமணைந் திறைஞ்சிப்பாடி ௫௮- ௱௨௯

இறைஞ்சிவரு பொன்னியிரு கரையுஞ்சார்ந்தங்- கிறைமகிழ்செம் பொன்பள்ளி பணிந் துவாஞ்ஞோர்—நிறைந்தமயி லாடுதுறை துருத்தியேற்றி-நிலவியவேழ் விக்குடியோ டெதிர்கொ ள்பாடிக்—கறைமிடற்றான் கழல்வணங்கிக் கோடிக்காவுங்- காண்பரிய பதிபிறவுந் தொழுது வேச—மறைந்ததெலாந் தமிழ்மாலை யாகப்பாடி- யணிந்தகன்றார் தாவடுதண் டுறையைச் சார்ந்தார்... ... ... ௫௯- ௱௩௰

சார்ந்ததவத் தோர்கதியைச் சார்வதல்லாற்- சார்வதில்லை யேழ்பவந்தாழ் பதமுமென் றே—சேர்ந்துதுற வறநெறிகூர்ந் தரனடிக்கீழ்ச்- சென்றடைந்தோ ரன்றியும்பின் செல்லாநி ன்ற—தேர்ந்தமனத் துடையடியா ராதிநாளுந்- தெய்வீகம் விளங்குமுள மகிழ்ந்துபோற்ற —வார்ந்துறையு மாவடுதண் டுறையுள்ளாரை- யடிபணிந்தங் கமர்ந்திருதொண் டமைத்தகன றார் ௬௰- ௱௩௧

அகன்றகண்ட பூரணமா யண்டபிண்டத்- தாதார மாறினுங்கீழ் மேலுமாய்நூற்—புகன்

றசுழி முனைமற்றியாற் சுனருமாயிப்- புவியிலிண்ட மருதுறையும் புனிதனேயென்—றுகந்தரு
கியுள்ளணைந்து பாடிப்போற்றி- யுடனருள்பெற் றவர்மகிழ்நா கீச்சரஞ்சென்—றிகந்தனையெ
ன்றிகழ்வதென் றங்கிறைஞ்சியேற்றி- யிமையவர்சூழ்பழையாறையெய்திச்சென்றார் ௬௧- ௱௩௨

சென்றுதிருச் சத்திமுத்தத் தமைபூசித்த- செல்வனடி யிற்பணிந்துன் செய்யபாத—
மென்றலைமே லாக்குவதென் றிரங்கிப்பாட- வெம்பெருமா னல்லூரில் வாவாவென்ன—மின்
றயங்கு சடையானை விடைகொண்டிப்பான்- மீண்டுவர்தங் கடிபணிவாற் கெதிரேதோன்றி
—யின்றுனது குறைமுடிப்போமெனவுரைத்தே- யிணையடியு மளித்தாண்டின் றென்னையா
ண்டார் ௬௨- ௱௩௩

ஆண்டவர சங்கமர்நா ளாண்டார்பாத- மளித்தவரு ளானந்த வெள்ளமூழ்கித்—தாண்
டகமே முதலான பதிகம்பாடித்- திரும்பணிசெய் தங்குள்ள பதிசென்றேற்றி—மீண்டுதிரு நல்
லூர்வந் தணைந்துபோற்றி- மீளுவார் திருப்பழனந் தொழுதமாடே—தோன்றுபல பதியணை
ந்து தொழச்செல்வார்முன்- றோன்றுதிருத் திங்களூர் வழிவந்துற்றார் ௬௩- ௱௩௪

உற்றதொரு செய்கையங்குண் டுரைப்பக்கேண்மி- னுண்மைநெறி யப்பூதி யடிகளென்
பார்—பெற்றதுல மோதவவே தியர்களாவார்- பேணியறி யாமுனமிப் பெரியோர்பாதஞ்—ச
ற்றுமற வாதிதையத் திருத்திநாளுஞ்- சாருமறம் பொருளின்ப மனைவியாதி—சுற்றமுமப் பெ
யர்விளக்கிச் செல்லாநின்ற- சுகிர்தம்வழிக் கிவ்வழியாய்த் தொடர்ந்தார்தூயோர் ௬௪- ௱௩௫

தொடர்ந்துவரு வழியில்மட மாதிகண்ட- தூயோரங் கணைந்தவரைந் ததையும்பார்த்து—
நடந்தபடி கேட்டவர்பா ணண்ணுமுன்ன- நாட்டமது வாதலினு லறிந்துஞாலங்—கடந்தவர்
தாங் கலந்துறையுஞ் சுற்றத்தோடுங்- கடிதிலெதிர் வந்துகழல் வணங்கமேன்மேற்—படர்ந்த
பெருங் காதலுட னெடுத்துநோக்கிப்- பரமனருள் பாலிக்குமெனப்பகர்ந்தார் ௬௫- ௱௩௬

என்பொருட்டிங் கெழுந்தருளும் பெரியோயில்லத்- தெழுந்தருளி யமுதுசெய விரங்கு
மென்போர்—நன்பொருட்டுக் குடன்படுவா ரிசைந்தங்கெய்த-நல்லசுவை யமுதமுத லமைத்
தபின்னன்—பின்பொருட்டங் கவருரிமை பிறங்குமாறும்- பிறப்பகற்றுந் தமிழ்வேத முரைக்
குமெங்கோன்—றன்பொருட்டெங் கெவ்வினைதீர் தருளுமாறுந்- தரையறியப் பறையறைந்த
தவமென்சொல்வேன் ௬௬- ௱௩௭

தவமுடையா ரேவவவர் தனயன்சென்று- தளிருடைவண் கதலியினிற் குருத்தையீர்கா
ற்—பவமடையா தவன்கரத்தி லரவந்தீண்டிப்- படர்விடமே லோடவிரைந் தோடிவந்து—க
வமடையா முன்கதலி யிலையைத்தாயர்- கைக்கொடுத்து விழுந்திறந்து மறைத்தளத்திற்—சி
வமுடையா ரமுதுசெயத் தொழுவாற்கெந்தை- சிந்தைகளிப் புடன்றிருநீ றளிக்கும்போ
து ௬௭- ௱௩௮

போதுசே ரயன்வாணி யெனநின்றோற்குப்- புரிந்தளித்தும் புதல்வரின்மூத் தவனெங்
கென்னத்—தீதுசேர் வதைமொழியார் தீங்குஞ்சொல்லார்- திறந்தெரிந்து திருநாவுக் கரசு
ளைப்பார்—யாதுசேர்ந் திடினுமவன் றனைக்குறித்து- யாமெடுத்த திருநீறிங் கவன்சிரத்தின்
—மீதுசேர்த் தல்லதுவே றெவையுநாடோ- மிக்கதவத் திருளது விளம்புமென்றார் ௬௮-௱௩௯

என்றவுரை கேட்டவர்க ளுளதியம்ப- வெம்பிரா னிறையருளை யுணர்ந்தங்காவி—விண்
டசவ மெங்கெனவும் விரைந்துகாட்ட- விடந்தீர்ப்ப தொன்றுகொலா மெனவெடுத்து—மின்
றபங்கு சடையானைப் பாடவால- மீளவுட னுயிர்கொடுத்தி யமனுமீண்டான்—கண்டுயில்நீங்
கிடவெழுவான் போலெழுந்து- கல்மிதப்பிற் கடல்கடந்தார் கழல்கள்பூண்டான் ௬௯-௱௪௰

கழலிணையிற் றாழ்புதல்வன் றனைக்குறித்துக் கருதியநீ றவன்சிரத்துங் கனிட்டராதி—
தொழுபவற்கு மளித்தவர்க ளுடன்வருந்துந்-தொண்டரொடு மமுதுசெய்தங் கமர்ந்துதேவர்
—முழவுமலி திருப்பழனம் பணிந்தப்பூதி-முனிவர்தவஞ் சிறப்பித்துப் பாடிநாளும்—பழவடி
யார் மகிழ்சோற்றுத் துறையுமாடு- பல்பதிபோற் றியுமீண்டு பழனஞ்சார்ந்தார் ௭௰-௱௪௧

சார்ந்துபணி செய்துபல பதிகம்பாடிச்- சாலநா ளங்கமர்ந்து சார்ந்தபோதே—யார்ந்தினிய திருப்பாதஞ் சூட்டுவித்த- வாண்டானைத் தொழநினைந்தங் ககன்றுநல்லூர்—சேர்ந்திறைஞ்சித் தொண்டிரண்டு மிசைந்துவைகிச்- செல்வமலி திருவாரூர் செலவிரும்பித்—தேர்ந்தவர்சூழ் பழையாறை யெய்தியாங்கு-தேவர்தொழும்பதிபலவும்வணங்கிச்சென்றார் எக-ாசஉ

சென்றுவலஞ் சுழிகுடமூக் கணைந்துநாலூர்- சேறைகுட வாயில்நறை யூர்பணிந்தங்—கண்டர்பிரான் பதிபிறவுந் தாழ்ந்துபாடி- யகன்றுதிரு வாஞ்சியமும் பெருவேளூரு—மின்றுதொழப் பெற்றேமென் றிறைஞ்சியாங்கே- யிறைதானம் பலவணங்கி விளமல்போற்றி—யென்றெனையா ளுடையவர்தங் திருவாரூரை- யெய்துவனென் றேவிரைந்தவ் வெல்லைசேர்ந்தார்... ... ... எஉ-ாசங

எல்லையில்வந் தவதரித்தோர் பவங்கடந்து- யெய்தரிய பெரியபத மடைவரென்று—லெல்லையில்சீர்த் திருவாரூ ரளவுமேக-னெழிலரியா சனத்திலங்கு மருளுஞருமூ—மெல்லையில்சீ ரடியார்க ளியல்புமெம்மா-லேற்றுவதோ திருநாவுக் கரசைக்காண—வெல்லையில்சீ ரடியர்வரக் கண்டவ்வெல்லை- யிறைஞ்சினு ரியாவையுமெம் பெருமானென்றே... ... எங-ாசச

பெருமானுக் காளாவாற் காளாகின்ற- பெரிதுறமற் றிடமின்றி யெனவெடுத்து—வருமாலுக் கரியானை யுகந்துபாடி- யுள்ளணைந்து திருவீதி பணிந்துதேவர்—வருகாலு மணிபொழிற்கோ புரமிறைஞ்சி- வைகுமடி யார்சபையை வணங்கிப்புக்குத்—திருமூலட் டானனெதிர் சென்றுகண்டு- திருவடிக்கீழ்ப் பலமுறையுந் தொழுதுநின்றார் ... ...எச-ாசரு

நின்றுபர வசமாகு நிலையுணர்ந்து- நீடியருளானந்த வெள்ளமூழ்கிப்—பண்டுவரைப் பாலுமிகற் றம்பலத்தும்- பரிந்துரைத்த படியங்கும் பகர்ந்தவுண்மை—கண்டுதிருத் தாண்டகமுன் னமைத்தபின்னுங் காண்டல்கருத் தாயினவென் றெடுத்துப்பாடிக்—கொண்டுபுறம் போந்தடியார் சபையையெய்திக்- கொய்யுலா மெனும்பதிகங் கூறிவைகி ... .எரு-ாசசு

கூறியகா லங்களெலாங் கும்பிட்டன்பிற்- குறித்தபணி செய்துபல பதிகம்பாடி—யேறியசீர் நமிநந்தி யடிகள்தொண்டு- மெடுத்தேற்றி யரனெறியி னருளும்போற்றி—நீறியலுந் திருமேனி பொலியவங்கு- நிகழுநாட் பிறபதியுந் தொழநினைந்துள்—ளூறியவன் போடுவலி வலங்கன்றாப்பூ- ருயர்கீழ்வே ளூர்தொழுதா ரூர்வந்துற்றார்... ... ...எசு-ாசஎ

உத்ததிரு வாதிரைநா ளணுகமுன்ன-முத்தமமா மறைவிதித்த வாறுணர்ந்த—நற்றவர்செய் நல்வினைக ளடங்கிநாளு- நல்விழா வணிபெருகத் தெரிசித்தன்பர்—சித்தமகிழ்ந் தாடரவக் கிண்கிணிக்காற்-சிவலோகத் தியாகேச னருள்பெற்றுங்கு—வைத்தமன துடனகன்று புகலூர்நாடி- வருகாலை பலபதியும் வணங்கிவந்தார் ... ... எஎ-ாசஅ

வந்தணையா முன்புகலூர் வந்தணைந்த- வண்புகலிப் பிள்ளையா ரெதிரேசெல்ல—வந்தணைந்த திருநாவுக் கரசிறைஞ்ச- வருமறையோர் தாமுமுட னிறைஞ்சியாரூர்—வந்தணைந்து வருகின்றீ ரப்பரேயவ்- வளநகரின் சீருரையு மெனத்தாட்வைகின்—வந்தணைந்த வாதிரைநா ளண்ணல்வீதி- வந்தணைந்த வண்ணமுத்து விதானமென்றே ... ... எஅ-ாசகூ

என்றெடுத்த திருப்பதிக நிரப்பக்கேட்டங்- கெம்பிரான் காழியர்கோ னுடன்விரைந்தே—யன்றெடுத்த வலப்பாதங் கண்டியானு- மப்பதிக்கே வருவனென வுரைத்துச்செல்வாற்—கின்றெடுத்த குறைமுடித்தங் கிருப்பதாக- விசைந்துபுக லூரணைந்து திருமுன்பெய்தி—யன்றெடுத்த புதுமலர்மா லையின்மீதன்ப- ருருந்தமிழ்மா லையையணிந்தங் கடிபணிந்தார் ... ... எகூ-ாருய

அடிபணிந்து பணிசெய்தங் குறையுநாளி- லம்மருங்கம் பிகைபாகன் மகிழ்செங்காட்டங்—குடிபணிந்து நள்ளாறு மருகல்சாற்றை- கும்பிட்டுத் தமிழ்மாலை பாடிமீண்டும்—படியணையாப் பதமருள்வான் பதிவந்தெய்தப்- பகர்ந்தபடி காழியர்கோன் வரக்கலந்து—கடிதணைந்தப் பதிதொழுது பரவிமீளக்- கழல்வணங்கு முருகர்மடத் தமருங்காலை... அய- ாருக

௨௧- வது- அப்- சு- ள்- சரிதை.

அமருநாட் சிறுத்தொண்டர் நீலநக்க- ரிணையவவ ரொடுமடிய ராதிசூழத்—தமருமாய்த் தனித்துணையு மாகுவானைத்- தாழ்ந்துதவ மிகுமுருகர் திருத்தொண்டேற்றி—விமலனூர் பதிபலவுந் தொழவிரும்பி- விடைகொண்டு செல்லவிடை கொள்வார்மீளத்—திமலனுன் மறைப்புறவத் தரசுந்தாமுந்- திகழம்பற் சென்றிறைஞ்சிக் கடவூர்சேர்ந்தார் … ௮௧- ௲௫௨

சேர்ந்தமறைச் சிறுவனுக்காய் மறலிவீழச்- செயிற்றுதைத்த பதம்பணிந்து மயானம் போற்றி—யார்ந்துநறுங் குங்கிலியப் புகையிட்டேற்று- மந்தணர்த மடத்தமர்ந்தே யாக்கூரெய்திச்—சார்ந்தவர்பாற் சார்பவன்றான் றோன்றிமாடஞ்- சார்ந்துமருங் குளபதியும் வணங்கிப் பாடித்—தீர்ந்தவன்பர் முதலெதிர்சென் றிறைஞ்சத்தாழ்ந்து- திருவீழி மிழலையெல்லை தொழுதுள்புக்கார் … … … … … … … … … … … … … ௮௨- ௲௫௩

உள்ளணைந்து திருவீதி தொழுதுசெல்ல- வுயர்குலமா தவர்மடவா ருமைபால்ஞானத்—தெள்ளமுத முண்டவருங் கல்மிதந்தே- தெண்கடனின் றகன்றவரும் வருகின்றாரென்—றுள்ளமகிழ் வோடெதிர்கொண் டடியிற்றாழ்ந்தங்- குடன்செல்லக் கோபுரத்தை யிறைஞ்சிப்புக்குப்—பள்ளமடை யும்புனல்போல் விரைந்துசென்று- பரமனுறை விமானத்தைப் பணிந்துநின்றார்… … … … … … … … … … … … … … … ௮௩- ௲௫௪

நின்றுதிரு வருள்கண்டு தொழுதெழுந்து- நிமிர்செய்ய சடையாரென் றெடுத்துப்பாடிப்—பண்டுதிரு மாலொருகண் பறித்துச்சாத்திப்- பரிசுபெறு வதையுமதிற் பகர்ந்துபோற்றி—யென்றுமுனைப் பிரியேனென் றிறைஞ்சிப்போந்தங்- கெழுமடியார் மடங்காட்ட வினிதிருந்தே—யன்றுமுதற் காலமெலா மணைந்துபோற்றி- யரும்பணியுஞ் செய்துகளித் தமருங்காலை … … … … … … … … … … … … … … … ௮௪- ௲௫௫

காலவியல் பாலிரண்டு நதியும்பொய்த்துக்- கடல்சுவறக் கதிர்விரித்து வளஞ்சுருங்கப்—பாலன்முகந் தாய்பாரா தருந்துவாராய்ப்- பார்முழுதும் பசிநோய்வந் தடைந்துயாவுஞ்—சாலவருந் துவமிழலைச் சம்புதன்றாள்- சாருமிரு வற்கருளி யடியாற்காக—ஞாலமறி யப்படிமீ திரண்டுகாசு- நாளுமிடக் கண்டெடுத்து நலஞ்சிறந்தார் … … … ௮௫- ௲௫௬

சிறந்தபடிக் காசிலொன்று வாசிபட்டுச்- சிலபொழுது தாழ்ந்தமுது செய்யநாளுஞ்—சிறந்தபடிக் காசிலொன்று வாசியின்றிச்- சிலபொழுதுந் தாழாதே யடியாரோடுஞ்—சிறந்தபடி யமுதுசெய்து பறைநிகழ்த்திச்- சிதையவரு வாற்கும்வர மாட்டாதாற்குஞ்—சிறந்தபடி யளித்திருகா லமுமெப்போதுஞ்- சிவம்பெருகித் திருநாவுக் கரசிருந்தார் … ௮௬- ௲௫௭

அரசனரு மறைவிதித்த வாறறஞ்செய்- தந்தணர்மா தவர்மகங்க ளாதிசெய்தும்—விரைசெய்நறுங் குழலாரிற் கற்பின்மிக்கார்- விரதமுறை புரிந்துமுல கிடுக்கந்தீர்ந்து—திரைசெய்கடனீர்விதையாய்க் கனமருந்தித்- திருவருளாற் பாந்துதகு மாரிபெய்து—வரைசெய்தவ நதிபெருகி வையமெல்லாம்- வளம்பெருக வுளம்பருகி மலர்ந்ததென்றே… … ௮௭- ௲௫௮

என்றுமுள மகிழ்ந்திருக்கு மிருவர்வீழி-யேகனடி தொழுதுபல பதிகம்பாடி—நின்றுபத மனம்பிரியா திருக்குமாறன்- னிலையுணர்ந்தெப் பதிதொழவு நினைந்தவுண்மை—கண்டருளப் பெற்றுவிடை கொண்டகன்று- கடிதிரு வாஞ்சியஞ்சேர்ந் திறைஞ்சிவைகிச்—சென்றுமருங் கிறைதானம் பலவும்போற்றிச்- செல்லுவார் செல்வர்மறைக் காடுசேர்ந்தார் ௮௮- ௲௫௯

சேர்ந்தமறைக் காட்டிலொரு செய்கையுண்டு- செப்புவேன் செப்புமறை சென்றகாலத்—தார்ந்தரனை யருச்சிற்றங் ககன்றபோதே- யடைத்தகத வந்திறக்கக் கூடாதாய்வே—றீர்ந்தொருவா யில்வழிசெல் வதுதானங்கு-விருவர்வரக் கேட்டடியா ராதியெல்லை—சார்ந்தடியிற் றாழ்ந்தவுடன்றாழ்ந்தவ்வெல்லை- சார்ந்துமுறைதாழ்ந்தணுக்கன் வாயில்சார்ந்தார் ௮௯- ௲௬௰

சார்ந்தவுட னன்னிலைமை சாத்தக்கேட்டுச்- சண்பையர்கோன் றிருநாவுக் கரசைநோக்கிச்—சேர்ந்தகத வந்திறக்கப் பாடுமென்னச்- செப்புவார் பண்ணினேர் மொழியாளென்றே—யார்ந்ததிருப் பதிகமெடுத் துரைத்தபின்பு-வக்கதவந் திறந்தந்த வழியுட்சென்று—தீர்ந்தவன்பரிருவருமுன் றொழுதுபாடித்- திருமறைக்காட் டண்ணலருள் பெற்றுமீண்டார் ௯௰-௲௬௧

மீண்டகத வம்மடைக்கப் பாடியென்று- மீண்டுசெல்லு மாறருள வேணுமென்றே—யாண்டவர சம்புகலி யாற்குரைக்க- வார்ந்தவர்தாஞ் சதுரமென வெடுத்தபாட்டி—னின்றகத வங்குவியக் கண்டுதொண்டர்- நீள்விசும்பி னிடைதேவ ராதியார்த்தா—ராண்டகையு மப்பதிக மும்முழுதும்பாடி- யாரணமும் பரவுகடைக் காப்புச்சேர்த்தார் ... ...கக-ாசுஉ

சேர்ந்துவரு மிருவருக்கு மடங்கள்காட்டச்- சென்றமுது செய்துதுயி லமரும்போது—நேர்ந்தவர்க்கங் கருளியவா றெழுந்துசென்றும்- நேராதே யாங்கொருபூங் கோயினண்ணத்—தேர்ந்தொருவா றேடிவந்து தெரிசிற்றுங்கு- தேடுமர சக்குரைத்த பின்சேவித்துச்—சார்ந்தவர்க ளார்ந்துதொழத் திருவாமூரிற் - சார்ந்திலங்கத் தொழுதுமறைக் காடுசார்ந்தார் ... ...கஉ-ாசுங

காடிடங்கொண் டாடுமறைக் காட்டம்மானைக்- காலமெலா நேர்தொழுது பதிகம்பாடி—மர்டுபணி செய்தமரு நாளிற்றென்னன்- மந்திரியார் செலவிட்டார் சிவர்வந்தெய்தி—நீடுபுக லித்தலைவ ரடிபணிந்து- நிற்பவரை நோக்கியிட ருளவோவென்ன—நாடுமம ணரசுமம ணுகியுன்று-ணுமேர சியுமமைச்சு நலிவதென்றார் ... ... கங- ாசுச

என்றவுரை கேட்டவுட னீறணிந்து- வெழுந்தருளித் திருநாவுக் கரசைநோக்கப்—பண்டமணர் செயல்நினைந்தங் கிசையாராய்ப்பின்- பகர்வரு முண்மைகண்டு பயப்படேன்யான்—சென்றமணே வென்றரச னுதிநீறு- சேர்த்திருவர் துயர்நீக்கி மூவரோடங்—கண்டர்பிரான் பதிபலவுந் தொழுதிங்கும்மோ- டணைவனென்றே செல்லவிடை கொண்டுநின்றார் கச- ாசுரு

நின்றுமறைக் காடரருள் பெற்றுமீண்டு- நிமலனுறை மிழலைதொழ நினைந்தகன்று—சென்றுதிருக் காரோண முதலாயங்கு- செஞ்சடையார் பதிபலவுஞ் சேவித்தேற்றி—யென்றுமனம் பிரியானை வீழிமேவு- மெம்பிரான் றனைத்தொழுது பாடிவைகி—யன்றுசுர பிக்கருளு மம்மான்றன்னை- யாவடுதண் டுறையானை யடிபணிந்தார் ... ...கரு- ாசுசு

அடிபணிந்து சண்பையர்கோன் றுயிரம்பொ- னளித்ததிற மெடுத்தேற்றிப் பழையாறெய்தி—வடதளியைக் கண்டுகரங் குவித்தபோதவ்- வளநகரார் பொய்யமணர் பாழியென்னக்—கடவுள்பதி யலதுதொழநி னையோமங்கு கண்டுதெரி சிப்பளவும் பொசியோமென்று—திடமுடனங் கிருப்பதுகண் டிரவிலீசன்- திருவுளப்பாங் கரசனுளத் திலங்கச்செய்தான். கசு-ாசுஎ

இலங்குமுடி யரசனுரைத் தெழுந்தங்கெய்த- யிரவுபக லாகிரத மாதியெய்திக்—கலங்குமமண் பாழியிடித் தகற்றியங்கு- கடவுளிடங் கண்டடையத் திருத்திநாளுந்—துலங்குமறை விதித்தவகை தாபிமுன்னுய்த்- துடங்குமபி டேகமுத லியற்றிமேரு—வலங்கொள்கதி ரெழுவதன்முன் யாவுஞ்சூழ்ந்து- வலங்கொளவந் தருந்தவரைப் பணிந்தான்மன்னன் கஎ- ாசுஅ

மன்னன்முதற் றெழுதுரைப்ப துணர்ந்துவாக்கின்- மன்னர்வரை மன்னனரு ளிதுவென்றுன்னி—யன்னவனுக் கனையவகை யுரைத்தெழுந்தங்- காறைவட தளியிறையைப் பணிந்துபாடிப்—பொன்னியிரு கரைப்பதியு மிறைஞ்சியேற்றிப்- போந்துதிரு வானைக்கா வணங்கிவைகிச்—சென்னிநகர் கற்குடியு மெறும்பியூருஞ்- சென்றுபராய்த் துறையணைந்து செல்லாநின்றார் ... ... கஅ-ாசுகூ

நின்றுமருங் குளபதியும் பணிந்துபாடி- நிருத்தனுறை பஞ்ஞீலிக் கணையுங்காலைத்—துன்றுபசி வருத்தமுறத் துணைபின்னுயோர்- துணைவர்துணை யாகிவந்து கானஞ்சேர—வன்றுகதி ருச்சியில்வந் தயர்வுமெய்த—வண்ணல்பொதி சோறுகொண்டந் தணனுயாங்கு—சென்றுதட மாதிநிழல் செய்துநிற்பச்- செல்பவரவ் வல்லவனைக் கண்டுகொண்டார் ...ககூ-ாஎய

கண்டவுடன் பசிசிறிது நீங்கினுராய்க்- கனைத்திருக்குந் திருநாவுக் கரசைநோக்கி—நன்றுபொதி சோறுளது தருவேனிந்த- நற்றண்ணி ரொடுமெருந்தி யிளைப்பொழிப்பீ—ரொன்றுனைத்த வுடனிசைவாற் கெடுத்தளித்து- யேகனமு தாட்டினு விளைப்பாருதோ—வுண்டுமகிழ்ந் திருப்பவரு மடியாற்கெல்லா- மூட்டிவழிக் குறுதுணையு மாயினுரோ ... ...ா-ாஎக

ஆயபொழு தந்தணர்பி னடியார்சூழ- வன்பர்திருப் பஞ்ஞிலி யணையவாங்கு—மேய்குழு
வுடனிடையே சென்றமேலோர்- மேவினூர் பூங்கோயி லவைகாண்பாரார்—போயினபி னிறை
யவனென் றறிந்துபோற்றிப்- பொதிசோறு சுமந்தூட்டப் பொருந்தியென்பாற்—றாயினுநற்
றந்தையென வந்தாயென்றே- தமிழ்மாலை புனைந்துபல முறையுந்தாழ்ந்தார் ...௱௧-௱௭௨

தாழ்ந்தெழுந்து தம்பெருமான் கோயில்சார்ந்து- தமிழ்மாலை பலபாடிப் பணிந்துவை
கிச்—சூழ்ந்தகிரி பதிகளும்போய்த் தொழுதிங்கேகிச்- சுரர்நிறையண் ணாமலையை யணைந்து
மாலோ—னாழ்ந்தயன்மேற் பறந்தடியு முடியுந்தேட- வாதியழ லுருவாகி நின்றகோலம்—வீ
ழ்ந்திறைஞ்சி யங்குள்ள பதிசென்றன்பர்- விளங்குதொண்டை நாட்டிறிரு வோத்தூர்சேர்ந்
தார் ௱௨-௱௭௩

சேர்ந்தவர்செந் தமிழ்மறையா திகளுணர்ந்து- செல்வமலிந் திகபரத்துஞ் செழிப்பரேல்
மு—ணர்ந்ததவ மாங்குவவ தரித்துநாளு- மறிவுடைய ரறிந்துயுமா றரியநூல்க—டோர்ந்து
ரைத்தவ் வழிதலைவ னடிகள்போற்றித்- தெய்வீகம் விளங்கியருள் பெற்றுமுற்றி—சார்ந்தவ
ர்களன்றியுஞ்சார் பவர்கள்வைகுஞ்-சாதுதொண்டைநாட்டருஞ்சீர்சாத்துவாரார் ௱௩-௱௭௪

சாத்துவதோ சங்கரன்முன் மகிழ்ந்தன்னாட்டிற்- சார்ந்தகச்சி முதலளவில் பதிகளின்சீ—
ரேற்றுவதோ திருநாவுக் கரசங்கெய்தி- யேற்றுவதுந் தானெனினு மெடுத்தநூல்முன்—போ
ற்றுமடி யார்கதையை விரித்துச்சொல்லும்- புராணத்தின் சாரமென்றுஞ் சுருக்கமென்றும்
—நாற்றிசையும் விளங்கவரு ளுடையதாலென்- னாவிலுறை நாமகள்சொற் படியுரைப்
பாம்... ... ... ௱௪-௱௭௫

படியுரைப்ப தன்றியும்வான் பகர்ந்துசூழும்- பவமொழிக்குந் தமிழ்வேதம் பாடுமாறிப்
—படிதரிக்குந் திருநாவுக் கரசர்சென்ற- பரமர்திரு வோத்தூரை யிறைஞ்சியேற்றும்—படித
ரித்துப் பணிந்துபல பதிகம்பாடிப்- பாங்குபரன் மகிழ்தானம் பலவணங்கும்—படிநினைந்தவ்
வகைமுடித்தம் பிகைபூசிக்கும்- படிமகிழ்ந்தங் கரனுறையும் பதியைச்சார்ந்தே ௱௫-௱௭௬

பதியளவோ ராயிரத்தெட் டென்பதல்லாற்- பலவாகு மெனமறைகள் மொழியுமெல்லா
ப்—பதியெனுநா டுடையநகர் காஞ்சிபோலும்- படிந்தாடக் கம்பைநதி போலுமந்தப்—ப
தியிலுமை பூசிப்ப தன்மைபோலும்- பாடுவதென் னப்பனெனப் பரிந்தேயார்ந்தப்—பதியி
லுறை பரமெனுமே காம்பரத்தைப்- பணிந்துபல தமிழ்பாடும் பரிசுபெற்றார்... ௱௬-௱௭௭

பெற்றவத்துட் பதிபலவு மிறைஞ்சிப்போந்து- பெறற்கரிய கழுக்குன்றஞ் சென்றுநாளு
ம்—நற்றவத்தோ ருறைவான்மி யூர்மாப்பேறு- நலஞ்சிறந்த மயிலாப்பூ ரொத்தியூருங்—கத்
தவர்க ளகத்துறைவான் பாசூராலங்- காடுமுத லன்னாட்டிற் பதிகளியாவு—முற்றவத்தாற்
றொழப்பெற்றோ மெனப்பணிந்து- முறையாகப் பலபதிகம் பாடிவைகி... ... ௱௭-௱௭௮

பாடியவப் பதிதோறும் பணியுஞ்செய்து- பலநாளன் னாட்டமர்ந்து வடபானோக்கி—நீ
டியகா னமுங்கிரியுங் கடந்துசென்று- நிமலனுறை காரிகரை பணிந்துபாடிக்—கூடியவன்
பொடுபோந்து திருக்காளத்தி- கும்பிட்டுக் கண்ணப்பர் பாதம்போற்றி—நாடியெழு மார்வமு
ட னகன்று வைகி- நாதனுறை கயிலைதொழ நினைந்துசென்றார் ௱௮-௱௭௯

சென்றுபருப் பதமலையைச் சேவித்தேற்றிச்- செல்லுவார் கங்கைவலஞ் சூழ்வார்காசி—
கண்டவுடன் படிந்தாடிப் பாடிப்போற்றிக்- கடவுளருள் பெற்றுநதி கடப்பார்பின்போந்—
தொண்டர்முத லெவற்றும்விடை கொடுத்துத்தோன்றாத்- துணையாகு மொருவர்பதஞ் சிரங்
கொண்டேகி—யண்டருமெய் தரியவனத் தடைந்துபோந்தங்- கருங்கானத் திடைவடபா ல
ணையுங்காலை ௱௯-௱௮௰

காலமொரு கடிகையெனக் கடிகைகோடி- காலமெனச் சாலநா ளாங்கேசெல்காற்—றூ
லவுட லாதிகளின் றடக்கினாலே- தடர்வரிதாய் மனந்துடர்வாற் கிரங்கியீச—னிலவிட வர
வுகரந் திலங்குநூலு- நிமிர்சடையும் பொலியமறை முனிவர்போலுங்—கோலமுடன் வந்துரு
றிப் பறிந்தபின்பக்- கோலமொளித் தந்தரத்திற் கூறலுற்றான் ௱௰-௱௮௧

கூறுவதேன் மானிடற்கங் கெய்தப்போமோ- குறித்துவந்த வழிமீள்வ தப்பரேயென்—றுறுசேர் சடையானந் தரத்தின்மூல- மருளவதற் கிசையேனுங் கிருந்தகோல—மேறுசேர்ந் துமையொடுமின் றருளாயேலிங்- கிறப்பதன்றி வேறில்லை யண்ணலேயென்—றூறுதே னொழுகியசெந்தமிழ்ச்சொன்மாலை- யுரைத்தவுடன் றரித்திலனூர்ந்துளதுசொல்வான் ௱௰௧- ௱௮௨

சொல்வதன்முன் பொய்கையொன்று தோற்றுவித்துச்- சொல்லுவரிப் பொய்கையினில் மூழ்கியாங்கு—செல்வமலி யையாற்றி லெழுவாயாமுஞ்- சேணிடைவந் துனதுகுறை முடிப்போமென்னக்—கல்வரையிற் குளமொன்றுங் ககனமீது- கலகலென மொழிவதுங்கண் டிறைஞ்சிப்பாடி—வெல்வதுன தஞ்செழுத்தென் றேதிமூழ்கி- விளம்பியவப் பதியிலொரு குளத்தெழுந்தார் ௱௰௨- ௱௮௫

யெழுந்தவுட னதிசயித்துக் கைகள்கூப்பி- யெம்பிரான் றிருவருளை நினைந்தய்யாறு—தொழுந்தகைய வார்வமுடன் செல்லவங்குத்- தோற்றமெலாஞ் சிவமயமாய்க் கண்டப்போதே—விழுந்திறைஞ்சி வீதியினைப் பணிந்துள்புக்க- விளங்குகயி லையினுமையோ டிடபமீதார்ந்—தெழுந்தருளி யிருந்தபடி தோன்றுங்கோல- மேற்றுவதென் னப்பரல்லா லியாவர்காண்பார் ௱௰௩- ௱௮௪

யாவர்கட்கு மரிதாகுங் காட்சிபெற்றங்- கடிபணிந்து பலமுறையு மாடிப்பாடி—மூவர்கட்கு முன்னவன்முன் னிற்கும்போதே- முன்போன்றய் யாறமர்ந்த கோலங்காணத்—தேவர்கட்குந் தேவனரு ளிதுவோவென்று- தெளிந்தபின்முன் கண்டமையும் பாடிப்போற்றிப்—பாவலர்கள் பலசாத்திப் பணியுஞ்செய்து- பரவிவிடை கொண் கன்றப் பதியில்வைகி... ... ... ௱௰௪- ௱௮௫

பதிபிறவுந் தொழநினைந்தங் ககன்றுபோந்து- பரமர்திரு நெய்த்தானம் பணிந்துமாடே—மதியணிவா னுறையுமிடம் பலவுஞ்சென்று- மகிழ்ந்திறைஞ்சி மழபாடி வணங்கிப்பொன்னி—நதிபடிந்து பூந்துருத்தி பரவிப்போற்றி- நாதனடிக் கீழிருக்க வருள்பெற்றங்கு—கதிபெறுவான் றிருமடமொன் றமைத்துநாளுங்-கழறெழுதுபலபாடிக் களித்திருந்தார் ௱௰௫-௱௮௬

களித்திருப்புக் காழியர்கோன் பாண்டிநாட்டுக்- கலக்கமொழித் தின்றூட்டி லிப்பதிக்கே—களித்துவரக் கேட்டெதிர்கொண் டவர்குழாத்துட்- கரந்தொருவ ரறியாதச் சிவிகைதாங்கிக்—களித்துவரு மாறறிந்து பிள்ளையார்தாங்- கடிதிழிந்து வணங்கவதன் முன்வணங்கிக்—களித்தவரோ டிறைமுனஞ்சென் றிறைஞ்சிப்பாடிக்- கலந்துமகிழ்ந் திருவருமங் கினிதமர்ந்தார் ௱௰௬- ௱௮௭

இனிதமர்ந்தங் கமணரைவென் றரசனுற்ற- யிருவினைபோய்த் திருவினைசேர்ந் தவனுநாடும்—நனிபெருகச் செய்ததெலா முரைப்பக்கேட்டன்- றுடனைய மனங்கொளவுஞ் சண்பையார்தாம்—புனிதருறை தொண்டைநன்னா டணைந்துபோற்றப்- புரிந்தகலப் பூந்துருத்தி பணிந்துதானோர்—மனிதனரி பரியெனவம் மனனையேய்த்த- மன்னனுறை மதுரைசெல விடைகொண்டுய்த்தார் ௱௰௭- ௱௮௮

விடைகொண்டங் ககன்றுதிருப் புத்தூர்சென்று- விடையவர்தம் மடிபணிந்த வுடன்விரைந்தே—நடைகொண்டு கூடலணைந் தங்கயற்கண்- ணுயகியோ டமர்ந்தநலங் கண்டுபோற்றி—யுடைகின்றபிட்டுகந்தங் கொருத்திக்காளா- முத்தமனைப் பாடியருள் பெற்றுமீள—மிடைகின்ற தானையமைச் சரசியோடு- மீனவன்வந் தடிபணிய வைகிமீண்டும் ... ௱௰௮- ௱௮௯

மீண்டுமர சன்முதலோர் சூழப்புக்கு- மீனாட்சி பாகனடி பணிந்தெழுந்த—வாண்டவர சாறணியுஞ் சடையார்முன்னின்-றருந்தமிழ்கள் பலபாடிப் பணிசெய்தாங்கு—பூண்டபெருங் காதலுடன் புறம்பணைந்து- பூவணத்தைத் தொழச்செல்வார் புறஞ்செல்கின்ற—கூன்றவிர்ந்த பாண்டியற்குமரசியற்குங்-குலச்சிறைக்கும்விடைகொடுத்துக்குறிப்பிற்சென்றார் ௱௰௯- ௱௯௰

சென்றுதிருப் பூவணத்தி லிறைமுன்பெய்திச்- சேவித்து நிற்பவவற் கருளுங்கோலங்—கண்டுதொழு தார்ந்துமவை மறவாவண்ணங்- காதலுடன் வடிவேறு குலமென்றே—நின்றரி

ய தமிழ்மாலை யாகப்பாடி- நிரப்பியருள் பெற்றகன்று நீலமேக—னன்றுநர பதிசுதனென் றூர்காற் சேர்தீங்- ககற்றியரா மீச்சுரத்தை யணைந்துபாடி... ... ... ௱௨௰- ௱௧௧

பாடியவப் பதியிலருள் பெற்றகன்று- பரமர்திரு நெல்வேலி முதலன்னூட்டி—னீடியரன் மகிழுமிட மெங்குஞ்சென்று- நின்றிறைஞ்சித் தமிழ்பாடிப் பணிசெய்திங்கு—நாடிவந்து பொன்னிநாட்டதனின்முன்போ-னுதனுறை பலதானம் பரவிப்போற்றிக்—கூடியவன் பொடுபுகலூர் கும்பிட்டேற்றிக்- குறித்துணர்ந்தங் கெய்தியொரு குறிப்பினின்றார்... ௱௨௧- ௱௧௨

குறித்தபடி நாள்கடொறுந் திருமுன்பெய்திக்- கும்பிட்டுத் தமிழ்மாலை பாடிப்போற்றிக்—குறித்தபல பதிகடொழச் செல்காலத்திற்- கூறியநற் பதிகமெலாம் பரவியேற்றிக்—குறித்தெதிர்நின் றூர்வமுட னுருகிநோக்கிக்- குறைதவிர்ந்தங் கன்பினொடும் புறம்போந்தென்றுங்—குறித்ததவம் வழுவாது பணியுஞ்செய்து- கூடியபோ துணர்வறநின் றுணர்ந்திருந்தார் ௱௨௨- ௱௧௩

இருந்ததனை யிருந்தபடி யிருந்துகாட்டு- மிறைவனல தொன்றிலையென் றுணர்ந்துமாயம்—பொருந்தியபொய்ப் பிறவியொழித் தருளுமாறு- பொற்புகலூர் நாதனடி போற்றிநின்று—திருந்துதமி ழாருயிரின் திருவிருத்தந்- திசபுரா ணத்தடைவு முதலாய்ப்பாடி—வருந்தியரும் பணிசெய்ய வருமவற்றுள்- வகைபலநன் மணிகளொடு பொன்னுங்கண்டார் ௱௨௩-௱௧௪

கண்டவுட னதுவிதுவென் றறியார்போலுங்- கடவுளரு ளிதுவதுவா மெனநினைந்தும்—தொண்டுசெயு முழவாரப் படையிலேந்தித்- தொல்லைவினை யோடவையுந் துலைத்துநிற்ப—வண்டலையுங் குழன்ம[illegible]வார் தானேவேதன்- வகுத்ததொரு மணிவிளக்கோ வென்னமாதர்—நின்றவர்கட் கானவகை நிரப்பும்போதும்- நிலைபிரியா தவர்பணியை நிரப்பிநின்றும்... ... ... ௱௨௪- ௱௧௫

நின்றபவத் துடக்கெனுமூழ் வினையைநோக்கி- நிமலனுக்கா ளானேமியா மிகழையுன்னேமென்றுதிருத் தாண்டகமொன் றெடுத்துப்பாடி- யேற்றவுநா மாற்றேமென் றகன்றவாறு—கண்டுலக மதிசயிப்பக் கடக்குநாளுங்- கடவுளருளும்பொருந்து மளவுமாங்கே—தொண்டுமுத லியாவையுமுன் போலியற்றித்- தோற்றமெலாஞ் சிவமயமாய்த் தொழுதிருந்தார் ௱௨௫- ௱௧௬

இருந்தவர்செய் தவப்பயனுக் கிரங்குநாள்வந்- திசையவெழு முயற்சியினு லிறைமுன்பெய்தி—வருந்தியநன் மொழிமுடிவிற் புகலூர்மேவும்- வள்ளலே யினியுனது திருவடிக்கீழ்ப்—பொருந்தவருள் புரியிகத்திற் புற்றிடத்தும்- பொதுவிலுமுன் வரைப்பாலும் புகன்றவாறென்—றருந்தமிழின் திருவிருத்தம் பலமொழிந்தங்- கைம்புலனே டெவையுமதி லடங்கிநின்றே ௱௨௬- ௱௧௭

நின்றுதிருத் தாண்டகமொன் றுரைக்கவுன்னி- னிட்களமாய்ப் புகலூர நிலங்கும்வண்ணங்—கண்டுமகிழ் திருநாவுக் கரசராகங்- கருதரிய ஞானவடி வாகிச்சேரச்—சென்றுனது சேவடிக்கீ ழிருந்தன்கோலஞ்- சேவிப்ப தல்லதொன்றை யெண்ணுகேனே—வென்றெடுத்துப் புண்ணியா வுன்னடிக்கே- யெய்துகின்றே னெனப்புகன்றங் கெய்தினாரே ௱௨௭-௱௧௮

எய்தியபோழ் தெங்குமலர் மாரிதூர்த்தா- ரேனமனங் குயில்முதற்றே வெவருமார்த்தார்—மெய்திகழ்வே தியர்கள்கரஞ் சென்னிசேர்த்தார்- மேவுமடி யார்தொழுதெவ் வினையுந்தீர்த்தார்—செய்திகழுங் குன்றத்தூர்ச் சேக்கிழாரிச்- செயலுரைத்த வாறிறைவன் செவியிலேர்த்தார்—பொய்திகழு முளனவையைப் புகலப்போமோ- போற்றவெளி தாயவர்தான் பொறுக்கிக்கோர்த்தார்... ... ... ௱௨௮- ௱௧௯

பொறுப்பதெவை யும்பெரியோர் கடமையாதற்- பொய்யனெனு மென்னுளத்திற் பொருந்தித்தொண்டர்—சிறப்பின்மல ராய்ந்துகோர்த் தளித்திங்கன்பாற்- சீர்பெருக வோரிசையாற் பிணையல்சேர்த்துக்—குறிப்பின்வழி கூறவருள் புரிந்துநாளுங்- குவலையமும் போற்றவுகந் தணிவனென்றால்—மறப்பதோ மானடஞ்செய் பதமுமாங்கே- மகிழ்நாவுக் கரசடியு மனத்துள்வைப்பாம்... ... ... ௱௨௯- ௨௱

இவை முற்றிற்று.

உஉ- வது பெருநம்பி குலச்சிறைத னடியாற்கு மடியேன்.

மனத்துளரன் பாதமற வாதுபாண்டி- மன்னனிடத் தமைச்சியல்வ ழாதெழுஞ்சொற்
—பனத்துமடி யார்பணிசெய் தாசியற்கும்- பண்பொடுவன் றொண்டர்பெரு நம்பியென்னச்
—சினத்தமணர் வாதுசெய்து தோற்றவர்தட்- சிணத்தவரைக் கழுநுதிமே லேற்றியம்மை
—தனத்தமுத முண்டவர்தாள் பணிந்துசீர்பெற்- றவர்மணமேற் குடியிர்குலச் சிறையென்
பாரே... ... ... க- உாக

உங- வது பெருமிழலைக் குறும்பற்கும்.

பாரிலடி யார்பணிசெய் தஞ்செழுத்தும்- பரவுவத லாற்பரவை கேழ்வன்பாதஞ்—சேரி
லதன் மேற்றவமின் றென்றுநாளுஞ்- சேவிப்பத் திருக்கயிலைக் கவர்தானுளைச்—சேரிலிங்கு
தரியேனு னின்றுதானே- செல்வனென வணுமாதி பொருந்தியன்றே—சேர்ந்திறைவ னடி
போற்ற மிழலைநின்றுஞ்- செல்குறும்ப ரெனவுலகிற் செப்புவாரே ... ... க- உாஉ

உச- வது பேயற்கு மடியேன்.

செப்புவர்கா ரைக்கால்வாழ் வணிகன்கன்னி- சேர்கணவ னுடைமர்ந்தங் கொழுகுநாளி
—லொப்பருஞ்சீ ரடியர்வர வமுதுமன்னு- னுள்ளியதென் றளித்தமாங் கனியிரண்டிற்—ற
ப்பிலா தொன்றுமளித் துண்டுபோனர்- தன்மனையற் கொன்றளித்த வுடன்மற்றொன்றும்—
னைப்பினு லிடுகவென்று னுளதுசொல்ல- நடுங்கியவ ளுள்ளணைந்து நாதவென்றுள் க- உா[illegible]

என்றயரும் புனிதவதி யிருகரத்தி- லெம்பிரா னிரங்கியொரு கனியளிப்பக்—கண்டவுட
னுளமகிழ்ந்து விரைந்தங்கெய்திக்- கணவனும் பரமதத்தன் கலத்திலிட்டாள்—வின்றருந்தி
மிகநலமா யிருப்பதன்றாய்- வினவியுள வாறறிந்து நினைவுவேறாய்க்—கொண்டினமோர் கனி
யிறையை வருந்திநின்று- கொண்டுவா வெனவருளாற் கொடுத்துநின்றாள் ... உ- உாச

நின்றவளை யண்டரென நினைந்துட்கொண்ட- நினைவின்வழி தனமொடலை கடலின்மீது
—சென்றுதமிழ் நாடணைந்தோர் பதியிலெய்திச்- செல்வமுடை நல்வணிகன் மகவைப்பெண்
டாய்க்—கொண்டிலம்வா ணிபம்பெருக்கிக் குலவுமந்தக்- கொம்பனையாள் வயிற்றிலொரு ம
கவைப்பெற்று—விண்டமனை யாள்பெயரு மிட்டுநாளும்- விளங்கியவா றிப்புனித வதியுந்தே
ர்ந்தாள் ... ... ந- உாரு

தேர்ந்தவுடன் சுத்தமொடங் கணையக்கேட்டுத்- தேவரென நினைந்தொழிந்த கணவன்பி
ன்பு—சேர்ந்தமனை யாள்மகவுந் தானும்வந்து- சேவடியிற் றொழுதவுட னிறையைநோக்கி—
யோர்ந்திவனுக் காய்ச்சுமரு னுடம்பைநீக்கி- யுனையடையுங் குறிப்பின்வழி செலப்பேயாக
—மார்ந்தருள்வா யெனவுமந்த வடிவமாகி- யவனிமுதற் றேவருமார்த் தலர்கள்தூர்த்
தார் ... ... ச- உாசு

அலகைவடி வாகிநின்றந் தாதிபாடி- யடிதொழுது முடிக்கிரட்டை மாலைசூடி—யுலகை
யொழித் துன்பதத்தை யடைவனென்றங்- குண்மையொடுத் தரத்திசையை நோக்கிச்சென்று
—பலபதிக ணதிகளொடெப் புவியும்போந்து-பரமனுறை மலைதலையா னடந்துசார்ந்து—குல
வுமுமைகண் டிறையைவினவக்கூறுங்-கூற்றுடையானம்மையெனச்சாத்தப்பெற்றாள் ரு- உாஎ

சாத்தியபோழ் தப்பாவென் றடியில்வீழ்ந்து- சச்சிதா னந்தமணி கண்டன்முன்னின்—
றேற்றியபோழ் தருள்பெறுமா றுலங்காட்டி- லெம்பிரான் றிருநடனங் கும்பிட்டன்பிற்—
றேற்றியவா திருப்பதிகம் பாடிப்போற்றித்- தொல்லுலகத் தவர்கள்முத லெவரும்போற்ற
—நீற்றியல்புஞ் சைவமுநீ டேழிகாத்து- நித்தனடிக் கீழிருக்கப் பெற்றாளென்றே சு- உாஅ

இவை முற்றிற்று.

௨௫- வது ஒருநம்பி யப்பூதி யடியாற்கு மடியேன்.

பெற்றபெருஞ் செல்வமறம் பெண்டிர்மற்றும்- பெரிதுறுமோர் பெரியர்பெய ரால்விளக்
கி—யுத்ததவ மெவையுமவர் நாமமாக- வுணருநா ளப்பெரியோ ரென்னுந்தூய—நற்றவனா வு
க்கரசங் கெய்தக்கேட்டன்- னம்பிதிங்க ளூர்மறையப் பூதியார்தாஞ்—சுத்தமுடன் வந்தடி
யிற் றொழுதுவீழ்ந்து- சூழுமேழு பவமொழித்தூழ் வினையுந்தீர்ந்தார் ... ... க- ௨௱௯

தீர்ந்தவன்பர் செய்கையுமெய்ப் பரிவுங்கண்ட- திருநாவுக் கரசருள மகிழ்ந்துமேன்மே
—லார்ந்தடியிற் றாழ்ந்தவரை யெடுத்துநோக்கி- யானந்த விமலனருள் பெருகுமாறு—தேர்ந்
துரைக்கப் பெற்றடியே னிலத்திலின்று- தேவரீ ரமுதுசெய விரங்குமென்பாற்—கோர்ந்தி
சையக்கொடுபொந்தங்கமுதமைப்போ- ரொருமைதிகழப்புரிந்தவருமைசொல்வேன் உ- ௨௱௰

அருமையுடைப் புதல்வரின்மூத் தவனைநோக்கி- யரனடியா ரமுதுசெயப் பரிகலத்துக்
—கொருமையுடை நெடியதளிர் கொடுவாவென்ன- வுவந்துவிரைந் தரம்பயந்தோட் டத்து
ட்புக்குப்—பெருமையுடைத் தவற்கெனவண் குருத்தையீர்காற்- பெருகாலம் பொருமரவோர்
கரத்திற்றீண்டக்—கருமையுடை விடந்தலைக்கொள் வதன்முன்வந்தக்-கதலியிலை தாயர்கையி
ற் கொடுத்துவீழ்ந்தான் ௩- ௨௱௰௧

வீழ்ந்துசோர்ந் திறந்தசுதன் றனைமறைத்து-விமலனடி யாரிடஞ்சென் றமுதுசெய்யத்—
தாழ்ந்திறைஞ்சு மப்பூதி யாற்குமன்னார்-தவத்துணையா மனைவியற்கு நீறளித்துச்—சூழ்ந்தொ
ழுகு புதல்வரின்மூத் தவனெங்கென்போர்- சூட்சியினு மிகமலர்ந்திங் குதவானென்றங்—கா
ழ்ந்தமனத் துயரகற்றி யன்பிற்செல்லு- மருந்தவர்முன் றிருநாவுக் கரசுரைப்பார் ௪- ௨௱௰௨

அரனருளா லிங்கவனைக் குறித்தெடுத்த- வண்ணல்திரு வெண்ணீறின் றவனுக்காக்கி—
வரன்முறையாய் மற்றவற்கு மளித்தபின்னெவ்- வளங்களையு முபலுவது வழக்கென்றாலீ—சு
ரனுமது குறைமுடிக்கு மஞ்சவேண்டாஞ்- சூழ்ந்தவா றுரையுமெனத் தொழுதுநின்றான்—ச
ரணுடையேற் கருவினையே தச்சமேது-சாத்துவதும் வேறேதென் றுளதுரைத்தார் ௫ ௨௱௰௩

உரைக்குமறை யைத்தமிழா லுரைக்கவன்றங்- குரைத்துளத்தி லுறையிறைதா டொழு
துணர்ந்திங்—குரைத்தவரை நோக்கியுயிர் விண்டமைந்த- னுடலுறுகாப் பெய்துமெனத் தா
னுமெய்தி—யுரைப்பதுவு மொன்றுகொலா மெனவெடுத்து- வுண்மைநிலைத் திருப்பதிகம் பா
டிமுற்று—முரைப்பதன்முன் விடமீண்டெவ் வுலகுங்காண- வுயிர்த்தெழுந்துத் தமரடியைப்
பணிந்துநின்றான் ௬- ௨௱௰௪

நின்றசுதன் றனைக்குறித்தங் கெடுத்தநீறே- நிமலனரு ளாலவனுக் களிக்குமுன்னம்—
விண்டதமிழ் நிரப்பியிறைக் கணிந்தளித்தே- விதிமுறையாய் மற்றவற்கு மளித்திரங்கும்—
தொண்டருட னமுதுசெய்து சிலநாள்வைகித்- தொல்லைமறை யோன்பழனந் தொழநினைந்
தே—சென்றணைந்து தொழும்பொழுதப் பூதியார்தஞ்- செம்மைபுரி திருத்தொண்டுஞ் சிறப்பி
த்தேற்றி... ... ... ௭- ௨௱௰௫

ஏற்றியபின் பிறபதியுந் தொழச்சொல்வேந்த ரெழுந்தருளப் பின்செலுமப் பூதியாற்குச்
—சாத்தியவா றவரைவிடை கொண்டுநாளுஞ்- சார்ந்துறையுந் திங்களூற் பதிவந்தென்றும்
—போற்றியவா றறம்பொருளின் பங்களியாவும்- பொருவருமப் பெரியவரே யுடையராக—
நீற்றியல்பு மருந்தவமு நிரப்பிநின்று- நிமலனடிக் கிழிருக்கு நிலைபெற்றாரே... ௮- ௨௱௰௬

இவை முற்றிற்று.

௨௬- வது ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்.

நிலைபெறுதற் குரியதவந் தொண்டர்தொண்டு- நிமலனார் பூசையென வுரைக்கும்வேத
—நிலையுணர்ந்த சாத்தமங்கை மறைக்குலத்து நீலநக்க ரன்னெறிவ ழாதியற்றும்—நிலைதவறா
தாதிரைநாள் விசேடமாக- நீடுமரன் பூசனைசெய் தாங்கைவந்தி—நிலையுடைய பெருமானைப்
பணிந்துபோற்றி- நியமவழி மனையறமே புரிந்துவாழ்வார் ... ... க- ௨௱௰௭

புரிந்ததவப் பயனொருவா திரையிலற்றிற்- பூசனையை நியமவழி முடித்தய்வந்தி—பரிந்தவர்பாற் சென்றபிடே காதிநல்கிப்- பாரியொடு நேரிறைஞ்சிப் பரவிநிற்பச்—சரிந்தரன்மீ தொருசிலம்பி விழக்கண்டோடிச்- சம்புதிரு மேனியினூ தியுமுமிந்துந்—தெரிந்தவகை செய்ததனு சிதமென்றெண்ணித்- தேர்ந்தமனை யாளையொழித் திலத்திற்புக்கார் ... ௨-௨௱௰௮

இலம்புகுந்த நற்றவரிவ் வபாரதத்துக்- கினிச்செயலென் னென்றிரங்கித் துயிலமாதர்—நலம்பரிந்த வுண்மைதிரு வுளப்பாங்கன்றே- நாரியற்கோர் பதியனைசார் பலதொன்றுண்டோ—சலம்பரந்தேழ் பரவையெனச் சூழ்வதான- சகத்துயிர்க ளியாவைகட்குந் தாயேயுன்ற—னிலப்பிரியே னென்றுதிரு முன்போர்பாங்க- ரிசைந்துதுயி லமரவிறை துயிலுவாரோ ௩-௨௱௰௯

துயிலமருந் தவமறையோ ரிடத்திற்சென்று- தூயதிரு மேனியையுங் காட்டிச்சாயை—மயிலனைய நின்மனைவி பரிந்துசெய்த- மாதவத்தை யனுசிதமென் றெண்ணவேண்டாங்—தயிலமுதன் மஞ்சனத்தி னுரியதாகத்- தாங்கினோ மாதலிற்கொப் புளமுமின்றென்—றெயிலதனை யெரித்தபிரா னுரைத்தய்வந்திக்- கேகியபின் னீலநக்க ருணர்ந்தெழுந்தார் ௪- ௨௱௨௰

எழுந்தவுட னதிசயித்துத் தொழுதுவாழ்த்தி- யெம்பிரா னருளிருந்த வண்ணங்கண்டு—தொழுந்தகைய வார்வமுடன் புலருமட்டுந்- தோற்றமது வாயிருந்தா லயத்துட்புக்கு—விழுந்தடியிற் பலமுறையு மிறைஞ்சியேற்றி- விரவியபின் றன்சரணிற் றாழ்ந்தஞானக்—கொழுந்தனைய மனைவியுட னிலஞ்சென்றன்பின்- கொள்கைவழு வாதியற்றுங் குறிப்பினின்றார்... ... ... ௫- ௨௱௨௧

நின்றுதவ முயலுநாட் புகலிவேந்தர்-நீடுதிருச் சாத்தமங்கை தொழவந்துற்ற—றென்றுகேட் டிலமாதற் குரைத்தெழுந்தங்- கெதிர்சென்று பணிந்தமுது செயவிரங்கு—நன்றுகேட் டடியவரோ டணையவன்று- நல்விருந்து செய்துபெரும் பாணற்கங்கி—மிண்டுவே திகையின் மருங் கிடங்கொடுத்து- மிகும்பரிவாற் றகும்பணிசெய் திறைஞ்சுங்காலை ... ௬- ௨௱௨௨

காலையினி லய்வந்தி தொழ்வெழுந்த- காழியர்கோ னரனடியைப் பரவும்போது—சீலமுடை நீலநக்கர் திருத்தொண்டுண்மை- சிறப்பித்துப் பாடியகன் றார்பின்செல்லச்—சாலமிகு மார்வமுடன் விடைகொண்டென்றுஞ்- சார்பதியைச் சார்ந்திடுமிப் பெரியோர்முன்பு—போலசிலனுளமர்ந்தப்புகலியார்சேர்- பொற்பதிபோற்றியுமீண்டிப்பதியையெய்தி ௭- ௨௱௨௩

பதியிலவ தரித்தரன்றுள் பரிந்தப்பாதம்- பரவுவார் பணிபுரிந்த பான்மையாலே—கதிபெறுகா லமுங்கடவு ளருளுங்கூடக்- காழியர்கோன் றிருமணங்காண் பான்விரைந்திப்—பதிவளரை வந்திபணிந் தகன்றங்கெய்திப்-பரஞ்சுடரா யெழுந்தநல்லூற் பெருமணச்செங்—கதிரொளியில் மதியமென வடங்கிநாதன்- கழலிணைசேர் பழவடியா ருடன்கலந்தார் ௮-௨௱௨௪

இவை முற்றிற்று.

௨௭- வது அருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியேன்.

உடன்கலங்க யிகழ்ந்துரைக்கு மமணர்செய்கை- யுளங்கொளா தரனெறியப் பார்க்குரைத்த—வுடன்கலங்க மறுபுனலால் விளக்கெரித்தங்- குலவுநா ளப்பகையை யொழித்ததண்டி—யுடன்கலந்தா ரூரிறைபூ சனைக்குமேன்மே- லுதவரசு நாவரசு முவப்பவன்ப—ருடன்கலந்தப் பணிசெய்நமி நந்திவேத- வுண்மைமறை யோரேமப் பேறாராலே ... ௧- ௨௱௨௫

பேறடைய நாளுமிறை யருளுஞ்சேரப்- பெரியரொரு நாளரன்வி ழாச்சேவித்தவ்—வாறிலஞ்சென் றனுசிதமென் றகலவைக- வள்ளல்திரு வாரூரில் வாழ்வாரெல்லாங்—கூறுகணநாதரென வுணர்ந்தெழுந்து- கும்பிட்டுள் ளணைந்துக்குறை முடித்துவைகி—யேறுகதி ரெழுவதன்முன் னெழுந்தவ்வூருக்- கேகவெதி ரன்னகர்கண் டிறைஞ்சும்போது ... ௨- ௨௱௨௬

போதுறைமா திந்திரன்பூ சிக்குமண்ணல்- பொற்பதியி லெப்பதியுங் காண்பதல்லால்—

யாதுமரன் வடிவாய்க்கண் டெழலுங்காணு- தியானறியா திகழ்வதொறுத் தருளுமெத்தாய்க்—கேதினிநான் செய்வதென்று ருரையெய்தி- யெம்பிரான் கழறெழுதப் பதியில்வைகி—யாதிநன்மா தவமுதலாம் பணிகள்செய்தங்- கரநெறியின் றிருவடிக்கீ ழடைந்தாரென்றே ௫- ௨௱௨௭

இவை முற்றிற்று.

ஆரூரானாரூரி லம்மானுக்காளே

இவை ௪- வது சருக்கமுகிவு தோத்திரம்.

அடைந்தவர்மேற் பரிந்தானை யம்பர்மூதூ- ரந்தணர்பாற் செலவிடுத்தோ னடிகள்போற்றி—யுடைந்தவிளங் கனிவிரும்பு முத்தமற்கிங்- குவந்தமுதூட் டியமுனிவன் பாதம்போற்றி—மிடைந்தசுர ராக்கியதன் புலவதல்லால்- மீள்வதறி யாதசுர ராதிநாளுங்—குடைந்தருந்தச் சுவைதருநூல் வலரொடன்பர்- குழுசரிமீக் கூறுவர்தாள் போற்றிபோற்றி க- ௨௱௨௮

முதற்காண்ட முற்றிற்று.

இரண்டாங் காண்டம்.

௫- வது வம்பறு வரிவண்டுச்சருக்கம்.

௨௮- வது வம்பறு வரிவண்டு மணநாறமலரும் மதுமலர் நற் கொன்றையா னடியலாற்பேணு வெம்பிரான் சம்பந்த னடியாற்கு மடியேன்.

போற்றிதிருத் தோணிபுரத் திறையபேதம்- போற்றியுல கைந்தொழிற்காய்த் தோற்றும்பேதம்—போற்றிசக மாயவையா காவிஞேதம்- போற்றிவுயி ரலததுவாய்ப் பொருந்துநாதம்—போற்றியவத் தடியர்பத மலரின்சீதம்- போற்றிசிவ பாதவிர தயுரைம்பூதம்—போற்றியவர் மனைவிபக வதியதீதம்- போற்றியிவர் தனையனென வருவோர்பாதம்... ... க- ௨௱௨௯

வருகால மெவற்றுமுல குய்யுமாறு- வள்ளலருண் மறைதமிழால் வகுத்துரைத்த—திருஞான சம்பந்தர் சரிதையுண்மைத்- திறமொழிந்து பவமொழிந்தோ ரடிசார்வார்தா—ளொருகாலு நினையாத வுளனுணர்ந்திங்- கோதுவதோ வோதமலி நஞ்சையுண்ட—குருநாத னருளாலிக் குவலயத்தோர்- கூறவெளி தாயவையைக் கூறுவேனே... ... ... ௨- ௨௱௩௰

கூறியதே வுயிருலகெல் லாம்பரத்தின்- குறிப்பிலடங் குவகால மன்றிவேதங்—கூறியவா றிடையிடையீ றெனவுண்டேனுங்- குறைபடா ததிற்சிலதா யவையின்மேலாய்க்—கூறியசீ காழியென முனமென்னாலுங்- கூறுவதின் னூலதனி லிதற்குமுன்னுங்—கூறியபொற் பதிமறையோர் குலத்தெல்லோருங்- கூறுசிவ பாதவிர தயருண்டானார் ௩- ௨௱௩௧

ஆனபய னறிந்தவா றறையக்கேண்மி- னருமறையா திகளுமுணர்ந் தவ்வழிச்சென்—றேனமன மாயிருவர் காணுப்பாத- மெய்துவதற் கெய்துபக வதியாரென்னும்—ஞானமிகு மனைவியொடு நாள்கடோறு- நாதனடி தொழுதுலகி லமணர்மேற்கொண்—டேனநடை பெருக்குவதை யொழிப்பதற்கோ- ருத்தமபுத் திரனருளென் றுரைத்துவந்தார் ... ௪- ௨௱௩௨

வந்தனைசெ யந்தணருக் கருளீசற்கு-வாலறெரு மொழியுரைத்த வகையினாலக்—கந்தனையிங் கேகவுள மகிழ்ந்தப்போதே- காழிநகர் வாழவரு மையாம்மை—தந்தனைய னுயுலகி லவதரித்தாற்-றாணிசெய் மாதவந்தா னென்னேவென்னே—வெந்தனையாட் கொண்டபிரான் வந்துதித்தா-ரெழுங்கதிர்பல் லாயிரர்வந் தங்குதித்தார்... ... ... ௫- ௨௱௩௩

உதித்தகதி ரோனுலகத் திருளைத்தீர்க- வும்பரொடேழ் பவத்தகத்து மருளுந்தோர்க—
விதித்தமணி விளக்கையனை மகிழ்ந்துகாற்க- விண்ணவர்பூ மாரியொடு மணியுஞ்சேர்க்க—கு
தித்தபூ சுரரொறிது சுயர்வான்றூற்கக்-குழன்மடவார் வாழ்த்தொலிநாற் றிசையுமேற்க—நதி
த்தலைவ னதிர்ந்தெழுமும் முழவைப்பாற்க- நான்மறையோ ராற்பயனுன் மறையுமா
ற்க ... ...சு- உாகூச

ஆர்ந்ததவப் பயனருளா ரமுதைப்பெற்ற- வந்தணரா னந்தவெள்ளக் கடலின்மூழ்கித்
—தேர்ந்தமனத் துணர்ந்தெழுந்து தினம்விசேடந்- தேவவா ராதனைசெய் வினைகள்முற்றிச்—
சார்ந்ததவத் தோர்முதல்மற் றெவற்கும்பாரி- சாதமென வளித்தெவையு மளிப்பான்கோயில்
—சேர்ந்துதிருத் தோணியில்வீற் றிருந்தார்தம்மைச்- சேவித்து நாள்கடொறுஞ் செல்லா
நின்றார் ... ... எ-உாகூரு

செல்காலத் தறநெறிவ ழாதியற்றிச்- செல்வனடி தொழுதெவரு மெழுதிவேதநு—சொ
ல்கால மென்றவையை யிகழ்ந்துவேறு- சொல்லமணர் செய்கையொழித் தெங்குநீறே—வெ
ல்கால மென்றடையார் புரமெரித்த- வெல்கொடியாய் வெங்குருவாழ் வேந்தேயென்று—ப
ல்காலும்பணிந்தேத்திப்பரவித்தீர்த்தம்- படிந்துளுமப்பாவனைசெய்தொழுகுநாளில்அ-உாகூசு

நாளுமனை செய்வினைகள் பெருக்கிச்சண்பை- நாதனருள் பெருகுவதுங் கண்டியாவு—
மாளுமுமை தாடொழுதப்பணியிற்செல்ல- வாண்டொருமூன் றாகியபின் னெவற்குங்கந்த—
வேளுமவர் தாளுமென விளங்கித்தோன்ற- வேண்டுவபெற் றாங்குமகிழ்ந் தெடுத்துத்தாதை
—தோளின்மிசைக் கொண்டுதிருக் கோயில்புக்குத்- தோணியில்வீற் றிருப்பவர்முன் பாகச்
சென்றார்... ... ... கூ- உாகூஎ

சென்றுமுன மருளியவா றுதித்தசெல்வச்- சேயெனுமென் றுயையவர் சேவடிக்கீ—ழொ
ன்றுமுணர் வொடுபணிவித் தடனிறைஞ்சி- யோதமறை யோதவறி யாதுபோலு—நின்றுக
ளி கூர்சிறுவர்க் கார்ந்துநோக்கு- நிமலனருள் பெற்றிலஞ்சேர்ந் ததுவேபாங்கா—யன்றுமு
தற் றந்தையினு முந்திச்செல்லு- மார்வமுட னேர்தொழுதார் பார்கள்வாழ... ய- உாகூஅ

பாரிலிவர் தந்தையெனு மெந்தைதீர்த்தம்- படிந்தாடச் செல்லினுமோர் நாளென்பாச—
வேரிலொரு திரம்விடுத்த வெற்றிவேலை- வெள்ளிமலை மீதிலங்க வைத்திங்கூருஞ்—சீரிலமண்
கெடச்சிறந்தோர் வாழ்கவார்ந்தச்- சிவபாத விரதயர்புத் திரனுய்வந்தோர்—நீரில்விளை யா
டவெனப் பின்னடந்த- நிலைநிலத்தா ரறிவர்சுரர் முன்னடந்தார்... ... ... யக- உாகூகூ

முன்னடந்த தவமுடித்தோர் சரிதையன்று- முதல்வனருள் பெறுநால்வர் மொழிந்தநூ
லின்—சொன்னடந்த வகையறைவ தறிந்துசாலச்- சொல்லுவதைச் சுருக்கியுமச் சொல்லால்
முன்னும்—பின்னடந்த துணர்ந்தெடுத்துஞ் சூக்குமத்தைப்- பிறித்துவிரித் தும்புகன்று பி
றங்குமின்னு—லென்னடந்த தின்றுமிறை நோக்கமன்றி- யெவர்கருதி யாமெவற்கிக் கவலை
யோர்மின் ... ... யஉ- உாசம

மின்னனைய வடிபடியிற் செல்லத்தாதை- முன்னனைவ ரோவிரைந்து மீன்றெடுத்த—பி
ன்னனையில் லெய்தவவ ரிறையிலெய்திப்- பிரமதீர்த் தக்கரையிற் றிருமுன்பாக—வென்னனை
யை விட்டுதகத் துள்ளணைந்தோ- ரேறிவரு முன்சிறுவ ரோறுகந்த—தன்னனையைத் தோணி
மிசை நோக்கிநின்று- தளரவரன் கிளர்ந்துமையோ டெருத்தில்வந்தான் ... யங- உாசக

வந்துதளர் வுறுசிறுவற் கெதிரேநின்ற- வள்ளலுமைக் கருளவுள மகிழ்ந்துபார்கோ—
ரிந்துவெனக் குளிர்ந்துயிர்கட் கின்பளிக்கு- மிமக்கொடிதன் றவக்கொடியா மினையசேய்பா
ன்—முந்துமன தொடுமெனையா முனம்பரிந்த- முலைசுரந்து பெருகியபால் கறந்துஞான—
விந்துமுடன் கலந்துமறை நான்குமொன்றாய்- விளங்கியபொற் கிண்ணத்திற் கொடுவிரை
ந்தே ... ... யச- உாசஉ

விரைந்தமுத பிள்ளைபால் பெறுமென்சொல்லும்- விளங்குமறை யைத்தமிழால் விளம்ப

வேண்டிக்—கரைந்தழுத கவுணியர்முன் வந்துநின்றென்- கந்தனெனப் பருகுவளேற் கடும்ப
சிக்கா—யிரைந்தழுத பாலனுக்கன் றலைப்பாலீந்த- விறைதுணைவி புதல்வனுக்கின் னமுதூட்
டாளோ—வரைந்தழுத வரக்கனுக்கு மருள்வோன்காண- வன்பொடுநல் லின்படிசி லளிக்க
லுற்றாள்... ... ... ௰௫- ௨௱௪௩

உத்தமமா மறைதமிழா லுரைக்கவந்த- உத்தமற்கின் னமுதூட்டி யுவந்துநோக்கப்—
பெற்றவுட னெதிர்நோக்கும் பிள்ளைகண்ணிற்- பெருநீரை மாற்றியப்பொற் கிண்ணமீந்து—ந
ற்றவநா யகியரன்பா லணையவிப்பா- ஞனிலத்திற் றுதையெனு மறையோர்வந்திங்—குற்றசெய
லியாதிதுசெய் தாராரென்ன- வுண்மையுட னொருவனைமுன் காட்டிச்சொல்வார் ௰௬-௨௱௪௪

சொல்லுவது வேதமதி ஞதமிசன்- சோத்திரஞ்சேர் தெவ்வுலகும் பரந்துநாளும்—வெ
ல்லுவது சைவநெறி விளங்குநீறே- வேந்தனுஞ்சார் தவருமடைந் தடையார்தம்மைக்—கொ
ல்லுவதுங் கொல்லாமை முதற்குறித்தோர்- கோமறையோர் தேவர்கணி டூழியோங்கிச்—செ
ல்லுவதென் றுணர்வதுங்கேட் டருளுந்தோடார்- செவியனெனுந் திருப்பதிக மெடுத்துரை
த்தார் ௰௭- ௨௱௪௫

எடுத்ததிருப் பதிகமுரைத் திறைமுன்செல்லு- மெந்தைபின்செல் தந்தையற்கின் னமுது
வந்து—கொடுத்ததாய் தந்தையைநேர் காட்டிக்கூறக்-கோலமறை யோரெதிர்கண் டிறைஞ்சி
நாயேன்—தொடுத்தகரு மத்துணையாய்த் தோன்றிநிற்குந்- தோணிபுரத் தெம்மானே தொ
ண்டனெஞ்சி—லடுத்தவையை முடிப்பதுமுன் னருளேயென்றங்- கடிபணிந்து பலமுறையு
மாடிப்பாட... ... ... ௰௮- ௨௱௪௬

பாடியசெந் தமிழ்வேதம் பரிந்துகேழ்க்கும்- பரமர்திருச் செவியவையே நாடவென்று
—நீடியபொற் றோணியில்வீற் றிருக்கநாடு- நிமலனருள் வழிவிடையூர்ந் துமையுநாடத்—தே
டியமா லயன்முதற்றே வெவருமார்ந்து- தேர்ந்துவழி படுவதினு னவையைப்பாடக்—கூடி
யமா தவமறையோ ரடியராதி- குவலயத்துள் ளோரனைய வகைகொண்டாட௰௯- ௨௱௪௭

ஆடியவர் தணர்புதல்வ ரவையேயாட- வம்பிகையோ டண்ணல்திருத் தோணிமேவப்—
பாடியவத் திருப்பதிகம் பத்தும்பாடிப்- பரவுகடைக் காப்பணிந்து பரமர்தாளிற்—கூடியவன்
பொடுதொழுது குவலயத்தோர்- குறைவறவந் தவதரித்த குறியுமுன்ன—நீடியபே ரருளுடை
த்தன் னிலையுந்தோன்ற- நிமலனருள் பெற்றுலக நிலையினின்றார்... ... ... ௨௰- ௨௱௪௮

நின்றுவிடை கொண்டுவலஞ் சென்றங்கண்ணல்- நீடியதா னம்பலவுங் கண்டுசெல்ல—
வன்றுமுதல் ஞானசம் பந்தரென்று- மாளுடைய பிள்ளையா ரென்றுஞ்சொல்லத்—தொண்ட
ர்மறை யோர்முனிவர் தேவராதி- தொழுதுமகிழ்ந் தெம்மருங்குஞ் சூழவானில்—மீண்டுதிருக்
கோபுரத்தை வணங்கியிப்பான்- மீண்டுசண்பை வீதியினில் மேவும்போது... ௨௰௧- ௨௱௪௯

போதனெனப் பின்வருதா தையர்மெஞ்ஞான- போனகர்பொன் னடிவருந்தப் பொரு
ந்துவாரோ—காதலுடன் றோளின்மிசைக் கொண்டுசெல்லக்- காழியுல கேழினுமே லென்று
சொல்லும்—வேதன்முதற் பேதமெலா மகிழ்ந்தொன்றாய்- வெவ்வேறுபணி மாறிவரும் பேறங்
கெய்தப்—பாதமுத லவையவமும் பரிந்துநோக்கிப்- பதிவலஞ்செய் திலம்புகுந்தன் னலம்பு
ரிந்தார்... ... ... ௨௰௨- ௨௱௫௰

நலம்புரியப் பாரிலவதரித்த வெந்தாய்- நாதனடி தொழவெழுமா தரவோடன்றங்—கில
ம்புரிந்தோ ரிசைவதிசைந் தினிதமர்ந்தே- யிரவியெழு முன்னெழுந்து கோயில் புக்கு—வல
ம்புரிந்து வந்தனைமுன் ஞகவள்ளல்- வார்கழல்கள்தொழுதருள்பெற் றகன்று வானோர்—குல
ம்புரியுங்கோலக்காத்தொழநினைந்த- குறிப்பறிவ தாரளகைக்கிறைவன் கூர்ந்தான்௨௰௩- ௨௱௫௧

இறைகோலக் காமடையில் வாளைபாய- விசையுமெனப் பதிகமெடுத் தவர்முன்சென்று
—குறைதீரத் தளிற்கரத்தா லொத்தியொத்திக்- கூறவுட னருள்வழியக் குபேரன்றானே—ம
றையீறஞ் செழுத்துமுறைந் தறைபொற்றாள- மாதவர்கைக் கொடுக்கவதற் கோசையீந்த—
நிறைஞான வம்பிகைக்கன் ஞமமாகி- நீடுலக மேற்றுவதை நாடிவாழ்வாம்... ௨௰௪- ௨௱௫௨

நாடியவா றருள்புரிந்த நலமகிழ்ந்து- நர்தனடி தொழுதவையா லொத்தியொத்தி—நீடியவத் திருப்பதிக முழுதும்பாடி- நிரப்பியருள் பெற்றகல நிலத்துள்ளோருந்—தேடியமுா லயன்முதற்றே வெவருமார்த்துத்- தெய்வமலர் மாரிபுவி யடையத்தூர்த்துக்—கூடியதா ரகையினிடை மதியம்போலக்- கூடிவரு வோர்பெருமை கூறிவாழ்வாம்... ... ...௨௫- ௨௱௫௩

கூறியவா றிரண்டுபெய ருடையதோர்வெங்- குருவனைந்தங் கிருவரைக்கண் டிறைஞ்சியுள்ளத்—தூறியவன் பொடுபூவார் கொன்றையென்னு- முத்தமமாம் பதிகமெடுத் துரைத்துத்தோணி—யேறியதாய் தந்தையருள் பெற்றகன்ற- வெந்தையையித் தந்தைபரிந் தெடுத்துச்செல்ல—நீறியலுந் திருமுகநன் னிலவெறிப்ப- நிலம்பலவுந் தொழவிலஞ்சார்ந் தினிதிருந்தார் ௨௬- ௨௱௫௪

இனிதிருக்கும் புனிதரடி வணங்கிச்சூழ்ந்தங்- கிருப்பவற்கின் பளித்தவரோ டிறைதாள்போற்றி—யினிதிருக்கும் பெருங்கீர்த்தி யியம்பக்கேட்டோர்ந்- தின்னிலத்தி லப்பதியின் மருங்குநாத—னினிதிருக்கு மெப்பதியுள் ளோரும்வந்தார்ந்- திறைஞ்சுவாற் கிருமையுங்கூர்ந் தெவருமேற்ற—வினிதிருக்கும் புகலியிருங் கயிலையூர்வோ- ரிமையவற்கு மேலுயர்ந்தோ ரெனவிலங்கும்... ... ... ௨௭- ௨௱௫௫

இலங்குமறை யைத்தமிழா லியம்பவேண்டி- யின்னிலத்தி லுதித்திடுமென் னன்னையைப்பெற்றுத்—துலங்குபக வதியெனுமா தவரித்த- தூயநனி பள்ளிமறை யவருமாங்கே—கலங்கமறப் பணிந்திருக்கு வளிலன்னார்- கருதியவா றப்பதியைத் தொழநினைந்தைம்—புலன்களுங்கூர் பிள்ளையார் புகலிமேவும்- புண்ணியனைத் தொழுதகன்றப் புறத்தணைந்தார்௨௮- ௨௱௫௬

புறத்தணைந்து புவிமீது செல்லத்தாதை- புரிந்தெடுத்துத் தோளின்மிசைக் கொண்டம்மூதூற்—புறத்தணையத் தெரிபொழில்கேட் டுணர்ந்திறைஞ்சிப்- புனிதனுறை நனிபள்ளி யுள்குவாரிப்—புறத்தணையா ரெனுமுறுதி பொருந்தப்பாடிப்- பூங்கோயில் புக்குவலங் கொண்டுதாழ்ந்தப்—புறத்தணையும் பூரணனை யாவுந்தானாய்ப்- பூத்தவனை யேற்றியமர்ந் தகன்றபோதி... ... ... ௨௯- ௨௱௫௭

அகண்டபரி பூரணசி தாகாயத்தி- லானந்த நடனமிடு மையன்வாக்காற்—புகன்றமறையைத்தமிழாற் புகன்றுய்வார்கள்- புகலவிறை யருளிகழ்ந்த புத்தரென்னும்—நிகண்டவா திகள்கெடநீற் றொளிபெருக்க- நினைந்துசிவ பாதவிர தயர்தான்பெற்ற—மகன்றனைக்கண் டடிவணங்கு மாந்தரன்றே- மானிலத்துங் கோனிலத்து மகிழ்ந்துவாழ்வார் ௩௰- ௨௱௫௮

மகிழ்ந்தெதிர்சென் றிறைஞ்சுவதல் லாலங்கங்கே- மானகர மலங்கரித்தல் முதலாயெந்தை—புகழ்ந்துரைப்ப தெவையுமதின் சுருக்கமென்று- புகலுமிதிற் புகலுவதோ புகலன்னூலை—யிகழ்ந்துரைப்ப தோவிறைதான் செவியிலோர்த்து- யிருநிலமும் போற்றுமினிச் சாத்துவார்க்கு—மகழ்ந்தபவக் கடலகற்று மதுவேயீதா- மாதலுணர்ந் தோதவல தார்ந்துரைப்பாம் ௩௧- ௨௱௫௯

ஆர்ந்துமறை யோரடி யராதிசூழ- வாங்கெதிர்கொள் வோருமகிழ்ந் தடியிற்றுழச்—சார்ந்ததவத் தாதைபரிந் தெடுத்துச்செல்லச்- சண்பையர்கோ னுளமரன்பா லடுத்துச்செல்லச்—சேர்ந்துதலை சைக்கிறையைச் சேவித்தேற்றிச்- சென்றுவலம் புரத்தரனைக் கண்டுபோற்றித்—தேர்ந்தவர்சூழ் பல்லவனீச் சரம்பணிந்து- தேவர்நிறை திருச்சாய்க்கா டணைந்தாரென்றே ௩௨- ௨௱௬௰

என்றுமுனைப் போற்றுவார் மணபுகாரென்- றெடுத்தபதி கமுமுடித்தே ரிசையும்பாடிச்சென்றுதிரு வெண்காட்டி லிறைமுன்பெய்திச்- சேவித்துக் கண்காட்டு நுதன்முன்சோத்தி—நின்றுணர்ந்து முக்குளத்துண் மையுமுரைத்து- நிரப்பியருள் பெற்றவர்வாழ் முல்லைவாயில்—கண்டுதொழு தங்குள்ள பதியும்போற்றிக்- காழியில்வந் தணைந்துபரன் கழல்பணிந்தார்... ... ... ௩௩- ௨௱௬௧

பணிந்தெழுந்த வுடன்றூய வாணியென்னும்- பாமாலை புனைந்துபடர் சடைமேற்றிங்க

—ளணிந்தவற்கு மவர்பாகத் துமைக்குமன்போ- டணிந்தருள்பெற் றகன்றிலத்தி லமர்ந்து
நாளும்—தணிந்தமனக் காதலுடன் வணங்கிச்சீழ்பாற்- ருவில்புகழ்க் குருகாவூர் முதற்றுழ்ந்
தாங்கு—துணிந்ததவ ருறைபதிகள் பலவும்போற்றிற்- றூயவரக் காழியினிற் றெழுதூர்
காலை ௫௪- ௨௱௬௨

தொழவிரும்பி யாழ்ப்பாணர் மனைவியோடு- தோணிபுரம் வரக்கேட்ட தோன்றலார்ந்
தங்—கெழுவரெனி லவர்பெருமை யென்னோ வென்னோ- வெம்பிரா னவரன்றோ வெதிர்கொ
ள்ஞான—முழுமதிகண் டெழும்பரிவு மொழியப்போமோ- முத்தர்களென் னத்தரடி தொழு
துவாழ்ந்தூர்—கழுமலத்தன் றுளர்பெறுகண் காட்சியாதோ- கடவுடிரு வாயிலின்முன் கடி
துவந்தார் ௫௫- ௨௱௬௩

வந்திறையை வணங்கியபின் மொழிர்தவாறவ்- வல்லவர்க ளிருவருமியா ழியற்றிவாழ்த்
தக்—கந்திருவர் முதலெவரும் களிகூர்ந்தேற்றக்- கவுணியருள் புகுந்தரன்முன் பெய்திப்பா
டி—வந்திவர்கட் குரைத்தவகை வழுத்துமோசை- வள்ளல்திருச் செவியினிலேர்த் தருளு
மாறங்—கெந்தையுவந் தில்லமுத முதவப்பெற்றூர்ந்- தேற்றியதெல் லாமிசைகொண் டேற்ற
ப்பெற்றூர் ௫௬- ௨௱௬௪

பெற்றபெருஞ் செல்வமலா னீலகண்டப்- பெரும்பாணர் பெறுஞ்செல்வம் பேசலேசோ
—மற்றவர்தம் மனையெனவை மதங்கசூளா- மணிபேறுந் தரன்றமிழால் மறையையோதப்—
பெற்றபெருஞ் செல்வரடி போற்றிநாளும்- பெயராதம் மறையிசையாற் பெருக்கியேற்றி—
நற்றவர்கள் போற்றவுல கெவையும்வாழ்த்த- நாதனடி தொழுமினிது பெற்றுரென்
ருல் ௫௭- ௨௱௬௫

என்றுமிவ ரினிதிருக்க வருளியிவ்வா- றேகனடி தொழுதிருக்கும் பிள்ளையார்தா—மன்
றினடம் புரிவர்ரைக் கும்பிட்டேற்ற- மனங்கொண்ட பெருங்காதல் வளர்ந்துபொங்கி—விண்
டமொழி கேட்டிசைந்த தாதையோடும்- விரைந்தணைந்து தோணியில்வீற் றிருந்தார்தம்மைக்
—கண்டுவிடை கொண்டுபுறஞ் சென்றம்மூதூர்- கடந்துதிருத் தில்லைவழி நடந்துசெல்
வார் ௫௮- ௨௱௬௬

செல்பொழுதேழ் பவமொழிக்கு மடியராதி- செல்வதலாற் சேணிடைவா னவருஞ்செ
ல்ல—நல்லிசையாழ் வலரிருவ ரொடுநடந்து- நடுவணைந்தங் கன்னகரை நாடிப்போற்றிக்
—கல்வரையி லுதித்துவரு நதிகளெல்லாங்- கைதொழுகொள் ளிடம்வணங்கிக் கடந்து
தெய்வப்—பல்குழுவும் பணிசிகரி கண்டுதாழ்ந்தப்- பதியெல்லை சார்ந்திறைஞ்சிப் பரவிச்
சென்றூர் ௫௯- ௨௱௬௭

சென்றபொழு தண்டரொடேழ் பவங்களியாவுஞ்- சேவித்துச் செய்பணிகள் செய்துவ
ப்பக்—கண்டவையெல் லாங்கனக மன்றுளாடுங்- கற்தனரு ளாமெனக்கை தொழுதுசென்
று—தண்டரளஞ் சொரிகழைதான் கமுகன்றோங்குந்- தளிருடைச்செஞ் சாலிகள்தான் கரு
ம்பன்றென்னும்—புண்டரிகத் தடம்பணையைக் கடந்துதெய்வப்- புனிதமல ரெனப்பொழிபூ
ஞ்சோலைபுக்கார்... ... ... ௬௰- ௨௱௬௮

புக்கவையுங் கடந்துதிருத் தில்லைமூதூர்- புகுவதுகேட் டன்னகரந் தணர்களாதி—தி
க்கடைய வணிசெய்தெதிர் கொளவணைந்து- திருவளர்பல் மறுகுகளும் பணிந்துதேவர்—
தக்கபணி புரிந்துறையு மறையோர்வீதி- தாழ்ந்தெழுந்து வேழ்விமுதற் கண்டுவாழ்ந்து—
மிக்கவுயர் தென்றிருவா யிலினேரெய்தி- மிகமகிழ்ந்தக் கோபுரத்தைத் தொழுதுள்புக்
கார்... ... ... ௬௧- ௨௱௬௯

புக்கரர்வத் தொடுவலங்கொண் டயன்மால்தேவர்- புகலரிதாஞ் சிகரிபணிந் தணைந்து
நாளுந்—தக்கரர்கட் கருள்புரிதற் பரமேவைகுந்- தானங்கள் பலவணங்கித் தரணியின்கீழ்த்
—திக்காரங் கடிமுடியிங் கிறைஞ்சுமூலந்- திகழருவா யுருவாய்ச்சிற் றம்பலத்து—ளெக்காலு
நடம்புரிந்து நின்றகோல- மெதிர்கண்டு பலமுறையுந் தொழுதெழுந்தார் ... ௬௨- ௨௱௭௰

எழும்பொழுதுள் ளெழும்பரிவு மெழுந்தணுக்க- னெய்தியபோழ் துளமகிழ்வு மென்ன
சொல்வேன்—செழுங்கரமுச் சியிற்குவித்து வணங்கிச்சென்று- செம்பொனினம் பலத்தா
னே் டணங்கைக்கண்டு—தொழும்பொழுதிப் பவற்றுடக்காந் தொண்ணூத்தாறுந்- தோற்றி
யவா றடக்கியபின் ஞேன்றுஞானக்—கொழுந்துபடர் வழிதுடர்ந்திக் குறிவிட்டார்க்குங்-
கோனுமைபா லணைந்துரிய கோலங்கொண்டார்... ... ... ௪௩- ௨௱௭௧

கொண்டபல கோலமெலாந் தானாய்வேறாய்க்- கொண்டெனையாட் கொண்டபிரான் கு
றித்தங்கங்கே—நின்றபல தானமெலா நிலையென்றாலு- நிருத்தமதி கம்மதிக மதிகமென்றே
—வின்றபல நூல்களலான் மறைகளாலும்- விளம்பியவா றறிந்துளத்தில் விளங்குமேலோ
ர்—கண்டபல ரூபமெலாங் கருதினாலுங்- கருத்ததுவாய்த் துடர்ந்துலகைக் கடந்தார
ன்றே ௪௪- ௨௱௭௨

அன்றுதொழு வாரிலறி பவருமுண்டங்- காளுடைய பிள்ளையாற் கருள்வதத்தர்—விண்
டதறிந் தவருமதை விரித்தின்றின்னால்- விளம்புவதைக் காண்பவரு முண்டென்றாலு—மன்றி
னடம் புரிதிறம்வள் ளுவருமையன்- மானிடராய் வரவாத வூரெங்கோனுங்—கண்டுதொழு
மாங்குளவக் காழிவேந்தர்க் கருதியவா றம்பலவன் கருணைகூர்ந்தான்... ... ௪௫- ௨௱௭௩

கூர்ந்தனையைச் சார்ந்தருளப் பெற்றகன்றிக்- குரம்பையிற்புக் கிதையமகிழ்ந் தெழுங்கு
றிப்போ—டார்ந்துணர்வு நேர்பெற்ற சிவபோகத்தை- யவ்வுருவி னைம்பொறிகட் குணர்த்தி
முன்னின்—றோர்ந்துளம்போற் றெய்வீகம் விளங்கித்தோன்றுந்- தேகாதி யாவும்வழி படநல்
வாக்கிற்—சேர்ந்துவரு வினையெனச்செந் தமிழ்ப்பாமாலை- செப்பினரொப் பருந்தவரெப் பு
வியும்போற்ற... ... ... ௪௬- ௨௱௭௪

போற்றியமூ வாயிரவர் பெருமைமுன்னம்- பொருந்துதிருப் பதிகமொன்று திருந்தப்
பாடி—யேற்றிவரு காலமெலாம் பணிந்துபின்னு- மென்னனைசொன் மாலைபல வெடுத்துரை
த்து—நீற்றியல்புஞ் சைவமுமஞ் செழுத்துமேமெய்- நிலையெனவெவ் வுலகுமறிந் துய்யுமா
று—காற்றியெனக் கருதுவதென் கடமைபாது- காத்தருள்வ துனதுடமை களிகூரென்
றே... ... ... ௪௭- ௨௱௭௫

என்றினைய பலவகையு முரைத்திறைஞ்சி- யெந்தையவர் தந்தையருள் பெற்றகன்று—
முன்றில்வலங் கொண்டுபுறம் போந்தணுக்கன்- முறைதொழுதம் மூலமுதற் பணிந்துசென்று
—சென்றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றுமுண்மைச்- செயலறியாத் தேவரெலாஞ் செ
ல்லாராக—நின்றிரங்குந் திருவாயி லிறைஞ்சியன்னார்- நிதம்பணிசெய் வீதிபல பணிந்துநின்
றார்... ... ... ௪௮- ௨௱௭௬

நின்றங்கு வைகுவதற் கஞ்சிநீங்கி- நிமலனுறை வேட்களஞ்சென் றிறைஞ்சிப்பாடி—ய
ன்றங்கு வைகியவா நாள்கடோறு- மமருமிட மதுவாக வம்பலத்துட்—சென்றங்கு வைகிக
ழிப் பாலையெய்திச்- சேவித்துள் ளம்பரமே பாவித்தேற்றிப்—பண்டங்கு வைகுமிசைப் பா
ணரோடும- பரவியருள் பெற்றகன்றங் கமர்ந்திருந்தார் ௪௯- ௨௱௭௭

அமருநா ளம்பலத்தந் தணர்களெல்லா- மடிதொழக்கண் டதிசயித்தங் கணையும்போது
—விமலனாற் குரியகண நாதராய்நேர்- விளங்குவதைப் பாணருக்கும் விளங்கக்காட்டி—மும
லராய் நினைக்கவொண்ணா திவரையென்றம்- முனிவர்புக ழேமொழிந்து முன்செலப்பின்—றி
மலநான் மறையவராய்த் திகழ்ந்துதோன்றுந்- தில்லைமூ வாயிரவர் திறம்பரிந்தே ௫௰- ௨௱௭௮

பரிந்துவரு மந்தணர்க ளிறைஞ்சாமுன்னம்- பணிந்தவரோ டணைந்தரிவாட் கொடுதன்க
ண்ட—மரிந்தவற்காய்க் கமரினிடை யமுதுவந்த- வம்பலவ னடிதொழுதன் றருளாலங்கு—
தெரிந்தவகை சிறப்பித்தம் மறையோரேற்றுந்- தென்றில்லை யென்றினமுந தெளிந்துபாடல்
—புரிந்தவரைப் பிரியாத விடைகொண்டன்பிற்- புறம்போந்த திறம்புகழ்ந்தப் புறஞ்செல்
வேனே... ... ... ௫௧- ௨௱௭௯

புறஞ்சென்று திருவாயில் வணங்கிநின்ற- புண்ணியரைப் பணிந்தெழுந்த பாணருண்மை

த்—திறங்கண்டங் கமைத்ததிரு முறைமையேற்றித்- திருந்திசையா லேற்றியபி னவரோடும்ப
ர்—சிறந்தின்றும் பணிபுரியும் வீதிதாழ்ந்து- சிகரிதொழு தவ்வெல்லை யிறைஞ்சியன்று—சிறந்
தென்றும்பிறவாமைக்கவதரித்த- பெருக்கத்தம்புலியூரெங்கெனச்செல்கின்றார் ௫௨- ௨௱௮௰

செல்பவரவ் வூர்மருங்கு செலச்சேவித்துச்- செப்புவரப் பாணரடி யேன்செனித்த—
தொல்பதியீ தெனமகிழ்ந்து சிறப்பளித்த- தோணிபுரத் தெந்தையெதிர் தோன்றுமந்த—நல்
பதியைத் தாழ்ந்தணைந்தா லயத்துட்புக்கு- நாதனடி தொழுதேற்றி நடந்தங்குள்ள—பல்பதி
யுஞ்சென்றிறைஞ்சிப்பாடிப்போந்து- பழமலையாருறைமுதுகுன்றினைப்பணிந்தார் ௫௩- ௨௱௮௧

பணிந்துபதி சார்பொழுதோர் பதிகம்பாடிப்- பருகிவலங் கொள்பொழுது குறளும்பா
டி—யணிந்தபிறை யழகனெதிர் தாழ்ந்தெழுந்தங்- கதிர்முரச மெனவெடுத்துப் பாடியன்பா
ற்—றுணிந்தொருகால் மூழ்கினவர் துயரம்போக்குந்- தூய்மணிமுத் தாறுதொழு தமர்ந்துசி
ன்னாட்—பணிந்துபல பாடியருள் பெற்றுப்போந்து- பவமகல்பெண் ணாகடமும் பரவிச்சென்
றார்... ... ... ௫௪- ௨௱௮௨

சென்றுதிருத் தூங்கானை மாடஞ்சேர்ந்து- சேவித்தங் கரத்துறைமேற் செலவிரும்பி—
நின்றுவிடை கொண்டிறையைக் கண்டுபோற்ற- நினைவிலெழு மாதரவால் வினவிச்செல்கா
—லண்டரும்பின் சென்றவரிற் சிலருமுன்னே- யணைந்தனர்மற் றவர்களொடுந் தாதையோடு
—மின்றுதொழச் செல்வனென விரைந்துசெல்வாற்- கிருபதமெய்த் திரவியும்போய்க் கிரியிற்
புக்கான்... ... ... ௫௫- ௨௱௮௩

புக்கபொழு தங்கிறைவாழ் மாறன்பாடி- புகுந்திறைஞ்சிப் பாடியருள் பெற்றார்ந்தன்பர்
—தக்கவிடங் காட்டவமர்ந் தடியார்சூழத்- தாதையுமியாழ்ப் பாணரொடு பாணியாரு—மிக்க
விளம் பதம்வருந்து மெனவிரங்கி- மிகும்பரிவாற் றகும்பணிசெய் துளமகிழ்ந்து—பக்கமிரண்
டினுந்துயில வகம்புறத்தும்- பரவியதே வடிதொழுது பள்ளிகொண்டார் ... ௫௬- ௨௱௮௪

கொண்டகுறிப் பெவையுமாத் துறையில்வாழெங்- கோனறியா துளவோவக் குறிக்குந
ல்கு—மண்டர்பிரா னன்றிரவன் னகல்வாழ்வாருக்- கருளியவா றவருணர்ந்தங் கரன்முன்
பெய்திக்—கண்டவுட னதிசயித்தச் சிவிகைமற்றுங்- காளமுங்கொண் டாளுடைய பிள்ளை
யார்பாற்—சென்றணையா முனமிவருந் தெரிந்தார்ந்தோர்ந்து- சேவித்துச் செய்வினைகள் மு
டித்தெழுந்தார் ௫௭- ௨௱௮௫

எழுந்தவுட னெதிரணைந்து தொழுதியம்பி- யெம்பிரா னருளிதுநீ ரேற்பதென்ற—செழு
ந்தரளச் சிவிகைவலஞ் செய்துதாழ்ந்து- சேவித்துத் திருநடஞ்செய் சேவடிக்கீ—ழழுந்தியெ
ந்தை யீசனென வாடிப்பாடி- யஞ்செழுத்தை யுணர்ந்தரனி றணிந்துதிங்கட்—கொழுந்திரவி
மகிழ்ந்திடமெய் திகழ்நதுதோன்றுங்- கோலமுளா ரேறினர்மா ஞாலமுய்ய ௫௮- ௨௱௮௬

ஞாலமுழு தார்த்தசல ருலகந்தூர்த்தார்- நான்மறையு மார்த்ததுதூ சுயர்வான் றூர்த்தார்
—மேலெவரு மார்த்துநில மேலென்றேர்த்தார்- மேவுமுழ வார்த்துவரி கிழென்றேர்த்தார்—
சோலகல மார்த்தணங்கா யிழையுமார்த்தார்- கொண்டல்பரந் தார்த்தும்ரவி சென்றங்கார்த்
தார்—சாலமன தார்த்தவர்தோள் சிவிகைசேர்த்தார்- சண்பையர்கோ னார்த்துளஞ்சங் கரன்
பாற்சேர்த்தார் ௫௯- ௨௱௮௭

அரகரவென் றடியவரே சிவிகையோர்த்தங்- கரத்துறைமேற் செலத்தரளக் குடைநிழற்ற
ப்—புரகரன்கூர்ந் தருள்புதல்வன் வந்தானென்றே- புரிமுத்தின் காளமெலாம் புகழ்ந்துசாத்
தச்—சுரகரன்போ லெப்புவனங் களினுந்தானுய்ச்- சுழலசுரன் றெழப்பணித்தக் குழுவை
யன்று—சிரகரங்கொய் தவனிவனே பார்மினென்று- சிறந்தெவருஞ் சூழவரத் துறையில்வந்
தார்... ... ... ௬௰- ௨௱௮௮

வந்திழிந்தவ் வெல்லைமுத லணுக்கன்மட்டும்- வரன்முறையாய்ப் பணிந்துபுகுந் தரன்மு
ன்பெய்திச்—சிந்தைகளிப் புறவதெவர் செப்பலாகுஞ்- சிறுவனையோர் பொருளாகச் சிவிகை
மற்றுந்—தந்தனையென் றனையவகை தாழ்ந்தெழுந்து- தமிழ்மாலை பரடியருள் பெற்றகன்

று—முந்தவகை பாணரோடு மொழிந்துபோற்றி- முதல்வர்திரு வரத்துறையி லமருநா
ளில்... ... ... ௬௧- ௨௱௮௯

நாடோறும் பணிந்தேற்றி யம்மருங்கு- நாதனுறை நெல்வெண்ணை முதலாய்ப்போய்வந்
—திடேற வரத்துறையைத் தொழுமினென்றே- றிசைப்பதிகம் பாடியருள் பெற்றகன்று—
ரேடேற நீரில்விடுந் திரவீர- ரேழிசையாழ்ப் பாணரொடு மேற்றியன்பர்—வீடேற வெஞ்சம
ணர் கழுவிலேற- விரைந்துமணிச் சிவிகையின்மே லேறும்போது ௬௨- ௨௱௯௰

போதன்வழி படுபுகலி தொழவிரும்பிப்- போதுவா ரங்குள்ள பதிகள்போற்றி—மாதவ
ர்கள் சூழ்பழுவூர் பணிந்துமுன்னாள்- மலையர்பணி செய்வகையு மகிழ்ந்துபாடி—நாதனுறை வி
மானத்தைத் தொழுதுமீண்டு- நல்விசைய மங்கைவைகா விறைஞ்சியேற்றிக்—காதலுடன் பு
றம்பியஞ்சென் றணைந்தங்கண்ணல்- கழல்வணங்கிப் பலபதியும் பரவிச்சென்றார் ௬௩- ௨௱௯௧

சென்றுதிருச் சேய்ஞலூ ரணையக்கேட்டச்- செல்வமறை யோர்களெதிர் கொள்ளப்புக்
கார்ந்—தன்றுதந்தை தாளறவீ சியதண்டிக்கங்- கரியபத மளித்தபிரா னடிகள்போற்றி—நி
ன்றவையுஞ் சிறப்பித்துப் பாடிவைகி-நீள்பனந்தாள் பந்தணைநல் லூர்பணிந்தே—யொன்றுமு
ணர் வோடோமாம் புலியூரேற்றி-யோங்குபுகழ் வாழ்கொளிபுத் தூர்வந்துற்றார் ௬௪-௨௱௯௨

உற்றதிருப் பதியரனைப் பாடிப்போற்றி- யுணர்ந்தவர்வாழ் கடம்பைபுகுந் திறைஞ்சியே
ற்றி—நற்றவர்சேர் நாரையூர் பணிந்துபோந்து- நாதர்கருப் பறியலூர் தொழுதங்கென்றுங்
—கற்றவர்சூழ் பதிபலவும் வணங்கியெந்தை- காழிவரக் கேட்டடிய ராதியாவும்—பெற்றவர்
களாகிமகிழ்ந்தெதிர்கொண்டிந்தப்- பெருவாழ்வுபெற்றவரைப்பேணிவாழ்ந்தார் ௬௫- ௨௱௯௩

வாழ்ந்தமனத்தடியர் முதலெவரும்போற்ற- வருமுத்தின் சிவிகையின்மேற் குடைநி
ழற்றச்—சூழ்ந்தொழுகு காளமெலாந் துதித்துவாழ்த்தச்-சூட்சியொடப்பதியெல்லை யணை
ந்திழிந்து—தாழ்ந்தெழுந்து சென்றுதிருத் தோணிமேவுந்- தாதையனை தாடொழுதிங் ககல்
வார்தாளில்—வீழ்ந்தெழுந்த பாணரொடும் வியப்புற்றேற்றி- விரைந்தவரில் புகவிடுத்திங் கி
வரில்புக்கார் ௬௬-௨௱௯௪

புக்கபொழு தார்ந்துமட வார்கள்வாழ்த்தப்-புனிதநீர் நிறைகுடந் தீபங்களோடு—தக்க
பணி யேந்தவொரு தவத்தாவீண்ட- தாயர்திரு நீற்றுக்காப் பேந்திமுன்வந்—துட்கனிவு
தோன்ற வெழுமார்வத்தோடங்- குத்தமனுக்கணிந்து பணிந்தேற்றிநிற்ப—முக்கணனை பத
நினைந்து முகமலர்ந்தம்- முறைமையருள் செய்துள்புகுந் தினிதிருந்தார் ... ௬௭- ௨௱௯௫

இனிதருந்தி நாடோறுந் தோணிமேவு- மிறையடியைத் தொழுதுபல பதிகம்பாடி—மனி
தருந்தே வரும்போற்ற மகிழ்ந்திருக்கு- மாதவருக் குபநயனப் பருவமெய்தப்—புனிதமறை
யோர்பணிந்து புகல்வதேற்கும்- புண்ணியர்கன் றவ்விதியாற் புரிமுன்னூல்தோல்—நனிபெரு
க வணிவித்தங் கவர்முன்னின்று- நான்மறையுந் தந்தனென நவின்றகாலை ... ௬௮- ௨௱௯௬

காலமொரு மூன்றுமறை நான்குமஞ்சு- கருதரிய வெழுத்தொடு சாத்திரங்களாறுஞ்—
சாலவுள புராணவாகம முமற்றுஞ்- சார்ந்திலங்கு வதையறிந்துஞ் சகத்துக்கேற்பப்—பால
னெனும் பருவவிதி பணித்துநின்ற- பண்புடையந் தணர்கள்முத லெவற்குங்கேட்கச்—சீல
முட னவைகள்பல வுரைத்தபோது-சிந்தையினி லையமெலாந் தீர்ந்துவாழ்ந்தார் ௬௯- ௨௱௯௭

வாழ்ந்தமறை யவற்கினமெவ் வரையுஞ்சொல்லி- வள்ளல்திரு நாமமெனு மஞ்செழுத்
தே—சூழ்ந்தொழுகு மந்திரமென் பவைகட்கெல்லாஞ்- சொரூபநிலை யந்தணர்கள் காலை
யுச்சி—யாழ்ந்தபொழு தோதுவது மவையேயென்றங்- கப்பதிகம்பாட வுணர்ந்தடியிணை
க்கீழ்த்—தாழ்ந்தெழுந்த வுடனவரோ டிறைமுன்பெய்தித்- தாழ்ந்தருள்பெற் றவ்வழியூர்
ந்தமருநாளில்... ... ... ௭௰- ௨௱௯௮

அமருநாட் டிருநாவுக் கரசங்கெய்த- வார்ந்தெதிர்கொண் டவரொடுமாலை யத்துட்பு
க்கு—விமலனர் தோணியில் வீற்றிருந்தகோலம்- விரைந்துபணிந் தேற்றியபின் னிலஞ்சென்

றன்பாற்—றமருநீர் தவத்துணையு நீரொயென்றுத்க்க விருந்தமைத்துரிய தியம்பிவைகி—நிம லனூர்பதி பிறவுந்தொழ வகன்ற- நிலையுவந்தன் னிலைபிரியாதினிதிருந்தார் ... எக- உர்கக

இருந்தடியா ரந்தணர்கள் சூழநாளு- மிறையடியைத் தொழுதுபல பதிகம்பாடித்—திரு ந்திசையாழ்ப் பாணரோடு மவைகொண்டேற்றித்- திருவெழுகூற் றிருக்கைமுத லெவையும் வாழ்த்தி—வருந்தவரோ டிருந்தவற்கும் விருந்தமைத்து- வைகுவாற்கெப்பதியும் வணங்கவு ள்ளந்—தரும்பரிவு யாவர்களு மறியவீண்ட- தாதைசிவபாதவிர தயற்குரைத்தார் எஉ- ஙா

உரைப்பசில துரைத்திசைந்த தாதையோடு- முவந்ததவ ராதிமறை யவர்களோடுந்— தரைக்கணுள் பாசமுத லெவையுமத்துத்- தானதுவா காமலமு மாகாவண்ணம்—விரைக்க மலத் திருவடிக்கீ ழினிதிருக்கும்- வீணைவல ரிருவரொடும் விருப்பினோடும்—பரைக்கரிய பர முருவாய்த் தோணிநின்ற- பாவையொடு தேவையடி பரவிமீண்டார் ... ... எங- ஙாக

மீண்டுபுறம் போந்துமணிச் சிவிகையேற- மீதுகுடை வீறவரு காளமாதி—யாண்டுவரு மூன்றிலரு ளமுதமுண்ட- வாண்டகைவந் தானெனவா னளவுங்கூறப்—பூண்டபெருங் காத லுட னணையும்வானோர்- புனிதமல ரொடுமணிபூ வடையத்தூறக்—காண்டகுகண் ணாயிரத் தான் கண்ணார்கோயில்- கண்டுமருங் குளபதியுஞ் சென்றுசென்றார் ... ... எச- ஙாஉ

சென்றிருபுட் பண்டுவழி பட்டடைந்த செல்வமலி புள்ளிருக்கும் வேளூர்நோக்கி—நி ன்றுதொழு தங்கணைந்து நிமலன்றானே- நீடுலகற் கருவினைநோய் நீக்கியாளும்—பண்டித னா யன்றமுத வின்றுமுந்தப்- பரிநாம ரூபமெலாம் பரிந்தகோலங்—கண்டிறைஞ்சி யவ்வ கையுஞ் சிறப்பித்தேற்றிக்- கருத்தகலா விடைகொண்டு கடிதிற்செல்வார் ... எரு- ஙாங

சென்றுதிரு நின்றியூர் நீடூர்புன்கூர்- சேவித்தங் குளபதியும் வணங்கியன்பு—கொண் டுமண்ணிப் படிக்கரையை யிறைஞ்சியேற்றிக் குறுக்கைவீ ரட்டானங் குழைந்துபோற்றி— நின்றனியூர் பந்தணைநல் லூருந்தாழ்ந்து-நிமலன்மணஞ் சேரியணைந் தெதிர்கொள்பாடி—கண் டுதொழு தின்றுமண வாளனூக்-களித்துறைவேழ் விக்குடித்தே வடிபணிந்தார் எசா- ஙாச

பணிந்தகன்று பரமர்திருத் துருத்தியேற்றிப்- பருகியுடன் கோடிக்கா வணங்கிப்பாடி த்—தணிந்தமனக் காதலுடன் கஞ்சனூர்போய்த்- தாழ்ந்துமாத் துறையொடுமங் கலக்குடி க்கே—யணைந்துவய லூரிலருள் வேடங்காட்ட- வார்ந்திறைதே வன்குடியைச் சார்ந்தங்கெ ங்கும்—பணிந்துவிரைந் தின்னம்பற் றொழுதங்கங்கே- பாணரிசை பாடமுறை நீடிவாழ்ந் தார் ... ... எஎ- ஙாரு

வாழ்ந்துவட குரங்காடு துறைவந்தன்று- வாலிவழி படுமரனை வணங்கியேற்றித்—தாழ் ந்துபழ னப்பதியைப் பாடிசெல்காற்- றுவில்புக ழையாறீ தெனவிழிந்து—வீழ்ந்திறைஞ்சி யெழுந்தணையக் கேட்டங்குள்ளார்- விரைந்தணிசெய் தெதிர்கொளப்புக் கவர்களெல்லாஞ்— சூழ்ந்துவர வன்னகரைப் பணியும்போது-சூட்சியுடன் புலனைந்து மெனவெடுத்து எஅ-ஙாசா

எடுத்ததிருப் பதிகமுரைத் திறைமுன்பெய்தி- யேற்றியபின் கோடலெனுந் தமிழ்ப்பாமா லை—தொடுத்தடியிற் பலமுறையுந் தொழுதெழுங்காற்- றேற்றுவது மன்றுநந்தி தொழமகி ழ்ந்தே—யடுத்தநிலை யருளியதும் புகன்றகன்றங்- கமர்ந்துமருங் குளபதிக ளணைந்துள்ளன் பு—தடுத்திடமீண் டையாற்றில் வந்தய்யாறன்- றுடொழுது பாடல்புனைந் திருக்குரா வில் ... ...எகூ- ஙாஎ

இருக்குநாட் குடதிசைமேற் செலவிரும்பி-யிறைவர்திரு நெய்த்தான மிறைஞ்சிப்பாடி— யுருக்கமுடன் மழபாடி யணையும்போதே-யுவந்தங்கை யாரமுலென் றுரைத்துப்போந்தங்— கருக்கனொளி போன்றமணி வயிரத்தூணில- மர்ந்தபிரா னடிதொழுது பரவிமெய்யன்—பரு க்கமுதாம் பரமனருள் பெற்றகன்றப்- பதியமர்ந்து நாடோறும் பணிந்திருந்தார் அய- ஙாஅ

இருந்தியல்பாய் வணங்கியருள் பெற்றகன்றார்ந்- திறைவனுறை கானூர்சென் றிறைஞ்சி நெஞ்சிற்—பொருந்தியவன் புடனூலந் துறையுமற்றப்- பொற்பதியங் குள்ளனவும் போற்றி

யிந்து—பரிந்திரவி மருத்துக்கள் வழிபட்டன்று- பரவியமாந் துறையொடுபல் தானம்பாடி
த்—திருந்தியநீர்ப் பொன்னிவட கரையேசார்ந்து- திருப்பாச்சி லாச்சிராமஞ் சேரும்போ
து ௮௧- ௩௱௯

சேர்ந்தமழ நாட்டரசன் னகரில்வாழ்வான்- சேய்க்குறுநோய் போக்கிடுமூ வகையிற்
றீரா—தோர்ந்திறைமுன் விடுத்தேற்று நாளிற்காள- வோசைகேட்டு ணர்ந்தெதிர்கொண்
டிறைஞ்சுமாறு—தேர்ந்தெழுக வெனவுரைத்தங் கணைந்திழிந்து- தேவர்கட்குந் தேவனெதிர்
செல்லவாங்கே—சோர்ந்துறைந்த கன்னியைக்கண் டென்னெனுமுன்- சொல்வனந்த வரச
னங்குந் தொழுதுநின்றே ௮௨- ௩௱௰

நின்றரச னன்னிலைமை சாத்தக்கேட்டு- நிமலனைநேர் வணங்கியிந்த மங்கைவாட—வெ
ன்றமயல் செய்வதியல் பாமோவென்ன- வெடுத்ததிருப் பாட்டிலவள் சோகநீங்கக்—கண்டும
கிழ்ந் தப்பதிக முடித்திறைஞ்சிக்- கடவுளருள் பெற்றுவருங் காழிவேந்த—ரன்றெவருந் தொ
ழுவமர்ந்தே யகன்றங்கெங்கு- மடிபணிந்து பஞ்ஞீலி யணைந்தாரென்றே ... ௮௩- ௩௱௰௧

அணைந்தபதி தொழுதகன்றங் கெங்கும்போற்றி- யரனுறையீங் கோய்மலைசென் றம்மரு
ங்கு—மணைந்துவரை முதலாக விறைஞ்சிக்கொங்கி- லக்கரையிற் றலம்வணங்கி யலைநீர்ப்பொ
ன்னி—யணைந்துதன்றென் கரைசார்ந்து மன்னுட்டண்ண- லமருமிடம் பலதாழ்ந்து செங்குன்
றூரை—யணைந்திறையைப் பணிந்தேற்றி மீண்டுபின்னு- மார்வமொடக் கோனகரி லினிதிருந்
தார் ௮௪- ௩௱௰௨

இனிதமர்ந்து குடபுலஞ்சென் றணைந்துமீண்டங் கிருக்குநா ளிமமொழியப் பாடிவை
ப்—பனிதருதிங் கட்சடையா னுறையுந்தானம்- பலபணிந்து திருப்பாண்டிக் கொடுமுடிக்
கே—நனிபெருகு மடியவரோ டணைந்துபோற்றி- நாவலர்சூழ் வெஞ்சமற்கூ டலிற்றுழ்ந்துள்
ளக்—கனிவுடனங் குளபதியு மிறைஞ்சிப்போந்து- கருவூர்சென் றடிதொழுதன் னுடகன்
ரூர் ௮௫- ௩௱௰௩

அகல்பவர்மா ணிக்கவெற்பு முதலணைந்தே- யக்கரையி லுளபதியு மலையுங்காணும்—புகு
ந்திறைஞ்சி வந்துபராய்த் துறைவணங்கிப்- புகழ்ந்தாலந் துறையொடுசெந் துறையும்போற
றி—மகிழ்ந்தினமங் குளதலங்கற் குடியும்வாழ்த்தி- மாமுச்தீச் சரமுசிர புரமுமேற்றித்—திக
ழ்நாவ லமர்ந்தானைக் கருளுவானைத்- திருவானைக் காவானைப் பணிந்திருந்தார் ௮௬- ௩௱௰௪

இருந்தரசன் பணிசெய்வகை யியம்பியேற்றி- யிறையருள்பெற் றம்மருங்குள் ளனவும்
போற்றி—யரன்றிருப்பாத் துறையெறும்பி யூரணைந்தே- யடிதொழுதங் கெப்பதியு மிறைஞ்சியு
ள்ளம்—பரிந்துநெடுங் களமுதற்போய் நியமங்காட்டுப்- பள்ளியா லம்பொழில்பூந் துருத்
திபாடிக்—கரைந்தினமா டிறைதானம் பலவணங்கிக்- கண்டியூர் வீரட்டர் கழல்பணிந்
தார் ௮௭- ௩௱௰௫

பணிந்தடியா ருடன்கலந்தங் கவரைநோக்கிப்- பரமனருள் வினவியவை பரவிக்கங்கை
—யணிந்தவர்சோற் றுத்துறையை யடைவோமென்றே- யருந்தமிழ்ப்பா மாலைபுனைந் தணைந்
துவைகித்—தணிந்தமன துடன்வேதி குடியைநண்ணித்- தாழ்ந்துவெண்ணி முதற்றொழுது
தகுமன்பில்லான்—றுணிந்துபுரி வேழ்வி நடைத் தவர்மகிழ்ந்து- துணையொடுறை சக்கரப்ப
ள் ளியினைச்சார்ந்தார் ௮௮- ௩௱௰௬

சார்ந்திறைஞ்சிப் புள்ளமங்கை தாழ்ந்துபோந்து- சங்கரனு லந்துறையை வணங்கியேற்
றி—யார்ந்துபா லைத்துறையைத் தொழுதுநல்லூ- ரணைந்துவெள்ளி மால்வரையை யனைய
கோயில்—சேர்ந்துவலங் கொண்டேறித் திருமுன்பெய்திச்- சேவித்துப் பலபாடிச் சிலநா
ள்வைகித்—தேர்ந்துமருங் குளபதியுந் தெரிசித்தண்ணல்- சேயுவண்ண மெனக்குருகா வூர்ப
ணிந்தார்... ... ... ௮௯- ௩௱௰௭

பணிந்துமருங் குளபதியு மிறைஞ்சிப்போந்து- பாடுவா ரவளிவணல் லூர்முதற்றொ—ல

ணிந்தவர்வாழ் பருதிநிய மமும்வணங்கி- யண்ணலுறை பூவனூ ராதிபோற்றித்—துணிந்தமதி
ச் சடையானைச் சுரபிமுன்னாட்- டேர்ந்தவழி படுமாவூர் தொழுதார்வத்தாற்—பணிந்தநல்லூ
ர் சென்றுவலஞ் சுழியணைந்து- பரவவரன் வினவவரும் பரிவுரைப்பாம் ... ௧௰- ௲௰௮

உரைப்பதுகேட் டுவந்துமைமையோ டுவமையில்லி- யூர்விடைமே னேர்வரத்தோர் தார்ந்
துபோற்றி—யுரைப்பதிலு மவைசிறப்பித் தேற்றியன்ப- ருடன்கலந்து வைகியருள் பெற்றெ
ழுங்கா—லுரைப்பதுவோ வெயிற்காலத் தியல்பேதேனு- முத்தமற்கென் பின்செலுமற் றவற்
குந்தானெ—னுரைப்பதன்முன் பனிநீக்கு மொருவன்பாத- முளஞ்சிரங்கொண் டவர்நாம மு
ரைத்தெழுந்தார் ௧௧- ௲௰௯

எழுந்துபுறம் போந்துமணிச் சிவிகையேறி- யெழிற்றரளக் குடைபணித்தக் காளமூதத்
—தொழுந்தகைய வடியர்முத லெவருஞ்சூழத்- தோன்றுபழை யாறையின்மேற் றளியைச்
சென்றங்—கிழிந்திறைஞ்சி யிமக்கொடிபண் டருச்சிற்றேற்று- மிறைவர்திருச் சத்திமுத்தம்
பணிந்துஞானக்—கொழுந்துசெழுந் தவிசினிற்பட் டீசுரத்துக் கோயிலெழு நாயிறுயர் காலை
வந்தார்... ... ... ௧௨- ௲௨௰

வந்தபொழு தந்தணர்மெய் யன்பரெல்லாம்- வள்ளல்திரு மேனிவெயர் வரும்பக்கண்டு—
நொந்துவர விந்துவர வணிவானோக்கா- னோக்குமிவ ரறியாதச் சிவிகைமீது—பந்தரொன்று
பருமணியா லிசைத்ததாகப்- பரந்திலங்கும் படிபூதம் பிடித்தியம்பச்—சிந்தைமகிழ்ந் தவரிழி
ந்து நின்றுதாழ்ந்தார்- சிதைந்தடியார் சூழ்ந்தவைகைக் கொண்டுவாழ்ந்தார் ௧௩- ௲௨௧

வாழ்ந்திமையோர் பொழிமலரப் பந்தர்மீதும்- வழங்குதலாற் றுளங்கொளிப்பூம் பந்த
ராகிச்—சூழ்ந்துவரு வோரனைத்துந் தேவராகிச்- சுரரவரைப் பணிந்துகளி கூர்வராகி—யா
ழ்ந்தபவத் தடக்குடைய வமரரேனு- மவரனைய ரெனலமலர் சேர்வதாகி—வீழ்ந்தமல ரேந்துவி
லந்தூர்வதாகி- விளங்குமதி யவர்முகங்கண் டார்வதானார் ௧௪- ௲௨௨

ஆனவகை கண்டெவரு மதிசயிப்ப- வப்பந்தர் காண்பவற்கும் வெப்பநீங்க—ஞானமணி
விளக்கனையர் சிவிகையேறி- நாதனடி நீழலென வமர்ந்துசென்று—பானுவுநோர் வருகாற்ப
ட் டீசுரத்துப்- பரமர்திருக் கோபுரத்தின் முன்பிழிந்து—மோனமொடு தொழுதுபுகுந் திறை
ஞ்சிப்பாடல்- மொழிந்தருவி பொழிந்தகல்வ தொழிந்துநின்றார் ௧௫- ௲௨௩

நின்றுண்ணு மமண்சமைய நிரகரித்து- நீறணிவோர் வீடுபெறு மாறுகூறப்—பண்டுண்
ணும் பாலரு வாயற்கீசன்- பரிந்துணர்த்த வுணர்ந்தருளப் பெற்றுமீண்டங்—கன்றுண்ணும் ப
டியமைத்த திசைந்துவைகி- யகன்றயன்மால் முதல்வருந்தப் பொருந்துமாலங்—கண்டுண்
ணுங் கடவுளிரும் பூவைபாடிக்- களித்தரதைப் பெரும்பாழி முதற்பணிந்தார் ௧௬- ௲௨௪

பணிந்தகன்று குடவாயில் நாலூர்சேறை- பரவிநறை யூர்புத்தூர் சிவபுரத்து—மணைந்
தெவற்கு மருவினைதீற் றருளவல்ல- வணங்குவர நதிபணிரெண் டாண்டுக்கோர்கால்—வணங்
கிரவி கும்பத்து மகத்திலிந்து- வரிற்றடமா மகத்தீற்தம் படிந்தன்போடுந்—தணிந்துவழி படு
குடமூக் கொடுகீழ்க்கோட்டந்- தாவில்புகழ்க் காரோணந் தாழந்துசென்றார் ௧௭- ௲௨௫

சென்றரவ மன்றுதொழும் பரிவுகூர்ந்த- சேவகனு கீச்சரஞ்சே வித்தங்கூர்ந்து—நின்று
சுழி முனைமத்தியாற் சுனரமர்ந்து- நிலவுமிட மருதீதோ வெனப்புகன்றார்ந்—தொன்றுமுணர்
வொடுபணிந்துள் ளணைந்துதாழ்ந்தங்- கோதாம லுணர்ந்தமறை யெவருமோத—வின்றுதமி
ழ்ப் பாமாலை யாய்விரித்து- விளம்பியருள் பெற்றகன்று வீற்றிருந்தார் ... ௧௮- ௲௨௬

வீற்றிருந்த நாளுமவை விளம்பிப்போற்றி- விருப்பமங்கு வைத்தகன்றம் மருங்குதேவர்
—காத்திருந்து தொழுதேற்றும் பதிகளியாவுங்- கண்டுகுராங் காடுதுறை சென்றங்கீச—னே
ற்றிருக்கும் பலதான மிறைஞ்சிப்பாடி- யெந்தைமகிழ்ந் தாவடுதண் டுறையைநாடப்—பார்
த்திருந்தங் கெதிர்கொள்வோர் பணியாமுன்னம்- பரிந்திழிந்து தாமுமுடன் பணிந்துசெல்
வார் ௧௯- ௲௨௭

செல்பொழுதவ் வெல்லையிலுள் ளவருங்கூடச்- செல்தவருஞ் சேணிடைவாழ் பவருஞ்
சூழச்—செல்பொழுதவ் வெல்லைமுதற் றாழ்ந்தெழுந்து- சென்றுதிரு முன்பிறைஞ்சிப் பாடிமீ
ண்டு—செல்பொழுதவ் வெல்லையைவிட் டகலாதென்றுஞ்- சேவித்தங் கிருப்பவர்பால் விரு
ப்பதோடுஞ்—செல்பொழுதவ் வெல்லையிலுள் ளோர்வருந்திச்- செய்விருந்து பொருந்தியவ்
வா றிருக்குநாளில் ... ... ௱- ௲௱௨௮

இருக்குரைக்கும் படிவேள்வி செயக்குறித்தன்- றியம்பியநாள் வந்தணுகப் பொருள்கொ
ண்டேகி—யிருக்குரைக்கும் வேதியர்சூழ் புகலிமேவு- மிறைவன்முன மவைபுரிவா னினிது
கூர்ந்தே—யிருக்குரைக்குங் கவுணியகோத் திரத்துதித்த- யிளவேறுக் கவர்தாதை கூறக்கே
ட்டோர்ந்—திருக்குரைக்கும் பரமனிணை யடிகளன்றே- யிருநிதியுந் தருவதென விரைந்து
சென்றார்... ... ... ௱௧- ௲௱௨௯

விரைந்துசென்று வடுதுறையி லமர்ந்தநாதன்- விரைக்கமலத் திருவடிக்கீழ்த் தொழுது
நின்று—கரைந்துருகிப் பாடுதலுங் கடவுளொக்காற்- கணத்திலொரு கணமுலவாக் கிழியொ
ன்றேந்தி—வரைந்தெவரு மோதுமுறை வழுத்தவல்லீர்- வள்ளலுமக் களித்ததிது கொள்ளுவீ
ரென்—றிரைந்தெவரு மகிழ்ந்திடப்பீ டத்திலிட்ட- திருநிலத்துள் ளோர்களுங்கண் டிறைஞ்சி
வாழ்ந்தார் ௱௨- ௲௱௩௰

வாழ்த்தியநற் றிருப்பதிக நிரப்புமுன்னம்- வள்ளல்மகிழ்ந் தருளியதைக் கண்டுசென்
னி—தாழ்த்தியெழுந் தனையவகை யிறைஞ்சியார்ந்தத்- தமிழ்மாலை நிரப்பியவை தலைமேற்
கொண்டே—யாழ்த்தலைவற் குரைத்தகன்று தாதையாற்கவ்- வாயிரம்பொன் கிழியையெடு
த் தளித்துச்சொல்வார்—சூழ்த்துலவு மந்தணரு மிகுத்துவேள்வி- சூட்சியுட னுங்குசெய லா
குமென்றே ௱௩- ௲௱௩௧

என்றவரை விடுத்தபின்பு தானுமாங்கே- யெய்துவதற் குள்ளெழுமெய்ப் பரிவினோடா
ர்ந்—தன்றுமந்தப் பதியமர்ந்து வைகிமீண்டு- மண்ணலடி தொழுதகன்று கோழம்பத்து
ட்—சென்றவைகன் முதலிறைஞ்சிச் செல்வர்நல்லஞ்- சேவித்தங் குளபதியுந் தொழுத
ழுந்தூர்—கண்டுதிருத் துருத்தியொடு மூவலூர்போய்க். கருதரிய மயிலாடு துறையைச்சேர்
ந்தார் ௱௪- ௲௱௩௨

சேர்ந்தபதி யைப்பரவிச் செம்பொன்பள்ளி- சென்றுவிள நகர்பறிய லூர்வீரட்ட—மார்ந்
திறைஞ்சிப் போந்தலைவாய்க் கரையணைந்தங்- கண்ணனுறை பலதானம் பாடிப்போற்றித்—
தோர்ந்துதிரு வேட்டகுடி பணிந்துதற்ம-தேவன்வழி படுதரும புரத்தைநோக்கிச்—சார்ந்தபொ
ழு தன்னகரிற் பாணர்தாயர்- சார்புடையோ ரெதிர்கொண்டு சரணிற்றாழ்ந்தார் ௱௫- ௲௱௩௩

தாழ்ந்தவர்தன் சுத்தத்தா ரென்றுபாணர்- தாழ்ந்தியம்பக் கேட்டுமகிழ்ந் தருளப்பெற்
றுச்—சூழ்ந்துவரு மவர்புகன்ற துணர்ந்துணர்த்துஞ்- சூட்சியொடு மப்பதிசென் றண்ணல்
முன்பு—வீழ்ந்திறைஞ்சி மாதர்மடப் பிடியைப்பாடி- வீணைவலற் குரைப்பதியாழ் முரிச்சிந்தை
—யாழ்ந்தடியிற் றெழவுடன்றெட் டளித்தபின்பங்- கவையிசைகொண் டேற்றியசீ ரறிந்த
தெங்கும்... ... ... ௱௬- ௲௱௩௪

எங்குநிறை பரமர்திரு மகனார்சீர்த்தி- யெவர்பகர்வ தவரருள்பெற் றேற்றுவாரோ—
டங்குமடி தொழுதகன்றம் மருங்குநாத- னமருமிடங் களுமணைந்து நள்ளாறெய்திப்—பொ
ங்கியவன் பொடுபணிந்து போகமார்த்த- பூண்முலையா ளெனும்பதிகம் புகன்றுபெம்மா
ன்—றங்கியதா னங்கள்பல தாழ்ந்துசண்பைத்- தமிழ்விரகர் சாத்தமங்கைப் பதியைச்சார்
ந்தார் ௱௭- ௲௱௩௫

சார்ந்தபொழு தன்னகரி லவதரித்துச்- சன்மார்க்கஞ் சார்ந்திலங்கு நீலநக்க—ரார்ந்தெ
திர்கொண் டிறைஞ்சமகிழ்ந் தணைந்தைவந்தி- யரனடிக்கீழ்த் தொழுதகன்றவ் வன்பரில்
லஞ்—சேர்ந்தமுது செய்தமர்ந்து பாணரங்கி- செழிக்குமிடத் தமர்வதுங்கேட் டுவந்த

உஅ- வது- சம்- சு- ள்- சரிதை:

ன்னுர்சீர்—தேர்ந்திறைமுன் பேற்றியகல் வார்பின்செல்லத்- தேறுமவற் கிறுரைத்துச் செல்லாநின்ருர் ... ... ாஅ- நாநகூ

நின்றிறைவாழ் பலதானம் போந்துபாடி: நிமலனுறை காரோண நினைந்துதேடிக்—கண்டுதொழ்ந் தம்மருங்குள் ளனவும்வாழ்த்திக்- கந்தன்வழி படுகிழ்வே ளூரிறைஞ்சிச்—சென்றுபிற பதிதொழும்போ தெதிர்கொண்டேற்றுஞ்- செறுத்தொண்டர் செங்காட்டங் குடிசேர்ந்தங்கு—பண்டுகரி முகனுமன்றன் னவரும்போற்றும்- பரமனுறை கணபதீச் சரம்பணிந்தார்... ... ... ாகூ- நாநஎ

பணிந்தவரைப் பலவகையும் பரவிமீண்டப்- பத்தரகத் தமர்ந்தவர்பா லனையறுக்கத்—துணிந்தவரைத் துணிந்தடிசார் புவர்கள்துன்பந்- துடைத்தெவையுங் கொடுத்தருளு நடத்துங்கங்கை—யணிந்தவரை நாள்கடொறுந் தொழுதகன்றே- யருமருகற் பதியணைந்தங் கண்ணலோடு—தணிந்தவரைக் கொடியையுங்கண் டிறைஞ்சிநின்று- தமிழ்மாலை பாடிமகிழ்ந் திருந்தாரென்றே... ... ... ாய- நாநஅ

இருக்குநா ளப்பதியில் வந்தணைந்தார்ந்- திரவுதயில் பொழுதிரவு தீண்டிமாண்ட—பொருப்பனு னருகிருந்து வருந்துங்கன்னி- புலம்பல்கேட் டங்கெய்திப் புகுந்தவாறே—விரிப்பமாதுண்மெலிவு தருமோவென்று- விளம்பவுமவ் வணிகன்விடந் தீர்ந்தெழும்போ—தருக்கனுர்த்தெழுந்தலர்தூர்த் தெவருமாற்ப- வவற்குமணம் வகுத்துவிடுத் தமருநாளில் ாயக- நாநகூ

அமருநாட் சிறுத்தொண்டர் வந்துவேண்ட- வங்குதொழ விரும்பியிங்கு கோயிற்செல்கால்—விமலனுர் செங்காட்ட குடியமர்ந்து-விளங்கியவா ருெருபாகம் பசுமையாக—முமலராலறியவொண்ணுக் கோலங்காட்ட- முறைதொழுதவ் வகையுரைத்தம் முனிவரோடுங்—கமலனுன் முகன்வணங்குங் காழிவேந்தர்- கணபதீச் சரம்பணிந்தங் கமர்ந்தகன்ருர் ாயஉ- நாஉய

அகன்றுபிற பதிவணங்கச் செல்லும்போதவ்- வன்பருக்கு விடைகொடுத்தங் கெங்கும்போற்றிப்—புகன்றுவரின் முருகர்முதலெதிர்கொண்டேற்றப்- புகலூர்சென் றடிபணிந்து பாடியன்னுர்—பகர்ந்தமுது செயவிரங்க வமர்ந்துநாளும்- பரமனுறை வர்த்தமா னீச்சரத்தை—யுகந்திறைஞ்சி யவர்தொண்டு முரைத்துப்பாண- ருடன்மகிழ்ந்தம் முருகர்மடத் துறையுநாளில் ... ... ாயங- நாசக

உறையுநாட் டிருநாவுக் கரசங்கெய்த- வுவந்தெதிர்கொண் டவர்வரவு வினவிற்சால—வறையுமா ரூர்ப்பெருமை கேட்டபோதே- யங்கிறைஞ்சி வருவதுரைத் தகன்றுநாளு—மிறையுமாமதிநதிபாம் பணிந்தவேணி- நிமலனுர் விற்குடிவீ ரட்டம்பாடி—யிறைவனு ரூர்தொழுதுய் வோமென்றேற்றி- யிறைஞ்சினு ரவ்வெல்லை யினமும்வாழ்த்தி... ... ... ாயச- நாஉஉ

வாழ்த்தியபி னண்ணலரா ரூருமாரூர்- வையகத்துக் காதியென வுரைத்திங்குள்ளார்—சூழ்த்துவர வப்பதியிற் செல்லும்போது- சூட்சியொடங் கெவருமெதிர் கொண்டுசென்னி—தாழ்த்தியெழா முன்வணங்கி யவர்களோடுந்- தாவில்புகழ்க் கோபுரவா யிலின்முன்பெய்தி—வீழ்ந்திறைஞ்சி யுள்புகுந்தார்ந் தடியராதி- விளங்குசபை யைத்தொழுது விரைந்துசென்ருர்... ... ... ாயரு- நாசங

சென்றுமறைப் புற்றிடங்கொண் டவர்முன்பெய்திச்- சேவடிக்கீழ்ப் பலமுறையுந் தொழுதெழுந்து—நின்றவரங் கண்டமனைத் துள்ளுமேலு- நீதிபுரி கோலமுஞ்செங் கோலுங்காலுங்—கண்டிறைஞ்சி யானந்த வெள்ளமூழ்கிக்- களித்துருகிப் பாடியருள் பெற்றுமீண்டார்ந்—தண்டர்தொழ வீற்றிருக்கு மடியர்வேண்ட- வமர்ந்துதமிழ் புனைந்துதின மடிபணிந்தார் ... ... ாயசு- நாசச

அடிபணியுங் காலமெலா நமிநந்திக்கன்- றருள்புரிந்த வரனெறியைப் போற்றியன்னுர்—முடிவணங்கிச் செய்தவமுஞ் சிறப்பித்தேற்றி- முறைமையிலா ரூர்தொழுதங் குறையு

நாள்வெண்—பொடியணிவான் வலிவலங்கோ ளிலியுமற்றப்- பொற்பதியுஞ் சென்றிறைஞ்சிப் பாடிமீண்டும்—படியணையாப் பதமடைவோ ருத்த்துவாழும்- பதியணைந்து பரம்பொருளைப் பரவிநின்றார்... ... ... ௱௰௭- ௩௱௪௫

நின்றபடி சொல்வேந்தற் குரைத்தகன்ற- நினைவொருபாற் புகலூரி னிமலனுரைக்—கண்டபடியேயொருபாற் கருத்திற்றோன்றக்- கமலேசன் கழல்வணங்கி யகன்றுள்ளன்பாய்ப் —பண்டருவா ருடன்பயின்றோர் பதிகம்பாடிப்- பனையூர்சென் றடிபணிந்தங் கெங்கும்போற்றிப்—புன்றலையர் துடக்கொழிக்கும் புகலிவேந்தர்- புகலூர்வந் ததுபுகலக் கேட்டாரப்பர் ௱௰௮- ௩௱௫௧

கேட்டெதிர்கொண் டகம்புறமார் தவரோடென்றுங்- கேடிலா னடிவணங்கிப் பாடியங்கு—நாட்டமுடன் முருகர்மடத் தமருங்காலை- நாதனடி யாரிருவர் வரக்கலந்து—கூட்டமுடன் சிவலோக மெனவிளங்கிக்- கும்பிட்டங் குறையுநாட் குவலையத்தோர்—வாட்டமறப் பிறபதியுந் தொழநினைந்து- வள்ளலருள் பெற்றகன்றார் பிள்ளையார்தாம் ௱௰௯- ௩௱௫௭

பிள்ளையா ருடன்செலுமா தரவோடங்கு- பிஞ்ஞகனைத் தொழுதிருந்த வாக்கின்மன்னர்—கொள்ளைகொண்ட வார்வமுடன் கூடச்செல்லக்- குறித்ததவக் குறைநிரப்பு மறையோர்மூவர்—விள்ளமன தின்றிவிடை பெற்றுமீள- விரைந்துளமுஞ் சிவிகையுமுன் செலநடந்து—மெள்ளவே செலும்பெரியோர் சிறுபதம்பார்- மேவுவதோ வாண்டவர சவற்குரைப்பார் ௱௨௰- ௩௱௪௮

உரைக்குவந்த வுத்தமனன் றுமக்களித்த- வுயர்யானத் தெழுந்தருள்வீ ரெனவுணர்ந்தே—யுரைத்தபடி யாண்டவர சடியரோடு- முளமகிழ்ந்து முன்செலப்பின் காளமாதி —யுரைக்கும்வகை யாவையும்வா னளவுங்கேட்க- வுரைத்திடமா டன்பர்முத லெவருமுண்மை—யுரைத்துவரக் குடைமுதற்சூழ் சிவிகையேறி- யுரைக்குமா றஞ்செழுத்தை யுரைத்துச்சென்றார்... ... ... ௱௨௧- ௩௱௫௧

சென்றம்ப ரணைந்துமுனஞ் செல்வாரோடுஞ்- சேர்ந்துதிரு மாகாளத் தமர்ந்ததேவைக்—கண்டிறைஞ்சி யன்றுகோச் செங்கண்வேந்தன்- களிற்றியற்றும் பணிசிறப்பித் தேற்றிவைகி—யன்றமருங் குளபதியும் பணிந்தன்பற்கா- யந்தகனைக் காய்ந்தவர்வாழ் கடவூரெய்திப்—பொன்றயங்கு சடையுடையா ரென்றுபாடிப்- போற்றிசைத்துக் கலையர்மடத் தமருங்காலை ௱௨௨- ௩௱௫௰

காலையிலுங் கடவூர்வீ ரட்டஞ்சென்று- கலையர்தொண்டுஞ் சிறப்பிற்றுங் குரைத்துப் போற்றி—மாலையிலம் மயானமே பணிந்திசைப்பா- மாலைபல பாடியமர்ந் தாக்கூரெய்திச்—சோலைகள்சூழ் பதியினுட்டான் றோன்றிமாடச்- சோபானம் புகுந்திறைஞ்சிப் பரவிக்கன்ன—லாலையொலி மலிமீய்ச்சூர் முதலாயேற்றி- யகன்றுபாம் புரநகரை யணைந்தாரென்றே... ... ... ௱௨௩- ௩௱௫௧

அணைந்தபதி தொழுதமருங் கெங்கும்போற்றி- யண்ணலுறை மிழலைதொழச் செல்லக்கேட்டார்—தணைந்தெதிர்கொ ளந்தணர்க ளுடன்சென்றீச- னமர்ந்தவிமா னத்தைவலங் கொண்டுபண்டங்—கணைந்திறைஞ்சு மாலொருகண் சாத்தவாழி- யருளிறையைக் கண்டடிக்கீழ் வணங்கிநின்றுள்—ளணைந்துசடை யார்புனலு முடையாரென்றே. யருந்தமிழை விண்டமுதை யுண்டொன்றானார் ௱௨௪- ௩௱௫௨

ஒன்றாகி விண்டருவா யுருவுமாகி- யோங்காரத் துட்பொருளாய் நின்றமூல—மின்று தொழப் பெற்றேனென் றிறைஞ்சிப்பின்னு- மினியவகை யுரைத்தருள்பெற் றகன்றுபாணர்—நின்றவிடத் தணைந்தவரோ டிசைகொண்டேற்றி- நிலையெழுகோ புரத்துவட மடத்திற்றாமு—மன்றுமுத லப்பரொரு மடத்துமாக- வமர்ந்துமறை யவர்பரிந்த விருந்திசைந்தார் ௱௨௫- ௩௱௫௩

விருந்தடியார் முதலெவரு மருந்தநாளும்- வீழிதொழு தேற்றியதன் மருங்குநாதன்—
பொருந்துமிடம் பலவிறைஞ்சிப் பாடிமீண்டப்- பொற்பதியில் வந்துறையு நாளிற்சண்
பை—யருந்தவமா மணியடியைத் தொழவடங்கா- வார்வமொட்டம் மறையவர்கள் வந்துதா
ழ்ந்து—வருந்தினராங் கிறைவனைநீர் வழுத்திப்போற்ற- வண்புகலிக் கெழுந்தருள வேணு
மென்றே ௱௨௬- ௩௱௫௪

என்றவுரைக் கிசைந்திரவு துயில்வர்பாற்சென்- றேசனருள் வதையுணர்ந்து கோயி
லெய்தி—யன்றமுத மளித்தவனை யோடுதோணி- யமர்ந்தபடி கண்டிறைஞ்சிப் பாடியா
டி—யின்றெனக்கிங் கவ்வகைதோற் றியதென்கோலென்- றிரங்கியவை தெரிந்தகன்றம்
மறையோர்க்குண்மை—விண்டுவிடை கொடுத்தவரை விடுத்துநாளும்- வீழியினிற் றொழுதிரு
ந்தார் காழிவேந்தர் ௱௨௭- ௩௱௫௫

காழியர்கோன் றிருநாவுக் கரசரோடுங்- களித்துறையு மிருதிறத்துத் தவர்கள்சூழ
—வீழிதொழு தார்ந்திருக்கு நாளிற்கால- விதிப்படிவின் ணதியுமொழிந் திரவிநோக்குத்—
தாழிமுதற் குறைந்தவனி வளஞ்சுருங்க- வனைதுயிரின் மனத்துயர்கண் டரன்ருள்போற்
றி—வாழுமடி யார்க்குமவை வருமோவென்று- வள்ளலையுள் ளுணர்ந்திரவு பள்ளிகொண்
டார் ௱௨௮- ௩௱௫௬

கொண்டகுறிப் பெவையுமிறை யறியாதோமுன்- கொண்டகுறிக் கருள்பொழுது புறி
யாதோயீ—தன்றிரவுந் தன்சுதன்பாற் செலவார்வந்தா- னணைந்தருள்கூர்ந் தப்பருக்கு மரு
ளுமாறு—பின்றையெழுந் திருவர்களுங் கோயிலெய்திப்- பீடத்து மீதிருந்த காசிரண்டுங்
—கண்டிறைஞ்சிக் கைக்கொண்டவ் வாறுநாளுங்- கண்டெடுத்துத் தொண்டர்களுக் கமுத
ளித்தார் ௱௨௯- ௩௱௫௭

அளித்தபடிக் காசிவற்கு வாசிபட்டே- யமுதுசெயத் தாழ்வதறிந் தரன்பாலெய்திக்—
களித்திரங்கிப் பாடவவை தீர்ந்தெல்லோருங்- காலத்தி லுண்டருள்வெள் ளத்துமூழ்கி
க்—குளித்தருந்தி நாள்கடொறுங் கூப்பிட்டேற்றிக்- குவலையத்துக் கடுத்தவா றெடுங்கு
மட்டு—மொளித்தபிரு நதியுமகிழ்ந் தோங்கிவைய- மோங்கியபின் னுஞ்சிலநா ளாங்கிரு
ந்தார் ௱௩௰- ௩௱௫௮

இருந்தபதி தொழுதருள்பெற் றகலும்போதாங்- கிசைசுரர்பூ சாருமிதன் முன்பின்
சென்றே—வருந்தவர்வே தியர்கள்முதல் மகிழ்ந்துசூழ- வணங்கிவிடை பெற்றகல்வார் வ
ருந்திமீளத்—திருந்திசையாழ்ப் பாணருஞ்செல் குழுவினோடு- திருநாவுக் கரசுமுனஞ் செ
ல்லுமாறு—பொருந்தியபின் செழுந்தரளச் சிவிகையேறிப்- போதுவார் பாதமுடி மீது
சேர்ப்பாம் ௱௩௧- ௩௱௫௯

சேர்ந்தவரு பரிசனஞ்செப் பணிகளெல்லாஞ்- செய்துவர வையகமெல் லாஞ்செழி
க்க—வார்ந்துமருங் குளபதியு மணைந்துபோற்றி- யண்ணலுறை வாஞ்சியமும் பெருவே
ளூருஞ்—சார்ந்திறைஞ்சித் தலையாலங் காடுதாழ்ந்து- சதாசிவனூர் கரவீரத் தமர்ந்தகோ
னைச்—சேர்ந்துவந்து தளிச்சாற்றங் குடிவணங்கித்- தென்விளமற் றெழுதாரூர் தெரிசித்
தேற்றி ௱௩௨- ௩௱௬௰

ஏற்றியபின் றேவூர்கைச் சினமும்வாழத்தி- பெப்பிரான் காறுய னெல்லிக்காவும்—
போற்றிமகிழ் வொடுதேங்கூர் கொள்ளிக்காடும்- போந்திறைவாழ் கோட்டூர்வெண் டுறை
யுந்தாழ்ந்து—சாத்தியகன் றண்ணலுறை களர்பணிந்து- சகம்புகழுந் தண்டலைநீ ணெறியு
ஞ்ளிட்ட—சேத்திரமாம் பலபதியும் வணங்கிப்பாடிச்- செல்வமலி மறைக்காட்டெல் லையி
னைச்சேர்ந்தார் ௱௩௩- ௩௱௬௧

சேர்ந்தமறைக் காட்டணியு மதன்மேலன்பர்- செய்யணியுஞ் செப்புவதார் செய்தங்
குள்ளா—ரார்ந்தெதிர்கொண் டடிபணியு முடிமெய்மீதி- லணிமணிபூ வமரர்பொழி மணிபூ

வென்றுந்—தேர்ந்துரைப்ப தாரவரோ டணிமணிச்செய்- தெய்வசிகா மணிசிகரி மணிக்க
ணித்தாய்ச்—சார்ந்திழிந்து சதுமறைகள் வழிபட்டன்று- சாத்துகத வளவுமுறை போற்றி
ச்சென்றார்... ... ... ௱௩௪- ௩௱௬௨

சென்றுதிரு முன்பெய்தச் செல்லும்போது- சேவித்தங் குளர்புகலச் செய்கைகேட்
டு—நின்றரசுக் குரைத்தவரோர் பதிகம்பாட- நீங்கவுநேர் சென்றிறைஞ்சி நினைவினுண்மை
—வின்றுரைத்துப் பரவியரு ளேருக்கிடைந்து- விடைபெற்றிங் ககல்பொழுது விரிகபாட
—மின்றுமுதற் சாத்தியும்பின் வழங்குமாறிங்- கிற்றுமென்றவ் வரசுரைக்க விசைந்தாரெ
ந்தை... .. .. ௱௩௫- ௩௱௬௩

இசைந்தொருபாட் டெடுத்தவுடன் சாத்தக்கண்ட- விமையவரங் குளதவர்சா ரிருதிற
த்தோர்—தசைநரம்பென் புருகுமொரு தரத்தராகித்- தாழ்ந்தெழுந்தம் மறைமுதலெம் மு
ழவுமார்த்தெத்—திசையுளரும் போற்றியசீ ரேற்றலேசோ- திருப்பதிக நிறைத்தகன்றுங்
கோர்மடத்து—வசையுடைய வமணர்செய லொழிக்கவந்த- வள்ளலும்வே றொருமடத்தி ல
ரசும்வைகின் ௱௩௬- ௩௱௬௪

அரசெவற்கு மாகியமா மறைக்காட்டண்ண- லப்பரெதிர் சென்றெமைநீ திருவாமூரிற்
—கரசரண முதற்காண்பான் வாவென்றேகக்- கடிதில்மகிழ்ந் தணைபவர்முன் காணத்தோ
ண—வரமுனருஞ்சென் றவர்கரந்தா லயத்தைக்கண்டும்- வள்ளலைக்கா ணுதலையப் பிள்ளையா
ர்தாம்—விரவியெழுந் துணர்ந்துனிப்பின் விரைந்துசென்றவ்- விமலனடங் கண்டவற்கு வி
ளம்பினின்றார் ௱௩௭- ௩௱௬௫

நின்றவர்பா லரசுமகிழ்ந் தணையவாங்கே- நிருத்தமுங்கண் டிறைஞ்சிநிலை யறியுஞா
னக்—கன்றையுந்தாழ்ந் தெழவிவரும் வணங்கியார்ந்து- கடிதிருவா மூர்சேர்ந் துரைத்து
ப்போற்றி—யொன்றுமுணர் வொடுமறைக்கா டணைந்துநேர்சென்- றொருவனடி தொழுதே
ற்று மிருவர்பாத—மென்றலைமேற் சேர்த்தவர்கள் புகழென்னுவி- லோர்த்துமிதன் மேலினி
வே றேற்ப தென்னே ௱௩௮- ௩௱௬௬

என்னுடைய வத்தரிரு வருமிவ்வாறங்- கினிதமரு நாளுலகெவ் வுயிர்க்குந்தாயா—மன்
னைநா பதிமகளா யானிசைந்தவ்- வங்கையற்க ணம்மைமண வாளனுய்ப்பின்—மன்னவனு ய
வ்வுலகை யாண்டமர்ந்த- மதுரையிலம் மரபின்வழி யரசளிக்குந்—தென்னவனுங் கூன்செ
ழிய னமைச்சுமன்னன்- றேவியுநேர் செலவிடுத்தார் சிலர்வந்துற்றார்... ௱௩௯- ௩௱௬௭

உத்தவராங் சறிவித்துள் ளணைந்துசண்பை- யுத்தமரைத் தொழுதெதிர்நின் றுவந்
துநோக்கப்—பெற்றவுட னல்வரவு கூறிப்பின்பப்- பெருமையுடை நாடமணுற் பேதமாகி—
யெற்றவமு மத்தியென்றங் கெவருங்கூர்ந்தே- யேசனுறை விடமுமவர் பாழிநீடிக்—கொத்த
வனு மவ்வழி [illegible]ந் தமைச்சுமடப்பூங்- கொம்புநலஞ் சார்வதெலாங் கூறிநின்றார் ௱௪௰-௩௱௬௮

கூறியபோழ் தருகினிற்கு மடியர்செல்லக்- கூறுவதுங் கேட்டுவிரைந் தரன்பாலெ
ய்தி—நீறுமுன தஞ்செழுத்தும் வெல்வதென்று- நிச்சயமென் றுலமணர் செய்கைக்கெ
ல்லாம்—வேறுளதோ பொருள்மருளை யருள்வெல்லாதோ- வேதவனத் தீசவென வருளப்
பெற்றார்ந்—தேறுடையான் கழல்பணிந்து பாடிமீண்டங்- கெழுந்தருளத் துணிந்தரசுக் கெ
டுத்துரைத்தார் ௱௪௧- ௩௱௬௯

எடுத்துரைத்த வுடனமணர் தீங்குசால- வென்றிசையா திவருமிளம் பருவமென்றே
—தடுக்கவுன லுணர்ந்தடியாற் கிடரேதென்று- தாவில்புகழ்த் திருப்பதிக மியம்பியன்னு
ற்—கடுத்தவகை யுரைத்தவரை விடுத்துப்பின்னு- மண்ணலடி தொழுதேற்றி யகன்றன்றம்
மை—கொடுத்தவமு துண்டவரவ் வம்மைபாகன்- கொடுத்தமணிச் சிவிகையின்மேற் கொண்
டபோது ௱௪௨- ௩௱௭௰

கொண்டல்முத லெம்முழவு மார்த்துவாழ்த்துங்- கோலமணிக் காளமெலாங் கூறியா

ற்ப—வண்டார்முத லெவ்வுயிரு மார்த்துத்தாழ்ந்தவ்- வண்டார்பொழி மணிபணிநூ வவனிதூ ற்பத்—தொண்டார்முத லெத்தவரு மார்த்துச்சூழ்ந்தத்- தோற்றம்விழி செற்பவசு ரரைமு ன்னில—கண்டன்முத லெத்தெய்வமு மாற்பவீழ்ந்த- கந்தனிச்சம் பந்தனென்றெல் லவ்ரு மோர்த்தார்... ... ... ௱௪௩- ௩௲௭௧

ஏற்குமுறை யஞ்செழுத்து முதலா யோர்த்தார்ந்- தெழுந்தருளச் செழுந்தரளப் பந்த ராதி—யேற்குமறி வினருடனச் சிவிகைதோளி- லேற்குமடி யவர்களுமப் பணியெற்கெற்கெ ன்—றேற்குமறை யவர்முதலவ் வெழுத்தெலாமென்- றோர்த்தெவரும் வரவெவையு மருளா மென்றே—யோத்தகத்தி யான்பள்ளி குழகர்கோடி- யெய்தியுசாத் தானமும்போந் திறைஞ் சிச்சென்றார்... ... ... ௱௪௪- ௩௲௭௨

சென்றுமருங் கிறைதானம் பலவும்போற்றிச்- செல்வர்கடிக் குளமிடும்பா வனமுமே ற்றி—வென்றிவிடை யவர்பதிகள் பிறவும்வாழ்த்தி- வேகமொடின் னுடகன்று கன்னிநாட் டைக்—கண்டிறைஞ்சிக் கழிபாலை நெய்தல்முல்லை- கடந்துகுறிஞ் சிவளர்கொடுங் குன்ற மெய்தி—நின்றுரைத்துத் தொழுநிலைதோர் தருளப்பெற்றார்- நீர்மருதஞ் சூழ்மதுரை சாரு ங்காலை... ... ... ௱௪௫- ௩௲௭௩

இருநிலத்தும் பெருமைதிகழ் தஞ்சாவூரி- லியல்புடைய வேளாளர் குலத்துதித்துப்—

பொருவிலா ரடித்தொண்டு புரிந்தேயென்றும்- போற்றிமகிழ் செருத்துணையார் சிறந்த தாளென்—றிருவருளா லாரூரி லணைந்துசெல்வத்- தியாகேசன் கழறொழுதங் கமர்ந்தம் முத்தர்க்—குரிமையுட னென்றபணி செய்துகாலத்- தத்தமன்பாற் சென்றிறைஞ்சி யுறைதியு நாளில்... ... ... க- ஈகூச

இல்லறங்கூர்ந் தரசளித்தார் தென்றமிச- னிணையடிக்கே பணிபலசெய் திறைஞ்சி க்கச்சி—யெல்லையுள்வாழ் கழற்சிங்கர் தேவியோடு- மெப்பதியுந் தொழுதாரூ ரேற்றுங்கா லச்—செல்வியரற் காமலரை யெடுத்துமோரச்- செயிற்றவள்மூக் கரிந்தெவரு முவப்பத் தொண்டின்—வல்லவரா யங்கமர்ந்தேத் தலமுஞ்சென்று-வணங்கிடம் புரிகழற்கீ ழணைந்தா ரென்றே ... ... உ- கூகரு

இவை முற்றிற்று.

ருகூ- வது புடைசூழ்ந்த புலியதன்மே லரவாடவாடி பொன் னடியே மனம்வைத்த புகழ்த்துணைக்கு மடியேன்,

என்றுமுனை வழிபடுவ தன்றியோர்பா- லெய்தனென்றே வற்கடம்வந் தெய்துங்கா லு—மின்றுளது மாதியும்பின் னுணவெகீற்றும்- நீராட்டும் போதிறைமே லயர்ந்துவீழக்—கண் டுதின மருளுமொரு காசுகொண்டக்- காலமொழித் தெலவளத் தொடுபல்லாண்டுஞ்—சென் றரன்முள் சேர்ந்தபுகழ்த் துணையூர்சாதி- செருவிலிபுத் தூர்சிவவே தியரென்பாரே க- கூகூ

ருஎ- வது அடல்சூழ்ந்த வேனம்பி கோட்புலிக்கு மடியேன்,

பார்புகழு நாட்டியத்தான் குடிவேளாளர்- பாலுதித்த கோட்புலியார் சாலநாளின்—சீர் பெருகு வளவருக்கா யமர்மேற்சென்று- சிறந்தியொடு வந்தவர்மெய்த் திடுபொன்கொண்டு— நீரணிசெஞ் சடையவரா லயங்கட்கெல்லா- நிறைபமுது படிமுதலா யமைத்துப்பின்னு—மா ர்வமுட னென்றபணி செய்திறைஞ்சி-யார்ந்துமனை யறம்புரிந்தங் கமர்ந்தாரென்றே க- கூள

அமருவார் பின்னுமவ ரேவலாலே- யப்பணிமேற் கொண்டகல்போ தனுகுமட்டும்—வி மலனுற் கமுதுபடிக் காகச்சாலி- விரைமுதலா னதுமமைத்தித் தரையிலுள்ள—தமர்களாற் கவராது தடையுஞ்சாத்திச்- தானகல்முன் வானகன்றப் புவியுளோர்வெஞ்—சமர்குலா வுல குடையக் கண்டன்னெல்லைச்- சரித்துண்டச் சுத்தமிங்கு தரித்திருந்தார் ... உ- கூஅ

தரிப்பரோ வவைமுடித்திங் ககன்றுவேந்தர்- தருவதுகொண் டணையனைவிச் சரியுந் தேர்ந்துச்—சரிப்பரோ வொருவகைகூர்ந் திலஞ்சாராமுன்- சார்ந்தவற்குஞ் சார்பவற்கு மார்வத்தோடா—தரிப்பர்போ லுரைத்தனைய சுற்றத்தாருந்- தாங்கரிய மகிட்சியொடாங் க ணைந்தபின்சத்—திருப்பரோ வாளெடுத்தில் வாயிதல்நின்முற்- றியம்பியவா றெமுடித்த திய ம்பலுற்றும் ... ... ஙூ- கூகூ

உற்றபசிக் காய்த்தடைநீற் றுடையானெல்லை- யுண்டதிறற் கொல்வனென்றே யுரை த்துநின்றச்—சுத்தமொடு தாயுமிரு துணியாய்வீழச்- சரிகையினு லரிந்திடலோர் மாதி ச்சேய்பின்—பெற்றதுயச் செயுமெனிற்கூர்ந் தன்னெல்லுண்ட- பேதையர்பா லுண்டதெ னச் சேதிப்பக்கண்—டத்தர்முன்வந் திறந்தபல சுத்தத்தோடு- மணைந்தவர்நம் முலகடிநீ யடைவதென்றார்... ... ... ச- எா

இவை முற்றிற்று.

அரூா ஞரூரி லம்மானுக் காளே,
இவை கூ- வது சருக்கமுகிவு தோத்திரம்,

அடைவதென வருளியவா றடைந்திலங்கு- மடியரோடேழ் பத்திருவ ரடிமேற்கொ ண்டு—விடையவர்தன் றேழர்முன முரைத்தவாபின்- விரித்துரைத்த பேரையுமுட் சரித் துக்கொண்டாற்—தடையிலையின் றிவைமுடிவ தலதுநெஞ்சே - தகுநலஞ்சார்ந் தமர்ந்தி

ரண்டோன் டாவதற்கும்—நடையிறுதா னுல்விதிலே நாடுமாறே- நாடிநட மாடிபதங் கூடி வாழ்வாம் ௧- ௭௱௧

௰- வது பத்தராய்ப் பணிவார் சருக்கம்,

௫௮- வது பத்தராய்ப் பணிவார்களெல்லாற்கு மடியேன்,

கூடியவா றடியவர்கட் குதவிபன்பாற்- குறுகுதத்தப் பணிந்தபுணி புரிவதல்லா—லு டியதே வாலயத்து நாள்கடோறு- நாதன்முனஞ் சென்றுபல வாதைவின்றூர்ந்—தாடியபா தத்தையுனி யடியிற்றூழ்ந்துத்- தவையவமெய் பதறியுரை குழறிச்சால—நீடியபோ தத்தொடுகண் ணருவிபாய- நின்றுநிலை கண்டவர்கள் பத்தரென்றே... ... ... ௧- ௭௱௨

௫௯- வது பரமனையே பாடுவா ரடியாற்கு மடியேன்,

என்றுமுள தொண்டெனக்கூர்ந் தெங்குநாடி-யெய்த்தருகு மெய்த்தவர்பின் சித்தத்துள் ளு—மன்றினுளு மற்புதக்கூத் தாடிநாளு-மகிழ்ந்துறையுந் திறமுணர்ந்தேபுகழ்ந்தெப்போதுந் —தென்றமிழும் வடகலையும் பலவாயுள்ள- தேசிகமும் பேசுமிய லிசையானேசத்—தொன்றி யமெய் யுணர்விலெழு மொருமையோடு- மொப்பரிய பரமனையே பாடுவாரே ... ௧- ௭௱௩

௬௰- வது சித்தத்தைச் சிவன்பாலே வைத்தாற்கு மடியேன்,

பாடுவது மாடுவதும் பலவாயுன்னிப்- பணிந்துவழி படுவதுவு மடங்கியொன்றை—நாடு வதென் றெத்திசையு நாடியெய்த்தன்- ஞட்டமுத லோட்டமுமத் தமர்ந்தபின்புள்—ளாடுவ தொத் தம்பலத்தி லாடுகின்ற- வாரணகா ரணப்பொருளை யறிந்தடிக்கீழ்க்—கூடுபவர் சித்தத்தைச் சிவன்பால்வைத்துக்- குலவுவரிவ் வுலகிலெனக் கூறுவாரே ௧- ௭௱௪

௬௧- வது திருவாரூர்ப் பிறந்தார்களெல்லாற்கு மடியேன்,

கூறியமெய்த் தேவுவர்தெம் மூலமென்றே- கூறுதிரு வாரூரிற் பிறந்தாரேறி—லேறி யவத் தேவுருப்பெற் றருகுசூழ்ந்தங்- கென்றுமுறைந் தெளிதிலடி யெய்தநாளுங்—கோ தியவா றவதரித்தோ ராதலாலக்- கோறலுளோர் கவர்களடித் தொண்டின்மேலாய்—வேறியற்றுந் தவமுளதோ விலையென்றுலவ்- வெல்லையுளார் பெருமையையார் சொல்ல வல்லார் ௧- ௭௱௫

௬௨- வது முப்பொழுதுந் திருமேனி தீண்டுவாற் கடியேன்,

வல்லமறை சொல்லியவா றுணர்ந்துநாளும்- வள்ளல்திரு மேனியைமுப் பொழுதுந்தீண்டி—நல்லதிரு மஞ்சனமே முதற்பணித்து- நால்வேத முரைத்தடியிற் றொழுதகன்றூர்ந்—தெல்லவரும் போற்றவினி தமர்ந்திங்கங்கு- மேகநா யகனருகவ் வுருவத்தோடு—பல்லமரர் வாழ்த்தமுறை பணிந்துவாழ்வார்- பரமவே தியர்களெனப் பகருவாரே ... ௧- ௭௱௬

௬௩- வது முழுநீறுபூசிய முனிவற்கு மடியேன்,

பகருமரு மறைவிதித்த படியமைத்த- பரமர்திரு நீற்றையெடுத் தவரையுன்னிச்—சிகர முத லெங்குமுழு நீறுபூசுஞ்- சிவயோக முனிவர்களுக் கெவர்தானேரே—நகரமுத லக்கர மே நகரமாக- நாடியதே வாதிகட்கும் வீடதாகு—நிகரிலிறை பதநினைந்தன் னினவுமற்று- நின்றவிடத் தப்பதஞ்சார்ந் தென்றும்வாழ்வார்... ... ... ௧- ௭௱௭

௬௪- வது அப்பாலு மடிசார்ந்த வடியாற்கு மடியேன்,

வாழ்வுறுமுக் கோபுவிக்கப் புறத்தும்நால்வர்- வகுத்துரைப்போ ரன்றியன்று முன்பினுங்கு—மாழ்பவத்தை யொழித்தவரவ் வழிச்செல்வோரே- யப்பாலு மடிசார்ந்தா ரென்றூர் ஞாலம்—வாழ்வுறவந் தவதரித்த மூவராதி- வாழ்த்துவதெல் லாமுணர்ந்து மவர்கன்கேற்றி—யூழ்வினையை மாத்தியுய்வ தரிதாஞலவ்- வுத்தமர்சீ ராரறிந்திங் குரைக்கவல்லார் ௧- ௭௱௮

ஆரூர னாரூரி லம்மானுக் காளே,
இவை ௰- வது சருக்கமுகிவு தோத்திரம்,

உரைப்பதுவே றென்மனமே யுலகினூரு- முய்பவரொன் பதகுமுவன் றியுமுன்னித்தத்—தரைக்கண்வழி பட்டடைந்தோ ரஜபதென்றுந்- தரணியுய வவதரித்தோர் மூவராக—வரைக்கெழுபத் திருவரென வகுத்தன்னார்சீர்- வாழ்த்தினரோ டவர்களையு முளத்திற்சேற்தார்ந்—தரைக்கண்மும் பிரியாதிக் குறைமுடித்தன்- றறைந்ததுதான் குறியுனியுண் ணிறைந்துவாழ்வாம்... ... ... க- ௲க

௰க- வது மன்னியசீர்ச் சருக்கம்,
௬௫- வது மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப்பூசல்,

உண்ணிறையு மார்வமுடன் முயன்றநாளு- முளத்தாற்கோ ராலயஞ்செய் துவந்தவுண்மை—மண்ணிறைவா னிறையரசற் கருளவந்தம்- மாதவரைப் பணிந்துணர்ந்தார்ந்தகன்றபின்பு—கண்ணிறைந்த கடவுளையவ் விலத்திருத்திக்- காலமெலாம் போற்றியடியடைந்தசிறத்தி—விண்ணிறைந்து மேலுமவர் சாதிபேரூர்- விளங்குமறைப் பூசனின்ற வூர்தானென்றே ... ... க- ௲௰

௬௬- வது வரிவளையா மானிக்கும்,

ஊர்பவமே தொழித்துடையான் பதஞ்சேர்காலத்- துணர்விஞெடு வளவர்குலத் துதித்துவேப்பந்—தார்புனையு மரசைமணம் புணர்ந்தார்ந்தென்றுந்- தவமுயல்மங் கையற்கரசி தருவினீழற்—சேரணங்கா திகள்புகழச் செழிக்குநாளச்- செழியன்முத லமண்வழிச்செல் செறிவுதீரச்—சீர்வளரப் பாண்டிமா தேவியார்தாஞ்- சிந்தைமிகத் தெளிந்தியற்றுஞ் செயலுரைப்பாம்... ... ... க- ௲௰க

செயலுடைய புகலியர்செஞ் சரணடைந்தே- செழியனுமன் ஞடுமுத்த செறிவுதீர்த்தக்—கயல்விழிகோ னீறரசன் முதலாய்ச்சேற்தக்- கவுணியர்பா டலிற்சிறப்பித் தேற்றப்பெற்றேழ்—புயலனகை நெடுமாறன் றனக்குநாளும்- புகழ்பெருக்குந் தவத்துணையாய் வளைக்கைமானி—யியல்பொடமர்ந் திறிலுமம் மாறனேடு- விறைவர்திரு வடிநிழற்கி ழிருக்கப்பெற்றுள்... ... ... உ- ௲௰உ

௬௭- வது நேசருக்கு மடியேன்,

பெற்றதவப் பயனுடைசோ வணமேநெய்து- பேரறிவிற் சார்பவர்கட் குதவிநாளு—முற்றவற்காம் பணிபுரிந்தஞ் செழுத்தையோதி- யுண்மையுட னண்ணலையும் பணிந்தமர்ந்தங்—கத்தர்திரு வடியிணைக்கி ழெய்திவாழு- மடியவர்க ளடிவணேந்தா ரென்றுலென்றுங்—கத்தவர்காம் பீலியிற்சா லியநேசன்ருள்- கதித்துணையாய் மதித்தவர்சீர் துதித்துய்வாரே ... ... க- ௲௰௩

௬௮- வது தென்னவனு யுலகாண்ட செங்கணாற்கடியேன்,

துதிப்பாரோர் வனத்திலங்கு மரற்கோர்வேழந்- துதிக்கையா லாம்பணிசெய் துளமகிழ்ந்தப்—பதிக்கரனைக் காவெனப்பேர் விளங்குமாறு- பணிந்துவரு நாளிலொரு சிலம்பினூல—முதித்தார்வ முடனவற்கே வாய்நூற்கொண்டு- வுண்மையுடன் மேற்கட்டி யெனப்பணித்தல்—மதிக்காம லனுசிதமென் றழிப்பக்கண்டம்- மதகரிமேற் சினத்துடன்செல் வதையுரைப்பாம் ... ... க- ௲௰௪

உரைப்பதுவோ வொருசிலம்பி துணிந்துசெய்த- வுண்மையையென் ஞர்வந்தா னுடனெழுந்தோர்—வரைக்கனைய கரிதுதிக்கை வாயிற்புக்கு- வலுமையுடன் கடிப்பவொரு தலறிவீழ்ந்து—தலைக்கண்மிகப் புரண்டுதளர் வெய்திக்கையைத்- தரைமிசையே யடிக்கவு

மச் சிலம்பியாவி—யரைக்கணத்தில் நீங்கிட்கண் டரனுனைக்கு- மருளியவைக் காசளி
க்க வருள்புரிந்தான்... ... ... ௨- ௭௱௰௫

அருளியவா றரசுரிமைப் புதல்வற்காய்ப்பொன்- னம்பலஞ்சென் றடிபணிந்து வரு
ந்திச்சாலப்—பொருள்கொடுசெய் யறங்களெலாம் பொருந்தமர்தப்- பொன்னிவள நாடளி
க்கு மன்னன்பாச—விருளகற்று மாறுகித்து வளர்ந்தம்மன்ன- னிருமைகட்குந் தானுகு மொ
ருமைபூண்டு—தெருளுறுசிந் தையில்முனங்கூர் செய்கையெல்லாந்- தேர்ந்தரற்காம் பணிபுரி
யச் சார்ந்தாரென்றே. ௩- ௭௱௰௬

சார்ந்திடுகோச் செங்கணா னென்னும்வேந்தன்- சந்ததமுஞ் சிந்தையவைக் காக்கிமுன்
ன—மார்ந்ததிரு வானைக்கா வதனிலெய்தி-யாலயங்க ளனையவகை யமைத்ததல்லா—லோர்
ந்தமைச்ச ராதிகளை யனுப்பியன்னாட்- டொப்பரிய பதிபலவும் பணிசெய்வித்துத்—தேர்ந்த
பிடே காதிகளு மமைத்துநாளுந்- தெரிசித்தார் கோயிலொருறுஞ் சென்றுநின்றே ௪- ௭௱௰௭

நின்றுபல பதிதொழுது தில்லைசார்ந்து- திருத்தமிடு மொருத்தன்முனம் விருப்பத்தோ
டுஞ்—சென்றிறைஞ்சி யங்கமர்ந்து நாள்கடோறுஞ்- சேவித்து மானவகை பணித்தும்
போற்றி—யென்றுமது வேதெரழிலா யெங்குஞ்சென்றே- யெம்பிரான் பணிசெய்தரு ளளித்
தார்ந்திறில்—மன்றினடம் புரிகழறகி ழெய்திவாழு- மாதவர்க ணடுவணைந்து வாழ்ந்தாரெ
ன்றே ௫- ௭௱௰௮

இவை முற்றிற்று.

௬௯- வது திருநீலகண்டத்துப் பாணனாற் கடியேன்,

வாழ்வுறுகா லெருக்கத்தம் புலியூர்தன்னில்- வந்துதித்த நீலகண்டப் பாணனார்தாந்
—தாழ்வணுகா தருங்கலைகள் பலவுமாய்ந்து- தவத்துணையா மனைவியொடில் லறமேகூர்ந்
திங்—காழ்பவத்தை மாத்துவதெவ் வகையென்றோர்ந்துற்- றரன்சரணி றஞ்செழுத்தென்
றவையேசார்ந்து—யாழ்வழிநின் றவர்புகழோ துவதேதேர்ந்து- யானெனதென் பதுமுத
ற்பத் தெவையுந் தீர்ந்தார் ௧- ௭௱௰௯

தீர்ந்தவன்பற் கவரினுமன் பாய்நின்றருளுந்- திறமுணர்ந்து வழிபடநற் றவமீதென்று
—சார்ந்திறைவாழ் பதிபலவும் பணிந்துதூரச்- சன்னதிமுன் னின்றிசைகொண் டிரங்கி
ப்போற்றி—யோர்ந்துதிர்ந்த பிட்டிடுவோட் காளாய்வேலை- யொப்பியவா றியற்றுதப் புற
த்தோர்நீழற்—சேர்ந்தடிபட் டடியவர்மெய்ப் புகழ்விளக்குஞ்- செல்வனுறை மதுரைதொழச்
சென்றணைந்தார் ௨- ௭௱௨௰

சென்றுதிரு வெல்லைமுதல் வணங்கிப்போந்தச்- செல்வர்திருக் கோபுரத்து முன்பி
றைஞ்சி—நின்றனைய வகைதொழுது பாடக்கேட்ட- நிமலரிர வடியவர்க்குப் புகலுமாறு
—பின்னையவர் வந்தழைப்பக் கோயில்புக்குப்- பிரானெதிர்தாழ்ந் துவந்திசைகொண் டே
ற்றவானில்—வின்றவகை தொண்டரிடும் பலகைமீது- வீற்றிருநது வாழ்த்தினர்நாற் றிசை
யும்போற்ற ௩- ௭௨௧

போற்றியருள் பெற்றகன்றங் கமர்ந்தவ்வாறே- போந்துசில நாட்பரவி மீண்டவ்வெல்
லை—தோற்றுபவ ரினிற்றோற்றுத் திருவாரூரே- தொழநினைந்தப் புறத்துளதா னங்களல்
லா—லாற்றிலரான் வாழ்பதிகள் பலவும்வாழ்த்தி- யாரூர்வந் தணைந்திறைவ னருளுமாறு
—வேற்றொருவா யில்வழிசென் றிசைகொண்டேற்றி- வேறறநின் றுணர்ந்தனைய வகை
பணிந்தார் ௪- ௭௨௨

பணிந்தருள்பெற் றகன்றுசில நாளமர்ந்தப்- பரம்பரனைப் பரவியபின் பாம்போடிந்
து—வணிந்தவர்வாழ் புறபதிகள் வணங்கிச்செல்கா- லாண்டகையா ரவதரித்து விளங்குஞ்
சீர்த்தி—யுணர்ந்தவர்க ளுரைத்தவுட னவர்பாலெய்து- முண்மையொடு முளம்பரிந்த மனைவி

யோடு—மணைந்ததுவு மிவர்திறமும் புகலக்கேட்டார்ந்- தாண்டகையே யெதிர்கொளக்கண் டடியடைந்தார் ௫- ௭௨௩

அடியடைந்த பின்சரிதை விரித்துச்சண்பை- யார்கதையி லுரைத்திடுமா றன்றுதொட்டு ப்—படிமுதலா மெவ்வுலகும் புகழ்ந்துபோற்றப்- பரமர்திரு மகனார்செஞ் சரணநீழற்—கு டியமர்ந்தோ தியபதிக மனைத்துமியாழிற்- கூறியிறை யுளமகிழச் செவியிற்சேற்று—முடிவி லவர் திருமணச்சேர் தியினுட்புக்கு- முதல்வனடிக் கீழ்மனைவி யொடுமணைந்தார் ௬- ௭௨௪

இவை முற்றிற்று.

௭௰- வது அன்னவனு மரனடியே யடைந்திட்ட சடையன்,

ஆர்ந்துரைத்தெவ் வுலகுமந்த நெறிநின்றென்று- மாம்பணிசெய் துய்வதற்கா யவனிமீ து—சார்ந்துரைத்த தொகைவழிபின் சாறுசாலச்- சாத்தலரி தன்றறிவில் சழக்கனேனுங் கூர்ந்துரைக்கு மாறருளிச் சிந்தையுள்ளுங்- குடிகொண்ட சுந்தரனைப் பயந்தாரென்று ற—தேர்ந்துரைக்குந் தகைமையதோ சடையனார்சீர்- தேவர்கட்கு மரிதெவற்கும் பெரிதென் பாரே... ... ... ௧- ௭௨௫

௭௧- வது இசைஞானி,

பெருமைநிலத் தறிவறிந்த மகப்பேறெனும்- பேறறிவோர் தமைப்பெறல்மே லெனவி ன்மேலா—மிருநிலத்தும் பெருமைதிகழ் சடையனருக்- கிருமைகட்கு முருமையுள மனைவி யாய்த்தே—வருண்மறையை நாளுமுரைத் தவனியுய்ய- வருந்தமிழாற் றுதித்தறிவில் சிறி யேனுள்ளு—மருவியமர் சுந்தரனைப் பெற்றிலங்கும்- மாதிசைஞா னியர்பெருமை யோது வாரார்... ... ... ௧- ௭௨௬

௰௧- வது சருக்க முடிவு தோத்திரம்.

ஓதியவா றடியவரு மவர்கள்சீரன்- றோதினரு முளம்பிரியா திருத்திவேத—மோதியவா றருந்தமிழா லோதிவாழு- மொப்பரிய மூவர்களி லிருவர்சீர்நீ—யோதியவா றினமொருவர் புகழையின்றே- யோதுவதற் கொருமையுடன் றுடங்கிநெஞ்சே—யோதியவா வெவையுமொ ழித் திறையடிக்கே- யொருப்படுமுன் னோதியவா றுணர்ந்துநின்றே... ... ௧- ௭௨௭

இவைமனதுடன்வினவி யுவந்துத்தரங்கூறல்,

உணர்ந்தார்கட் குணர்வரியோ னென்றவுண்மை- யுணர்ந்திலையே நாளுமதை யுரை த்துநெஞ்சே—கணந்தானு முனைப்பிரியா தகத்திருக்குங்- கடவுளைநீ யெவ்விதமாய்க் கா ண்பாயந்தோ—குணந்தானே தவற்குருவ நாமமேது- குவலையத்தி லவரையன்றிக் குறிதா னேது—மணந்தானே தலற்கதிற்தேன் மதுரமேது- மயல்திரவ் விடத்துணர்ந்து மகிழ்ந்து வாழ்வாம் ௨- ௭௨௮

மகம்பலசெய் திந்திரனு யயனுய்மாலாய்- மகிழ்வாரு மற்றுமுயர் வானுளோருஞ்—சகம் பலவா கியவசர சரமுமந்தச்- சச்சிதா னந்தவடி வாகக்கண்டோர்ந்—தகம்பலவும் விடுத்தரு ட்கிழ—ங்கிநோக்கி- னனைத்துமிலை யதுதோன்று மகமேற்கொண்டே—யுகம்பலவு முலவியுரு ப் பலவுமுன்னி- யுழல்வதொழித் தோருணர்வா யுணர்ந்துய்யின்றே... ... ௨- ௭௨௯

இன்றுகூர்ந் துய்யமினஞ் சுளுவென்னென்றோர்ந்- திரக்குமன மேயடியர் சரிதியம் பி—னின்றுநீ யுலவுவதே நீதஞ்சார்பாம்- நிலையுளத்து மம்பலத்து நிலவுகோலங்—கண்டுதா னியுமதைக் கருதுநின்றுய்- கருதுதுவே கடவுளடி யடைந்துவாழ்வான்—பண்டுநாட் டொ கையுரைத்தின் றுளத்துமேவும்- பரன்றோழன் புகழைபுணர்ந் துரைசெய்வாயே ௩- ௭௩௰

இவை முற்றிற்று.

மூன்றுங்காண்டமும் முற்றிற்று.

நான்காவது காண்டம்,

௰௨- 'வது திருவெள்ளானைச் சருக்கம்,

௭௨- வது காதலன் றிருநாவலூர்க்கோன்,

உரைக்கருள்பொ னத்தலத்தோ ராத்திலிட்டா- ரூற்குளத்தில் வந்திடக்கொள் ளாதப்பொன்னை—யுரைத்தவையும் வாசியுங்கொண் டெனையாட்கொண்ட- வுத்தமர்சி ராரறிந்திங் குரைப்பதன்று—ருரைத்ததொகை கொடுதுதிப்போர் துதிபெற்றோர்தா- ளுளத்திருத்தி யுளத்தடங்கா வார்வத்தாலின்—றுரைப்பதவ ருளத்தமர்ந்தார்ந் துணற்துமாறன்- றுரைக்கவல தலவலரு முளங்கொண்டாள்வாம்... ... ... க- ௭௩க

ஆளுமிறை வாழ்கயிலை யளவைநாயே- னறைகுவதோ வவ்வரையி னடியிலோர்பா—ளுளுமுறைந் தரியதவ மாதிசெய்யென்- றுதருப மன்னியர தீதந்தானென்—கேளுநிறை மாமலராள் கேழ்வன்போதங்- கெடமுடிமே லடியணிந்த தன்றியீசன்—ருளுமறை யீழுமுளங் கொண்டவ்வத்தர்- தந்தவ்ருட் பாற்கடலுட் கொண்டுவந்தார் ... ... உ- ௭௩௨

ஆர்ந்தளவி லந்தணர்கள் தாழ்ந்துசூழ- வண்ணல்திருத் தொண்டின்முயன் றமருநாள்முன்—றோர்ந்திடுமோர் பேரொளியை நோக்கியந்தத்- தெய்வமறை யோர்களிதென் செப்புமென்ன—வோர்ந்துணர்ந்த வுடன்விரைந்து தொழுதெழுந்தே- யொப்பரிய தென்புவிநின் றருளாலிங்கு—சார்ந்திடுவன் றொண்டரெனக் கேட்டிறைஞ்சிச்- சாலமகிழ்ந் தவர்சரிதை சாத்துமென்றார்... ... ... ௩- ௭௩௩

என்றவுரை கேட்டவரன் றுரைத்தவாறிங்- கெந்தையர்க ளுரைத்திடுமுன் னூலாராய்ந்தே—யின்றவையின் சுருக்கமென வியம்புகின்ற- தென்னெனிற்றென் னுவணகர் மன்னவன்முன்—பண்டிறைவ னருகமர்ந்து காலந்தோறும்- பணிவதல தணியுமலர் மாலைநீறு—கொண்டணையும் பணிபுரிவார் தங்கட்கெல்லாங்- கோத்தொழிலோ டப்பணியு மேர்த்ததல்லால் ௪- ௭௩௪

ஏற்கனவே யிறைவடிவிற் பிற்திபலித்தார்ந்- தெழுந்திறைஞ்சிச் சுந்தரனென் றழைக்கப்பெற்றுப்—பாற்கடனின் றரியயனிந் திராதிசாலப்- பயந்தோடத் தொடர்ந்துவரு விடங்கரஞ்சேர்த்—தாற்தளிப்ப வமுதாக்கு மண்ணன்றனே- யாலால சுந்தரனென் றருளுஞ்சிறத்தீ—பாற்தருகு சூழ்வார்வான் வாழ்வாரெல்லாம்- பணிந்திடவப் பணிபுரிந்தங் கமருங்காலை... ... ... ௫- ௭௩௫

காலையினந் தனவனத்துச் செல்லுமுன்னங்- கமலினியோ டனிந்திதையென் றிருவர்சென்றச்—சோலையிலம் பிகைக்குமலர் கொய்வாளெந்தை- சோதியுடைத் திருவுருவைக் கண்டுசால—லீலையின் புற்றருகு வந்துதாழ்ந்த- விகிதமுணர்ந் தவ்வழியிற் சிந்தைசெல்ல—மாலைபுனைந் திவரிறைவன் முன்சென்றாம்- மாதருமிக் காதலொடங் கெய்திநின்றார்... ... ... ௬- ௭௩௬

நின்றகுறிப் பெவையுமறி யாரோகித்த- னினைத்தகுறிக் கடுத்தவகை விளைந்ததன்றே—வன்றவர்கள் செயும்பணிசெய் தகல்காலண்ண- லாலால சுந்தரனை யார்ந்துநோக்கி—யின்றரிவை மேன்மனம்வைத் தனவானியவ்- விருவருடன் றென்புவியி னாராய்த்தோன்றி—மன்றல்வினை செய்தவரோ டின்பமார்ந்து- மயல்தீரென் றருளியல்பின் செயல்தேர்வாரார்... ... ... ௭- ௭௩௭

செய்யுநலந் தீங்கறியாச் சிறியனேனின்- சேவடியைப் பிரிந்துலகிற் செனித்துமின்னார்—மையலிலும் வீழ்ந்திடினுன் னருளேக்கன்றம்- மயல்விடுமோ வவைவிடுக்குஞ் செயல்வேறுண்டோ—வையவுன தடிமையைநீ யேதடுத்தங்- காண்டருள வேணுமென வலந்

துபோற்றத்—தையலிடப் பாகனதற் கிசைந்தபின்னுந்- தாழ்ந்தகன்றத் தரணிபுகும் வாழ் வுரைப்பாம் ௮-௭௩௮

உரைப்பதுவோ தென்புவியின் பெருமையாங்கே- யுண்மைநெறி யோங்குமுனைப் பா டிநாட்டின்—விரைக்கமலத் தனம்விளங்கும் வயல்கள்சூழ்ந்து- விண்ணவரென் னுளுமுல வொழியாவேத—முரைப்பதொழி யாமறையோர் மாடந்தோறு- முறைதிருவின் பெருவழ க்கின் முழக்கம்போலத்—திரைக்கரங்க ளொலிப்பொழியாக் கடலுடுத்த- திருநாவ லூர்செ ய்தவ வொருமைதானென் ௯-௭௩௯

ஒருமைமனத் தவருறைப் பதியிறுளு- மொருவர்திரு மேனியைமுப் பொழுதுந்தீண் டி—யருமையுடன் வழிபடுவே தியர்பாற்குன்றி- யரியதவம் புரிந்திலங்கு சடையனுருக்—கிரு மைகட்குந் துணையாகு மனைவியாய- யிசைஞானி பாலமர்ந்திங் குதித்தாராங்கப்—பெருமை திக ழாலால சுந்தரற்குப்- பேரிவர்க ணம்பியா ரூரனென்று ௰-௭௪௰

ஊரமர ராதிகள்சூழ்ந் துளமகிழ்ந்த- வுண்மையையென் சொல்வதவ ரெங்குஞ்செ ன்று—லூர்வதொழிந் தேயமர்ந்தா ரீசனுங்கே- யுரைப்பதுகேட் டுணர்ந்தவர்க ளாதலிங் கு—லூர்பவர்க ளெண்செயவா ரெனினுமந்த- வுத்தமரைப் பிள்ளையெனப் பெறப்பெற்று ரன்—றூர்விடைமேற் சார்பவற்குஞ் சார்வார்தாளுள்- ளூறநெறிசார் பவற்குநல வறங்கள் செய்தார் ௰௧-௭௪௧

செய்ததவப் பயனெனத்தாய் தந்தைசூழ்வோர்- சேயெனுமென் றுய்க்கினிய வகை யாளுளு—மெய்திகழு முறைபயிற்றிச் செலவளர்ந்து- மேதினியி னகழ்ந்தூர்ந்து பாதமா தி—மைபொருவுங் குஞ்சியள வணிபூணேற்று- மழலைமொழி புகன்றுதளர் நடைகள்கொ ண்டு—கைவருடச் சப்பாணி கொட்டியோடிக்- களித்துமறு கிடைச்சிறுதே ருருட்டுங் காலை... ... ... ௰௨-௭௪௨

உருள்பெருந்தே ராகிபுடை சூழவாழ்ந்தவ்- வுலகளிக்கு நரசிங்க முனையரீச—னரு ணிறைந்தூர் சேயுருவை நோக்கிமேன்மே- லார்ந்தவரைப் பயந்தவர்க ளிசைவாலுள்ள த்—திருள்துரந்தாங் குறுமுறைகூர்ந் துலகுக்கேற்ப- விளவரசைப் பொருமகமைக் கொ ண்டுபோந்த—தெருளுணர்ந்தா ராரவற்கோர் மகவாய்த்தோன்றுந்- தெள்ளுமறைக் குலத் தமர்ந்தே வளர்ந்தார்வள்ளல் ௰௩-௭௪௩

வளர்ந்தருநூ லணிந்துமறை முதலுணர்ந்து- வதுவைபுரி பருவமுற வள்ளறுதை—கி ளர்ந்திறைபுத் தூர்ச்சிவவே தியராஞ்சீலக்- கிரியைமிகு சடங்கவிபெண் ணரியதாமென்—ற ளந்தணைந்து பேசிவரு வார்சடம்மை- யனுப்பியவ ரிசைந்ததறிந் துடனன்றுளி—லுளந்திக ழன் ஞர்முளைப்பா லிகைவிதைத்தவ் வுத்தமற்கு மணஞ்செயநா ளோலைவிட்டார் ௰௪-௭௪௪

ஓலைகொடு சிலமிகு மறையோராதி- யோவியமங் கையர்களொடு புதூர்செல்லுங்—கா லையிலார்ந் தவர்களெதிர் கொண்டவ்வோலை- கைக்கொண்டன் னுள்முதலங் கவ்வினைக்காம் —வேலையினிற் செலப்பவவே லையைக்கடக்கும்- வேளாளர் களுமரசுங் கூர்ந்திங்கெய்திச்— சோலைபுடை சூழ்ந்ததிரு நாவலூரே- சொற்கமல மிக்கதெனத் தக்கசெய்தார் ௰௫-௭௪௫

தக்கபணி செய்துயத்தான் முனமேகூர்ந்து- தகுமுறைகொண் டாரரசத் தரணிமேவு— மக்களில்வே ளாளருக்கென் னெனிற்பினிந்த- மானிலமா திகளிலுரு ஞானியாதல்—மிக்கதவ ம் வேறிலையென் றுணர்ந்துளத்தில்- மிகும்பரிவா லினம்புரியும் வகையென்சொல்வே—னற் கனக முதனுவ நகர்சேர்த்தந்த- நலங்களுக்கே யளித்திடப்பெற் றிலங்கினாரே ௰௬-௭௪௬

ஆர்ந்துமண வினைதுடங்கு நாள்முதற்செல்- லாவனநா டோறுமந்த நூல்வலோர்தாந் —தேர்ந்துரைத்த முறைநிரப்புஞ் செயல்வழாது- தெளிவுறச்செய் தவர்களொடு சுற்றத்தா ருஞ்—சார்ந்தவரு மினிதருந்திக் கந்தமாதி- சார்ந்துமணம் புரிவதற்கு முதனாட்டானே— யோர்ந்துமுழ வார்பவிதிப் படிக்குநல்ல- வோரையிலா ரூரருக்குக் காப்பணிந்தார் ௰௭-௭௪௭

காப்பணிந்த வுடன்கணிகை யாளர்சொல்லுங்- கருமமெலா முடித்தளவி றனம்பூ
ணாடை—மூப்புடைய தாதையெனுஞ் சடையனார்தா- முறையெவற்கு மளித்தவ்வா றினி
தருந்திப்—பூப்புனைமண் டபத்தினினம் பியையிருத்திப்- புடைமறையே சாத்தவிடை வா
ழ்த்திவன்றி—ராப்பகலாய் முயனலமும் பாற்பதற்கோ- ரவியுமொரு மதியுமெனக் கடி
துதித்தான்... ... ... ௰௮- ௭௪௮

கடிதுதைய வினைமுடித்துக் கழுநீராடிக்- கணத்தணிவ தணிந்துமண மண்டபத்
துப்—படியணைந்தா ரன்றுபர னருளாலிந்தப்- படியணைந்த வாரூரா ரதற்குமுன்னோர்—
கொடியினிலக் கணிகையர்க ளாங்கணைந்து- நோர்ப்பவையெல் லாநிரப்பி நோக்கிநின்றே
—முடியினிலட் சதைநிறைத்தா சிர்வதிக்க- முறைவிடைகொண் டகன்றிறைமா ளிகையை
ச்சேர்ந்தார்... ... ... ௰௯- ௭௪௯

சேர்ந்திறையைத் தொழுதருள்பெற் றகலும்போது- செல்வமறை யோர்மடவா ரா
திசால—வார்ந்துநல வாகனயா னத்தின்மீதி- லணைபவர்சென் றணையவுட னணைவதற்
கே—யோர்ந்துவரு வார்களெலாம் வந்துசூழ- வோங்குமுழ வாதிபலர் தாங்கிநீடத்—
தேர்ந்துநம்பி யணிசெய்பரி யேறிச்சென்றார்- தேவர்கள்வா னிடைமுனஞ்சீர் கூறிச்செ
ன்றார் ௨௰- ௭௫௰

கூறியவோ ரையினில்மணம் புரிவான்புத்தூர்- குறுகுவதற் காய்ப்பெருகு மார்வத்
தோடு—மேறியமா விரைந்துசெலு மாறுகைத்தே- யெம்பிரா னாரூரர் செலின்மகிழ்ந்தா
ள்—ளூறியவன் பொடுவருமா மறையோராதி- யுத்தவர்கள் கதத[illegible]தலா முரைப்பத்தத்
தங்—கோறியவா நங்கனையார் வாழ்த்தக்கொத்தக்- கொடைமுதலா யெடுப்பமுழ வொலி
ப்பச்சென்றார்... .. .. ௨௧- ௭௫௧

செல்பொழுது மல்கியபல் முழவினாற்புஞ்- செல்லறவோர் சொல்லுமறை யாற்பும
ற்றப்—பல்வகைய மாந்தர்பல பரவுமாற்பும்- பரிமுதலா யணிந்திலங்கு மணியினாற்பு—
நல்குலமங் கையாணிபூ ணாற்புமன்னார்- நலம்பெறவாழ்த் தாற்பும்வலங் கொண்டுபோ
ங்கா—லெல்லையுளோர் கண்டுமகிழ்ந் தேற்றுமாற்பு- மேழ்கடல்சேர்ந் தாற்பதிலு மேலெ
ன்பாரே ௨௨- ௭௫௨

மேற்றெரிந்து செல்லமர ராக்குகூட- மேவுமறை யோர்கள்முத லெவருநம்பி—பா
ற்பரிந்து செல்லுநல பரிவையெல்லாம்- பகருவதோ யிவரவர்கள் பரிவுக்கேற்ப—வாற்
தருணேக் களிப்பதையு மொளிப்பூணகத்- தழகையுந்தா னகர்கடந்து வழியேசென்றவ்
—வூற்கருகு செலக்கேட்டங் கேனையோர்க- ளுடனெதிர்கொண் டித்திறங்கண் டுளமகி
ழ்ந்தார் ௨௩- ௭௫௩

உளமகிழ்ந்தங் கவர்புகழு வதையென்சொல்வ- துத்தமர்பின் புத்தவர்க ளுடன்க
லந்து—வளமலியம் மூதூர்மேற் செலுங்காலந்த- வையகமும் வானகமுங் களித்தொன்
றாகிக்—கிளர்முழவி னொலியின்மிகக் கிளர்ந்துபொங்கிக்- கிளருநல பெருமுழக்க மளவி
லாதா—லளந்தவையை யறைகுவதா ரணிபுத்தூரே- யன்றுமுதல் மணம்வந்த புத்தூரெ
ன்றார் ௨௪- ௭௫௪

என்றினைய பலவகையா நலஞ்சிறக்க- வெம்பிரா னாரூர ரியாவரோடுஞ்—சென்றுபரி யி
ழிந்துமணப் பந்தலூடு- சென்றவையை முயல்வதற்கு முன்னமீச—னன்றுரைத்த வகைதடு
த்தாட் கொள்ளுமாறோ- ரந்தணனாய்த் தந்தையர்தந் தந்தைகையிற்—கொண்டதென வாவ
ணமொன் றதுபோர்லொன்று- கொண்டணைந்த நன்றுரைத்தார்ந் தின்றுயவேனே ௨௫- ௭௫௫

இன்றுமணம் வந்தபுத்தூ ரென்றுமேலு- மிங்குமிலங் கியபதிக்கே யிளம்புனிற்றுக்—க
ன்றைநினைந் தணைந்திடுமா வென்னவீசன்- கயிலையினின் றணைந்துகுயி லனமேனந்தான்—ப
ண்டுமுதற் றேடியறி யாதபாதம்- படிதோய முதிர்மறையோன் வடிவாய்க்கையிற்—றண்டுகு
டை தோளினிலுத் தரியமுன்னூல்- தாங்கியிடை யுடைநடைதள் ளாடவந்தார் ௨௬- ௭௫௬

வந்தமணப் பந்தலிடை யெவருங்காண- வள்ளலைப்பாற் தள்ளொருவா றுன்னிநின்றே—முந்தியொரு வாறுரைத்த மொழியாதென்னின்- முன்னிசைவா னின்னிடையோர் பெருவழக்காய்—வந்தனமியா மவைமுடித்த பின்புதானீ- வதுவைசெய வேண்டுமெனப் புது மையீதென்—றந்தவழக் கொழித்தலதிவ் வதுவைசெய்யே- னதைச்சொலுமென் றாரூரர் பதைத்துரைத்தார் ௨௭- ௭௫௭

பதைத்துரைத்த வுடனவரங் குளாரைப்பார்த்துப்- பண்டுமுத லடிமையிவ னென்றபோதிக்—கதைக்கெனசெய் வோமெனப்பல் லோர்களித்தார்- நகையிலுமீ தில்லையெனச் சிலர்வெகுண்டா—ரிதைச்செவியிற் கேட்டவுட னகைத்துநம்பி- யின்னொருக்காற் சொல்லெனவுன் றந்தைதந்தை—முதற்பணித்தற் காவணமீ திருக்கீயென்- முன்னகைத்த தென்னடவென் றதட்டிச்சொன்னார் ௨௮- ௭௫௮

சொன்னவுட னாரூரர் நகைப்புநீங்கிச்- சொல்லுவா ரந்தணர்க்கந் தணராளவ—தின்னிலத்தி லில்லையுள தாகநீரின்- றியம்புகிறீர் பித்தனே வெனவுமைய—ரென்னயிகழினுநானே னறிந்துமேனீ- தேய்ப்பதொழித் தேவல்செய்வ தென்னநம்பி—பின்னுமுனாதமுனி வெய்திமுன்னம்- பிறித்தெழுது மாவணத்தைக் காட்டுமென்றார் ... ௨௯- ௭௫௯

என்றவுடன் பாலையோ காண்பதந்த- வெழுத்தவையோர் காண்பதுநீ யாமுறைக்குக்—தொண்டுசெயக் கடவதென வெகுண்டுநம்பி- தொடர்ந்தவர்கை யாவணத்தைப் பறிக்கநாடிச்—சென்றதுகண் டோடவிரைந் தோடிமுன்னஞ்- செல்பவரை வலிசெய்து பறித்துச்செல்லா—நின்றுகிழித் திடமறையோ னாகிவந்த- நீலகண்டர் சலயிரைந் தோலமிட்டார் ௩௰- ௭௬௰

ஓலமென நின்றவர்கள் விலக்கியிந்த- வுலகிலிலா நெறிகொண்டு பிணங்குகின்ற—சிலமுனி யேயுமது பதிதானெங்கே- செப்புமெனி லெப்பதியா னாலுமென்றோர்—பாலனெனை வலிசெய்யப் பார்த்திருந்தீர்- பகருவதே னறியீரோ நிகரிலாத—கோலமறை யோர்களுறைந் தென்றுநீதி- கோணாத வெண்ணைநல்லூர் காணுமென்றார் ௩௧- ௭௬௧

என்றதுகேட் டாரூர ரவரைநோக்கி- யேலவற வோர்களுள வவ்வூராகி—னன்றுமது பிழைநெறியை நவிலவாங்கே- நடவுமெனிற் றடையெனவவ் விடமேசென்று—யின்றவையோர் முன்மூல வோலைகாட்டி- யிவ்வழக்கை வெல்வனென்றே செலவாவின்பின்—கன்றனையுமாங்குநம்பி செல்லமற்றக்- கவின்மறையோ ரியாவரும்பின் னவின்றுசென்றார் ௩௨- ௭௬௨

சென்றவைமுன் னையரெலாஞ் செப்பக்கேட்டச்- செல்வமறை யோர்புவியி லில்லாவாறீ—தென்றலுமெங் கெவ்வினையெவ் வாறுயாவ- தொன்றுதொடுத் தாலுமவை நின்றிடாது—சென்றதுசெல் லாதலவச் செய்கைதப்பிச்- செல்வதுசெல் லாதெனமுன் சொல்வதென்ன—நன்றுமுநி யோருரைத்தா ரென்றுபின்று- னம்பியா ரூருண்மை நவிலுமென்றார் ௩௩- ௭௬௩

நவிலுவதே னறியீரோ நாதனுக்கே- நாளும்வழி படுநாவ னகரானென்று—புவியிலிலா முறைகொண்டு பிணங்கிமுற்றும்- புடித்தபுடி சாதிக்கு முடிவயாதோ—செவியுறக்கேட் டுணரவொண்ணா மாயையென்றோ- செய்கையொன்று நானறியே னையவந்தக்—கவின்மறையோர் சொல்லுவதைக் கேட்டுணர்ந்தே- கருத்திலுதித் ததைவிரித்திங் குரைப்பீரென்றார் ௩௪- ௭௬௪

என்றவுட னவையோரம் முனியைநோக்கி- யென்றடிமை கொண்டததற் கெனவாதாரங்—கொண்டுவரு வீரெனுமுன் மூலவோலை- கொடுத்திடத்தேர்ந் தவையொக்கு மென்றுபின்னு—நின்றிடுமா ரூராயீ தனரெனுங்கா- ளிமலர்சுத னேவறிவா னிவன்மூதாதை—யன்றெழுது மாவணம்வே றென்றுண்டாகி- லழைத்ததனோர் பாற்றுளது மொழிவீரென்ன ௩௫- ௭௬௫

என்னவதி செயமெனவவ் வாறழைப்பித்- தெல்லவரும் பார்த்திரண்டு மொக்குமெ

ன்றே—சொன்னநலான் முனிவருக்கா ரூரர்தோற்றீர்- சொன்னபணி செய்வதென்றே சொ
ன்னாரன்னார்—முன்னைவினை யிதுவாகில் முடியாதென்றால்- முடியுமோ வெனக்கருத்தோர்
படியர்ய்நின்ற—பின்னவையோ ரையவும தூரிதாகப்- பிரித்தெழுத லாலிருப்பெங் கியம்பு
மென்றார் ௬௬- ௭௬௬

என்றவுட னிருப்பெவரு மறியீராகி- லேதுமென்று முன்னணையத் தாகத்தோடு—
நின்றிடுமா ரூரும்பின் னணையவாங்கே- நிறைமறையோர் முதற்றரையி லெம்மருங்குஞ்—
சென்றணையத் தேர்ந்தணைந்த தேவராதி- சேணடையப் பணியுமலர் மணிசெம்பொன்னுங்—
கொண்டணையத் தொண்டரையாட கொண்டுவந்தக்- கோலமுட னருட்டுறைக்கோ யிலினுட்
புக்கார் ௬௭- ௭௬௭

புக்கபொழு தம்முனியைக் கண்டதல்லாற்- புகுந்தபிற கவ்வுருவைக் கண்டாரில்லை
த்—திக்கனைத்தும் பாற்தெவருந் திகைத்துநின்றார்- திருவருண்மேற் கொண்டுபதைத் து
ருகிநம்பி—மிக்கவமு தத்தவெனத் தொடர்ந்தழைப்ப- மிகவிரைந்து சகத்துளருங் காண
வானி—னக்கனுமை யோடிடப மிசைவந்தாங்கு- நவின்றதெலாம் புகன்றுதடுத் தாண்டோ
மென்றார் ௬௮- ௭௬௮

என்றவுட னாரூரர் தொழுதெழுந்தார்ங்- தேற்றியதென் சொல்வதன்றங் கெளிதிற்கா
ட்சி—கண்டிடுவா னைமுழுவாற் தலர்கள்தூற்துக்- களித்துமறை துதித்துநிலந் துளித்திர
ங்கி—நின்றதுந்தான் பினுமிறைவன் றொண்டனென்றே- நீடிசைபா டெனின்மயக்குத் தெ
வ்வாறென்போற்—கின்றுபித்த னென்றிடுமா றெனுமுனம்பி- யினிதுகூர்ந் தவைமுதலா
யிசைத்துப்பாட ௬௯- ௭௬௯

பாடியவப் பதிகமுற்றுங் கேட்டிவ்வாறு- பாரினினம் புகழ்பரிந்து பாடென்றேகு—
மாடியபா தத்தாருள் பெற்றகன்றே- யவதரித்த நாவனக ரணைந்தாங்கீச—னீடியவா லய
ம்புகுந்து தொழுதுபாடி- நிலையுணர்ந்து துறையூர்சென் றலைபுலன்றா—டியவா றிசைவத
ற்கே நவின்றிறைஞ்சி- நாண்மலர்கொண் டருச்சிற்றவ் வாண்மைபெற்றார் ... ௭௰- ௭௭௰

பெற்றபயன் பெரும்பற்றப் புலியூர்சென்றே- பேறுவனென் றங்குளதா னங்கள்போ
ற்றி—மற்றவர்தான் விரைந்துவழிக் கொள்ளக்கேட்டு- மனங்குறித்த நாரியிவர் குணங்
குறித்தே—நற்றவஞ்செய் துயர்ந்தனள்கூ ழுசுத்தமாகி- நவின்றுவிடை கொண்டகன்று ருவ
ந்தாரூரர்—கத்தவர்கள் சூழநடந் தலைனீற்பெண்ணை- கடந்திறைவாழ் திருவதிகை மருங்
குசென்றார் ௭௧- ௭௭௧

சென்றபொழு தொருதவர்கைத் தொண்டுசெய்து- சேவித்தேற் றியபதியால் மிதிக்கவ
ஞ்சி—யன்றிரவப் புறத்துவட மடம்புகுந்தே- யாரூர ரயர்ந்துதுயி லமர்வதீசன்—கண்டுமு
திர் மறையவராய் வந்துபாத- கமலமுடி மீதணிந்து கரந்தபின்பெங்—கென்றுபதைத் தெழு
ந்துருகிப் பாடிப்பிறறை- யெல்லையுள்சேர் தனனதிதோய்ந் திறைஞ்சிப்போந்தார் ௭௨- ௭௭௨

போந்துகெடி லமுங்கடந்து புயனிறத்தோன்- போற்றுதிரு மாணிகுழி பாடிப்போ
ற்றிச்—சேர்ந்திறைவாழ் தினைநகரைச் சேவித்தேற்றிச்- செல்லுவார் செல்வமலி தில்லை
யெல்லை—சார்ந்திறைஞ்சிக் கோபுரத்தைக் கண்டுதாழ்ந்து- சசிவளர்பூஞ் சோலைசூழ்நந் தன
வனங்கண்—டார்ந்துபதி தொழுதுவட வாயில்புக்கு- வாவணவீ திகளபலவுங் கடந்தணை
ந்தார் ௭௩- ௭௭௩

ஆர்ந்தெதிர்கொண் டணையுமடி யவருநம்பி- யாரூர ருங்கலந்த பேரானந்தந்—தேர்
ந்துரைப்ப தாரவர்க ளொடும்விரைந்து- தேவர்நிறைந் துறையுமறை யோர்கள்வீதி—சா
ர்ந்திறைஞ்சிக் கோபுரத்தைத் தொழுதுள்புக்குச்- சதுமறையின் றுதிமலிபே ரம்பலத்தை
ச்—சேர்ந்துமுறை தாழ்ந்துதிரு வணுக்கன்வாயிற்- சென்றுநடம் புரிபவரோர் கண்டுவீழ்
ந்தார் ௭௪- ௭௭௪

கன்றுவீழ்ந் திடத்தரியாக் கற்றுவாங்கு- கசிந்திறைநோக் களித்திடப்பெற் றெழுந்
துள்புக்கு—மன்றுளே திருக்களிற்றுப் படிமருங்கும்- மகிழ்ந்திறைஞ்சிப் புலன்கரணங் கு
ணமொர்வ்வொன்றி—லொன்றினிள் கரங்குவித்தி தயமலர்ந்தங் கொருபெருங்கூத் தாடிய
மெய் யுருவின்முன்பு—நின்றுநேர் தொழும்பொழுதெவ் வழியுமாத்தி- னினவையவை யோ
டுசுழி முனையிலேற்றி ௪௫ ௭௭௫

முனையாகி முள்ளுமுதற் கருவிக்கெல்லா- முன்னாகி யாவைகட்கும் பின்னுமாகி—நினை
வார்க ணினைவிலெழுஞ் சுடருமாகி- நினையாது நினைத்திடுபன் னினைப்பறுது—தனையாரு மறி
வரிய தலைவனாகும்- தற்பரத்தின் பொற்பதஞ்சார்ந் துற்பவித்த—வினையாகி வருவதென வரு
ளப்பெற்று- விடைகொண்டிவ் வடிவதனி லடைந்துநின்றே... ... .. ௪௬ ௭௭௬

நின்றுபர வசமாகி யுண்டதெல்லா- நினைக்கிலொரு சொற்பனமொத் துணர்ந்துவாயா
ல்—வின்றனைய வகைதுதித்து விண்ணுமண்ணும்- விளங்கவரு மாரூரர் விதேகமுற்றி—சென்
றதுவுஞ் சிறப்பித்துப் பாடவானிற்- செல்வமலி கமலையிலொல் லையில்வந்தெம்மைக்—கண்டு
வரு கருமமெலா முடிப்பாயென்றே- ககனமொடு நிலமறியப் புகலக்கேட்டார் ௪௭ ௭௭௭

கேட்டவுடன் மகிழ்ந்துபல பதிகம்பாடிக்- கேடிலாத் திருவடியை நாடிநின்றான்—
னாட்டமக லாதிறைஞ்ச வார்வங்கூர்வேற்- காரூரில் வருகவென வருள்வதென்னோ—கா
ட்டமுண ராதனலின் செயலையந்தக்- கனலுணர்ந்து தனதுருவ மாக்கல்கண்டும்—வா
ட்டமெனக் கேனுளது கருணையென்றே- வணங்கிவிடை கொண்டகன்றக் கணஞ்செல்
கின்றார் ௪௮ ௭௭௮

செல்பொழுதம் மூலமுதற் பரவித்தாழ்ந்தச்- செல்வமறை யோர்களுமற் றெவருஞ்
சூழப்—பல்சிகரி களுங்கடந்து பணிந்துவீதி- பலவணங்கிப் பதிதொழுதார்ந் தெல்லைபோ
ற்றிச்—செல்பவர்பின் றுடருமற வோரைநோக்கிச்- சேவிக்கு முனமிதெனச் சேவித்தே
ற்ற—நல்வசன முரைத்துவிடை கொண்டகன்று- நடந்துடன்கொள் ளிடநதியைக் கடந்
தாரென்றே... ... ... ௪௯ ௭௭௯

என்றுமுடன் செல்பவர்க ளொடுவன்றொண்ட- ரெம்பிரா னருள்வகையை யுனிவி
னைந்தே—சென்றுதிருப் புகலிமருங் கணையும்போதச்- செல்வமலி மூதூர்மேற் செல்லவ
ஞ்சி—நின்றிறைஞ்சி வலமாகச் செல்லுங்காலை- நித்தனெதிர் தோனறிடத்தோர்ந் தத்தா
வுன்னைக்—கண்டுகொண்டே னாங்கிருந்த படியின்றென்று- களித்திறைஞ்சிப் பாடியங்கு
நாடிச்சென்றார் ௫௰ ௭௮௰

சென்றுதிருக் கோலக்கா வணங்கிப்பாடிச்- செல்லுவார் புன்கூரே முதலாய்நீல—கண்
டனுறை பதிபலவும் பரவிப்போற்றிக்- காவிரியின் கரையணைந்தன் னதியிற்றோய்ந்தார்ந்—த
ன்றுமயி லாடுதுறை யமர்ந்திறைஞ்சி- யம்பர்மா காளமொடு புகலூராதி—யொன்றுமுணர்
வொடுபோந்து தொழுதுரைத்தே- யொருமையுடன் றிருவாரூ ரருகணைந்தார் ௫௧ ௭௮௧

இதனுள் இவை காவிரியின் சிறப்பு,

அருவியுட னிழிந்துசைய கிரியினின்று- மரனருளால் மிகுபுனலாய் விரைவினோடு—தரு
வின்மலர் கரியின்மருப் பரியின்கோடு- தாளநிறை குகைபவளக் கொடிமுதற்பூண்—டிருவிழி
யா திகளெனப்பல் திரைகளோடங்- கியம்புபல நாடுகளுங் கடந்திங்கீசன்—மருவியுறை
சோழவள நாட்டில்வந்து- மகிழ்ந்துநிறை காவிரியைப் புகழ்ந்துவாழ்வாம் ... ௫௨ ௭௮௨

இதனுள் இவைமுதல் ௭- பாடல்வரைக்கு மன்னாட்டுச்சிறப்பு,

புகழ்ந்திறைஞ்சிக் காவிரியின் காலினின்றும்- புகுபுனலைத் தகவயலிற் கட்டுமள்ள—ரு
கந்தொலிக்கு மோசையுமங் குழவராற்பு- முத்துநல வித்திடுவோர் சத்தமும்பின்—மிகுந்தந
ல வேரரையிலன் னாறுசேற்போர்- மீக்கூற லவைநடுங்கூக் குரலம்மாத—ரகந்தளரக் களை
களைபோழ் தார்ந்துபாட- லாகியநீர் நாடுகள னேகந்தானே ௫௩ ௭௮௩

ஏகனுல கைந்தொழிற்கா யெழுந்தனேக- மெழிலுருவ மாய்த்தொழில்கூர் தொழிவி
லாது—தாகமுடன் பரிந்தளிக்கு மாறுபோலத்- தருமழைவில் சொரிவதலா லுகந்துநாளு—
மாகமுறக் காவிரிநீர் சுரந்தளித்தே- யன்னிலத்தின் னெற்பயிரு மதன்மருங்கு—பூகமொடு க
தலிகழை யிடையங்கங்கு- புனிதமலர்க் கொடியும்வள ரினிதுசால ... ௫௪- ௭௮௪

சாலவழ கொடுவளர்ந்தச் சாலியெல்லாஞ்- சசிநோக்காற் பசியமிகுந் தேரங்கிச்சா
ர்ந்த—சூலுமுதிர்ந் தருளமுதுண் டவரையொத்துச்- சுருள்விரித்தம் முகமாங்கு மலர்ந்
தவ்வன்ப—ராலினசிந் தையினுமிக வலர்ந்தனஞார்கூர்ந்- தரனடியை வணங்குவபோல் வண
ங்கியீச—னீலவிட முண்டதினத் தவர்கள்போற்ற- நிறைவதெனக் கதிர்கள்வய னிறைந்த
தென்றே ௫௫- ௭௮௫

நிறைதவமுன் புரிந்தனாட் டினிலுதித்த- நிலவசியர் களும்பினும்பல் குலமுமார்ந்
து—பறையறைவித் தணைபவர்க ளோடுநாளும்- பணித்தநில மக்களொடு மள்ளர்கூடிக்—
குறைவறக்கைக் கொண்டுவந்தக் கதிர்களெல்லாங்- குவித்துவைதேர்ந் தகற்றிமிகத் தூற்
றிச்சேற்கு—முறைதெரிந்து தனித்தனிநெற் குவடுவான- முட்டவமைத் தனையவகைக் கிட்டு
மார்ந்தார் ௫௬- ௭௮௬

ஆர்ந்தரசர் கடமையளித் தறங்கள்பேணி- யடியவர்கட் குதவியிறைக் கினியவெல்
லார்—தேர்ந்துமுறை புரிந்தணவோர் குறைவகற்றித்- தேவுவப்ப மூவகையு மியற்றிப்ப
ண்பிற்—சார்ந்தகிளை தாங்கியிரு வினைக்குத்தக்க- சாதகமா திகட்கூடனு யென்றுந்தம்
மைச்—சேர்ந்தசுத்த மொடுசிறந்தம் மாடஞ்சீற்றி- சேணளவு மேலுமுறச் செழிப்பதெ
ங்கும் ௫௭- ௭௮௭

செழித்திடுமன் னாட்டிலினஞ் செழிப்பதெல்லாஞ்- செப்புவதோ யொப்பருநா னில
த்துநாளும்—பழுத்திடுபல் வளத்தெவரு மேற்றுப்பின்னும்- படிநிறைவ தெறிவதைத்தான்
பகரப்போமோ—கழிக்கிணையா யணைந்தகட லுவற்புநீக்குங்- கனியொழுகு தேன்கட்வில்
விளைந்தம்மாக்கள்—கொழித்தநல மணியுழவர் கழைமுத்தோடு- கோற்றுமிக ரலதுபுறந்
தூத்துவாரே ௫௮- ௭௮௮

தூத்தியபன் மணியிலத்துப் புறங்களெங்குந்- துலங்கநலங் கிளர்ந்துதித்த குலங்கட்
கேற்ற—சாத்திரமா திகளுணர்ந்து சகளநீங்கிச்- சரியைமுத லாகியசற் கருமமோங்கிப்
—பாத்திரந்தேர்ந் தறிவுமிகும் பண்புக்கொத்த- பரிவுடையார் துணையகலா திருபிறத்துக்
—கோத்திரங்கூர்ந் தொருமகவை யேற்றுத்தானங்- கொடுத்திடரை விடுத்தினிதை யடுத்தே
வாழ்வார் ௫௯- ௭௮௯

இதனுள் இவைமுதல் ௪ - பாடல்வரைக்கு மன்னாட்டினுள சிவஸ்தலமுதலிய திருவாரூர் க்ஷேத்திரமான்மியமு மன்னகரச்சிறப்பு மன்னகரிலரசுசெய்த வளவர்முதலிய அரசர்புகழும்,

வாழ்ந்திடுநா லாசிரமத் தோருமேலாம்- வாழ்வுறநா லாதரித்த பெருங்கீழாய்ச்—
சூழ்ந்துறைதே விந்திரன்பங் கயன்மாலாய- சுவற்ககா மிகளுமிங்கவ் வற்கமென்னத்—
தாழ்ந்துயர்ந்து செலவுடல்காத் துவந்திருப்பத்- தவமடைந்தார் பவருமற்றப் பவங்களயா
வும்—வீழ்ந்திறைஞ்சித் தக்கவரம் பெற்றுநாளும்- விளங்கயிறை மகிழ்ந்துறையுந் தலங்க
ளெங்கும் ... ..., ... ௬௰- ௭௯௰

தலங்களிலா ரூருகந்தெப் பவமாயென்றத்- தலத்திலுதிப் பவற்குமடித் தலமளித்
தே—யிலங்கரியா சனத்தமர்ந்து செங்கோலோச்சு- மிறையருளா லாங்குவுறைந்து தரையி
ல்வாழைக்—குலங்களுக்கு மதிபதியாய் மனுவேந்தன்மூன்- குலவரைமேற் புலித்துவச நில

வமுன்னாட்—டிலங்கியிளங் கோவுயிற்கோ ரிளங்கோவாவி- துறந்தறங்காத் தவைகளொடுஞ் சிறந்தபின்னர் ௬௧- ௭௬௧

சிறந்திடுமம் மரபிலுதித் தவற்குமேலாய்ச்- சிறந்தமரு மன்பாயன் புரந்தவாபின்—சிறந்திடுமன் னவருமவ ரவற்கிசைந்த- சிறப்புடைய நகரதனில வைகிநாளுஞ்—சிறந்திடுமன் னுடுமுத லறங்கள்யாவுஞ்- சிறந்திடுமா றளிப்பதலா விறையுகந்து—சிறந்திடுமெப் பதிகளுக்கு மூலமாகச்- சிறந்திடுமப் பதிக்குமுள பணிநிறைத்தார் ௬௨- ௭௬௨

பணித்திடுமன் னவர்கள்தினம் பணிவதல்லாற்- பண்டுமல ராளொடென்று மண்டகோடி—பணித்திடவீற் றிருப்பவராங் கருளுமாறு- பரவையெனக் கமலினியு மவதரித்துப்—பணித்திடவந் தணரடியா ராதியிந்தப்- பாரிலுளோர் வாரியெனப் பரவிநாளும்—பணித்திடுமா ரூரணியு மன்பர்பண்பும்- பதியவர்செய் பணியையுமார் பகரவல்லார் ... ௬௩- ௭௬௩

பகர்வதரி தரிதரிதப் பதியினுளும்- பரவுமடி யார்பெருமை விரைவினோடு—நிகரிலிறை யிரவவர்முன் சென்றுநாம்மனோர்- நின்றுதடுத் தாண்டுபினு மன்றளிந்த—நகரில்வரு மாறருளப் பெற்றுமெத்த- நசையினெடா ரூரனிங்கு வருகின்றனீர்—மிகுபரிவி னெடுமெதிர்கொண் டழையினென்றே- மீக்கூறல் கேட்டெழுந்து சேற்கையானார் ௬௪- ௭௬௪

சேர்ந்துதலத் தடியருமப் பதியுளோருஞ்- செல்வமலி நகரணிசெய் தெதிர்கொளும்போழ்—தார்ந்தரன்வந் தருளியதெ லாம்புகன்றே- யளவில்முழ வாதியுட னுமீசன்பாற்—சார்ந்துவரு மாரூரர் முனமவ்வெல்லை- சார்ந்துதொழ வுடன்றெழுதல் லுரைத்தயாவுந்—தேர்ந்தவர்க ளோடுபல மறுகும்போந்து- தேராரு நெடுவீதி தாழ்ந்தெழுந்தார் ... ௬௫- ௭௬௫

எழுந்தடியார் தமைநோக்கி யாரூரெந்தை- யெம்மையுமாண் டருளுவரோ கேண்மினென்று—செழுங்கரமுச் சியிற்குவித்தோர் பதிகம்பாடிச்- சென்றுதிருக் கோபுரத்தை யிறைஞ்சிப்புக்குத்—தொழுந்தகைய வார்வமுடன் விரைந்துசெல்வார்- தொண்டருறை சபைதொழுதுள் ளணைந்துதிங்கட்—கொழுந்தணிந்து மாமறைப்புற றிடமாய்நாளுங்- கொண்டமணி கண்டரைநேர் கண்டுவாழ்ந்தார் ௬௬- ௭௬௬

கண்டுவாழ்ந் தனையவனை துதித்திறைஞ்சிக்- களித்துருகி யளித்திடுமா றிரங்கியாவு—மொன்றிநேர் நின்றருள்வெள் ளத்தின்மூழ்கி- யொருமையுடன் றிருப்பதிகம் பாடவானி—லின்றுநா மேயுனக்கோர் தோழனாக- மிசைந்தனநீ யன்றுதடுத் தாளும்போது—கொண்டகோ லம்புனைந்தம் மயல்தீரென்றே- கொடுத்தமொழி கொண்டுவிடை கொண்டுமீண்டார் ௬௭- ௭௬௭

மீண்டரியா சனத்தமர்ந்த கோலங்கண்டு- மீளாவன் பொடுதொழுது வாழ்த்திப்பின்னும்—பூண்டபெருங் காதலுட னகன்றவ்வாறே- புனைந்துதினம் பணிந்தனைய வகைதுதித்தங்—காண்டதிற முனியுணர்வா னகமகிழ்ந்தே- யாரூரர் தாமிருந்தார் பாரோரெல்லாந்—தூண்டுசுட ரனையபரன் றோழனென்றே- துளக்கிறு ரவர்பெருமை விளக்கினாரே ... ௬௮- ௭௬௮

விளங்குமெழிற் பரவைதினம் வணங்குமாறு- விமலனடி தொழவொருநா ளணையுங்காலைத்—துளங்குமதிச் சடையரைமுன் றொழுதங்கெய்துந்- தூயபுகழ் நம்பியவள் சாயைகண்டு—களங்கமற நோக்குவதைத் தேர்ந்தம்மாதட்- களித்தெதிர்நோக் குவதுமிவ ருணார்ந்தகன்றே—யுளங்கிளருங் காதலொடு முவந்தாரென்றங்- குழைநின்றார் தமைவினவ வுரைக்கலுற்றார் ௬௯- ௭௬௯

உரைக்கடங்காப் புகழுடைய பதியிலாரொன்- றுரைக்குமுருத் திரகணிகை குலத்திலிந்தத்—தரைக்கணுதித் திரதியெனச் சிறந்திலங்குந்- தவிசின்மிசை வளர்ந்தளவில் தமர்கள்போற்ற—வரைக்கிசைந்த வாடைமணிக் கலன்களாதி- யணிந்துவிளை யாடல்பல பாங்கியோடு—வரைக்குயர்ந்த மாளிகைமேற் புரிந்துலாவி- வளருமிள மதியின்மிகக் கிளர்ந்தபின்னர் ௭௰- ௮௱

பின்னமறத் துளங்குமுழு மதியம்போலப்- பிறங்குமிளங் கொடிவயதீ ராறுமாகி—நன்
னியதி சார்ந்ததகுங் கலைகளாய்ந்து- நலந்திங்கு தேர்ந்தகுலத் தியல்சாராது—பனனுமிசை
பாடவல பரிவோடீசன்- பதம்பணிந்தோர் பதியையெய்திக் கதியைச்சார—வுன்னிமுயல் பர
வையவ ளுண்மையாற்கு- முணர்வரிதும் பரும்புணர்வ தரிதாமென்றுர் ௭௧- ௮௱௧

என்றவுரை கேட்டுவந்தம் மாதைச்சேர்வா- னெம்பிரா னிடஞ்செலுங்கா லவள்ப
ணிந்து—சென்றனளோர் பாலிவருஞ் சேவித்தந்தச்- சேயிழையைத் தேடுவதே நியாய
மாகக்—கொண்டனரங் கெம்மருங்குங் கோவித்தேடிக்- கொண்டுபுறப் பட்டடியார் சபை
முன்வந்து—நின்றனாமேல் கடலணைந்தா னிரவிநேரே- நின்றனன்மன் மதன்படையோ ட
ண்டராற்தார் ௭௨- ௮௱௨

அன்றானே யருங்கணையா லருச்சித்துய்ந்தா- ரனங்கனைந்து கணையுவிடுத் தினங்க
ளோடு—நின்றனைய வகைபொருத லன்றிவானி- னிலவுமெழுந் தலருமணம் வீசினல்வன்
—றெண்டர்பல புகன்றிரங்கா தென்செய்வாரத்- தோழனலால் வாழ்வளிக்க வல்லார்தா
ன—ரின்றமுதொத் தெதிர்வருநங் கையைத்தாரா- யேலிறைவ தரியாதுயி ரென்றிருந்
தார்நம்பி ௭௩ ௮௱௩

நம்பியைக்கண் டதிசயித்துள் ளணைந்துசால- நயந்திறையைப் பணிந்துநங்கை பர
வையார்தா—மம்பிகையோர் பாகமுடை யாயென்னத்தா- வரிவையர்கள் கருத்தெவற்கும் பு
கல்வதுண்டோ—வம்பர்நா யகவுனது கருணையாலே- யுணர்ந்தருளென் றுரைத்தகன்றவ்
வுண்மையோடு—தம்பிரான் கோயிலினின் றொருவாறேகித்- தந்திருமா ளிகையணைந்து தனி
த்தமர்ந்தே.. ... ... ௭௪- ௮௱௪

தனித்தொருசே டியையழைத்தா லயத்துட்புக்குத்- தம்பிரான் முன்செலும்போ தெதி
ர்வந்தற்றோர்—மனித்தரொன மணவாளக் கோலத்தோடு- மகிழ்ந்தெமைநோக் கியபுகழ்மன்
னவராரென்னப்—புனித்திளங்கன் றினைத்துடரா வெனத்துடர்ந்திற்- புதுமவரைப் புகாதுத
டுத் தாண்டதல்லாற்—குனித்திடுவா னேகருணை கூர்ந்தாருரிற்- குறைநிரப்ப வருகவென
வறைந்தபின்னர் ௭௫- ௮௱௫

அறைகுவதே ணுருரில் வாராமுன்ன- மணிசெய்தெதிர் கொண்டழைமி னென்றுகூ
று—மிறைவரவு நாமுனக்குத் தோழனென்றார்ந்- தியம்பிமணக் கோலமிசைந் திடுவாயெ
ன்றம்—மறையவருக் குரைத்திடுமா புனைந்துநாளு- மகிழ்ந்திறைஞ்சி வன்றொண்ட னென
வங்கன்றே—தறையறியும் படியருளப் பெற்றிங்கூருந்- தம்பிரான் றோழரவர் நம்பியெ
ன்றுள் ௭௬- ௮௱௬

நம்பனடி யாரெனவு மவர்மேற்கொண்ட- நசையிலிருந் தெழுமயலின் வசநின்றெ
ய்த்த—தும்பர்கட்கு முரைப்பதரி தாகுமென்று- லுடனுறைசே டியர்களுஞ்சுத் தமுமெ
ன்செய்வார்—வெம்பியபி னுணர்ந்தெவரு மகிழ்ந்துசால- வேண்டுவன செய்வதெலாம் பூ
ண்டிடாது—தம்பரிவி னுற்றெளிந்து தய்யல்பாகன்- ருளுனியவ் வாழ்வுறுவா டனித்திரு
ந்தாள் ௭௭- ௮௱௭

இருவருமிவ் வாறுதனித் திருப்பதாண- லிறைவர்தரித் திருக்கமனந் துணிவரோவவ்
—விரவிலெழுந் தன்னகர்வா ழடியர்பாற்சென்- றிங்குநம்பா லணைந்திடுமா ரூரனுக்கும்
—பரவையற்கு மணம்வகுத்து விடுமினென்று- பகர்ந்ததலா லவ்விருவ ரிடத்துமெய்தி—
விரவினுடவ் வகையருள்செய் தகல்முன்னூழும்- விண்ணவரோ டண்ணல்திருக் கோயில்
புக்கார் ௭௮- ௮௱௮

ஆர்ந்தடியா ரடையவெழுந் தாயமாகி- யதிசயித்தவ் விரவொழிந்து ரவியூர்காலை—
சார்ந்துநங்கை பரவையற்கு மாரூரற்குஞ்- சகமுறையே மணவினைசெய் தகைமையெல்லா
ந்—தேர்ந்துரைப்ப தாருலக மகிழவானிற்- தேவர்களும் புகழவென்றுந் தெளிந்தோரெ

ல்லா—மோர்ந்தனலஞ் சொலச்சொலிமா லொழியாதாரு- மொருமைபெற வதுவைபுரிந் தனரொப்பில்லார் ௭௯-ஆ௱௯

ஒப்பரிய திருவருளா லாரூரற்கவ்- வோவியமங் கையையவதுவை செய்தபின்னர்—துப்பு ரவா திகளுமந்தத் தூயநங்கை- துதித்தனைய வகைபுரிய மதித்தம்மாதின்—செப்பிளமென் முலைக்குவட்டே செமுமாகச்- சேர்ந்தனங்க ஞார்ந்தியற்றுஞ் செய்கையெல்லா—மொப்பிமுயல் சிற்சுகபோ கத்திலின்ப- மோங்கிமயல் வாரிதலை தாங்கிவாழ்நாள்... ... ௮௰-ஆ௱௰

தாங்கரிய மகிட்சியொடு பரவையென்னுந்- தத்தைமொழி யாளொடுசிற் றின்பமேவிப் —பாங்குறுகா லத்துமிறை பதமுளத்திற்- பதிந்திலங்கும் பரிவதனால் முதிர்ந்தஞானத்—தோ ங்குபழ வடியரிலு முதன்மையாக வொப்பரிய பாசிவமே யொப்புமானு—லீங்கெவரா லவர் பெருமை யியம்பலாமென்- னிதயமடங் காதறிந்த தியம்பலுற்றும்... ... ௮௧-ஆ௱௰௧

இயம்புவராங் கிவ்வகையி லிருக்குநாளு- மின்றமிழ்ப்பா மாலைகளீ தலதம்மாடம்— புயப்பலசேர் வாவிமலர்ச் சோலையாதி- புகுந்துவிளை யாடியுகந் திறைவன்பாதாம்—புயம் பணிய நினைந்தெழுந்தத் தயல்சூழாமும்- புடைசூழ மிடைகின்ற வடியாரோடம்—புயம் பரிவா டவம்பரிந்தன் றயந்தீற்தென்றும்- புற்றிடமாய்க் கொண்டவர்பூங் கோயில்புக் கார் ௮௨-ஆ௱௰௨

புக்கபொழு தன்பருறை சபைபினுளும்- புகுந்திறைஞ்சுந் தேவரலாற் புவனிமேவு—மிக் கசிறப் புடையடியா ரிருப்பக்கண்டம்- மிகுதவர்க்கா ளாகுவதென் றெனவகத்துட்—டக்க பரிவோடிறைமுன் செல்லுமாங்கத்- தவரொருவர் வெருவலுந்தோர்ந் தெதிர்விரைந்து—நக் கனுமை யோடிடப மீதுதோன்றி- நவிலுவனவ் வடியவர்சீர் புகலுவானே ... ௮௩-ஆ௱௰௩

புகலுவதா ரடியவர்சீ ரிறைபுகழ்ந்து- புகன்றதெலாம் வன்றொண்டர் புற்றின்மேவி ச்—சகலமுமா னவரையெதிர் கண்டபோதுஞ்- சகமறிய வவரியம்பி நின்றபோது—ம கமலரின் மிகுபெருந்தே னருவிபாய- வனையவகை தொழுதேற்றுங் கனிவையுந்தான்— முகமலர்ந்தவ் வடியரைநீ யடைந்துவாழ்த்தி- முதலிருவ ரொடுதிகழென் றுரைத்தான் முன்னோன் ௮௪-ஆ௱௰௪

உரைத்தபினுந் தொழுதெவ்வா றவர்கள்சீர்த்தி- யுரைப்பதென மன்றுணமை யுவந்து பூசித்—தரைக்கணமும் பிரியாது தில்லைவாழு- மந்தணரை முனபணிந்து வாழ்த்துமா றித்—தரைக்கண்வழி பட்டடைந்திங் குறைவோற்கெல்லாந்- தனித்தனிவே ற்டியனெனத் தமிழ்ப்பாமாலை—யுரைத்திடென வருளியெழுந் தருளக்கண்டார்ந்- தும்பர்களுந் தொழச்ச பையை நாடிச்சென்றார்... ... ... ௮௫-ஆ௱௰௫

சென்றுதில்லை வாழ்மறையோற் கடியேனென்று- செந்தமிழ்ப்பா மாலையெடுத் து ரைத்திறைஞ்சி—நின்றிருந்தோ ரடையவவ்வா றியம்பிப்போற்றி- நீடுவதே தொண்டர்து கைப் பதிகமாக—வொன்றுமுணர் வொடுபுகன்ற பினும்வணங்கி- யொப்பரிய திருக்கூட் டத் திடையணைந்து—பண்டுதலை யிருவரெனப் பகர்வரோடு- பரமனடி யாற்குண்முதன் மூவரானார் ௮௬-ஆ௱௰௬

இதனுள் இவை யிச்சரிதை ஓரிடத்தீறி லுரைத்திடுமுண்மைகூறல்,

ஆனவர்சீ ராதிநடு வந்தத்தோதி- யவர்மொழியின் வழிவிரித்துட் புகன்றாரத்தர்—கான ருளா லவர்கள்கதை யுரைத்தார்ந்தீறி- லவனக ரார்சரிதை நவிலுகின்றே—னெனெனிலோர் பாற்றுதிப்ப திதன்பாங்கல்லா- லெற்றியபின் றேற்றுமொரு கூற்றைநாடித்—தானறநின் று ணரவருள் புரிவரால்லெத்- தவர்புகழுஞ் சொலிமுடிவி லியம்பலுற்றும் ... ௮௭-ஆ௱௰௭

இதனுள் இவைமுதல் ௯- பாடல்வரைக்கு மனதுடன்வினவி யுவந் துத்தரங்கூறல்,

உத்தமர்கள் புகழியம்ப வுண்மையோடன்- றுடன்படுநெஞ் சேயுனக்குக் கடன்யா தென்னிற்—பித்தனெனப் புகன்றதுவே முத்திநல்கும்- பிரணவத்தின் பொருண்முடிவா யவ் வாரூர—வத்தனருள் பெற்றுரைத்தோ ரானைபோன- வீதியறிந் தவ்வழிச்செல் வதற்கன் னூர்சீர்—முத்தமொழிந் தன்றுசொனை துனிவேறென்று- முயல்வதொழிந் திருப்பதுவே யியல்பதாகும் ௮௮- ௮௱௰௮

ஆதுநா ளென்றெனிலவ் வாறிருந்தா- லவனிமுத லாயெவையுஞ் சிவமாய்க்காண்ப—தா குநாள் வரும்வருவ தறிந்தாலந்த- வண்டசரா திகளலமே லொன்றுண்டென்ப—தாகுநா ளூறுமுறநீ முயல்வாயாகி- லதுவிதுவென் றிரண்டாகு மாதலாலொன்—ருகுநா ளளவுட லுக் கமைத்ததேதோ- வணுகுவதே குணமெனவக் குணமேற்கொள்வாம் ... ௮௯- ௮௱௰௯

குணங்கள்பல வுண்டவற்று ளொன்றுநாடாக்- குணம்பெறுத னன்றதுற முனங்குறி த்த—குணமுனியே நின்றுசகக் கூத்தைவென்று- குனித்திடுதாள் கண்டுலகா திகளுமந் தக்—குணமெனவுட் கொண்டுலவி னணுகுமோர்சற்- குருமொழியை யுண்டவையும் வி ண்டுவந்த—குணவுருவே தென்றருளை நோக்கினன்று- குறியாத நிலைபொருந்து மறிவாய் நெஞ்சே ௯௰- ௮௱௨௰

நெஞ்சமே யஞ்சுவதே னினியுனக்கு- நோரிப் பார்விசும்பி லார்தானென்னுர்—பஞ்ச மேவந்தாலென் பாலையாதி- பருத்தநல மணியாக விளைந்தாலென்ன—வஞ்சமே யற்றமனத் தடியார்சீற்றி- வாழ்த்துவதை நிரப்பியொரு கூற்றைநாடித்—தஞ்சமே யென்றமர்ந்து தனி த்திருந்தாற்- ருழ்விலையன் னெறியடைந்து வாழ்வாய்தானே ௯௧- ௮௨௧

தானெனைமுன் படைத்தானென் றுரைத்துச்சென்ற- தாழ்வில்புக ழாரூரர் வாழ்வு ரைத்து—மேனுனைப்பின் படைப்பானன் றவரைவாழ்த்தி- யெய்தரிய கயிலையொரு பக லிலெய்தி—வானினைப்பின் புடைத்தோனு மயனுமாலும்- வாயூற வரையுளரு மகிழவாற் குங்—கோனனைக்கன் புடைத்தோர்க ளுடன்கலந்து- கொண்டொழுகு வார்குறும்ப் ரின்று மென்ருல் ௯௨- ௮௨௨

என்றெவ்வா ருகுவதென் றெய்த்துநாளு- மேங்குவது பாங்கலத்தூங் காமற்றூங்கி—நின் றிவ்வாழ் போகுவதைப் போக்கிப்போகா- நிற்றலையக் கனியெனநீங் காமனீங்கிப்—பண்டொ வ்வா தேகுவபோ லினமும்விண்டு- பலவுனியோர் கணமுமவத் தலையாதோங்கி—னன்றவ்வா ருகுமதற் கய்யமில்லை- யறிந்துயநீ யறைகுறையை யறைகுவாயே... ... ௯௩- ௮௨௩

அறைகுவரன் ருரூர ரடியார்கூட்டத்- தணைந்தபொழு தண்டர்களாற் றலர்கள்தூ ற்றங்—குறைதவரா திகளலதிவ் வுலகத்தோரு- முவந்துகரங் குவித்தரவென் றொலித்த தல்லா—லிறையெதிர்வந் தியம்பியருள் புரிந்தபோது- மிவரவ்வா றடைந்தமர்ந்தார்ந் திரு ந்தபோது—முறைதொழுதம் மாதுகுழாத் துடன்மகிழ்ந்து- முற்றவம்யான் பெற்றதென் றின் புத்தாளென்றே ௯௪- ௮௨௪

என்றுமடி யார்பெருமை யியம்புவோரு- மென்னனைசீர் முன்பரவு மாறுபின்னுந்—துன் றுமதி நுதற்பரவை யன்பர்கூட்டந்- தாரத்தே பலமுறையுந் தொழுதெழுந்து—நின்றனைய வகைதுதித்திப் பேறளித்த- நிமலனிடஞ் சென்றடியாள் கருத்தறிந்தார்ந்—தன்றிரவே யெ முந்தருளிக் கூட்டிவைத்த- வருளெனவென் றுனியுண்மகிழ்ந் தடிபணிந்தாள் ௯௫- ௮௨௫

அடிபணிந்து பரவியருள் பெற்றகன்றங்- கழகியசிற் றம்பலத்து நடஞ்செய்வோனை— முடிபுனைந்திங் கரசுபுரி கோலந்தாங்கி- முறைசெலுத்தி மணியரியா சனத்தமர்ந்த—படிவிள ங்குந் திறம்பரிந்தார்ந் திறைஞ்சிவாழ்த்திப்- பாங்குறுசே டியர்களுடன் போந்தத்தேவ—

னடிபொருந்துந் தன்மாடத் தணைந்தாரூரர்க்- காம்பணிசெய் தவரெதிர்பாற் தமர்திரு
ந்தாள் ௯௬- ௮௨௬

இருநிலமும் போற்றவடி யார்கள்வாழ்த்த- யினிதமரு மாரூர ரிருவர்காணு—வொரு
வனடி தொழவெழுந்தார்ந் தவர்களோடு- மோங்குநிலைக் கோபுரத்தை யிறைஞ்சிப்போய்ச்
சென்—திருவீதிபட் டேற்றியதே வாதிதேவன்- றிகழ்பதங்கள் வணங்கியருந் தமிழ்புகன்று
—பொருவருமா சனத்தமர்ந்த கோலம்போற்றிப்- போந்துபர வையருறைமா ளிகையைச்
சேர்ந்தார் ௯௭- ௮௨௭

சேர்ந்திடக்கண் டடிபணிந்து கொண்டுபோந்து- செம்மணிப்பீ டத்திருத்தி யுண்மை
யோடு—மார்ந்திருபா தமும்விளக்கிப் பரவையார்தா- மருச்சனைமத் ததுபுரிந்து விருப்
பிற்சாலத்—தேர்ந்தமைத்த வமுதமுத லவற்குமுத்த- தெருளுடையோர் களுக்குமளித் தரு
ள்பெற்றென்றுஞ்—சார்ந்திடுபொற் றவிசின்மிசை மகிழ்ந்தாரூரர்- சார்ந்தவுடன் சந்தன்மா
தியுமணிந்தாள் ௯௮- ௮௨௮

அணிந்தபணி யாதியெலாம் பரிந்துதாங்கி- யார்ந்திடுவ துணர்ந்திதய முதன்மலர்ந்து—
பணிந்தனைய வகைதுதிக்கும் பரிவுமற்றும்- பாற்தினிய துரைத்தருளு மாறம்மாது—மணிந்த
ருகி லமர்ந்தவுடன் மருங்குசூழு- மனவில்மட வார்களும்பல் புகழ்ந்துவாழ்த்திப்—பணிந்த
கன்றபின்பரவை யுடனாரூரர்- பகருஞ்சிற் சுகபோகத் துகந்துறைந்தார் ... ௯௯- ௮௨௯

உகந்தவ்வா திரவுதொறுஞ் சுகித்துநாளு- முதிக்குமுன மெழுந்துதைய நியமமெல்
லா—முகந்தம்மா தவர்சபையை யடைந்தக்கூட்டத்- துண்மைநல மொழிந்துசில பகல்
வசித்து—வுகந்தெம்மா னாலயத்துட் புகுந்துகாலத்- துரைத்திறைஞ்சித் தரைக்கண்வரு
தவமுடிப்பா—னுகந்தம்மா திலத்தணைந்துத் தமர்களோடு- முண்டியிற்றுக் கண்டுகேட் டுறை
யுங்காலை ... ... ௱- ௮௩௰

உறைந்திலங்குஞ் செய்கையெலா முணர்ந்துகுன்றை- யூருழவு தொழில்வேளாண் குல
த்துதித்த—நிறைந்திலங்குஞ் செல்வமுடைக் கிழவனென்போர்- நீடுபெருங் காதலுடன் மா
டெலாம்பொன்—னிறைந்திலங்குந் திருவாரு ரணைந்தாரூர- ரிணையடிக டொழுதேற்றக் கணை
விழிக்கே—மறைந்திலங்குஞ் சேல்குழைத்துக் குறைந்தனந்தான்- மலர்புகுமா றூர்பரவை
யிலம்வந்துற்றூர் ௱௧- ௮௩௧

இலத்தணைந்தம் மாதுடனா ரூரரைக்கண்- டினித்தவம்வே றின்றெனவுட் கொண்டி
றைஞ்சி—நிலத்தணைந்த வாறிருக்கும் பரிவுகண்டு- நிமலனரு ளுறுமெழுமென் றிடவெ
ழாதென்—னிலத்தணைந்த வளங்களையா னனுப்பநாளு- மிசைந்தமுதுக் காக்கிடுமா றிரங்
குமென்றைம்—புலத்தணைந்த வார்வமுடன் புகன்றதேற்றுப்- புகல்வதுகேட் டெழுந்துது
தித் தகலநின்றூர் ௱௨- ௮௩௨

நின்றுவிடை பெற்றகன்றங் கெய்திமித்த- நிறையமுது படிக்குளநெல் முதலாயா
வு—மன்னுமுத லனுப்பிவரின் விண்டுளிக்கா- தவனிவளங் குறைந்தொருநாட் டவமுமுட்
டக்—கண்டருந்தா திரவுறங்குங் காலைமேலோன்- கனவினில்வந் துனதுபணிக் கிடநெற்
றந்தோ—மென்றுரைத்தவ் வாறளிக்க நிதிக்கோமானை- யேவியிதா ரூரருக்கு மியம்பி
யேக ௱௩- ௮௩௩

ஏகவரு ளாலளகை வேந்தனந்த- வெல்லையெலா நெல்மலையா யாக்கவேகன்—ருகமுட
னுரைத்ததுகேட் டுணர்ந்தெழுந்த- தாவில்புகழ் வேளாள ரதிசயித்தெங்—கேகினுமவ் வரை
யாக விருப்பக்கண்டார்ந்- தேகனையு நம்பியையும் வணங்கியாரா—லாகுமிவை யெடுத்தனு
ப்ப வாரூரற்கே- வறைகுவனென் றேகவிடை யவரும்வந்தார் ௱௪- ௮௩௪

வந்திடுமா ரூரரைக்கண் டதிசயித்து- வணங்கிமகிழ்ந் தவைகளெலாஞ் சொலவாரூ
ரர்—சிந்தைகளித் தினிதுரைத்தங் கணைந்துணர்ந்து- சிவனருளாற் றுனெடுப்ப தெனவு

வந்தே—முன்றிகழுங் கோளிலிசேர்ந் திறைஞ்சிப்பாடி- முதல்வனதற் கருளிடப்பெற் றக
ன்றடைந்தோர்—பந்தமகல் பதிபலவும் பணிந்தாரூர்வாழ்- பரமனடி தொழுதரிவை மனை
யைச்சேர்ந்தார் ௱௫- ௮௩௫

சேர்ந்திவையா தியுமரிவைக் கார்ந்துரைத்துச்- செழித்திருப்ப வன்றுபகல் கழித்தவ்
ஊரிற்—சார்ந்தளவில் பூதமவை கவர்ந்தாருரைச்- சார்ந்தடைய நெல்மலையாய்க் குவித்த
தெல்லாந்—தேர்ந்துரைப்ப தாருதையத் தெவருங்கண்டு- தெய்வீக மிதுவெனவென் றதி
சயித்தார்ந்—தோர்ந்தொருவற் காகமழை பெய்யுமாபோ- லொருபரவை கேழ்வனுக்கா யரு
ள்வதென்றார் ௱௬- ௮௩௬

அருள்வகையைப் பரவையுங்கண் டுவந்தாரூ- ரடிதொழுதம் மொழிவழியா ரூரில்
வாழுந்—தெருளுடையீர் யாவருங்கைக் கொள்கவென்றே- தெருத்தெருவாய்ப் பறைநிக
ழ்வித் தருகமைத்த—பொருவருநெல் மலைகளைமா ளிகையிற்சேர்த்தெப்- பொருளுமுடை யான
டியார் முதல்வருக்கும்—வருபவற்கு மினிதளித்து வணங்கநாளும்- வள்ளலடி தொழுது
ரைத்தார்ந் திருந்தார்நம்பி... ... ... ௱௭- ௮௩௭

இருக்குநாட் கோட்புலியார் வந்துதாழ்ந்தே- யிரங்குமா றவர்பதியை வணங்கஞான—
வருக்கனூர்ந் தெழுந்தரியா சனத்தமர்ந்த- வண்ணலடி தொழுதருள்பெற் றகன்றுசால
—வுருக்கமோ டங்குளதா னமும்பணிந்தவ்- ஊருகு சேரநக ரணிசெய்துள்ளப்—பெ
ருக்கமோ டெதிரிறைஞ்சிக் கொடுபோந்தாரப்- பெரியருமன் னாட்டியத்தான் குடியுள்ளோ
ரும்... ... ... ௱௮- ௮௩௮

ஓர்ந்திலத்திற் கொண்டணைந்தா சனத்திருத்தி- யொப்பில்வழி பாடுசெய்து பொற்பூ
ணாதி—யார்ந்தணிவித் தரியவிருந் தமைத்துச்சாரு- மடியார்முத லாரூரர்க் களித்தபின்பு
—கூர்ந்தரிதிற் பெற்றுவளர்த் தெடுத்துலாவு- குதலைமொழிப் புதல்வியிரு வரையுங்கொ
ண்டு—சார்ந்தடியிற் றாழ்ந்திடச்செய் தவருந்தாழ்ந்து- சாத்துவார் கோட்புலியூழ் மாத்து
வாரே ௱௯- ௮௩௯

மாத்தரிய பெரும்பிணியை மாத்தியாள்வான்- மகிழ்ந்தடியே னிலத்தணைய வுகந்தாப்
போல—யேற்றிருகன் னியையுமணம் புணர்ந்தடிக்கே- யேன்றபணி செய்துயுமா றிரங்கு
மென்னப்—பாற்றுமது மகவெமக்கு மகவேயாகும்- பகருவது தகவலதென் றகமலர்ந்
து—கூற்றருநேனுக் களித்துவிடுத் தெழுந்துநம்பி- கும்பிடச்சென் றணைந்தனர்பின் பெவ
ருஞ்சென்றார் ... ... ௱௰- ௮௪௰

சென்றுதிருக் கோபுரத்தை யிறைஞ்சிப்புக்கச்- செல்வனடி தொழுதுரைத்த பதிக
ந்தன்னி—னன்றுபுரி கோட்புலியார் புகழ்சிறக்க- நவின்றதலாற் புதல்வியெனப் புகன்
றவந்தத்—தொண்டர்மக விருவரையு மறவாவண்ணந்- தோகையெனும் வனப்பகைசிங் கடி
யினப்ப—னென்றொருபேர் தனக்கமைத்தீ றினிதுரைத்தே- யேற்றியருள் பெற்றகன்றப்
புறத்தணைந்தார் ௱௰௧- ௮௪௧

புறத்தணைவா ரொடுவல்லி வலத்துமேவும்- புராணர்வலி வலத்தணைந்தா லயத்துட்
புக்கன்—புறத்தொழுது கண்டிடுமவ் வகைசிறப்பித்- துரைத்தருள்பெற் றகன்றரியா சன
த்தமர்ந்த—திறத்தையுனித் திருவாரூ ரடைந்திறைஞ்சித்- திகழ்பரவை மாளிகைசேர்ந் துக
ந்துறைந்தப்—புறத்துளதா னமும்பணிந்து புற்றிடத்தெம்- புனிதரடி போற்றியினி தமரு
ங்காலை ௱௰௨- ௮௪௨

கால்மலையத் தணைந்துவந்து வீசுங்காலைக்- கமலையிலுத் திரத்திருநா ளணுகநம்பி—
சேல்குழைக்கு நோக்கியடி யவர்கட்கெல்லாஞ்- செம்மைவழி பாடுசெயச் செம்பொன்
வேண்டி—மால்புவியுட் புகுந்துமயன் பறந்துங்காணா- மன்னர்புக லூரணைய வுன்னியந்த
ப்—பால்பொருவு மொழிப்பரவைக் குரைத்தரூர்வாழ்- பரமனடி தொழுதகன்று விரவிற்
சென்றார்... ... ... ௱௰௩- ௮௪௩

சென்றுபுக லூரணைந்தச் செல்வன்பாதஞ்- சேவித்து வருகருமஞ் செப்பிநேரே—நின்று
தமிழ் பாடியரு ளாதுகண்டு- நீங்கியொரு மடத்திரவு தூங்கவாங்கே—பண்டுதிருப் பணிக்க
மைத்த பழமட்கல்லே- பசும்பொன்னாய்க் கொள்கவெனப் பகர்ந்ததுங்கேட்—டின்றுணாது க
ருணையறி யாதிரங்கு- மிழிவுடையேற் களித்தொளித்து மொழிந்தாயென்றே ௱௰௪- ௮௪௪

என்றலைவைகைக் கொண்டிறைமுன் சென்றுதம்மை- யேபுகழ்ந்தென் னொருபதிக மெ
டுத்துப்பாடி—நின்றருள்பெற் றகன்றான்வாழ் பனையூரெய்தி- நிருத்தமுட னெதிர்காட்சி
கொடுப்பக்கண்டு—நன்றரங்கி லாடவல்லா ரவரேயென்று- நற்றமிழ்ப்பா மாலைபுனைந் த
ணைந்துள்புக்கு—வொன்றுமுணர் வொடுபணிந்தங் குளரோடேகி- யோங்கெயில்சூழ் திரு
வாரூர்ப் பாங்குசென்றார்... ... ... ௱௰௫- ௮௪௫

சென்றிறையைத் தொழுதிலஞ்சேர் தவைகளெல்லாஞ்- செப்பிநிதி கைக்கொடுத்
தங் கொப்பிவாழ்நா—ளண்டர்நிறை பிறபதியு மணைந்திறைஞ்சி- யாரூரிற் பார்புகழத் தே
ரூர்கின்ற—நன்றுமுதற் கண்டுமகிழ்ந் துறையுங்காலை- நன்னிலஞ்சென் றடிபணிந்தங் கெ
ங்கும்போற்ற—விண்டுபர வையபற்குரைத்தார்ந் தரன்றாள்போற்றி- விடைகொண்டா ருடன்
செல்வோர் மிடைகின்றாரே ௱௰௬- ௮௪௬

மிடைகின்ற வடியர்முதற் றொடர்ந்துசெல்ல- மிக்கசிறப் புடன்விரைந்தப் பதியையெ
ய்தி—யடைகின்றார் பவமொழிப்பா னடியிற்றாழ்ந்து- வார்வமுடன் தண்ணியில்வெம் மையி
னானென்றே—புடைநின்ற தேவர்களு மிடைசென்றேற்றப்- புகன்றருள்பெற் றகன்றமர்ந்து
வைகுஞ்சிற்றி—தடையின்றி யிருநிலமு நிறைதலாலித்- தரணிபுகழ் மிழலையுளார் பரவி
வந்தார் ௱௰௭- ௮௪௭

பரவிவரு மந்தணரா தரவிற்றாழ்ந்து- பகர்ந்திடுமா றப்பதியைத் தொழவுகந்தே—
விரவியெழுந் தணைவதுகண் டவர்முன்சென்று- விண்ணவர்நா டெனவிளக்கி யுண்மையோ
டத்—தரையினடைக் காவணப்பா வாடையிட்டுத்- தத்தமனை யாதிகளை சுற்றத்தோடு—
நிரைநிரையா யெதிர்கொடுவந் திறைஞ்சியெங்கு- நிறைந்தருமா மறையொடுவாழ்த் தறை
ந்துபின்னும் ௱௰௮- ௮௪௮

அறைகுவதென் சொலநம்பி யடியிற்றாழ்ந்த- வந்தணர்க்கு வந்தனமா திகள்புரிந்து—
முறைதொழுதா லயத்தணைந்து விமானம்போற்றி- முதல்வனெதிர் சென்றரிகண் மலரு
முட்டா—ணிறையலரு மணியடிக்கீ ழிறைஞ்சிமுன்ன- நின்றிருவர்க் கன்றொருகா சளித்
துநாளு—மறையவர்க டொழவமர்ந்த திறமுங்கூர்ந்தம்- மாதவர்தாம் பதிகமெடுத் தோதி
னாரே ௱௰௯- ௮௪௯

ஓதியருள் பெற்றகன்றங் குளர்வருந்து- மொருமையுணர்ந் தமர்ந்தருந்தி மறுமைதீ
ர்ப்பாற்—காதியெனும் வாஞ்சியத்தை யணைந்துவாழ்த்தி- யணியரிசிற் கரைப்புத்தூர் நறை
யூர்போற்றி—நீதியெலாந் தருசித்தீச் சரம்பணிந்து- நிமலனுறை புத்தூர்சென் றிறைஞ்சி
நின்றோர்—வேதியராம் புகழ்த்துணைவெம் பிறவிதீர்த்த- வேதியர்சீர் பரவிவிடை கொண்டு
போந்தார்... ... ... ௱௨௰- ௮௫௰

போந்துமருங் குளபதிகள் பணிந்துமூலர்- பொதியையணை யாதமர்ந்து கதியடை
ந்த—தோர்ந்துதிரு வாவடுதண் டுறையையெய்தி- யொப்பிலா மணியடிக்கீ ழிறைஞ்சிநி
ன்று—தேர்ந்தவகை மறையவனென் றெடுத்துப்பாடித்- தெருளுடையோ ருடன்கலந்து
டாடிவைகி—யார்ந்தருள்பெற் றகன்றுபொன்னித் தென்பாலாங்கே- யரனுறையுந் தலம்பல
வும் பரவிச்சென்றார் ௱௨௧- ௮௫௧

சென்றுதிரு விடைமருதைச் சேவித்தேற்றிச்- செல்லுவர்நா கீச்சுரஞ்சேர்ந் துமை
யோர்பாகங்—கண்டுருகிப் பிறையணிவா ணுதலாளென்று- கருதரிய தமிழ்ப்பதிகம் பாடி
ப்போற்றி—விண்டுசிவ புரமுதற்பல் பதிவணங்கி- விண்ணவர்சூழ் கலையநல்லூர் நண்ணித்

தாழ்ந்து—நின்றுகொம்மை மருவுமெனப் பாவிநீங்கி- நிமலர்குட மூக்கணைந்தார் விமலர் தோழன்... ... ... ளஉஉ- அடுஉ

தோடமெலாந் தொலைக்குநதி பனிரெண்டாண்டு- தொகைப்படிஞேர் கரற்றனதூழ் தொலையவந்தே—யாடுமகா மகத்தீர்த்த மாடியாங்கே- யண்ணல்பதி பலதொழுதப் பதிக்கெலாமுன் —னீடுகுட மூக்கிறைசிர் பாடிப்போற்றி- நீங்கரிதி னீங்கிவலஞ் சுழிநல்லூரன்—போடுபணிந் தங்குளதா னமும்வணங்கி- யொருசேரற்றுத் துறையணைந்தார் பரவச்சார்வார் ளஉங- அடுங

பரவியழ னிரொழுகி யனையவென்னும்- பதிகத்தைப் பணிந்துபல பதியுந்தாழ்ந்தா—தரவிஞெடு கண்டியூ ரெய்திப்பாடித்- தபிருடனே யாறுமுடி மீதிலாட்டி—விரவுபவற் கவனியொடு விண்ணளிக்கும்- விடைடவனே யாறணைந்து வழிபட்டேற்றி—யரவணிவான் பூந்துருத்தி புகுந்திறைஞ்சி- யண்ணலுறை திருவாலம் பொழிலைச்சேர்ந்தார் ... ளஉச- அடுச

சேர்ந்தபதி தொழுதிரவு துயில்வார்முன்பு- சென்றுமழ பாடிசெல நினையாதென்னென்—றூர்ந்துகன வினிற்றனது கோலங்காட்டி- யருளவுணர்ந் தெழுந்துபொன்னி வடபாலங்கு—போந்துபொன்னாரென்றெடுத்துப் பாடிவைகிப்- போற்றியருள் பெற்றகன்றப் பொன்னிமாடு—சார்ந்திருபா லுளதலமும் பணிந்தேமேல்பாற்- சார்ந்ததிரு வானைக்கா வணைந்தாரன்றே... ... ... ளஉரு- அடுரு

அணைவதுகேட் டார்ந்தெவரு மெதிர்கொளச்சென்- றண்ணல்முனந் தொழுதெழுந்தாரணங்கவென்றே—மிணையில்திருப் பதிகமெடுத் தடியரைப்பாற்- திறையெமையு மாளுடையரெனப்புகன்றத்—துணையடியுட் கொண்டகன்று வுறையூர்போற்றித்- துறைநீரில் வழுவுமணியாரம்பொன்னி—யணைபவர்மஞ் சனக்குடஞ்சேற் தாட்டும்போது- வணிந்தரசற் கருள்திறமுமுரைத்தகன்றார்... ... ... ளஉசா- அடுசா

அகன்றுபல பதிதொழுது பரவிப்பாச்சி- லாச்சிரமஞ் சேர்ந்துதனந் தருகவென்று—புகன்றருளா துணர்ந்திறைமற் றிலையோவென்னப்- புகன்றிடுமுன் விரைந்துநிதி யளிக்கப்பெற்றூர்ந்—தகந்தளர்ந்தன் பொடுபதிக மிரப்பிப்போற்றி- யணைந்துமருங் குளபதியு மீண்டுமாங்கே—யுகந்தமர்ந்து போந்துளதா னமும்பணிந்தே- யுத்தமன்வாழ் பைஞ்ஞீலி யுத்தாரென்றே ... ... ளஉஎ- அடுஎ

உத்தபதி தொழுதெழுகா ருலவுமென்ன- வுவந்துதமிழ் பாடிவிடை கொண்டுமீண்டங்—குத்தவடி யார்களுடன் கலந்துவைகி- யுண்மையொடீங் கோய்மலையே முதலாயுள்ள—வுத்தமதா னம்பலவும் வணங்கிக்கொங்கி- லுளபாண்டிக் கொடுமுடிசேர்ந் திறைஞ்சிநேர்நின்—றுத்துமற்றுப் பற்றெனக்கின் றெனவெடுத்தே- யுரைத்தருள்பெற் றகன்றமர்ந்தப் புறத்தணைந்தார் ... ... ளஉஅ- அடுஅ

புறத்தணைந்தங் குளபதிகள் பணிந்துபேரூர்- புகநடமுன் கண்டபடி தோன்றக்கண்டத்—திறத்தையுனி மகிழ்ந்தவையுஞ் சிறப்பித்தேற்றித்- திருவருளைத் தொழுதரிதி னீங்கிப்போந்தப்—புறத்துளகற் சுரமலைபன் னதிகடந்து- புனிதர்தலம் பலவிறைஞ்சி நினைவார்பாவ—மறத்திகழ்வெஞ் சமற்கூட லணைந்துபோற்றி- யண்ணலுறை கற்குடியை நண்ணினாரே ... ... ளஉகூ- அடுகூ

நண்ணியவப் பதிதொழுதங் கெங்கும்போற்றி- நாதர்திரு வாறைமேற் றளிசென்றேற்றி—யெண்ணியபல் பதிபணிந்தின் னம்பர்வாழ்த்தி- யெய்துமுனந் தொழப்போது மென்றுரைத்தே—புண்ணியன்வாழ் புறம்பியஞ்சேர்ந் திறைஞ்சிவைகிப்- புறதானம் போந்தொருகூடலையாத்துறை—நண்ணிவழி காட்டிடச்சென் றவையுமாங்கே- நவின்றமுது குன்றிறைமுன் பெய்திநின்றே ... ... ளஙய- அசாய

நின்றுநஞ்சி யிடையென்றோர் பதிகம்பாடி- நினைத்தகுறிக் கருள்புரியா தொழியுமுன்மை—கண்டுமெய்யி லெனும்பதிக முரைப்பக்கேட்டுக்- களித்தளித்த பன்னிரெண்டா யிரம்

பொன்னைக்கைக்—கொண்டிவையை யாங்குதர வேணுமென்றே- கோறுவதற் கருள்வழிமுத்
தாற்றிலிட்டுச்—சென்றனரா ரூற்குளத்தி லெடுத்தன்றுண்ட- செயலறிவே னெனத்திதாமு
தம் மச்சங்கொண்டே ௱௩௧- ௮௬௧

கொண்டகுறிக் கருளுமுது குண்டகன்றக்- கோலமுறச் செலவிடுகூத் தனைநினைந்து
—சென்றுபல் பதிபணிந்து சடம்பூர்போற்றிச்- செல்பொழுதவ் வெல்லைமுதற் றொழுதுபு
க்கு—மன்றினெதிர் நின்றனையத் தனையுநோக்கி- மடித்தாடு மடிமைக்கண் ணென்றெடு
த்தார்ந்—தன்றொருபே ரூரினிற்கண் டதுஞ்சிறப்பித்- தகமலரப் புகன்றுபர வசமடை
ந்தார் ௱௩௨- ௮௬௨

அடைந்திடுஞ்சி வேசுவரயெச் சகத்துக்கெல்லா- மருள்வதற்கே நடம்புரிந்தங் கமர்
வோன்பாலிற்—கடைந்தெடுத்த நெய்யெனத்தன் வடிவைநோக்கிக்- கருதவுரு வாயுலவிற்
கருதுமாறிங்—கடைந்தலவு வார்தனது வசமடைந்தா- லருளாரோ வேணதெலா மருளப்
பெற்றன்—புடைக்குளத்திற் பெருகியநீ ரருவிபாய- வுணர்ந்தனைய வகைதுதிக்குங் குணமேற்
கொண்டார் ௱௩௩- ௮௬௩

குணங்களெலா முணர்ந்திமையோ ராதிபோற்றக்- குறைநிரப்பு மாறருளப் பெற்றகன்
றப்—பணங்களெலா மாளின்மிசை முனம்விடுத்துப்- பரவையிடஞ் செலநினைந்தா ருரைநா
டிக்—கணங்களெலாஞ் செயமறையோ ராயங்கூர்வோர்- களித்திரங்கு வதற்கிசைந்தங் கமர்
ந்துபோந்து—மணங்களெலாங் கமழ்பொழில்சூழ் பதியனூர்மேல்- மகிழ்ந்தணைந்தார் தொடர்
ந்தெவரும் புகழ்ந்தணைந்தார் ௱௩௪- ௮௬௪

புகழ்ந்தணைவா ரோடுகருப் பறியலூரிற்- புனிதருறை கோக்குடிக்கோ யிலையணைந்
தன்—றகங்கொளுங்கூற் றுதைத்தவடிக் கீழ்வணங்கி- யனையவகை துதித்தருள்பெற் றகன்
றபின்று—முகந்தடைந்து சிம்மாந்தென் றெடுத்துள்ளன்போ- டுரைத்துவிடை கொண்டும
ண்ணிப் படிக்கரைக்குட்—புகுந்திறைஞ்சி முன்னிவனென் றியம்பிவைகிப்- புறம்போந்து
வாழ்கொளிபுத் தூர்கடந்தார் ௱௩௫- ௮௬௫

கடந்தபிற கப்பதியைத் தொழநினைந்தே- களித்தணைந்து தலைகலனென் றுரைத்துப்
போற்றி—நடந்திறைவாழ் கானாட்டு முள்ளூர்சேர- நாதனெதிர் காட்சிகொடுத் தருளப்பெ
ற்றுத்—தொடர்ந்தணைந்து வளவாயென் றெடுத்துப்பாடித்- தொழுதெதிர்கொள் பாடியினை
யெய்தும்போதே—படர்ந்தபெருங் காதலுடன் பரவிப்புக்குப்- பணிந்தரன்வேழ் விக்குடியை
யணைந்தாரென்றே... ... ... ௱௩௬- ௮௬௬

அணையுமுன மக்கோலங் காட்டக்கண்டே- யடிதொழுது மூப்பதிலென் றெடுத்துப்
பாடி—யிணையில்பல பதிபணிந்தங் கெய்தக்கேட்டார்ந்- திமையவரே முதலெவரு மெதிர்
கொளச்சென்—றணைந்துமணிப் புற்றிடத்தெம் மடிகள்முன்சேர்ந்- தடிதொழுது துதித்தரி
யா சனத்தமர்ந்த—துணைவரெதிர் சென்றுரிய துரைத்துப்போற்றித்- தொடர்பெருங்கா தலிற்
பரவை மனையைச்சார்ந்தார் ௱௩௭- ௮௬௭

சார்ந்திடுமு னணிசெய்தெதிர் கொளுஞ்சிறப்புஞ்- சார்ந்தவுடன் றொழுதுவழி படுங்குறி
ப்புந்—தேர்ந்துரைப்ப தாரெவற்கும் விருந்துமற்றுந்- தெரிந்தளித்தேற் றார்ந்ததுந்தான்
பரிந்தாரூரர்—சார்ந்திடப்பூ வணையின்மிசைப் பரவைதாழ்ந்திச்- சகநெறியு முனிவரலென்
றவமோவென்னக்—கூர்ந்தினிய துரைத்துநிதி கொடுத்திருத்திக்- குறைவறநன் முறைபுரிந்த
ங் குறைந்திருந்தார் ௱௩௮- ௮௬௮

இருக்குநாட் பலபதிசென் றங்கங்கீச- னிருமையுந்தந் தாண்டதெலாம் பரவையற்
கார்ந்—தருக்கமோ டுரைத்துமுது குன்றிற்பெற்ற- துத்தவகை மொழிந்திடவு முண்மகி
ழ்ந்தோ—திருக்குநான் கையுந்தமிழா லியம்பவல்லீ- ரிதுவெனு வெனுமுனுணர்ந் தெவரு
ங்காணப்—பெருக்கமோ டெடுத்தளிப்போம் போதுமென்றே- பெயர்ந்துசென்றார் தேவரு
மார்ந் துயர்ந்துசென்றார்... ... ... ௱௩௯- ௮௬௯

சென்றரியா சனத்தமர்ந்த தேவதேவன்- சேவடிக்கீழ்ப் பணிந்தருள்பெற் றகன்றுமே
ல்பா—லின்றமுள திருக்குளத்து வடகீழ்த்திக்கி- லிழிந்துதட வியுங்காணு திரங்கிநங்கை
—கண்டுமகிழ்ந் தாற்றிலிட்டுக் குளத்திற்கொள்ளக்- கருதலரு ளோவெனவவ் வுரையுங்கே
ட்டு—நின்றமுது குன்றரையே நினைந்துநொந்தன்- னிதிபெறப்பொன் செய்தவென்றோர்
பதிகம்பாட ௱௬௰- ௮௭௰

பாட்டிசைகேட் டிடுபரிசைத் தானேபின்னும்- பாட்டிசைகேட் டடப்பரிந்தார் பரம
னெந்தை—வாட்டடங்கண் ணுணைசெய் வருத்தத்தாலவ்- வாறுணரார் போலவுமீக் கூற
லுற்றார்—நாட்டமிது வாகிலிவர் நாலிரண்டு- நவில்வதுகேட் டேனளிப்பார் புவிகளாதி
—யாட்டிவைக்குங் கூத்தாயின் னங்கைமுன்ன- மருளெனக்கூர்ந் துரைத்தபின்பொன் றிர
ளளித்தார்... ... ... ௱௬௧- ௮௭௧

அளித்திடக்கண் டார்ந்தடையக் கரையிலேற்ற- வமரரலர் தூற்றுலகு போற்றமேகத்
—தொளித்திலகு மின்னெனவம் மலர்மழைக்குள்- ளொளித்துநம்பி யருகுவந்து பரவைதாழ்
ந்து—களித்தனைய வகைதுதிப்ப வடித்தலத்துக்- கடவுளொரு வாணியென வரனீர்பூவிற்
—குளித்தெழுமா ரூர்பொன்னு மூலமுங்கைக்- குடுத்துரைத்துப் பாற்றுரையு மடுத்தத
தென்றூர் ௱௬௨- ௮௭௨

என்றவகை பாற்றொருமாக் குறையெனக்கேட்- டேற்றினூர் மிகவருந்தித் தோற்ற
மெல்லா—மொன்றிலடங் குவகால மளவுந்தத்த- மொழுகுநெறி வழாதுசெல முழுதுநா
டி—மன்றினடம் புரிபரம்நோக் கியபின்கூர்ந்து- மாத்தொக்கு மென்றவுடன் மகிழ்ந்து
வாங்கி—நன்றெனப்பொன் றிரளையெலா மாளிலேற்றி- நங்கையர்முன் செலவிடுத்தங் கணர்
பாற்சென்றூர் ௱௬௩- ௮௭௩

சென்றுதாழ்ந் தனையவகை துதித்துப்போந்தச்- சேயிழைமா ளிகையணைந்தங் கிய
ற்றும்யாவுங்—கண்டுகேட் டுண்டுமிற்று வைகிநாளுங்- காலமெலா மாலையஞ்சென் றிறை
ஞ்சியேற்றி—மன்றுளார் செயலையுனி யடியாரோடு- மகிழ்ந்துறையுங் காலொருநா ளிறை
முன்பெய்தி—நின்றுதான் றணிவுபொருள் வேண்டிப்பாடி- நிமலனருள் பெற்றகன்றங் கமர்
ந்தார்சின்னுள் ௱௬௪- ௮௭௪

அமர்ந்தவ்வா றொழுகியவா ரூர்பின்னு- ளரன்மகிழும் பிறதானந் தொழநினைந்தங்
—கமர்ந்துறையும் படிபரவைக் குரைத்துச்சூழு- மனைவரொடா லயத்தணைந்து முடிபுனை
ந்தங்—கமர்ந்திலங்குந் தியாகேசன் சரணிற்றாழ்ந்தார்ந்- தனையவகை துதித்தகன்றம் மு
னைவர்மேவி—யமர்ந்திடுபல் பதிபணிந்து நள்ளாறெய்தி- யடிதொழுது கடவூர்சென் றணைந்
தாரென்றே ௱௬௫- ௮௭௫

என்றுமடி யார்களிடத் தணுகாவண்ண- மெமனையுதைத் தருளியசே வடியிறைஞ்சி
—நின்றுபொடி யார்மேனி யெடுத்துப்பாடி- நிமலர்மயா னமும்பணிந்து மருவாகொன்
றை—யென்றுரைத்து வலம்புரத்தை யணைந்தார்ந்தேற்றி- யெய்தரிய சாய்க்காடு திருவெ
ண்காடு—சென்றுநனி பள்ளிசெம்பொன் பள்ளியாதி- சேவித்து நின்றியூர் சேர்ந்தாரெ
ன்றே ௱௬௬- ௮௭௬

சேர்ந்தபதி தொழுதிருக்கு வேளூரெய்திச்- சேவித்துச் செல்பவர்தா நீடூர்சாரா—
தார்ந்தணையும் பொழுதுநினைந் தார்வத்தோடென்- னத்தாடி பணியாது விடலாமேயென்
—றோர்ந்துரைத்துள் புக்கிறைஞ்சி யுவந்துவைகி- யொப்பரும்புன் கூர்வணங்கிக் கோலக்
காவைச்—சார்ந்திடுமு னெதிர்தோன்றத் தாழ்ந்துசென்று- சண்பைபருக் கருள்வதுமுன்
புகன்றுபோந்தார்... ... ... ௱௬௭- ௮௭௭

போந்துபுக லியைவலங்கொண் டிறைஞ்சிஞான- போனகரை நினைந்தேற்றிக் குருகா
வூரைச்—சார்ந்திடுபோழ் தறுபசிதேர்ந் தமுதுகொண்டு- சார்வதற்குத் தடம்பந்த லமை
த்துயாவுந்—தேர்ந்தமுதிர் மறையவரா யெதிரமர்ந்து- தெருளுடையான் வந்தவுட னினி

றாகூறி—யார்ந்தனமீந் தூல்டுறங்கி னலைவகரப்பித்- தலருமறைந் தனரெழுந்து சிவனென் ரோர்ந்தார்... ... ... ௱௪௮- ௮௭௮

ஓர்ந்துணர்ந்தென் செய்குவர்பின் னுருகியுள்ளத்- தொருமையுட னித்தனையா மாற்ற மெல்லாந்—தேர்ந்திலனென் றுரைத்தணைந்து தொழுதமாடத்- தேவுறையுந் தலங்களும் போய்க் கழிப்பாலைக்கே—சேர்ந்திறைஞ்சி யொருதில்லை சார்ந்துள்புக்கச்- செல்வனடி பணிந்தருள்பெற் றரிதினீங்கி—யார்ந்துதினை நகர்முதற்பல் பதியுந்தாழ்ந்தே- யாவலுட னுவனூ ரணைந்தாரென்றே... ... ... ௱௪௯- ௮௭௯

அணைவதுகேட் டணிசெய்தெதிர் கொள்வாரோடங்- கணைந்திறைஞ்சிக் கோவலனூன் முகனென்றேற்றி—யிணையில்குலத் தவரொடிலி திருந்துபோந்தார்ந்- திறைவர்பதி பலவணங்கிக் கழுக்குன்றெய்தி—துணைவனடி தொழுதுருகிப் பாடிவைகித்- தாயதிருக் கச்சூரி னுலக்கோயி—லணைந்துபணிந் தகலினுறு பசியாற்கூட- வணைபவரு மின்றிமதிட் புறத்தமர்ந்தார் ௱௫௰- ௮௮௰

அமர்வதுதேர்ந் தரனொருவே தியராயத்தோன்றி- யமுதுபசிக் களிக்கின்றே மெனவுரைத்தங்—கமர்மறையோர் மனைகடொறு மணைந்திரந்தார்ந்- தன்னமுதற் குணர்ந்திடக்கூர்ந் தேற்கருந்தி—யமர்ந்திடலவ் வந்தணர்தாங் காந்தார்பின்னே- யறிந்தமுது வாயோரி பென்றெடுத்துள்—ளமர்பவர்முன் சென்றிறைஞ்சிப் பாடியாடி- யனையவகை துதித்தருளப் பெற்றகன்றார் ௱௫௧- ௮௮௧

அகன்றுபல பதிபணிந்தார்ந் தேகம்பத்தை- யணைவதுகேட் டணிசெய்தெதிர் கொள்வாரொடும்—புகுந்தனைய வீதிகளுங் கடந்துள்புக்கப்- புனிதரடி தொழுதுருகிப் பாடிமீண்டு—முகந்தமர்ந்து காமக்கோட் டம்பணிந்து- வுண்மையுடன் மேற்றளிசென் றிறைஞ்சியன்பு—மிகுந்தனிப்பொன் வேண்டிநெய்யென் றெடுத்துரைத்தே- மிகுநிதிபெற றகமகிழ்ந்தங் கினிதமர்ந்தார்... ... ... ௱௫௨- ௮௮௨

இனிதமர்ந்தங் கனேகதங்கா பதத்தையெய்தி- யிறைஞ்சிநின்று தேனெய்யென் றெடுத்துப்பாடிப்—புனிதருறை பிறபதியுந் தொழுதார்ந்தம்மை- பூசைகொளு மீசனைப் போற்றிப் போந்து—பனிமதியார் விடையிலெனும் பதிகங்கூறிப்- பனங்காட்டூர் பணிந்திறைமாப் பேறு வல்லம்—கனிவுடன்றாழ்க் தங்குளதா னமும்வணங்கிக்- கடிதிறிருக் காளத்தி மலையைச்சேர்ந்தார் ௱௫௩- ௮௮௩

சேர்ந்தனங்கு சென்றுடென் றெடுத்துப்பாடிச்- சேவித்துக் கண்ணப்பர் பாதம்போற்றி—யார்ந்தடியா ருடன்கலந்து வைகுநாளி- லதன்வடபா லாறுறையுந் தானமெல்லாங்—கூர்ந்துசெலா துனித்தொழுது பாவியங்குங்- கும்பிட்டு மீண்டுபல பதிபணிந்தே—சார்ந்துபுணரிக்கரைமே லொற்றியூரைச்- சார்ந்தனரென் றுலெவர்தான் தேர்ந்திடாதார் ௱௫௪- ௮௮௪

தேர்ந்துநக ரணிசெய்தெதிர் கொளுஞ்சிறப்பைத்- தெரிந்துரைப்ப தார்வருந்தே வடியாரோடு—மோர்ந்தாசு கொளும்வரிக்கு நெருக்கியேட்டி- லொற்றியூர் நீங்கலென வெழுதுவார்முன்—சார்ந்தனைய வகைபணித்து பாவியென்னுஞ்- சந்தவிசைப் பதிகமெடுத் தோதிமீண்டு—மார்ந்தவர்க ளுடன்கலந்து வைகிநாளு- மார்வமுட னேர்தொழுதங் கமர்ந்திருந்தார்... ... ... ௱௫௫- ௮௮௫

இருந்தொழுகு மாறொருநா ளிறைமுன்பெய்தி- யிறைஞ்சியகன் றம்மருங்கவ் விறைவனுக்கே—பொருந்துமலர் மாலைபுனை மண்டபத்துப்- போந்தடியா ரவைபுரிவ தலத்தன்பால்—திருந்தவையே புரிந்துதிரை நீக்கியீசற்- கிடத்தொடுத்த பணியவர்க ளிடத்தளித்துத்—திருந்துமிவ ருளமுமிக வருந்தநோக்கித்- திரைக்குள்மறைந் திடுமொருமா தரையுங் கண்டார் ௱௫௬- ௮௮௬

கண்டவுட னதிசயித்தம் மாதர்மீது- காதலொடங் குளரையுத்தென் னுளங்கவர்ந்து—கொண்டுமயல் கொளவிலங்கி மறைந்தயிப்பூங்- கொம்பனையா ராரென்னத் தம்பிராற்

கே—தொண்டுபுரி ஞாயிறுவே ளாண்குலத்துத்- தோன்றியக்காற் றெட்டுவரு மாண்டுதோறு
—நன்றிபற்ற லெவையுமுவந் துளமீசன்பா- லுடியழ குறவளர்ந்து நீடநீட ௱௫௭- ௮௮௭

நீடியபோ தங்களெலா நீங்கிமுன்னை- நிலைபுமிக வலையுமுறு கலையுமாய—நாடியபோ தத்
தொடுமன் னிலையினின்று- நாதனரு ளாலவைக ளோதாதாயந்து—கூடியபோ தத்துடன்றாய்
தந்தையுள்ளங்- குளிரவய தாறிரண்டும் வளர்ந்துசூழுஞ்—செடியர்போ தத்தியற்றுஞ் செய்
கையெல்லாஞ்- செய்துமணப் பருவமும்வந் தெய்துங்காலை ௱௫௮- ௮௮௮

எய்துவதற் கரியமக வியல்புக்கெல்லா- மேற்றவர்பால் மணம்புரிய வேணுமென்றச்
—செய்தியைத்தாய் தந்தையருன் னையிலுமந்தச்- செய்கைகுறித் தேவருவார் செப்பும்
போது—மெய்திகழுங் கோலமெலாம் வெவ்வேறாக- மேதினியில் வீழ்ந்துபுரண் டயர்வதல்
லால்—மைதிகழும் விடந்தலைமேற் கொண்டுசால- மயங்கியுயிர் விடுபவர்போற் றியங்கக்
கண்டார்... ... ... ௱௫௯- ௮௮௯

கண்டவுட னுற்றெடுத்தென் னென்றுகேழ்க்கிற்- கடவுளடி யாரொருவற் குரியேன
ல்லால்—மண்டலத்தி லொருவரையு மதியேனீசன்- மலரடிக்காம் பணிபுரிய வொற்றியூ
ரிற—சென்றுதவ முயல்வனெனச் செப்பக்கேட்டச்- செயல்புரியா விடிலுயிருந் தரியா
தெனனக்—கண்டவர்க ளிங்கழைத்துக் கொண்டுவந்து- கன்னிமட முதலமைத்து வைத்த
பின்னர் ௱௬௰- ௮௯௰

பின்னுலகத் தவதரியாப் பிறவியாதற்- பிஞ்ஞகற்காம் பணிபுரிந்து பணிவதெல்லா—மு
ன்னுவதற் கரிதென்று லவள்மீதன்மை- புள்ளவர்ப் பணிகொளுமோர் வள்ளலாய—சென்
னிமதி யணிபவர்பாற் செப்பியந்தச்- செயலறிவ தலதுமய லுறலென்னுகு—மன்னநடைச்
சங்கிலியார் செய்கையீதென்- றறைகுவதெ லாஞ்செவியி னிறையும்போது ௱௬௧- ௮௯௧

போதமகன் றருளாலிங் குதித்தவாறும்- போகமுறக் கமலினியே பரவையாகிப்—பேத
மிலா தனிந்திதைசங் கிலியாரான- பெருமையுமப் பரவையற்கா யுரிமையோடு—நாதனிர வி
னடந்து கூட்டிவைத்த- நலமுமெலாந் தோற்றியும்பின் னுலகர்போலம்—மாதர்மய லால்
மிகவும் வருந்தக்கண்டே- மாரனைந்து கணையுடன்வந் தவர்முன்னின்றுன் ... ௱௬௨- ௮௯௨

அவர்முனமின் றனங்கன்விடு கணையினாலவ்- வரிவையர்மேற் கொண்டமய லளவித்
தென்று—லெவரவையைத் திர்க்கவலா ரெம்பிரான்முன்- னேகியுமை யலதுதலைச் சுமை
யாய்நாளு—முவந்துநதி யையுஞ்சுமந்தீ ரும்மையல்லா- லுறுதுணையார் தொழுதுநறு மலர்
புனைந்து—தவமுயல்சங் கிலிக்குந்தா னவளையின்று- தந்திடுமென் றுரைத்தகன்றப் புறத்
திருந்தார்... ... ... ௱௬௩- ௮௯௩

இருந்தனைய வகையிரங்கல் பாற்கமாட்டா- திரவியகன் றனன்மதியும் வரவொழிந்
தான்—பொருந்துமனங் களுமவரும் பொருந்தனிற்கப்- பொருந்துவனே வந்தாத்திற் புவன
மெல்லா—மிருந்திடக்கூர்ந் தைந்தொழிலும் பரிந்துதானே- யியற்றவல கூத்துடையான் த
னித்துவந்தே—யருந்தவஞ்செய் சங்கிலியைத் தந்தோமென்றாந்- தருளியுட னங்குமெழுந்
தருளினனே ௱௬௪- ௮௯௪

அருளியவா றுடன்படச்சங் கிலிக்குச்சொல்ல- வடிதொழுதப் பணிதனது முடிமேற்
கொண்டு—தெருண்மறையோ ராங்குவந்து கனவிற்றோற்றுந்- தேவனே யாவதொண்டுண்
டதற்குநேரா—யருளுவரே லாமெனக்கேட் டுவந்தென்னென்ன- வாரூரில் மகிழ்ந்துறையா
தரவைநீற்றெப்—பொருளுடையீ ருமதடிவிட் டகலாதிங்குப்- பொருந்துவதைத் தெரிந்து
ரைத்தாற பொருந்துமென்றாள் ௱௬௫- ௮௯௫

என்றவுடன கன்றவ்வா றறிந்தார்போலு- மெய்தியவைக் கொருசபதமெம்முன்கொள்
க—வென்றவுடன் சங்கிலிநன் றெனக்கேட்டீச- னேகியவர் பாலணைந்து தாகத்தோடென்

—னென்றவுட னகலாமைக் கவளுங்காண- வெம்முனைசீ கூறியபி னுண்மையென்ற—ளென்ற
வுடன் கூர்ந்ததற்கா யனுகுலங்காளி- யெழுந்தருளி மகிழடிசேர் திருப்பீரென்ன ௱௬௬- ௮௬௬

என்னவதி சயமதற்கு மிசைந்ததல்லா- லேந்திழைபா லணைந்தவையு மியம்பிச்சென்றா
—மின்னலையா ளுடனெழுந்து நடந்ததெல்லா- மீக்கூறிச் சேடியர்கட் காக்கமெய்திச்—சொ
ன்னபடி காணமிகு விரைவினோடு- சோமசே கான்பள்ளி யெழுச்சிக்கென்று—முன்னனையு
மாதிகுலை யுடனூர்ந்தன்று- முதல்வர்திருக் கோயில்புகா முனமாரூரர் ... ௱௬௭- ௮௬௭

முன்னணைந்தார்க் கெதிர்பார்த்து நின்றம்மாது- முனம்வரவுங் கருமமெலாஞ் சொல்
லிநாதன்—முன்னணைந்தவ் வாறுரைப்பேன் போதிரென்ன- முத்திழைபா ருண்மகிழ்ந்தோர்
பாலொதுங்க—முன்னனைசே டியராங்கேன் போவதிந்த- முதிர்மகிழ்சேர் தியம்புவதே
போதுமென்று—முன்னணைந்தோர்க் தருளையுனி வலம்வந்தனரூள்- முகநோக்கி யுனைப்பிரி
யே னெனமொழிந்தார் ௱௬௮- ௮௬௮

மொழிந்தபிற கவள்பயந்து மிவர்நயந்து- மொழிந்ததெலா மேன்மொழிவ தெழுந்து
வெய்யோ—னொழிந்தபிற கொத்திபூ ரிறையங்குள்ளார்க்- கொருமையுட னுரைத்தவகை யிர
வுநன்றாய்க்—கழிந்தபிற கடியார்முதல் மகிழ்ந்துவந்தே- கன்னிமடத் தணைந்தவட்கு நம்பிக்
குஞ்சேண்—பொழிந்தபிற கன்றிவர்பொன் மணிகளாதி- பொழிந்துமணஞ் செய்தபின்வா
ன் பொழிந்ததெல்லாம் ௱௬௯- ௮௬௯

எல்லவரு மகிழ்வெய்த வொத்தியூரி லெம்பிரான் றோழர்பொலா வெனையுமாண்ட—வல்
லவர்சங் கிலியைமணம் புணர்ந்தபின்னர்- வளர்காத லுடனவளோ டளவளாவிச்—செல்ல
வருநாயிறுவே ளாளராதி- செய்பணிசெய் தேர்தொழுது வைகநாளு—நல்லவர்க ளுடன்க
லந்து கோயிலெய்தி- நம்பனடி பணிந்தேற்றி யின்பமார்ந்தார் ... ... ௱௭௰- கா

ஆர்ந்தமரு நாள்வசந்த காலமெய்த- வாரூரிற் தியாகேச ருழித்தேரிற்—சார்ந்திலங்குங்
கோலமலாற் பரவையங்கு-சார்ந்துபணி சிலமுமுன் கண்டுசால—வார்ந்தவகை நினைந்தருகி
யணையவஞ்சி- யார்வமுடன் பத்திமையென் றுரைத்துவகி—னோர்ந்தொருநா ளுன்னியுட
னெழுந்துசெல்வா- விமலனடி தொழுதகன்றா கமலைக்கென்றே... ... ௱௭௧- கா௧

என்றுமக லாதுரைத்தவ் வெல்லைதப்பி- யேகவுடன் கண்மறைந்து சோகமெய்தி—
நின்றுவருந் தலைநினைத்தார் சகிப்பதவ்வூர்- நிமலனைமே தொழுதழுக்கென் றெடுத்துப்பா
டிக்—கொண்டுழல்வார்க் கருள்வழிமுன் குறித்ததேயுட்-கொண்டகன்று தொண்டர்வழி கா
ட்டச்சென்று—பண்டுதொண்டை மானிறைஞ்சு முல்லைவாயிற்- பணிந்துவிழி மறைத்ததை
யும் பரவிப்போந்தார் ... ...௱௭௨- கா௨

போந்தெதிர்கொள் வாரொடுவெண் பாக்கமெய்திப்- பொற்றிவிழி பெறப்பாட லூற்று
க்கோலொன்—றுந்ததுகண் டிருந்தீரோ வெனவுளோமென்- றியம்பவும்பின் பயந்துக
யம் பெறப்புகன்று—சேர்ந்துமுறைப் பாலைப்பார் போன்றுநின்று- நிறைமொழிமா லைப்
பதிகம் பரவிப்பின்னும்—கூர்ந்திறைவ னருளிருந்த தென்கோலென்று- கும்பிட்டுப் பழைய
னூர்குறுகினரே ... ...௱௭௩- கா௩

குறுகவுங்கூர்ந் தம்மைதலை யால்வலங்கொள்- கூத்தர்திரு வாலங்கா டணையவஞ்சி
—முறுவனகை யொடுநடஞ்செய் முத்தாவென்றே- முன்பரவிப் பணிந்துறல் தொழுதுகா
ஞ்சி—குறுகவெதிர் கொள்பவரோ டணைந்துள்புக்குக்- குன்றிளஞ்சே யுறைகோயில் கும்பி
ட்டேற்றி—யுறுதுயர்தீர்த் தருளாயே விழுதையென்றே- யுரைத்திடுவே னெனப்புகன்றே கம்
பமுற்றார்... ... ...௱௭௪- கா௪

உத்தனைக்கண் டிறைஞ்சவிழி யருளென்றேற்ற- வடனிடக்கண் கொடுத்தழலைச் சுடட்
டுக்கோல—மத்தர்முனங் காட்டிடக்கண் டார்ந்துபோற்றி- யாலந்தா னுகந்தவனென் றிய
ம்பப்பின்பு—சித்தமகிழ்ந் துமையொடு விளங்கத்தாழ்ந்து- சிறந்தகல்போழ் தந்தியுரண் பக

லுமென்றே—யத்தர்தென்னா ரூரரிவனைத் துரைத்தகன்றோர்ந்- தங்குளதா னமும்பணிந்தா மாத்தூர்சேர்ந்தார்... ... ... ௱௭௫- கா௫

சேர்ந்தபதி தொழுதன்னூ டகன்றுபொன்னி- செறிந்துறைநீர் நாட்டினாத் துறையை மேவி—யார்ந்துமலர் கலைவாயென் றெடுத்துப்பாடி- யாங்குளதா னமும்பணிந்தன் னதிகண் டாடித்—தோர்ந்தெதிர்கொள் வார்களொடு கலந்துசித்தந்- தெளிந்துமகிழ்ந் தாவடுதண் டுறையையெய்திக்—கூர்ந்தனையல் லாலெனக்கா ருறவென்றேத்திக்- கும்பிட்டுக் குற்றாலத் துத்தாரென்றே ... ...௱௭௬- கா௬

உத்ததிருத் துருத்திபிறை பாதம்போற்றி யுறுபிணிதீர்க் கருளெனவும் வடகுளத்துப்—பத்தியுடன் முழுகெனுமா றனைத்துமூழ்கிப்- பாரறியச் சார்ந்தபிணி தீர்ந்தெழுந்தார்ந்—தத்தர்முனஞ் சென்றிறைஞ்சி மின்னுமாமென்- றருந்தமிழ்ப்பா மாலைபுனைந் தணிந்தகன்று—சித்தமகிழ்ந்தெதிருளதா னமும்பணிந்து- சீர்வளரா ரூரருகு சேர்ந்தாரென்றே ... ௱௭௭- கா௭

என்றுனைக்கண் டேற்றுவனென் றிரங்கிப்போந்தவ்- வெல்லைமுதற் றொழுதணைந்து தூய்வாயார்முன்—சென்றிறைஞ்சித் தூய்வாயா ரென்றெடுத்துச்- செப்பியருள் பெற்றகன்றுமூலட்டானங்—கண்டுதொழுங் காதலுடன் செல்லக்கேட்டுச்- சளிதத்தெதிரே வருமடியார் தம்மை நோக்கி—நின்றுதுய ரொடுகுருகு வாயவென்று- நீடுதிருப் பதிகமெடுத் தோதினூர ... ...௱௭௮- கா௮

ஓதியிரு திறத்தவருஞ் சூழச்சென்று- வோங்கெயில்சூழ் கோபுரத்தைத் தொழுதுள்புக்கங்—காதியடி யவர்சபையை வணங்கிப்போந்தவ்- வன்னால்முனம் பணிந்தொருகண்ணூமாற—ஞாதியுமீ ளாவடிமை யென்றெடுத்து நவிலுவதோ ருதிரங்கி யருளப்பெற்ற—சோதிவிழி யோடிருகண் ணூரக்கண்டு- சோகமெலாந் தீர்ந்துபுறம் போந்தாரென்றே ... ...௱௭௯- கா௯

போந்துசபை மருங்கனைபோழ் திரவிமேல்பாற்- போந்துமதி சார்ந்திடச்சார் பவர்களோடு—மார்ந்தமர்வா ரெதிர்பரவை மிலின்முனம்போ- மடியார்முதல் வந்துதொழு தொற்றியூரி—லேத்திழைபா லிசைந்ததெலாந் தேர்ந்துமாடத்-தெய்தவொண்ணூ தெனவகன்றோமென்றியம்பக்—கூர்ந்திதற்கென் செய்வதென்றே கோபந்தீர்ப்பான்- குவலையத்தார் சிலரையங்கு குறுகவிட்டார் ... ...௱௮௰- கா௰

விட்டவர்சென் றுரைத்திடவு மழலினெய்யை- விடவிடக்கொண் டெழுவதுபோற் செற்றம்பொங்கி—முட்டவரு முரைகொடகன் றவரும்வந்து- முன்னனைர்தவ் வாறுரைத்தாற் பின்னென்செய்வா—ரட்டதிசை களுமடங்கி யற்தயாம- மாகியுட னமர்பவரு மயர்ந்தோர்ந்து—தொட்டகுறை முடித்திடுந்தொல் லோனையுன்னித்- தொடர்ந்தனைய வகையிரங்கி யமர்ந்திருந்தார் ... ... ௱௮௧- கா௰௧

இருந்தகில கோடியெலாம் புரந்துவாழு- மிறைக்கடியார் குறைமுடிக்கும் பொறைதானென்னே—பொருந்துமுமை முலைச்சுவட்டுக் கோலத்தோடும்- பொற்பதமிப் புவிமிலுறச் சொற்பனத்தன்—றிருந்தயர்வார் முனமிலங்கித் தோன்றக்கண்டார்ந்- திணையடிக்கீழ் விழுந்தெழுவார் தம்மைநோக்கி—வருந்துவதென் னெனப்பரவை புலவிதீர்த்திவ்- வாழ்வுறுமா றருளினமுந் தாழாதென்றூர் ... ... ௱௮௨- கா௰௨

என்றவளைப் பிரிந்தனையோ வன்றுதொட்டுன்- னெதிர்பார்த்துச் சதுர்மறந்தே யிருந்தாளங்கு—மன்றல்புரிந் ததுமுதலாய்த் தெரிந்தபின்பம்- மாதுபடுந் துயரெவரு மோதப்போகா—தின்றவள்பாற் சேர்வதென்றூ லெவ்வாறூது- மிசைபாதன் னசையொழியென் றிறைவன்சொல்ல—நன்றதுதா னருளலதா நடந்ததும்மா- னடவாதொன் றுண்டெனவு மடாதென்றுற்றார் ... ... ௱௮௩- கா௰௩

என்றனைய வகைதுதித்தாற் றிரங்கலகண்டே- யேகலுள மகிழ்ந்தெனையாண் டவரை நோக்கி—நன்றுனது துயரொழியுன் றூதனாக- நாம்பரவை பாலடைப்போ மெனவுமுன்

னம்—நின்றவர்தா ஞூர்ந்தியற்ற லின்றென்சொல்வ- னிமலனுட னெழுந்தருளிச் செலவங் கெய்த—மண்டர்மலர் சொரிந்தயன்மால் முதலோர்போற்ற- வணிவீதி யணைந்தவள்மா ளிகைசேர்காலை ௱௮௪- ௧௱௰௪

சேர்ந்தவிரு வாரையும்விட் டிறையுந்தன்பாற்- செழித்துவழி படுமுதிய முனிவர் போலச்—சார்ந்தனைய வகைபுகன்றும் பரவையங்கு- சங்கிலியைப் புணர்ந்தமரிங் கிதங்க ளெல்லாந்—தோர்ந்துமிதற் காயிரவில் வந்துசாலத்- தேற்றுவத காதிசையே னையநீர் போய்ச்—சார்ந்திடுமென் றுரைத்துவிடுத் துடன்கபாடஞ்- சாத்தினள் பின்வருந்தி யேற் றிருளே... ... ... ௱௮௫- ௧௱௰௫

ஏற்றுவா களனேயம் முனிவர்போல்வர்- தேன்றவகை யுரைத்திடவு மேற்றிடாது— மாற்றிவிடுத் தேனெனப்பல் புகன்றிருந்தாள்- மறையவராங் காஞ்சனைந்த விறைவன்றொ ண்டர்—பாற்றிகழ்தன் னுருவொழிந்போய் நன்னமேநாம்- பகர்ந்தவொவ்வா திரங்கநமக் கு கந்துபாவுஞ்—சாற்றிவழி படுமுதிய ராய்ச்சென்றெல்லாஞ்-சாத்தமறுத் தனளெனுமு ஞர்த் தாரூரர்... ... ... ௱௮௬- ௧௱௰௬

ஆர்தடியில் விழுந்தெழுந்தன் றுண்டதெற்றுக்- கடிமையிடற் கடலெழுந்திப் படிதன் பெல்லாம்—பாற்றிருக்க வொபழுய வயர்சாலப்- பகர்வதுவும் படிறேநின் னிகரில்கோ ல—மேற்றுரைத்தா லெவர்மறுப்ப தெளியர்போலு- மேனெழுவ தாளுமிறை பான்மை யீதோ—கூற்றினமோர் காலணைந்தக் குறைதவிர்த்துக்- கூட்டிவையா விடிலுயிர்வான நீட்டு மென்றும் ௱௮௭- ௧௱௰௭

என்றிறைமு னின்றனைய வகைதுதித்தாற்- தேற்றுவதா கியுமிதனுட் சாத்தப்போமோ —வன்றவையெ லாம்பரிந்து கேட்டுநாத- ஞர்த்துந்தான் கூர்ந்தினமோர் காலுனக்கா ய்ச்—சென்றுவரு மளவும்வருந் தாதுசிந்தை- செழித்திரென வுரைத்துடன்சே வேறிச்செ ல்லக்—கண்டுமுனஞ் சென்றரிய காட்சியெல்லாங் கண்டவர்விண் டிலர்மருங்கு நின்றே சென்றார் ௱௮௮- ௧௱௰௮

சென்றெவரும் போற்றிசைப்ப வீதிசார்ந்தச்- சேயிழைமா ளிகையிலிறை செல்லுமு ன்னங்—கண்டுயிலா தனிவரவு பாற்றிருந்தே- கண்டெதிர்வந் திறைஞ்சியெழுந் தங்கை கூப்பி—யின்றபர வையைமகிழ்ந்து நோக்கிநம்பி- யினைப்புணர்ந்திங் குறைந்திருக்க வினைத் துன்பாலியா—மின்றிருகால் வந்தோமின் னமுமருது- மிசைந்துரையென் றனன்மறையன் றிசைந்துரைத்தோன் ௱௮௯- ௧௱௰௯

உரைத்தபினுங் காதலையுட் கொண்டடங்கா-துதித்தெழுந்த நாண்மேற்கொண் டொதுங் கிநின்றே—தரைக்கணுள மாதருரி யதைவெறுப்பாய்த்- தகுதியர்பாற் புகன்றவையைப் பெ றுவதாங்கு—விரைக்கமலச் சேவடியிப் புவியின்மீது- விளங்கயிரு காலிறைநீ வரப்பெற்றே ன்யா—லுரைப்பதென வடியவற்கா யெளியர்போலு- முழல்வீரே லென்செய்கே னிசையா தென்றாள்... ... ... ௱௯௰- ௧௨௰

என்றகுதிப் பிறைவனரி யாரோநங்கைக்- கேற்றமுறை யுரைத்தனையென் றுடன்வி ரைந்து—சென்றிடப்பின் சென்றிறைஞ்சி நின்றாளீசன்- செல்வதன்மு னல்வரவு பார்த்துநி ன்ற—தொண்டர்முனஞ் சென்றிசைந்த தியம்பவார்ந்து- சேவடிக்கீழ் விழுந்தெழுவார் தம் மைநோக்கி—நன்றுனது குறைமுடித்திங் குறைவாயென்றே- நவின்றுவிடுத் தெழுந்திறை யூங் கோயில்புக்கார் ௱௯௧- ௧௨௧

புக்கிறைபின் சென்றிறைஞ்சி மீண்டுநம்பி - புற்றிடத்தெம் மத்தர்வல ரெனப்புக ழ்ந்து—மிக்கசிறப் பேற்றடியார் போற்றவானில்- மிடைந்தமரர் கூற்றுமலர் தூற்றுவா ழ்த்தத்—தக்கபரி சனந்தனமா தியுங்கொண்டேகத்- தாங்கரிய மகிட்சியொடாங் கெய்துங் காலைப்—பக்கமிலம் வாயில்முத லலங்கரித்துப்- பரவையர்சே டிகளுடன்வந் தடியிற்றாழ் ந்தாள் ௱௯௨- ௧௨௨

அடிதொழுத பரவையர்கை பிடித்தாரூர- ரார்வமுடன் மாளிகைபுக் கமர்ந்தன்றிந் தப்—படிவரச்செய் தோன்பரிந்தார்ந் திடைநின்றுண்ட- பக்குவமெ லாநினைந்தப் பதமுள

த்திப்—குடிகொளுமா றனியெடுத்த குறைமுடிக்குங்-குணமேற்கொண் டவளொடுநற் புணர்ச்சிவாய்க்கும்—படிதழுவிக் கலந்திடுசிற் சுகபோகத்தைப்- பகருவதா ரிரதிமத னிகரன்றென்றே... ... ... ௱௯௩- ௯௨௩

அன்றுமுத னாள்கடொறு மவ்வாறின்ப- மார்ந்தடியா ருடன்கலந்து காலமெல்லாஞ்—சென்றுதிரு மூலட்டா னத்தமர்ந்த- செல்வனடி தொழுதேத்திச் செல்லாநின்ற—தென்றிசையுந் தேர்ந்தெவரும் புகழ்ந்துவாழ- யேயர்கோன் கலிக்காம ரிறையைத்தானு—கொண்டதுதி தெனயிகழ்ந்தே வாழுங்காலங்- கொண்டதுவன் றொண்டருங்கேட் டயமேற்கொண்டார்... ... ... ௱௯௪- ௯௨௪

அய்யந்தீர்ந் தவனியெலா முய்யுமாறிங் - கவதரித்தோ ருறுமயமா ரிடத்துரைப்பார்—வையர்தா னதிகமென வாரூர்மேவி- வாழுமிறை செவிக்குரைத்துத் தாழ்ந்துநாளு—மையுந்தாவுணிநம்பி செய்கையெல்லா- நலமெனவெவ் வுலகினிலு மிலகவோர்ந்தென்—னையன்முன் கலிக்காமர் வயிற்றிற்சூலை- யணுகெனவக் கணமவர்பா னணுகித்தென்றே ௱௯௫- ௯௨௫

நணுகியவச் சூலையினு லேயர்கோன்மு- னலிவதெவர் புகல்வர்மிக மெலியுங்காலு—மணுகுவதெங் காணுறையும்புன் கூரெய்தி- யடியில்விழுந் தனையலதிப் படியில்வேறோர்—துணையெனக்கா ரெனப்பலவும் புகன்றுநாளுந்- துயருறுவாற் கெதிர்வருமவ் விறையேயுன்பாலணைவுறுநோ யாரூரன் றீர்க்கினன்றி- யகலாதென் றுரைத்திடவும் புகலுற்றார் ௱௯௬- ௯௨௬

உத்தமவுன் னடிமையெனப் பண்டுமின்று- முரைத்துவழி படவருத்துஞ் சூலைமட்டு—மத்தவனோ னீற்பவதற் கிசையேனின்ன- மகிழ்ந்தவரோ வினைபுரிவீர் போதுமென்ன—நித்தனெழுந் தருளியுளக் களிப்பினோடு- நிறைசெல்வத் திருவாரூ ருறைந்தங்கெய்தென்—னத்தரிடத் தேயர்கோன் பாலணைந்தன்- நானுறுநோய் தீர்த்திடெனச் சொன்னான்முன்னோன் ௱௯௭- ௯௨௭

சொன்னவுடன் விரைந்தவ்வூ ரணைந்தார்ந்தெல்லாஞ்- சொலிச்சிலரை விடுத்திவர்பின் செல்லுமுன்னென்—மன்னவனுங் கலிக்காம ருணர்ந்துவாளால்- மாய்த்தினர்தன் னுவிபொடெப் பிணியுங்கூற்றங்—கன்னவனார் தேவியவை மறைத்தெனத்தை- யாரூரற் கெதிர்விடச்சென் றழைத்தருச்சித்—தென்னதவ மெனப்பணிவா ருடன்சலந்தங்- கேயர்கோ னுறைவிடந்தேர்ந் தேகினாரே ௱௯௮- ௯௨௮

ஏகியவர் முன்னணைந்தச் செயலுந்தேர்ந்தாற்- றெம்பிரான் றனைமுனைந்தா னிரவிற்று—போகவிடுத் ததுபிழையின் றிவர்முன்னுவி- போக்கலவை தீர்வெனமுன் னேக்கிவாளை—வேகமுட னெடுத்திடயத் தான்றுங்காலை- வேதமுறை யிடடறமோ துவந்தன் சொல்வ—தேகனரு ளாலைய ருயிற்றெழுந்தீ- தெய்தவொண்ணு தெனத்தடுத்துப் பிடித்தாரென்றே ௱௯௯- ௯௨௯

பிடித்திடக்கண் டோர்ந்தவையீர் தமயிற்றுழ்ந்த- பின்னவரற் றென்னிறுவென் றுடன்வணங்கத்—தொடித்தமர ரலர்சொரியப் படியும்வாழ்த்தத்- தூயவர்முன் பணைந்தந்த ஞானனென்றே—யெடுத்துரைத்துச் சிலநாளங் கமர்ந்துபின்மு- னேயர்கோ னுடனாரூ ரணைந்துபோற்றி—விடத்தலையர் புலிக்கால ராங்கிங்கீசன- விருப்புடைய ரிருவரென விளங்கினரே ௨௱- ௯௩௰

விளங்குமிர வியுமதியும் புவியின்மீது- விளங்குவதொத் திருவர்களும் விளங்கிநாளுங்—களங்கமறு காதலுடன் காலமெல்லாங்- கமலேச னடிபணிந்து வாழத்தியாங்கே—யுளங்குளிரத்தொழுதுறையு மடியராதி- யுடன்கலந்து வைகிநடம் புரிதாளுன்னி—யிளங்குயில்மென் மொழிப்பாவை வளங்களோடு- மினிதாட்ட வுண்டமர்ந்தார் திருந்தாரென்றே ௨௱௧-௯௩௧

இருவர்களும் பிரியாத நண்பினோடங்- கிருக்குநாட் டிருப்புன்கூர் நிருத்தர்பான்முன்—பெருகுதவக் குறைமுடிக்கும் பரிவுமேன்மேற்- பெருகுவதா ரூரிடத் தேயர்கொன்று—றுருகுதலோ டுரைத்திடக்கேட் டுளதென்றூர்ந்தவ்- வுத்தமற்கு விடைகொடுத்துப் பித்தராண்ட—வொருதவரங் குறைந்தரிபா சனத்தமர்ந்த வொருவனடி தொழுதேத்தி யொழுகுங்காலை ௨௱௨- ௯௩௨

௭௨-வது சுந்-சுவ்-சரிதை.

காலமொரு மூன்றுமுணர்ந் தோர்களியாவுங்- கடந்தலவு ஞானிகள்வா ளடைந்துவாழ்
வோர்—ஞாலமுறு மாசிரமத் தவர்களாதி நாள்கடொறும் வந்திறைஞ்ச லலதங்கங்கே—சில
முட னிருந்தா பாதநாமஞ் சிந்தித்துய் வார்கள்பல வாகநம்பி—யேலமகிழ் வோடிறைமுன்
பாடிப்போற்றி யெல்லைவருஞ் சூழவுறைந் திருந்தாரென்றே ௨௱௩- ௯௩

இருக்குநாட் பாவையற்கா பரணமாகி- யினங்கொடுக்க மனம்பரிந்து மிகவிரைந்
தோர்ந—தருக்கமோ டெழுந்தருளி நாகைசேர்ந்தாங்- குத்தமனைப் பாடிநல முத்துமற்
றும்—பெருக்கமோ டளித்திடப்பெற் றகன்றங்கங்கப்- பெரியவன்வாழ் பதிபலவும் பணி
ந்தஞான—வருக்கஞ ஞாலணைந்தவ் வரசைப்போற்றி- யவைபரவைக் கீய்ந்துமகிழ்ந் தமரு
நாளில்... ... ...௨௱௪- ௯௪

நாளும்வழி படுமுடிவிற் சிலம்பிணைசை- நாதனரு ளாலொலிப்ப தொருநாட் டாழ்
ந்து—வாளையகத் தான்றியபி னளிக்கப்பெற்றவ்- வகையெனவென் றிடவிறைவன் றெுண
டன்பாடி—மீளுமுனம் வரப்பொருந்தா திருந்ததெல்லா- மீக்கூறக் கேட்டவர்தாள் வணங்
குவேனென்—றுளுமா சறம்பொருளா லயத்தொண்டாதி- யமைச்சர்கொள விடுத்திமைக்கு
முனமகன்றே... ... ...௨௱௫- ௯௫

அகன்றபுவிக் காசதிபர் மூவர்தன்னி- லாதியெனுஞ் சேரர்குலப் பெருமாள்தான்மு
ன்—புகன்றவகை புறம்போந்தம் பலத்துட்சேர்ந்தப்- புனிதர்கழல் வணங்கிஙனி பெருக
ப்பாடி—யகந்தளர்ந்தார்ந் திடுபரிசு பெற்றகன்றங்- காரூா ரெங்கெனக்கேட் டவர்செலு
ந்தென்—முகந்தனிற்போய்த் திருவாரூர் மருங்குசேரா- முனமவையா ரூருந்தேர் தகமகி
ழ்ந்தே ௨௱௬- ௯௬

அகமகிழ்ந்தன் னகாணிசெய் தடியரல்லா- லமரர்களுஞ் சூழவெதி ரணைவார்தம்மைத்—
தகமலியுந் தானையிடை கரியின்மீது- தாளமதிக் குடைநிழற்ற மரைகள்வீச—நிகரிறனுக் கொ
மயுலவ மருடமின்ன- நிறைகலன்மே விறைகலனைற் தாசனத்து—முகமலர்ந்தார்ந் தமர்ந்த
திருமுரசமாதி- முழுவொலிப்ப வருகழறித் தறிவார்கண்டார்... ... ...௨௱௭- ௯௭

கண்டவுட னிழிந்தெனையாள் கடவுள்காணக்- கரியில்வரத் துணிந்தனனென் றுருகி
யஞ்சி—நின்றபல வகைதுதித்தக் குழுவைநோக்கி- நிலத்தின்மிசை பணிந்தெழுந்து கர
ங்குவித்துக்—கொண்டுவிரைந் தவர்வருமு னெதிரணைந்து- கோலமல ராதிகள்வான் றூ
லந்தூற்பச்—சென்றுதிரு வுருவிலிருந் தெழுந்தசோதி- சேவடிக்கீ ழாவலுடன் றெுழுது
வீழ்ந்தார் ௨௱௮- ௯௮

தொழுதவுடன் வணங்கிவிரைந் தெடுத்துச்சேரர்- தோழரென்று மன்றமுதற் றுதிப்
பநம்பி—தழுவியிரு வருங்கலந்து மகிழ்ந்தநண்பின்- றன்மையையென் சொல்வதன்னன் பை
யர்கள்வாக்கி—லெழுமுறையுந் தான்பிறகார்ந் திறைஞ்சிவந்தோ- ரெல்லவருஞ் சூழ்ந்தி
டத்தா ரகையிடைச்செல்—முழுமதியொத் திருவர்களுஞ் சென்றுவேத- முதல்வர்திருக் கோ
புரத்தைப் பணிந்துள்புக்கார் ௨௱௯- ௯௯

புக்கடியார் சபைதொழுதுள் ளணைந்துசெம்பொற்- புற்றிடமே வியபுனிதர் கழல்கள்
போற்றி—மிக்கவிருப் புடனனைய வகையும்வாழ்த்தி- மீணடரியா சனத்தமர்ந்த கோலங்
கண்டு—தக்கபரிவுடன் வணங்கிப் பாடச்சோர்- தாமொருமும் மணிக்கோவை பாடியே
ற்றி—நக்கனருள் பெற்றிருவர் களுமகன்றன்- னங்கைதிரு மாளிகையை நண்ணுங்
காலை ௨௱௰- ௯௰

நண்ணுவதற் கரியமலை நாடர்கோனு- நாவலர்கோ னாகியதங் கோனுஞ்சேரப்—ப
ண்ணியதெய் வத்தைமகிழ்ந் தலங்கரித்தப்- பாவைபெதிர் வந்திருவ ரடியிற்றாழ்ந்தென்
—புண்ணியமென் றனையவகை புகழ்ந்துவாழ்த்திப்- புனிதநறுந் தூபமுத லெடுத்ததெல்
லா—மண்ணியல்ப யன்றுமுன முமைபாலங்கு- மகிழ்ந்துவழி படுமுறையே புரிந்தா
ளன்றே... ... ... ௨௱௰௧- ௯௰௧

புரிந்திருவ ராயுமிலத்திற் கொண்டுபுக்குப்- புதுமலரா சனத்திருத்திப் புனிதநன்
னீர்—சொரிந்துபதம் விளக்கிவழி பட்டதெல்லாஞ்- சொல்வதென்னுல் வல்லவர்கோ னில்

லாளுநன்மை—தெரிந்துவிருந் தமைத்திடக்கூர்ந் தியம்புமாறத்- தெரிவைநல போனகமா
திகளுமற்றும்—பரிந்தமைத்து வந்தடியிற் றாழ்ந்துயாவும்- பகர்ந்தனளா ரூரருங்கேட் டுக
ந்திடென்றார் ௨௱௰௨- ௧௪௨

உகந்துரைத்த வாதிருவ ரடியார்வேந்த- ருடன்வருவார் முதலெவர்க்குங் கடலின
முன்மால்—முகந்தெடுத்தா ரமுதிமையோர்க் களித்தவாறே- முத்திறையா ரியாவைகளு
மளித்துப்பின்னு—மகந்தளர்ந்தன் பொடுமொழிந்தா லருந்தாதாரா- ரார்வமுடன் வேண்ப
டி யருந்தியார்ந்தே—மகந்தனிலிங் குதித்தவரு மலையர்கோனு- மலரமளி மீதிருந்தார் பல
ருஞ்சூழ ௨௱௰௩- ௧௪௩

பலர்புகழ வீற்றிருக்கு மிருவருக்கும்- பரவைவிரைச் சாந்தமல ராதியீந்தே—யிலரமு
டி புலைமலைநாட் டரசர்பாதத்- திறைஞ்சவுட னெடுத்தகிறை பரிவைநோக்கி—மலர்ந்தனைய
வகைதுதித்து நலங்கள்கூறி- மதித்திறைநீ றளித்துவிடத் ததித்தெழுந்து—நிலவுகதி ரொன
த்திகழா ரூரர்தாளி- னியமமுடன் றொழுதனரப் புயல்சேர்நாடன் ... ௨௱௰௪- ௧௪௪

சேரர்தொழ நம்பியுந்தாழ்ந் தெடுத்தணைத்தச்- செல்வமுறச் செய்தவிறை செயலைநெஞ்
சி—லாரவுனி நாள்கடொறு மவ்வாறின்ப- மார்ந்தடியா ருடனகலந்தா லயத்தணைந்தங்—
கிரவிளந் திங்களணி சடையார்பாதத்- திருவர்களு மிறைஞ்சிமன துருகிவாழ்த்திச்—சீரிலகு
திருவாரூர் நகரிற்றானே- சிறந்துசில பகல்பிரியா தமர்ந்திருந்தார் ... ௨௱௰௫- ௧௪௫

இருதவரும் பிரியாதுள் ளுரிமையோடங்- கிருக்குநாள் மதுரைமுதற் றொழவியம்ப—
மொருதவரோ டணைவதற்கே யுடன்பட்டார்மத்- தொருதவராஞ் சேரர்குலத் தரசேனெ
ன்னிற்—றிருமுகமுன் விடுமிறையை வணங்கினான- தினகரனோ டனுதினமு மிணங்க
த்தான்பின்—வருமடியார் முதலெவர்க்கு மறிவித்தந்த- வனிதையருக் கினிதுரைத்து விடுத
த்தகன்றார் ௨௱௰௬- ௧௪௬

அகன்றரியா சனத்தமர்ந்த வரசைவாழ்த்தி- யடிவணங்கி யுரைத்தருள்பெற் றகலுமு
ன்னம்—புகன்றவகை யாவர்களு மியாவையோடும்- புடைசூழ மிருவருந்தே ரிடைசார்ந்
தேகிக்—குகன்பணியுங் கீழ்வேளூர் பணிந்துமுன்னீர்- குளிவலைசேர் வதிலொருமீன் றினம்
விடுத்தோர்க்—குகந்தருள்வா னைகைதொழு தாற்றிலீச- னுறைபதிதாழ்ந் திருக்கிறைஞ்சு
மறைசை யுற்றே... ... ... ௨௱௰௭- ௧௪௭

மறையருச்சிற் றடைத்தகத வடிசேர்ந்தத்தை- மாத்தியும்பின் சாத்தவும்பா டினரை
ப்போற்றி—யிறைமுனர்த்தாழ்ந் தொருபதிக மியம்பச்சேர- ரிதையமலர்ந் தந்தாதி துதித்
திரண்டுங்—குறைநிரப்பி யிறையருள்பெற் றகன்றுசெல்வார்- குறுமுனிபூ சித்தபதி பணி
ந்துகோடிக்—கிறைவனெனுங் குழகரையும் பரவிச்சென்றங்- கின்னாட்டுப பதிபலவுந் தொ
ழுதுபோந்தார்... ... ... ௨௱௰௮- ௧௪௮

போந்துதமிழ் நாடணைந்து புத்தூரீசன்- பொற்கழல்கள் பணிந்தேற்றிச் சொக்கர்
கூடற்—சேர்ந்தவகை யறிந்தவழு தியுமங்கெய்துஞ்- செம்பியரு நகரணிசெய் தெதிர்
கொளப்புக்—கார்ந்தவர்க ளொடுமூன்று வரசர்சூழ- வடியார்முதற் பமையுமுயர் வானுந்
தாழச்—சார்ந்தவர்தா டொழுதுபலர் வாழ்ந்தாரேலச்- சாதுகதை யறிந்தனையா மோதி
வாழ்வாம் ௨௱௰௯- ௧௪௯

இதனுள் இவை ஒத்தோர்மனதுக் குத்ததுகூறல்.

வாழ்வுறப்பல் கலையினியே னுய்வதோர்ந்திவ்- வல்லவர்சீர் முற்றுரைப்பா யாகினெஞ்
சே—தாழ்வுனக்கே துயர்தவந்தான் வேறேதுன்னைத்- தவந்தானே யதுவாகுஞ் சிவம்வேறி
ல்லை—யேழ்பவத்துன் பாதிகளப் பொழுதேயேகு- மெடுத்தவுடற் கமைத்தவினை பொசி
க்கிற்சேரும்—சூழ்பவர்கைக் கொள்வரிந்தத் தலம்போனற்- சூக்குமமே சூக்குமமும் பெரி
துமாமே... ... ... ௨௨௰- ௧௫௰

பெரியபிரான் மதுரைநகர் சேர்ந்துமூன்று- பேரரச ருடன்செலுமா ரூரர்சாலப்—
பிரியமொடா லயத்தணைந்தங் கயற்கண்ணாளைப்- பிரியாதங் கொருபாகத் தமர்ந்ததேவி

—னரியதிரு மேனியைக்கண் டடியில்வீழ்ந்தாற்- றனையவகை துதித்திறைஞ்சி யுருகியு
ள்ளத்—தரியதெலாந் தமிழ்மாலை யாலெடுத்தார்ந்- துறைத்திடச்சே ரருமொருபாற் பகை
த்துத்தாழ்ந்தே... ... ...௨௨௧- ௯௫௧

தாழ்ந்தெழுந்தா னந்தவெள்ளத் தழுந்தியுள்ளந்- தழதழுற்று வாய்குழறிக் குழறிக்
கண்ணீர்—வீழ்ந்திடவின் றன்றெனையோர் பொருளாயெண்ணி- விட்டதிரு முகத்துடனுன் கி
ட்டவந்து—வாழ்ந்திடவுன் றுகைவழி விலிக்குப்பின்னும் வன்றொண்டர் பாலனைய வினைப்பி
த்தாண்டு—சூழ்ந்திடுமேழ் பவமொழித்த சொக்கேயுன்றன்- சுந்தரப்பொன் னடியெனக்கு
த் தந்தாளென்றும் ௨௨௨- ௯௫௨

என்றனைய வகையிருவர் களுந்துதித்த- தேசனுவந் தருள்செயப்பெற் றகலக்கூட—
நின்றுதொழு மவ்விருவர் களுமகன்று - நிலவுமணி மாளிகைகொண் டணைந்துளத்தி—
லொன்றுமுணர் வொடுமுறையே யுபசரித்தார்ந் - தொப்பரிய விருந்துமுக லளிப்பதேற்
றன்—கன்றுதொட்டவ் வரசரொடுங் காலமெல்லா - மண்ணலடி பணிந்தேற்றி யமர்ந்திருந்
தார் ... ... ௨௨௩ - ௯௫௩

அமருநாட் பிறபகியுந் தொழுதினைந்தார்ந் - சகலரும்பின் னிணைந்திடு மூவரசரோடும்
—விமலனூர் பூவணஞ்சேர் முனமீதென்றே - விளம்பவுடன் றிருவுடையா ரென்றுரைத்தே
—முமலரா லறியவொண்ணுப் பான்முன்பெய்தி - முற்றுணர்த்துப் பணிந்தருள்பெற் றகன்
றுவைகி—நிமலனூர் கூடலின்மீண் டணைந்துபோற்றி - நீங்கரிதா யம்முறைகூர்ந் தாங்கிரு
ந்தார் ... ... ௨௨௪ - ௯௫௪

இருக்குநா ளாப்பனூர் பணிந்தார்ந்தேற்றி - யிலங்குதிரு வேட்களமே முதலங்கெ
ங்கும்—பெருக்கமோ டணைந்திறைஞ்சிப் பாடிமீண்டும் - பெரியபிரான் மதுரைதொழு த
ரிகினிங்கி—யருக்கமோ டிசர்பரங் குன்றமெய்தி - யுண்மையுடன் மகிழ்ந்தியம்பி யகலும்
போதங்—கிருக்குமீ ரரசரையும் விடுத்தகன்றோர்ந் - திறைபதிபல் பணிந்துமலைப் புறஞ்
சென்றுரே ... ... ௨௨௫ - ௯௫௫

சென்றிறைவாழ் குற்றாலங் குறும்பலாவுஞ் - சேவித்தம் மருங்குளதா னமும்வண
ங்கி—விண்உலகு நெல்வேலி யிறைஞ்சிமாடே - விடையவர்தந் தலமடையப் பரவிப்போ
ந்து—பண்டுதிரு மால்தொழுரா மீச்சுரத்தைப் - பணிந்திழத் திரண்டமு நோக்கியா
ங்கே—நின்றுதுதித் தகன்றுபல பதியுந்தாழ்ந்து - நிமலர்சுழி யலைப்போற்றி யமர்ந்திரு
ந்தார்... ... ...௨௨௬ - ௯௫௬

அமர்ந்திரவு துயில்பொழுது காளப்போர்வா - முண்ணலொரு காளைவடி வாகிவந்
தே—சமந்தகலைக் கங்கைசுழித் தலையதின்று- சுகிக்குநிலை சொலியகல வுகந்தெழுந்தா
ங்—கமர்ந்துறைபுஞ் சொருக்கும் புகன்றன்னுரோ- டணைந்தவரைப் பணிந்துருகிப் பாடிப்
போந்து—கமழ்ந்தலர்பூஞ் சோலைமுதற் கடந்தார்ந்தேகிக் - கழிதிரிருப் புனவாயில் தொ
ழுதகன்றார் ... ...௨௨௭ - ௯௫௭

அகன்றுமுனம் பதிமலைகான் கடந்தன்னுட்டி- லானுறையுந் தலங்களெலாம் பணி
ந்தேதமென்றே—பகர்ந்துபொன்னி நாடணைந்துட் பரிவிநேறும்- பாம்புரமா னகர்பாதா ளீ
ச்சரத்தை—யுகந்திறைஞ்சி மருங்குளதா னமும்வணங்கி- யுண்மையுடன் றிருவாரூர் செல
வங்குள்ளா—ரகம்பரிந்தார்ந் தெதிர்கொளப்புக் கண்ணல்முன்செல்- றடிதொழுது பலவ
கையுந் துதித்துவாழ்ந்தார் ௨௨௮- ௯௫௮

வாழ்ந்திடுமா ரூரருஞ்சே ரருமகன்றவ்- வனிதையனை செலவணிசெய் தெதிர்வந்தா
ர்ந்து—தாழ்ந்திலங்கொண் டணைந்துமுனம புரிந்தவாறெத்- தவமுமியற் றிடவுவந்தேற் றம
ர்ந்துநாளுஞ்—சூழ்ந்திடுபல் லோர்களிடை காலமெல்லாஞ்- சூட்சியுட னிறைமுனஞ்சென்
றிரங்கிப்பாடி—வீழ்ந்திறைஞ்சி மீண்டுமணி மாடஞ்சார்ந்து- விளையாடல் பலபுரிந்துங் கிளர்
ந்திருந்தார் ௨௨௯- ௯௫௯

கிளருமிரு வரிற்சேர ரிங்கிவ்வாறு- கிடைத்தபிற காரூரா ரொடுமேகங்கள்—வளருமலை
நாடனைய நாள்கடோறும்- வருந்தயிசைந் தவர்கள்பர வையற்குரைப்ப—முளரியல ரொனு

[illegible]தம் மாதுமேற்று- முறைபணிப வினிதுரைத்து விடுத்துப்போந்து—வளருமதிச் சடை
யருள் பெற்றகன்றே- வாரணமீ திருவர்களு மேறிச்செல்வார் ... ... உ௩௰- கூ௬௰

செல்வதன்முன் யாவர்களுஞ் சூழ்ந்துதத்தஞ்- செய்பணிகள் செய்துவரச் சென்றங்
குள்ள—பல்பதியும் பணிந்துகொண்டு நன்னீர்சாலப்- பருகிவரு காவிரித்தென் கரையே
சார்ந்து—செல்பவர்தாங் கண்டியூர் தொழுதுமேல்பாற்- செல்பொழுதய் யாறுதொழச் சே
ர்கூர்ந்து—சொல்வதுகேட் டன்னதியைக் கடக்கநம்பி- சொற்றமிழ்பா டினர்பரவும் பரி
சென்றோர்ந்தே ... ... உ௩க- கூ௬க

ஓர்ந்துதமிழ் பாடவுமன் னதிநீரோர்பா- லோங்கியவா றமர்ந்திடக்கீழ் பால்வடிந்து
—சார்ந்திடநல் வழிவிடக்கண் டரசர்நம்பி- சான்றொழத்தாழ்ந் தெடுத்துமக்கா யரன்
மகிழ்ந்தே—கூர்ந்ததென்றவ் வழிதுழவோ டய்யாறேகிக்- கும்பிட்டன் புடனவையுஞ் சிற
ப்பித்தேற்றி—யார்ந்தருள்பெற் றவ்வழிமீண் டகன்றபின்னே- யவைகிழக்கு மிவர்மேற்கு
மணைந்ததென்பார்... ... ... உ௩உ- கூ௬உ

அணைந்துபல பதியெய்திகொங் கையுங்கடந்தே- யார்ந்துமலை நாடுறும்போ தங்கங்
குள்ளா—ருணர்ந்தணிசெய் தெதிர்கொளப்போய்க் கொடுங்கோளூரி- னுள்புகுமு னலங்க
ரித்தாங் கமைச்சாதி—பணைமுரச முதலொலிப்பத் தானைசூழப்- படர்பெருங்கா தலினுடன்
வந் தடியிற்றாழ—யிணையில்தவ ரிருவருஞ்சென் றிழிந்துவஞ்சைக்- கிறைமுனஞ்செல் பரிவு
மறை யறியுமென்றே ... ... உ௩௩- கூ௬௩

மறைமுதலி லதினடிவில் முடிவிலன்பர்- மனமதனி லனுதினமு முறையும்வஞ்சைக்
—கிறைமுனஞ்சென் றனையவகை யிறைஞ்சியேற்றி- யிரங்குவதென் சொல்வதுபல் வரங்
கள்வேண்டி—முறையருளப் பெற்றகலு மிருவர்தன்னில்- முனைப்பாடி நாடரொடன் மனை
க்கேசார்ந்த—பொறையர்தலோ னவரைநலா சனத்திருத்திப்- போற்றிவழி படுமுறையை
யேற்றுவாரார் ... ... உ௩ச- கூ௬ச

ஏற்றியபின் விருந்தமுத லளிப்பதெல்லா- மேற்றுமல ரமளிமிசை வீற்றிருந்தே—
போற்றிமுறை வழிபடுமக் குலத்துளோற்கும்- பொறையர்கட்கு மினிதருளி யுறைந்துநா
ளுங்—கூற்றரசர் செயுநலம்யா வையுமுவந்து -குறைவறக்கா லமுமிறையைக் கும்பிட்
டேற்றிச்—சீற்றியிரு நிலமுமுறக் கொடுங்கோளூரிற் - சிறப்புடனு ரார்மகிழ்ந் திருக்கு
நாளில் ... ... உ௩ரு- கூ௬ரு

இருக்குநாட் டிருவாரூர் தொழநினைந்தாங்- கிருந்தபடி யொருபதிக மெடுத்துவாழ்
த்தி—யுருக்கமோ டெழுந்தருளிச் செலப்பின்செல்லு- முதியர்பிராற் குரைத்தும்நிலா து
ணர்ந்துதாழ்ந்து—தரிக்குமா றியம்பவுடன் பயந்திறைஞ்சித்- தரித்தளவி றனமுதலா யளி
க்கஞான—வருக்கனுர்ந் தவற்குநிலை புகன்றகன்றன் - னுடிகடந் தப்புறங்கா டணையுங்
காலை ... ... உ௩௬- கூ௬௬

காலகா லன்கருதுங் கனகமெல்லாங்- களித்தளிப்ப தன்றரச ரளித்துக்கொண்ட—வா
சாலன்றனத்தைப் பறிக்குமாறங்- கவனருளாற் கணமனைய வேடராகிச்—சாலவாற்த வை
கவர்ந்து கொளக்குடுத்தச்- சனம்பயந்தா ருராரிடத் தணைந்துரைக்குஞ்—சீலமோர்ந் தருகு
திரு முருகன்பூண்டிச்- சிவன்முனஞ்சென் றொருபதிக முரைக்கலுற்றார் ... உ௩எ கூ௬எ

உரைத்தவுட னவையளித்தா லுயிர்தெழுங்காட்- டுள்ளுறையுங் கள்ளனெவ னுரை
தானென்றே—விரைக்கமலச் சேவடியை விள்ளாதாற்கே- விளங்குமதி னுண்மைமிக விண்
டுரைத்துந்—தரைக்கண்மயல் கொண்டுழல்வா ரறியாரன்று- தடுத்தாண்டார் கொடுத்திடு
மத் தனத்தையெல்லா—மரைக்கணந்தா மூதடிய ரெடுத்துச்செல்ல- வவருமுடன் றொழுத
ருள்பெற் றகன்றுரென்றே ... ... உ௩அ- கூ௬அ

அகன்றுமுன மாறுமலை கானமாதி- யங்குளகற் சுரமொடுகொங் கையுங்கடந்தே—

யுகந்துபொன்னி நாடணைந்தள் ளுருகிடாற்றி- லுறுடதிகள் தாழ்ந்துதிரு வாரூர்சார்ந்து
—முகந்தடமா மலரனைய வாகியெல்லை- முதற்றெருழுதா லையத்தணைந்து முதல்வன்முன்
சென்—றகந்தளர்ந்து பணிந்துபல பாடிமீண்டு- வார்வமுடன் பரவையர்மா ளிகையைச்
சேர்ந்தார்... ... ... ௨௩௯- ௯௬௯

சேர்ந்திடவம் மாதிறைஞ்சி வழிபட்டேற்றிச்- செய்கலமெல் லாமுவந்தங் கையன்கை
க்கொண்—டோர்ந்தளித்த கனகமெலா மளித்துச்சேர- ரொப்பரிய புகழ்முதலா யுரைத்
துநாளுஞ்—சார்ந்திடுபல் லோர்களுடன் காலந்தோறுஞ்- சகம்புரக்குந் திகம்பரனை யுகந்து
வாழ்த்தி—யார்ந்துதொழு தகன்றிலஞ்சார்ந் தமர்ந்தியற்ற- லலைத்தும்சிவ போகமென நினை
த்திருந்தார்... ... ... ௨௪௰- ௯௭௰

இருக்குநாட் சேரரிடத் தெய்துமாறே- யிரங்கியுட னெழுந்திறைதா டொழுதுவா
ழ்த்தி—யுருக்கமோ டடியருடன் போந்துமுன்ன- முத்தமதா னங்கள்பணிந் தகன்றுகொ
ங்கிற்—பெருக்கமோ டணைந்தரன்புக் கொளியூர்சேர்காற்- பெருகுமறை யோர்களில மொ
ன்றிற்சால—வுருக்கமோ டழுகையுமற் றொன்றிற்கோல- முறுமண நன் முழவுமொலித் திட
லுணர்ந்தார் ௨௪௧- ௯௭௧

உணர்ந்தனையும் பொழுதெதிர்வந் தடியிற்றாழவ்- வூர்மறையோர் களைநோக்கி யிவ்வா
றெய்துங்—குணமெனவென் றிடமுனமிங் கொருகாற்றோன்று- குதலைமொழிச் சுதனிருவர்
வளர்ந்தைந்தாண் டின்—மணமலரார் தடமதனிற் குளிக்கும்போதோர் மகவையதி லுறமு
தலை விழுங்கவுய்ந்தோன்—மணமகனாய் நூலணியு மனையீதன்று- மடிந்தவன்முன் னோர்வரு
ந்து மனையீதென்றார் ௨௪௨- ௯௭௨

என்றலுநைந் திறையையுனி நின்றீதென்னெள்- றெண்ணுவது கண்ணுமறை யோனுங்
கேட்டுத்—தன்றுணைவி யோடெதிர்வந் தடியிற்றாழத்- தனையனிழந் தவரோசீ ரெளமுன்
னிங்கு—சென்றணைந்த நாள்முதலாய்க் கண்டுபோற்றச்- செய்ததவம் வீண்போகா தெய்து
முன்று—வின்றுதொழப் பெற்றனன்யா னியான்றுனென்றார்ந்- தேற்றினர் பினுந்தொழு
தாழ் மாத்திறரே ௨௪௩- ௯௭௩

மாத்தியகத் துயரையெலாம் வந்துதாழ்ந்த- மறையோயன் றிழந்தசுதன் றனைப்ப
டைப்போன்—கூற்றுவனு லின்றளவும் வளற்தேயந்தச்- குளத்துறுமம் முதலைவயிற் றமை
த்தவ்வாயா—னுற்றிசையுங் காணவுமிழ்ந் தெழுந்தபின்னே- நாதனடி தொழுவனங்கு போ
துமென்னச்—சாத்திநம்பி பின்னுமவர் முன்னுமாகச்- சாருமுன மிருநிலமுஞ் சார்ந்த
தென்றே... ... ... ௨௪௪- ௯௭௪

சார்ந்தெவருஞ் சூழநம்பி மகிழ்ந்துவானுஞ்- சகமுமிக வாழவகழ்க் கரையினின்று—
வோர்ந்துரைப்பா ருரையெனமுன் னெடுத்தபாட- லோதுமுனஞ் சமனுயிரும் போதன்மெய்
யுஞ்—சேர்ந்தமைத்துக் கொண்டணைந்தம் முதலைவாயிற்- சேற்தவையக் கரைமிசைவந் துமி
ழக்கண்டே—யார்ந்தனைசென் றெடுத்தணைத்தா ரூரார்முன்போந்- தடிபணிவித் திறைஞ்சின
ரந் தணனுந்தாழ்ந்தார் ௨௪௫- ௯௭௫

தாழ்ந்தெழுந்தார்ந் தவர்கள்பல துதிப்பவையந்- தன்னைமறந் தனையவகை குதிப்ப
வானம்—வாழ்ந்தலர்கள் பொழிந்தவர்சீர் மதிப்பவேத- வகுப்பதையாற் பரித்துருக்கொண்
டுதிப்பயாவுஞ்—சூழ்ந்திடவா ரூரரவை புகன்றுசென்றே- சூட்சியொடா லயத்தணைந்து நி
றைத்தரன்பால்—வீழ்ந்திறைஞ்சி நின்றருளி லாழ்ந்துவிள்ளா- விடைகொண்டப் புறத்தகரத்
திடையேசார்ந்தார் ௨௪௬- ௯௭௬

சார்ந்தபொழு தந்தணருத் தரியம்வீசிச் - சதுமறைகள் சாத்தமட வார்கள்வாழ்த்
தச்—சேர்ந்தழுது மனையிலுநன் முழவமாற்பச் - செய்தமைத்த வோரையிலச் செறுவனு
க்கு—மார்ந்துமுறை புரிந்தருளு லணிவித்தந்த - வக்ரமதி லமர்ந்துவிருந் துவந்துளத்தி

—மேவார்ந்தமலை நாடணைய வெழுந்துசெல்லு-மொப்பரிய புகழையும்யாஞ் செப்பிவாழ்வாம் ... ... உசஎ- கஎஎ

செப்பியவா குடதிசைமேற் பதிகளெல்லாஞ்- சென்றடியா ராதியெதிர் கொள்ளப்புக்கங்—கொப்பரிய கோயில்புகுந் தரன்முன்பெய்தி- யோதிமுறை பணிந்தருள்பெற் றகன்றுகானும்—வெற்புமதி லுதித்தெழுகா னியாறுமாறு- வெப்பமுறு கற்சுரமுங் கடந்தடங்கா—மெய்ப்புகழ்வேந் தரசுபுரி மலைநாட்டெல்லை- மேவினார் நாவலர்கோ னுவலோடும் ... ... உசஅ- கஎஅ

ஆவலுடன் கண்டவர்க ளரசர்பாற்சென்- றடிபணிந்தா ரூரரவி னுசிசார்ந்து—பூவலரும் பொய்கையில்முன் முதலையுண்ட- புதல்வனையின் னுளழைத்து விடுத்தவந்தே—மாவலகின் னுடணைந்தா ரென்றுரற்கெல்லா- மானிதிய முதலளித்து மிகிழ்ந்ததெந்த—நாவலர்தா னேனுதுவர்கு ழமைச்சைநோக்கி- நகரமணி செயப்பணிமின் பயணமென்றார் ... உசகூ- கஎகூ

என்றலுஞ்சூழ் தானையிடை யிலங்குவேழத்- தேறிநகர் கடந்துநம்பி வரவுதாக்—கண்டவுட னிழிந்தெதிர்சென் றடியில்வீழக்- களித்தவரு முடன்றெழுது கலந்தகாட்சி—யண்டர்முத லாற்தனரார்ந் தவரையந்த- யானைமிசைக் கொண்டரசர் தானுஞ்சார்ந்து—நின்றுமதிக்குடை நிழற்றி னுலங்கெய்து- நிறைவிதிலென் சொல்வதிறை வஞ்சைசேர்ந்தார் உருய- கஅய

சேர்ந்திழிந்து கோயில்புகுந் தரன்முன்பெய்திச் - சேவடிக்கீ ழனையவகை பணிந்துவாழ்த்தி—யார்ந்தகன்றவ் வாறுநகர் வலஞ்செய்தந்த - வரசர்மணி மாளிகைபுக் கிறங்கியுள்ளே—சார்ந்தவுட னம்பியையா சனத்திருத்திச்- சாலமகிழ்ந் தரசர்வழி பட்டெவறகு—மோர்ந்தரிய விருந்துமுத லளித்ததெல்லா- மோதுவதார் மாதவமுன் செய்தாரென்றே ... ...உருக- கஅக

செய்யும்வழி பாடுமுத லெவையுமேற்றச்- சேரரொடு மார்ந்தெவருஞ் சூழநாளு—மைதிகழுங் கண்டரடி தொழுதுவாழ்ந்தம்- மகோதையினி லிருந்தவர்க ளொடுமன்னுட்டி—லெய்தியபல் பதிகளும்போய்ப் பணிந்துமீண்டு- மேகனு யகனுறையும் வஞ்சைசார்ந்தென்—னையமெலாந் தீர்த்தருள்தந் தாண்டுன்னின்ற- வாரூரர் பாரூர்வ தொழிந்தமர்ந்தார் ... உருஉ- கஅஉ

அமருவார் கயிலையில்முன் னமர்ந்தவாறே- யமர்ந்திலங்குங் காலமுறவொருநாள்வஞ்சை—விமலனார் பதம்பணிய நினைந்தணைந்தவ்- விடையவர்முன் னின்றெனையா ளுடையாயிங்கு—முமலரா யிருக்ககில்லேன் கருணைகூரென் முதல்வதலை மாலையென்றோர் பதிகம்பாடி—நிமலனு ரடியிணைக்கீ ழிறைஞ்சிமீண்டு- நீடுதிருக் கோபுரவா யிலின்முன் வந்தார் ... ... உருங- கஅங

வருகவுமுன் புவியில்வர விட்டுப்பின்னும்- வந்துதடுத் தனையவகை முன்னின்றுண்ட—திருவுளத்திச் செய்கையெலா முடிந்தபின்பு- திகழ்மலையைச் சாரமகோ தையினின்று—முருகுவது தோன்றவுட னருளுமாறிங்- கும்பர்முத லோர்கடுங்க வேழமுங்கொண்—டருகுவந்து தாழ்ந்துமையிவ் வானைமீதங்- கழைத்துவரப் பணித்தனன்றே வனையுமென்றார் ... ...உருச- கஅச

அனையவரு மானையையு மதனைச்சூழு- மரியயன்றே வாதியையுங் கண்டன்றுண்ட—யிணையில்பர சிவங்கருணை கூர்ந்ததெல்லா- மியம்புவதைக் சேட்டகிலா ரமுதையுண்டிப்—பிணையொழித்துள் ளொளியொளியிற் கலந்துயிற்றுப்- பிரிந்துடலைச் சார்ந்துபுவி மீதிறைஞ்சி—யணைபவர்தன் றுணைவரொனுஞ் சேரர்கோனை- யகத்தினிற்கொண் டெதிரணைந்தார்ந்தேற்றார்நம்பி... ... ...உருரு- கஅரு

ஏற்றவுட னெதிர்வலங்கொண் டானைமீதி - லேற்றிமலர் தூர்த்தமர ரெங்குஞ்சூழ—நாற்கடலாற் பென்னவைந்து நாதமார்ப்ப- நான்முகன்மா லிடைவிசும்பிற் செலினுமுள்

ளத்—தேற்றதனையு நண்பாலிச் செய்கையன்றாட்- டேர்ந்தலுணர்ந் தொருபரிமேற் [illegible]
டுவஞ்சை—சேர்ந்தவர்முன் செல்வதுங்கண் டவையேவானிற்- செலவுகைத்தங் கெய்தி
முனம் வலமாய்ச்சென்றார் ௨௫௬- ௬௮௬

சென்றபொழு தவ்வரசர் பின்செல்வோரிச்- செய்கையுணர்ந் தாக்கையைவீழ்த் தெ
ய்தும்வீரப்—பொன்றிகழாக் கையையணைந்தப் பொறையர்கோன்முன்- போதவுரு வானவ
ரே தானையாகச்—சென்றிடக்கண் டாரூர ரார்ந்திவ்வாறு- செல்வதற்குத் தானெனைமுன்
படைத்தானென்றே—யன்றுகடை முடிந்ததிருப் பதிகம்பாடி- யரசார்முத லோர்களொடும்
வரையைச்சார்ந்தார் ௨௫௭- ௬௮௭

சார்ந்தபொழு தெங்குமொளி யாயுணர்ந்த- சாதுமன மெனவிலங்க வோதிப்போ
ந்தே—சேர்ந்தமத யானைபரி யிழிந்துதாழ்ந்து- செனறுமலைத் தென்றிருவா யிலையணை
ந்தங்—கார்ந்துபல வகைபணிந்துள் ளுருகியன்போ- டனையதடை கடந்துதனித் தடைமு
ன்னெய்தி—யோர்ந்துதொழு தருள்வழியா ரூரர்முனபோன்- றொருமையொடு பரமசிவத்
தருகுபோந்தார் ௨௫௮- ௬௮௮

போந்துமையோர் பாகமுற வமர்ந்ததேவன்- பொற்கமலச் சேவடிக்கீ ழாவைநோ
க்கிச்—சார்ந்திடுகன் றெனவிரைந்துட் பரிவினோடுஞ்- சார்ந்துபல வகைதொழுது நிற்ப
வுள்ளத்—தார்ந்துதிரு வாய்மலர்ந்தா ரூரனேயிங்- கணைந்தனையென் றிடுமுனமப்பி ணைதவிற்
றக்—கூர்ந்தருளும் பெருங்கருணைப் பாங்கைநாயேன் கூறுவதோ வென்றனைய கூறிப்பி
ன்னும்... ... ...௨௫௯- ௬௮௯

கூறுவதொன் றுளதெனவு மகிழ்ந்துநோக்குங்- குறிப்புணர்ந்து சேரலனிங் கணைந்தா
னென்ன—வாறுலவு செஞ்சடையான் பெரியதேவற்- கருளவவ ரருள்வழியுள் ளணைந்தச்
சேரர்—நாறுமலற் சேவடிக்கீ ழார்வத்தோடு- நயந்தனைய வகைதொழுது பயந்தியம்
பா—தூறுமதுப் புண்டரிகப் பதமேயுற்றுள்- ளுருகுவது கண்டாரூர்ந் துரைக்கலுற்
றான் ௨௬௦- ௬௯௦

உத்தரவன் னியிலணைந்த தென்னவென்ன- வுண்ணடுங்கிப் பின்னுமொரு வகைதெளிந்
தென்—னத்தவுன தருள்வழியிங் கானைமீதி- லாரூரர் வரும்பொழுது முன்சேவிக்கப்—
பெற்றணைந்தே வினபிறகுள் ளெய்திப்போற்றப்- பெற்றனெனப் புகன்றுடனின் பெருமை
யன்பி—லுத்ததுலா வெனப்பாடி வந்தேன்முன்ன- முரைத்திடுமா றருளெனையா ளுடையா
யென்றார் ௨௬௧- ௬௯௧

என்றவுட னிறைவன்மகிழ்ந் தியம்புகென்ன- வெம்பிரான் சேரர்குலப் பெருமாள்தான்
முன்—னின்றிடுமா ரூரர்மருங் கணைந்துநின்றே- நிமலனிரு செவியிலுறப் புகலும்போதங்—
கண்டாரி யயன்முதலா யுள்ளோர்சால- வற்புதமென் றதிசயித்தார் வெற்பார்ந்தீண்ட—
வொன்றெருடிபா கனுமுவந்தா னேதியந்த- வொருதுணைவ ரொடுந்தொழுது பெருகிவா
ழ்ந்தார் ௨௬௨- ௬௯௨

ஆர்ந்திறையா ரூரரையா தரவினோக்கி- யாலால சுந்தரனே யாகியிங்கு—சார்ந்துமுனம்
போலுனது பணியுஞ்செய்து- சகலகணத் தலைமையினில் நீயுமுன்னைச்—சேர்ந்திடுமுன் றுணை
வனெனுஞ் சேரமானுஞ்- சேர்க்கைபிரி யாதவையே புரிந்துநாளு—மார்ந்துநம தருவொடுநம்
மருகமர்ந்தே- யனுதினமுந் தொழுதிருமென் றருளிச்செய்தான் ... ௨௬௩- ௬௯௩

அருளியபின் வருபரிவீ ரற்குந்தக்க- தருளியவா றவரவர்க ளடைந்ததல்லாற்—றெரு
ளுடையோ ரிருவர்கட்கு மருளுமாறத்- தெய்வவுரு வாய்ப்பெயரு மவ்வாறுகி—யொரு
மலரா யுரைத்தபணி தலைமேற்கொண்டே- யொழுகியதி லொழுகமுத முண்டென்றுஞ்
செந்—திருமகள்கோன் முதல்வணங்க வமர்ந்தார்ந்தீசன்- றிருவடியைப் பிரியாத பெருமை
பெற்றார் ௨௬௪- ௬௯௪

பெற்றதவப் பயனுடைய பரவையாரும்- பேரறிவிற் சங்கிலியும் புவியில்முன்ற—

றூற..வத் தூடற்சியெலா மொழிந்தப்போதே- யுடைமையருளா லங்கணைந்தவ் விமையோர் போற்றத்—தத்தமுரு வும்பெயரு முடையராகித்- தத்தமுனரு செய்பணியே தலைமேற் கொண்டார்ந்—தத்தனொரு பாகமமர்ந் தனைத்துங்காக்கு- மம்பிகைபொற் பதம்பிரியா தமர்ந்துவாழ்ந்தார் ௨௬௫- ௧௬௫

வாழ்ந்திடுமா ரூரர்மலை யணையும்போது- வழியினிலோ தியபதிக முலகிலேற்ற—வாழ்ந்திடுமுன் னீற்கிறையாம் வருணனுக்கங்- கருளியவா றவைதலைமேற் கொண்டுதேவர்—சூழ்ந்திடுதென் புவியிலிறை சூட்சியோடு- சுசித்திருக்கும் வஞ்சையணைந் தவர்பொற்புளிற்—றூழ்ந்துலக றியவந்தத் தமிழ்ப்பாமாலை- தானியம்ப வானிலமு மியம்பலுற்றும் ௨௬௬- ௧௬௬

உத்தமன்முன் சோர்பெரு மானுரைத்த- வுண்மையுலா மண்ணிலுளோ ருரைக்குமாறங்—கத்தனடி தொழவணைந்த சாத்தனூருக்- கருளியவா றவர்பீட வூரில்வந்து—சித்தமகிழ்ந் திருநிலமு மறியவாங்கே- சிவன்முனம்பின் றுரைத்ததனு லவனிமீது—பத்தியுளோர் கத்துரைத்துத் தத்தம்வேண்டும்- பதமடைய யிதமுளதாய் நிதம்விளங்கும் ... ௨௬௭- ௧௬௭

இவை முற்றிற்று.

அன்னவரு மார்சூரி லடுமைகேட் டுகப்பா ரூரிலம்மானுக் கன்பராவாரே,

இவைமுதல் ௩- பாடலும் ௰௨.- வது சருக்கமுகிவுதோத்திரம் வாழி.

விளங்குமடி யவர்வாழி யவர்சீர்நாளு- விதமெடுத்தேற் றினர்வாழி யிதமொன்றில்லாக்—களங்கவுள னகிலசரா சாங்கட்கெல்லாங்- கடையவனென் றிடினுமிதை யிடைவிடாமற்—றுளங்குமனத் தவருமிறை யவனுங்கூர்த்- துதித்ததனு லியான்வாழி யின்னூல்வாழி—யுளங்குளிர யின்னூலை முன்னூலோடேற்- றுரைப்பவரு மிவையிலுண்மை யுளரும்வாழி ௨௬௮- ௧௬௮

வாழியடி யவர்சரித்த மிவ்வண்டத்து- வானுளர்கள் கீழுலகத் தவரும்வாழி—வாழிநிலத் தனைத்துமதிற் பினும்வகுத்தே - வாழ்த்தினே னரசர்முதல் மனுக்கள்வாழி—வாழியதில் மறைமுனஞ்சொன் னெறிகடந்தோர் - வாழியந்த வழிநடந்தோர் செலத்துடர்ந்தோர்—வாழியதி னீறுரையோர் பொருளுமெய்தும் - வகையுமுண ரிச்சமையத் தனைவோர்வாழி... ... ... ௨௬௯- ௧௬௯

வாழிபல வெனப்புகலு மண்டம்யாவும்- வாழியதில் வாழளவி லுயிரனைத்தும்—வாழியிதைப் புரந்திடத்தோற் றியதேவெல்லாம்- வாழியவைக் கெப்புறத்தும் வளரகண்டம்—வாழியிந்த நான்கையுமுள் ளடக்கிநிற்போன்- வாழியடங் கியவகையே தோற்றுவிப்போன்—வாழியிவையெங்குநட மாடுசோதி- வாழியந்தம் வாழிநடு வாழியாதி... ... ...௨௭௰- ௱

இவைமுற்றிற்று.

நாலாங் காண்டமும் முற்றிற்று

ஆக - நாலுகாண்டத்தி லுள்ளசருக்கம் பன்னிரண்டிலும்
புராணம்எழுபத்திரண்டுக்குபாடல்ஆயிரமும் முற்றிற்று

இப்படிக்கு - முன்னூறுபுத்தகம் பதிப்பிக்கலாயிற்று.

திருச்சிற்றம்பலம்.

வானப்பிரகாச வொளிநிறைவெளியுள் வளர்வளி கனல்புனல் நிலங்கொ... ...ண்
னேப்பிரகாசந் தருமுலகாதி யுருவெனத் தோன்றிய தெல்லா ... ... ந்
தானப்பிரகாச மாக்கியும்பல்காற் றழைக்கவுஞ் செயும்பரைக் கிறைசி ... ... ர்
ஞானப்பிரகாசன் றமிழுணர்ந் துரைத்த நற்றவ ரறிந்துய்வர் திண்ண... ... ம்

உ

ஓம்.

திருச்சிற்றம்பலம்.

புராணச்சுருக்க மென்னும் பெயரையுடைய புராணசார அந்தாதி.

திருத்தல் அட்டவணை.

அஃதாவன

நகல் பார்வையிடும்போது திருத்த விட்டுப்போனதை மறுபடியு மசலில் கூர்ந்து பார்த்ததில் இன்ன எழுத்து யிருக்கவேண்டியதற்கு வேறின்ன எழுத்து யிருக்குதென்று தெரியவந்தமட்டும் இனிப்பார்க்கிற யாவரும் இதையதுவாக ஒப்புக்கொண்டு பார்க்கும்பொருட்டு இத்தனையாவதுபாட்டில் இத்தனையாவதுவரியில் இன்ன எழுத்து இருக்க வேண்டியதற்கு வேறின்ன எழுத்து இருக்குதென்பதை இதனடியிற்பதிப்பிக்கப்பட்டன.

௧

௭	௩	நி	ணி
௰௩	௧	ற்றி	த்தி
௰௬	௨	நா	ஞ
ஷை	௩	ன்	ன
௰௭	௨	க	க்
௰௮	௨	ர	ா
௨௰	௨	ன்	ன
௨௧	௩	ந்	ந
௩௫	௪	ன்	ன
௫௪	௪	ம்	ம
௮௬	௧	சு	சு
௯௪	௩	ந்	ந
௱௭	௩	ரர	ாா
௱௯	௨	ர	ா
௧௧௧	௧	ரர	ாா
௧௨௩	௧	ஞ்	ஞ
௧௨௭	௫	௧௨௭	௧௭௨
௧௩௰	௪	த	க
௧௩௪	௪	ந்	ந
௧௩௫	௪	சு	சு
௧௩௯	௨	சு	சு
௧௪௰	௨	வெ	வே
௧௪௪	௨	ஞ்	ஞ
௧௫௭	௧	ழ்	ழ
௧௬௪	௩	ன்	ன
௧௬௭	௨	த்	த
௧௬௮	௪	ந்	ந
௧௭௨	௧	ஞீ	ஞி
௧௭௭	௩	ந்	ந
௧௮௰	௨	ன்	ன
௧௮௧	௩	ர்	ா
௧௯௧	௩	ா	ா
௨௱௧	௨	ர	ா
௨௧௯	௪	க	ச
௨௨௩	௧	ழ	ழ்
௨௩௮	௧	கி	கி

௨

௨௫௬	௨	த	...
ஷை	௪	ளை	ணை
௨௬௧	௨	ெ	ே
௨௭௰	௧	ா	ர
ஷை	௨	ா	ர
௨௭௬	௩	ச்	ச
௨௭௭	௪	ம்	ம
௨௭௯	௩	ந்	ந
௨௮௬	௪	ந்	ந
௨௮௯	௪	ெ	ே
௨௯௫	௨	லீ	வீ
௨௯௬	௩	ற்	ர்
௩௱௧	௨	ள	ள்
௩௱௪	௨	ன	ன்
௩௱௬	௨	ச்	...
௩௱௭	௧	ா	ர்
௩௱௰௩	௩	ந்	ந
௩௱௰௫	௧	வு	வ
ஷை	௩	த்	த
௩௨௫	௪	ழ்	ழ
௩௪௰	௨	ங்	...
௩௪௪	௧	க்கி	ச்சி
௩௫௧	௪	ந்	ந
௩௫௬	௩	த்	த
௩௭௨	௪	ர்	ா
௩௭௫	௧	க்	ச்
௩௯௰	௩	க	ச
௩௯௨	௪	தி	த
௩௯௫	௩	ச்	ச
௩௯௮	௪	ல்	ல
௩௯௯	௪	வ	வ்
௪௱௧	௧	கி	கி
௪௱௫	௪	ர்	...
௪௱௬	௩	த்	த
௪௱௭	௧	க்	ச்
௪௱௮	௪	தி	த

௩

௪௱௰	௩	ந்	ந
௪௧௨	௩	க	ச
௪௧௩	௨	க	ச
௪௧௫	௩	க	ச
௪௧௭	௨	தெ	ெ
ஷை	௪	னை	ளை
௪௧௮	௨	கை	சை
ஷை	௩	தி	கி
௪௨௨	௩	ழ்	ழ
௪௨௩	௨	ன்	ள
௪௨௫	௫	ச	ச
௪௨௬	௪	சு	சு
௪௨௭	௪	ந்	ந
௪௩௩	௩	சு	சு
௪௪௮	௪	ந்	ந
௪௫௰	௧	ன்	ன
௪௬௬	௨	ப	ப்
௪௭௮	௨	க்	க
௪௭௯	௩	யி	...
௫௱௬	௨	ற்	ற
௫௱௭	௨	ஞ்	ஞ
௫௧௧	௨	ந்	ந
௫௩௬	௧	ற்	...
௫௨௭	௨	ன்	ன
௫௩௰	௩	த	க
௫௩௫	௪	ா	ர
௫௩௭	௫	ெ	ே
௫௪௰	௨	ர்	ா
௫௫௧	௪	த்	த
௫௫௪	௨	ண்	ண
௫௬௩	௨	ன்	ன
௫௬௪	௧	ெ	ே
௫௬௧	௧	வீ	லீ
௫௮௧	௪	ள்	ள
௫௯௰	௪	ர	ா
௬௱௩	௩	ற்	ற

திருத்தல் அட்டவணை.

௧

௬௧௫	௨	ண்	ண
௬௪௦	௧	ங்	...
௬௩௬	௩	ா	ர
௬௫௯	௧	மு	முமு
௬௬௧	௪	த்	த
௬௬௪	௪	ற்	ற
௬௭௨	௨	ரா	ர
௸	௨	வ	வர
௬௭௪	௨	பெ	பல
௬௮௭	௨	ா	ர
௭௧௮	௪	ற்	ற
௭௨௯	௪	ந்	ந
௭௪௫	௧	த்	த
௭௫௨	௩	ர்	ா
௭௬௫	௪	ய்	ய
௭௯௪	௪	ப்	ப
௭௯௬	௪	ன்	ன
௭௯௭	௪	க	ச
௸	௪	ட்	ட
௭௭௩	௪	ள்	ள
௭௭௯	௨	ந்	ந
௭௮௦	௩	ன்	ண

௨

௭௮௪	௨	ந்	ந
௭௮௭	௩	ந்	த
௭௯௧	௫	ன்	ண
௭௯௨	௧	ண	ன்
௸	௨	ல்	ல
௭௯௬	௪	ற்	ற
௮௦௧	௨	ள	ன
௮௦௨	௨	த்	த
௮௦௩	௪	ன்	ண
௮௦௬	௩	ஞ்	ஞ
௮௧௨	௩	ன்	ண
௮௧௫	௩	ற	ற்
௮௧௮	௪	ர்	ா
௮௨௦	௨	நி	நீ
௮௨௯	௩	ந்	ந
௸	௪	ர்	ா
௮௩௦	௪	ட்	ட
௮௩௬	௨	ந்	ந
௮௪௯	௨	ம	மி
௮௭௨	௪	த்	த
௮௭௬	௨	ர்	ா
௮௭௭	௨	த்	த

௩

௮௭௯	௩	ஞ்	ஞ
௮௮௦	௩	தி	தீ
௮௮௧	௧	ய்	ய
௮௮௨	௪	ற்	ற
௮௮௩	௪	ங்	ங
௮௮௬	௪	க	க
௸	௫	ஞ	அ
௮௮௭	௪	ழ	ழ்
௮௮௮	௨	ய்	ய
௮௯௫	௫	ற்	ற
௮௯௮	௪	கு	க்
௯௦௬	௨	ா	ர்
௯௦௭	௪	ந்	ந
௯௧௧	௪	ந்	ந
௯௩௫	௨	ண்	ண
௯௪௦	௨	ண்	ண
௯௪௩	௩	ன்	ன
௯௪௬	௨	ர்	ா
௸	௪	த்	த
௯௫௭	௩	ஞ்	ஞ

ஆக மேற்கண்ட - ௱௯௦ - பாடலினுள் - ௱௭௨ - வரியில்,

திருந்தா வெழுத்தின் - திறந்தெரிந் துரைக்க
வருந்தா துணரும் - வகைதொகை முற்றும்.

திருத்தல் அட்டவணை முற்றிற்று.